வரலாறு

மழபாடி ஆடலர்

With best compliments from :

GEM LABORATORY
&
GENERAL LABS

STOCKIST

M/s. SASTHA PHARMA

1, ELEVENTH CROSS,
WESTERN EXTENSION,
Thillainagar, TIRUCHIRAPALLI - 620 018.

வரலாறு

இதழ் 1

அரையாண்டு
ஆய்விதழ்

ஆகஸ்டு 1993

வெளியிடுவோர்
டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்
48, புத்தூர் நெடுஞ்சாலை, திருச்சிராப்பள்ளி - 620 017.

''எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்''

இதழ் உருவாக்கம்

இரா. கலைக்கோவன்
பொறுப்பாசிரியர்

மு. நளினி
அர. அகிலா
உதவி ஆசிரியர்கள்

மு. ம. கோபாலன்
எழுத்து வரைஞர்

சரித்திரத் தேர்ச்சி கொள்''

எண்ணங்களும் எதிர்பார்ப்புகளும்

நீண்ட இடைவெளிக்குப் பிறகு சந்திக்கிறோம். ஒரு முயற்சியின் தொடர்ச்சியாக ஆவணத்திலிருந்து வரலாறு வந்திருக்கிறது. புதிய பெயர். ஆனால் பழைய உள்ளடக்கமே. இனி, டாக்டர் மா. இராச மாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்திலிருந்து வரலாறே வெளி வரும். காரணங்களைவிடக் காரியங்கள் முக்கியம். அதனால் எதிர் கால நோக்குகள் பற்றிச் சில தகவல்கள்.

வரலாறு தனித் தீவல்ல. அது பல துறைகளின் சங்கமம். பல்துறை அறிவு இருந்தால்தான் முழுமையான நேர்மையான, வரலாற்றை உருவாக்க முடியும். அந்த வகையில் வரலாற்றில் ஆர்வமுடைய அனைவரும் பயனடையும் வண்ணம் பல்துறைச் செய்திகளை இவ்விதழ் வெளியிட்டு மகிழும். ஆழமான ஆய்வுகளும், புதிய கண்டுபிடிப்புகளும் முதலிடம் பெறும். வறட்சியாக எழுதுவதுதான் வரலாறு என்ற நிலையை மாற்றி, எந்தச் செய்தியையும் அதன் உண்மைத் தன்மை குன்றாமல் சுவைபடச் சொல்வதில் வரலாறு நம்பிக்கை கொண்டுள்ளது.

' நிலத்தினும் பெரிதே, வானினும் உயர்ந்தன்று, நீரினும் ஆரள வின்றே ' என்று தன் தலைவியின் காதலுக்கு அளவு கூறினாளே குறுந்தொகையின் குறிஞ்சித் தோழி, அது போலத்தான் எங்கள் எண்ணங்களும் எதிர்பார்ப்புகளும். இமயமாய் எண்ணுகிறோம் ; இயன்றதைச் சாதிப்போம். முடியாதவற்றைத், தொடர்ந்து முனைப் பான முயற்சி மேற்கொண்டு முடிக்கப் பார்ப்போம். முன் வைத்த காலை, அது சரியான அடியாக இருக்கும்போது ஒருநாளும் பின் வைப்பதில்லை. காலம் வழிகாட்டும் என்ற அநுபவ நம்பிக்கை, நெருக்கடிகளிலும் நெருங்கி நிற்கும் கனிந்த நெஞ்சங்களின் கைப்பிணைப்பு, உண்மையான உழைப்புக்கு உலகம் தரும் மரியாதை, வரலாற்றிற்கு இவற்றினும் வேண்டுவது வேறென்ன உண்டு ?

போடப்பட்ட பாதைகளில் நடப்பது ஒருவகை. புதிய பாதைகளை வகுப்பது வளர்ச்சிக்கு வழி. இது இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற கட்டாயங்கள் நமக்கில்லை. எதுவும் ஆர்வமுள்ள மக்களுக்குப் புரிய வேண்டும் ; பயன்பட வேண்டும்.

நம்மைப் பற்றியும் நாட்டைப் பற்றியும் அறிந்து கொள்ளும் பயணத்தில், வரலாறு வழிகாட்டியாய் உதவிடும். இது உங்கள் இதழ். பயன்படுத்திக் கொள்ளுங்கள் ; உங்கள் அன்பில்தான் வரலாற்றின் வாழ்க்கை.

அன்புடன்,
இரா. கலைக்கோவன்

இந்த இதழில்...

1. புதிய கல்வெட்டுகள் — பக்கம்

1. நாஞ்சில் கோட்டை மண்ணையார்கள் கல்வெட்டு — 1
2. மிரட்டுநிலைத் துண்டுக் கல்வெட்டுகள் — 1
3. மூன்று கல்வெட்டுகள் — 3
4. கூத்தப்பார் கல்வெட்டுகள் — 4
5. பூலோகநாதசுவாமி கோயில் கல்வெட்டுகள் — 14
6. அய்யாறப்பன் கோயில் கல்வெட்டு — 17
7. அழகர் கோயில் சுதைப் பொறிப்பு — 17
8. முனியூர் அகத்தீசுவரர் கோயில் தூண் கல்வெட்டுகள் — 17
9. பெருமாள் பாளையம் கல்வெட்டு — 18
10. திருப்பைஞ்ஞீலி கல்வெட்டுகள் — 19
11. கருந்திட்டைக்குடி வசிஷ்டேசுவரர் கோயில் கல்வெட்டுகள் — 30
12. பேரூர்க் கல்வெட்டு — 36
13. நங்கவரம் கல்வெட்டு — 37
14. குழுமணி கல்வெட்டுகள் — 38
15. உய்யக்கொண்டான் திருமலை கல்வெட்டுகள் — 41
16. திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை கல்வெட்டு — 50

2. விட்டுப்போன தொடர்ச்சிகள்

1. கருந்திட்டைக்குடி கல்வெட்டுகள் — 51

3. செப்பேடுகள்

1. விசயரங்க சொக்கநாத நாயக்கரின் ஆதனூர் — சாத்தனூர்ப் பட்டயம் — 57
2. சென்னை அருங்காட்சியகச் செப்பேடுகள் — 60

4. ஆய்வுக் கட்டுரைகள்

1. அமலீசுவரம் திருக்கோயிலின் அமைப்பு முறை — 82
2. முதல் திருமுறையில் ஆடல் குறிப்புகள் — 89
3. வல்லம் குடைவரைகளும் புதிய கல்வெட்டுகளும் — 111

5. பொதுப் பகுதி

1. பெருமைச் சுவடுகள் — மா. இரா. எனும் புகழ்க் கோ — 130
2. நூல் மதிப்புரை — 139
3. யாவரும் கேளிர் — 141
4. கட்டுரையாளர்கள் — 147

வரலாறு இதழில் எழுத விழைவோர்க்கு

வரலாற்றில் கட்டுரை வெளியிட விழையும் ஆய்வறிஞர்கள் தம் தரவுகளை முழு வெள்ளைத் தாளில் ஐந்தல்லது ஆறு பக்கங்களுக்கு மிகா நிலையில் தட்டச்சு செய்து அனுப்புவது பேருதவியாகும். அடிக் குறிப்புகளை எழுதுமிடத்தில் ஆய்வு நெறிமுறைகளைத் தவறாது பின்பற்றுக.

புதிய கண்டுபிடிப்புகளை அனுப்புவோர் முழுச் செய்திகளையும் தட்டச்சு செய்து அனுப்ப வேண்டும். கிரந்த எழுத்துக்களை அவற் றுக்கு இணையான ஒலிப்புடைய தமிழ் எழுத்துக்களில் எழுதலாம். வர்க்க எழுத்துக்களை இங்கு வெளியிடப்பட்டுள்ள அமைப்பு முறையை ஒட்டி அந்தந்த கிரந்த எழுத்துக்குரிய தமிழ் ஒலிப்பு எழுத்துக்களுடன் எண் சேர்த்து எழுதலாம். இந்த இதழில் வந்துள்ள புதிய கல்வெட்டு கள் அனைத்திலும் இம்முறையே பின்பற்றப்பட்டுள்ளது. கல்வெட்டு களை படியெடுக்கும் போது சில எழுத்துக்கள் தெளிவில்லாமலும், பொரிந்தும், சிதைந்தும் இருக்கலாம். அப்படிப்பட்ட எழுத்துக்களை அவை வரும் இடம் நோக்கி இன்ன எழுத்துக்களாக இருக்கலாம் என ஊகித்து எடுத்துக் கொள்வதுண்டு. அப்படி ஊகிக்கப்பட்ட எழுத்துக் களை பகர அடைப்புக்குள் தருதல் வேண்டும். சில நேரங்களில் கல் வெட்டுகளில் சில எழுத்துக்கள் பொறிக்கப்படாது விடுபட்டுப் போயிருக் கலாம். பொருள் நலம் கருதி, அவ்வெழுத்துக்களை, அவை கல் வெட்டில் இடம் பெறாத போதும், இணைத்துக் கொள்ள நேரிடும். இப்படி இணைக்கப்படும் எழுத்துக்களைப் பகர அடைப்பிட்டு, அடைப் பின் அருகே ஒரு நட்சத்திரக் குறியும் சேர்த்துவிடல் நன்றாகும். கல் வெட்டில் பத்து எழுத்துக்களுக்கு மேல் பொரிந்தோ அழிந்தோ போயிருந்தால் அதைக் குறிக்க இரண்டு சிறு கோடுகள் (- -) போட்டால்போதுமானது. ஒருவேளை கல்வெட்டின் ஒரு பகுதி கட்டட அமைப்புக்குள் சிக்கியிருக்குமானால் அதைக் குறிப்பிட நான்கு சிறு கோடுகளை(- - - -) அந்தந்த இடத்தில் சேர்த்துக்கொண்டால் போது மானது. இவ்விதழின் முதற் பகுதியில் வெளியாகியிருக்கும் புதிய கல்வெட்டுகளில் இம்முறைகள் பின்பற்றப்பட்டுள்ளன. கல்வெட்டுகளை அனுப்பும் ஆய்வாளர்கள் இம்முறைகளைப் பின்பற்றுவது நல்லது.

ஒளிப்படங்கள் அனுப்புவோர் அவற்றை பிளாக் செய்து அனுப்புவது நல்லது. பிளாக் செய்ய வாய்ப்பில்லாத இடங்களில் படங்களை அனுப்பி பிளாக் செய்யும் செலவுகளைத் தாங்கள் ஏற்றுக் கொள்ளலாம்.

மதிப்புரை வேண்டுவோர் தாம் எழுதிய நூலின் படிகள் இரண் டினை இதழின் அலுவலக முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். நூலின்

உள்ளீட்டுக்கேற்பத் தகுந்த அறிஞர்களைக் கொண்டு மதிப்புரை எழுதப்படும். வரலாற்றின் வாழ்நாள் உறுப்பினர்கள் எழுதிய நூல்களுக்கு முன்னுரிமை தரப்படும்.

வரலாறு, தொல்லியல், கோயிற்கலைகள், கல்வெட்டியல், இலக்கியம் தொடர்பான கருத்தரங்குகள் நடத்துவோர் தகவல் தந்தால் அவை பற்றிய செய்திக் குறிப்புகளையும் வெளியிடலாம்.

கல்வெட்டு, தொல்லியல், வரலாறு, இலக்கியம் போன்ற துறைகளில் ஆய்வாளர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் ஏற்படும் நியாயமான அய்யங்களைத் தெளிவு செய்யும் கடமை தனக்கிருப்பதாக வரலாறு கருதுகிறது. அய்யங்களை ஆய்வர்கள் தெளிவுபட எழுதினால், அவ்வத் துறை சார்ந்த அறிஞர் பெருமக்களைக் கேட்டு வரலாறு தெளிவுரைகளை வெளியிடும். கல்வெட்டுகளில் ஏற்படும் அய்யங்களை எழுதும்போது குறிப்பிட்ட கல்வெட்டின் முழுப் பகுதியையும் அனுப்ப வேண்டும். சிற்பங்கள், கட்டட அமைப்புகள், பிற தொல்லியல் சான்றுகள் குறித்த அய்யமென்றால், ஒளிப்படங்கள், அய்யத்திற்குரிய பொருள் பற்றிய தெளிவான விளக்கம், வரைபடம் ஆகியவற்றை இணைத்து அனுப்பலாம்.

நன்றி

இந்த இதழ் உருவாகப் புதிய கல்வெட்டுகள், கட்டுரைகள் தந்துதவிய ஆய்வாளர்களுக்கும், இதழின் பெயரை வரைந்து தந்த திரு. மு. ம. கோபாலன் அவர்கட்கும், நெருக்கடியான காலகட்டத்தில் துணை நின்ற வரலாற்றின் நண்பர்களுக்கும், விளம்பரம் தந்துதவிய அருளாளர்களுக்கும் எங்கள் கனிந்த கைகூப்பு.

கிரந்த எழுத்துக்களும் அவற்றிற்கு நிகரான ஒலிபெயர்ப்புடைய தமிழ் எழுத்துக்களும்

உயிர் எழுத்துக்கள்

கிரந்தம் :	𑌅	𑌆	𑌇	𑌈
தமிழ் :	அ	ஆ	இ	ஈ
கிரந்தம் :	𑌉	𑌊	𑌋	𑍠
தமிழ் :	உ	ஊ	ரு°	ரூ°
கிரந்தம் :	𑌌	𑍡	𑌏	𑌐
தமிழ் :	லு°	லூ°	ஏ	ஐ
கிரந்தம் :	𑌓	𑌔	𑌅𑌂	𑌅𑌃
தமிழ் :	ஓ	ஔ	°	⁰₀

உயிர் மெய் எழுத்துக்கள்

கிரந்தம்:	𑌕	𑌖	𑌗	𑌘	𑌙
தமிழ்:	க	க2	க3	க4	ங
கிரந்தம்:	𑌚	𑌛	𑌜	𑌝	𑌞
தமிழ்:	ச	ச2	ச3(ஜ)	ச4	ஞ
கிரந்தம்:	𑌟	𑌠	𑌡	𑌢	𑌣
தமிழ்:	ட	ட2	ட3	ட4	ண
கிரந்தம்:	𑌤	𑌥	𑌦	𑌧	𑌨
தமிழ்:	த	த2	த3	த4	ந
கிரந்தம்:	𑌪	𑌫	𑌬	𑌭	𑌮
தமிழ்:	ப	ப2	ப3	ப4	ம
கிரந்தம்:	𑌯	𑌰	𑌲	𑌵	𑌶
தமிழ்:	ய	ர	ல	வ	ச°
கிரந்தம்:	𑌷	𑌸	𑌹	𑌳	𑌕𑍍𑌷
தமிழ்:	ஷ	ஸ	ஹ	ள	க்ஷ

2, 3, 4, என்பன வர்க்க எழுத்துக்களை ஒலி பெயர்க்கக் குறிக்கப்பட்டுள்ளன. கிரந்தத்தில் கூட்டெழுத்துக்களாக வருபவற்றைப் பிரித்துத் தனித்தனி எழுத்துக்களாகக் கொடுக்கலாம்.

1. புதிய கல்வெட்டுகள்

1. நாஞ்சில் கோட்டை மண்ணையார்கள் கல்வெட்டு

எஸ். இராமச்சந்திரன், கா. சண்முகம்

இடம்: தஞ்சை நகரிலிருந்து கரம்பைக்குடி செல்லும் வழியில் தஞ்சையிலிருந்து ஏழு கி.மீ.தொலைவில் உள்ள நாஞ்சில் கோட்டையில் சாலையோரத்தில் மரத்தடியில் இக்கல்வெட்டுத்தூண் நிறுத்தப் பட்டுள்ளது.

செய்தி: நாஞ்சில் கோட்டையைச் சேர்ந்த மண்ணையான் என்பவர் இருபத்தொன்பது குடிகளைத் திருவரங்கம் நயினார்க்குக் (இறைவனுக்கு) கொடுத்துள்ளார். இன்றும் நாஞ்சில் கோட்டையி லுள்ள மண்ணையார்களிடம் திருவரங்கம் கோயிலுக்கு மாடு விடும் வழக்கம் உள்ளது.

காலம்: 1741, அக்டோபர்.

1 சுபமஸ்து
2 சாலிய வா
3 கன சகாப்
4 த்தம் 16
5 63 ஷு மே
6 ல் செல்லா
7 நின்ற துன்ம
8 தி ஷு புரட்டா
9 சி மீ 30 உ ஸ்ரீ
10 ரெங்கம் திரு
11 ப்பதியிலிரு
12 க்கும் நயி
13 னார் அவர்
14 களுக்கு னாஞ்
15 சல்க் கோட்
16 டையில்லிரு
17 க்கு மண்ணை
18 யான்
19 [குடி யிருபத்
20 தொன்பதும்
21 தர்மம்]

---

2. மிரட்டுநிலைத் துண்டுக் கல்வெட்டுகள்

எஸ். இராமச்சந்திரன்

புதுக்கோட்டையிலிருந்து ஏம்பல் செல்லும் வழியில் ஓணாங்குடிக் கருகில் மிரட்டுநிலை என்னும் ஊர் உள்ளது. இங்குள்ள சிவன் கோயில் முற்றிலும் சிதைந்து மீண்டும் கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலில் பல துண்டுக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

இடம்: கருவறையின் தெற்கு, மேற்கு, வடக்குப் புறங்கள்.

காலம்: பதினான்காம் நூற்றாண்டு.

i) 1 கோச்சடைய பன்மரான ஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்கு
2 யாண்டு 25 ஆவது கானநாட்டு மிலட்டு

ii) விசையாலைய

iii) சீராமன் பொய்சள

iv) நயினார் விசையாலைய தேவர் எழுத்து

v) கோச்சடையவன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் கொல [சேகர]

vi) மிலட்டு மேற்குடி அரைய குளம்

குணலை

இது ஒருவகைக் கூத்து. வீராவேசத்தோடு கொக்கரித்தல், கைதட்டிக் கூவுதல் போன்றவை இக்கூத்தின் நிகழ் நிலைகளுள் அடக்கம். தேவாரப் பதிகங்களில் இரண்டு இடங்களில் இக்கூத்து குறிக்கப்படுகிறது. திருக்கோட்டூரைப் பாடும் போது சம்மந்தர் பெருமான் இக்கூத்தைப் பெண்கள் ஆடுவதாய்க் குறிப்பு காட்டுகிறார் (2:109). இது குழுக்கூத்து என்றும் பாடுகிறார். 'மென் கொங்கையர் குழாம் குணலை செய் கோட்டூர்.' அப்பரடிகள் தம் திருப்பூந்துருத்திப் பதிகத்தில் (5:32) இக்கூத்தைக் குறிப்பிடுகிறார். 'கொடிகொள் செல்வ விழாக் குணலை அறாக் கடிகொள் பூம்பொழில் கச்சி ஏகம்பனார்' என்று கச்சியில் 'நடைபெற்ற விழாக்காலத்துக் குணலைக் கூத்தை அடையாளம் காட்டுகிறார். அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் வரிக் கூத்துகளைப் பற்றிப் பேசும்போது குணலைக் கூத்தினை வரிக்கூத்தின் வகையென்று சொல்வது குறிப்பிடத்தக்கது (பக். 89).

3. மூன்று கல்வெட்டுகள்

i) பெரும்புலியூர் சுந்தரராசப்பெருமாள் கோயில் கல்வெட்டு

எஸ். இராமச்சந்திரன்

இடம்: தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், பெரும் புலியூரிலுள்ள சுந்தரராசப் பெருமாள் கோயிலின் முன்னர் நிறுத்தப் பட்டிருக்கும் திருச்சக்கரக் கல்லில், சக்கரச் சின்னத்தின் கீழ் இக் கல்வெட்டு காணப்படுகிறது.

காலம்: பதினான்காம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ திரி
2 யவிருந்த பெரு
3 மாள் கோயி
4 ல் எழுபத்தொ
5 ன்பது நாட்டு ப
6 தினெண் பூமிக்
7 [காளி கற்பகக்கோன்]

ii) கூலிவிராகுக் கொல்லைக் கல்வெட்டு

இடம்: புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், அரிமழத் துக்கு அருகிலிருக்கும் ஓணாங்குடியிலுள்ள வசவ நாயக்கன் ஊருணிக் கருகில் கூலிவிராகுக் கொல்லை என்னுமிடத்தில் திரு. மாரியப்பன் என்பவருக்குரிய நிலத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கல்லில் இக் கல்வெட்டு காணப்படுகிறது. கல்வெட்டு வரிகளுக்குக் கீழே குடம், குத்து விளக்குகள் பொறிக்கப்பட்டுள்ளன.

செய்தி: கேரள நாட்டைச் சேர்ந்தவனும் விழிச் சான்றார் (மிழிச் சானார்) குலத்தவனும் ஆன தென்னவதரையன் ஆசிரியம்.

காலம்: பதினான்காம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ ஓண
2 ன் காரிகுடி
3 கேரளி மிழிச்சா
4 னான் தென்னவ
5 தரையந் ஆசிரி
6 யம் சு$_{○}$ப$_{4}$மஸ்து

iii) காசாமலைக் கல்வெட்டு

இடம்: திருச்சிராப்பள்ளி காசாமலைக் குன்றில் மகளிர் வேலை வாய்ப்பு மேம்பாட்டு சங்க அலுவலகக் கட்டடத்துக்கு எதிரில் தர்க்கா வுக்குச் செல்லும் வழியில், பாறையில் ஒரு கல்வெட்டும் திரிசூலக் குறியும் பொறிக்கப்பட்டுள்ளன.

காலம்: பதினான்காம் நூற்றாண்டு.

கல்வெட்டு: சொக்கரையன்

4. கூத்தப்பார் கல்வெட்டுகள்

மு. நளினி, கோ. வேணிதேவி

திருச்சிராப்பள்ளி திருஎறும்பியூர் சாலையில், திருஎறும்பியூருக்கு அருகில் மேம்பாலத்துக்கருகே வலப்புறம் பிரியும் பாதையில் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது கூத்தப்பார். இங்குள்ள மருந்தீசர் கோயிலில் மிக நீளமான இரண்டு தமிழ்க் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகளில் கூத்தப்பார் பாண்டி குலாசனி வளநாட்டு மீகோழை நாட்டுப் பகுதியில் இருந்ததாகக் குறிக்கப் படுகிறது. ஊரின் பழைய பெயர் கூத்தப் பெருமாள்நல்லூர். மருந்தீசர் கோயில் முன்னாளில் அழகிய திருவிடை மருதுடைய நாயனார் கோயிலென்று அழைக்கப்பட்டுள்ளது. இரண்டு கல்வெட்டுகளும் பல இடங்களில் சிதைந்தும் பொரிந்தும் போயுள்ளன. கல்வெட்டுகளை அறிமுகப்படுத்தியவர் திருஎறும்பியூர் முக்குலத்தோர் தொடக்கப் பள்ளியின் தலைமையாசிரியர் திரு. கந்தசாமி.

முதற் கல்வெட்டு

இடம்: தென் மதிலின் வெளிப்புறம்.

செய்தி: சோமநாதபுரத்து சோமநாத தேவர் மற்றும் விசுவேசுவர தேவர் திருக்கோயில்களைச் சேர்ந்த கோயில் தானத்தாரும், சனநாத சதுர்வேதி மங்கலத்து (சதுர்வேதி மங்கலமே, சதுப்பேதி மங்கலமாகவும் சறுப்பேதி மங்கலமாகவும் கல்வெட்டில் இடம் பெற்றுள்ளது. நான்மறை வல்ல அந்தணர்க்குக் கொடையாகத் தரப்பட்ட இடம் சதுர்வேதி மங்கலமென அழைக்கப்பட்டது) விசுவாதி கவி வேதீசுவரமுடையார் திருக்கோயில் தானத்தாரும் இணைந்து தங்கள் கோயில்களுக்குரிய பதின்மூன்றே முக்கால் வேலி நிலத்தைக் கூத்தப் பெருமாள் நல்லூர் அழகிய திருவிடை மருதுடைய நாயனார் கோயில் இறைவர்க்குத் திருநாமத்துக் காணியாக விளங்கும் பொருட்டு அக்கோயில் தேவகன்மிகளிடம் விசத்தடை பரிவர்த்தனையாகத் (பகுதி விலைக்கும் பகுதி மாற்றாகவும்) தந்தனர்.

கல்வெட்டு இந்தப் பரிவர்த்தனை பற்றி மிக விளக்கமான செய்திகளைத் தருகிறது. வளம்பகுடையான் (வளம்பகுடி உடையான்) திருநட்டப் பெருமாள் உலகனான விசயாலய முத்தரையர் என்பார் சோமநாத தேவர், விசுவேசுவர தேவர், விசுவாதி கவி வேதீசுவரமுடையார் ஆகிய மூன்று கோயில் கடவுள்கட்குத் திருநாமத்துக் காணியாகவும் இறையிலியாகவும் நிலக்கொடை அளித்திருந்தார். இதற்கான கல்வெட்டுகள் சோமநாத தேவர் திருக்கோயிலிலும் திருநெடுங்கள

முடைய நாயனார் திருக்கோயிலிலும் இடம் பெற்றன. கிளியூர் நாட்டுக் கள்ளிக்குடியிலிருந்த ஐந்து வேலி நிலமும், கிளியூர் நாட்டி லிருந்த 'வகம்' என்ற பெயரில் அழைக்கப்பட்ட நிலமான எட்டே முக்கால் வேலி நிலமும், ஆக மொத்தம் 13¾ வேலி நிலமே இக்கோயில் களின் தானத்தாரால் கூத்தப் பெருமாள் நல்லூர் கோயிலார்க்கு மாற் றித் தரப்பட்டது.

வகம் என்று அழைக்கப்பட்ட எட்டே முக்கால் வேலி நிலத்தின் எல்லைகளைக் குறிப்பிடும் கல்வெட்டு அந்நிலத்துக்குரிய உரிமை யாளர்களையும் சுட்டுகிறது.

சோமநாத தேவர் திருநாமத்துக் காணியும் இறையிலியும் —
மூன்று வேலியே ஒருமாவரை

விசுவேசுவர தேவர் திருநாமத்துக் காணியும் இறையிலியும் —
மூன்று வேலியே மும்மாவரை

விசுவாதி கவி வேதீசுவரமுடையார் திருநாமத்துக் காணியும்
இறையிலியும் — இரண்டு வேலி

விசுவாதி கவி வேதீசுவரமுடையார் கோயில் திருப்பணிக்
கண்காணி தவப்பெருமானின் சீவிதப் பற்று—அரைவேலி

இந்தப் பதின்மூன்றே முக்கால் வேலி நிலத்தைப் பெற்றுக்கொண்ட கூத்தப் பெருமாள் நல்லூரைச் சேர்ந்த அழகிய திருவிடை மருதுடைய நாயனார் கோயில் தேவகன்மிகள் இந்நிலத்தின் விலை மதிப்பில் ஒரு பகுதியை நிலமாகவும் மறு பகுதியைப் பொருளாகவும் தந்தனர். அதா வது 13¾ வேலி நிலத்துக்கு மாற்றாக ஐந்து வேலி மற்றும் மூன்றுமா முக்காணி நிலமும், 20,200 காசுகளும் தரப்பட்டன. இப்படித் தரப்பட்ட ஐந்து வேலி மற்றும் மூன்றுமா முக்காணி நிலம் கூத்தப் பெருமாள் நல்லூர் கோயிலுக்குரிய திருநாமத்துக் காணியாகும். இந் நிலத்தின் பழைய உரிமையாளர்களாகப் பஞ்சவன் பிரமமாராயர், இவரது தாயார், மனைவி மற்றும் தம்பியர் குறிக்கப்படுகின்றனர்.

இந்தப் பரிமாற்றத்துக்கு ஒப்புக்கொண்டு நான்கு கோயில்களைச் சேர்ந்தவர்களும் கையொப்பமிட்டுள்ளனர். சீகாழிப் பிள்ளை, நல்லிசை ஞானசம்பந்தன் முதலிய பெயர்கள் குறிப்பிடத்தக்கன. திருஎறும்பி யூருக்கு அண்மையிலுள்ள சோழமாதேவியிலிருந்து பலர் சான்றாளர் களாகக் கையொப்பமிட்டுள்ளனர். சோழமாதேவியிலிருந்த வீரசோழச் சேரி என்னும் பகுதியும் இக்கல்வெட்டில் குறிக்கப்படுகிறது.

காலம்: மூன்றாம் இராசராசனின் இருபத்தொன்பதாம் ஆட்சி யாண்டு, கி. பி. 1245.

1 ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீ திரிபுவனச் சக்க[ர]வர்த்திகள் ஸ்ரீஇராசராச தேவர்க்கு யாண்டு 29வது மிதுன ஞாயற்று அபர பக்ஷத்துத் திரதியையும் புதன் கிழமையும் பெற்ற திருவோணத்து நாள் பாண்டி குலாசனி வளநாட்டு மீகோழை நாட்டு கூத்தப் பெருமாள் நல்லூர் உடையார் அழகிய திருவிடை மருதுடைய நாயனார் கோயில் ஆதிசண்டேசுர தேவர்கன்மிகளுக்குக் குலோத்துங்க சோழ வளநாட்டுத் திரு[ப்ப]னையூர் நாட்டு சோமநாத[புர]த்து உடையார் சோமநாத தேவரும் உடையார் விச்ᵒவேச்ᵒவர தேவரும் செனநாத சருப்பேதி மங்கலத்து உடையார் விசுவாதி கவி வேதீச்ᵒ வரமுடையாரும் கோயில் ஆதிசண்டேச்ᵒவர தேவர் திருவருளால் இக்கோயில்களில் தானத்தோம் விசத்த

2 டை பரிவற்த்தனைத் தீட்டுக் குடுத்த பரிசாவது இன்னாயன் மார்க்கு முத்தரையர் வளம்பகுடையான் திருநட்டப் பெருமாள் உலகனான விசயாலய முத்தரையர் நாலாவது நாளில் திருநாமத் துக் காணியும் இறையிலியுமாக இந்த உடையார் சோமநாத தேவர் திருக்கோயிலிலும் உடையார் திருநெடுங்களமுடைய நாயனார் திருக்கோயிலிலும் கல்வெட்டுவித்துத் தம் காணியான நிலத்து விட்ட நிலமாய் இற்றை நாளால் இந்நாயனார்க்கு விச[த்தடைபரி]வற்தனையாக விட்ட நிலமாவது இந்த பாண்டி குலாசனி வளநாட்டு கிளியூர் நாட்டு கள்ளிக்குடியில் கிழக்கடைய உடையார் சோமநாத தேவரும் உடையார் விச்ᵒவேச்ᵒவர தேவரும் திருநாமத்துக் காணியான நன்செய்யும் புன்செய்யும்

3 நிலம் 5 வேலி இன்னிலம் ஐவேலியும் இந்நாட்டுக்குள் வகமென்று பேர் கூவப்பட்ட நிலத்துக்குக் கீழ்ப்பாற்கெல்லை . . . . த்து நிலத்துக்கு மேற்குந் தென்பாற் கெல்லை சோழமாதேவிச் சருப் பேதி மங்கலத்து எல்லைக்கு வடக்கும் மேற்பாற்கெல்லை . . . த மங்கலத்துக் கீழை வடக்கோடி வாய்க்காலுக்குக் கிழக்கும் வடபாற் கெல்லை உப்பூரிக்குடி நிலத்துக்குத் தெற்கும் ஆக விசைந்த இன் னான் கெல்லையுள் நடுவுட்பட்ட விளைநிலமும் நத்தமும் நன்செய் யும் நிலம் 8¾ இந்நிலம் எட்டே முக்காலில் உடையார் சோமநாத தேவர் திருநாமத்துக் காணியும் இறையிலியும் நிலம் மூன்று வேலியே ஒரு மாவரை* உடையார் விச்ᵒவேச்ᵒவர தேவர் திரு நாமத்துக் காணியும் இறையிலியும் நிலம் மூன்று வேலியே மும் மாவரை*ம் உடையார் விசுவாதி கவி வேதீ

* இந் நிலஅளவு குறியீட்டால் குறிக்கப்பட்டுள்ளது.

4 ச்௳வரமுடையார் திருநாமத்துக் காணியும் இறையிலியும் நிலம் 2*லிம் இந்நாயன்மார் கோயில் திருப்பணிக் கண்காணி தவப் பெருமானுக்குச் சீவிதம் அடைக்க இறையிலியிட்ட நிலம் ½ம் ஆக நிலம் 8¾ இன்னிலம் எட்டே முக்காலும் ஆக நன்செய் புன்செயும் நத்தமும் உட்பட நிலம் 13¾ இன்னிலம் பதின்மூன்றே முக்காலும் இன்னாயனார்க்கு திருநாமத்துக் காணியும் இறையிலியுமாக விசத்தடை பரிவற்த்தனையாக விட்டு இன்னி[லத்துக்]குத் தலை மாறு இந்த உடையார் சோமநாத தே[வ]ரும் உடையார் விச்௳வேச்௳வர தேவரும் தேவதானம் இந்த சோமநாத தேவ மங்க லத்து — — கொ[ண்ட சோ]சாழ நல்லூரில் பாரத்துவாசி ஸ்ரீ மூலத்தானமுடையான் [பஞ்சவன்] பிரமமாராயர் பா

5 . . . . பெருமானான திருநட்டமாடி பட்டனும் இவன் தம்பி வீதிவிடங்கப் பெருமானான சோமநாத பட்டனும் இவன் தம்பி திருவையாறு உடையான் பட்டனும் இவர்கள் மாதா பெண்ணில் நல்லாள்ச் சாணியும் இந்த பஞ்சவன் பிரமமாராயர் பிராமணி ஆ. . காணடிச் சானியும் பக்கல் இந்த உடையார் அழகிய திருவுடை மரு துடை நாயனார் திருநாமத்துக் காணியாக விலை கொண்ட நிலமாய் வட . . . . . பேதியான விருதராஜ பயங்கர சருப்பேதி மங்கலத்து எல்லைக்கு மேற்கும் வடக்கும் இவ்வூர்க்கு நீர் பாய்கிற பெருவாய்க்காலுக்குக் கிழக்கும் . . . புதசாறான் குலோத்துங்க சோழப் பேர[ாற்றுக்கு] தெற்கும் நடுவுபட்ட விளைநிலமும் நத்த மும் புன்செய்யும் ஆற்றுள் வாய்ப்படு . . . . . நீர் நிலைகளும் மர நிலை

6 யும் உட்படப் பொத்தகப்படி நிலம் 5 [வேலி*] மூன்றுமா முக்காணி** விசத்தடையாக இற்றை நாளால் இந்த கூத்தப் பெருமாள் நல்லூ ரில் பகுத பண்ணி ஒரு கிழிப்படுத்திக் கைக்கொண்ட ஆயிர வரிசை கிழி இருபதனால் கா . . . தம் கிழி ஒன்றினா[ல்] காசு 200ம் ஆகக் காசு 20,200 இக்காசு இருபதினாயிரத்திருநூறும் இந்தப் பொத் தகப்படி நிலம் ஐஞ்சே மூன்றுமா முக்காணியும் கைக்கொண்டு முற் சொல்லப்பட்ட நிலந் பதின்மூன்றே முக்காலும் திருநாமத்துக் காணியாக[வும் இறையிலியாகவு]மாய் அந்தராயம் . . . . ந்தேவை. . . . . . தவிர்ந்து சந்திராதித்தவற் செல்லுவதாக . . . . . இந்னாயனார்க்கும்திருநாமத்துக் காணியும் இறையிலியும் அந்த ராயம் விட்டபடியே . . . . . . தேவை

---

* இரண்டு வேலியும் என்று படிக்கவும்.

** இந் நிலஅளவு குறியீட்டால் குறிக்கப்பட்டுள்ளது.

7 பிடிகை ஆயம் உள்ளிட்டந தவிர்ந்து சந்திராதித்தவற் செல்லக் கடவதாகவும் இந்நிலத்துக் குழிப்பன குழித்தும் உயர்த்துவன உயர்த்தியும் திருத்துவன திருத்தியும் கொள்ளக் கடவார்களாகவும் விசத்தடைப் பரிவற்த்தனையாக விட்டமையில் இன்னிலத்துக்கு இவர்கள் வேணுமெந்ற போதே பிரமாணம் பண்ணிக் குடுக்கக் கடவோமாகவும் குடுத்திலோமாகில் இந்த விசத்தடை பரிவர்த்தனை தீட்டே பிரமாணமாவதாகவும் இப்படி சம் — — திருவுடை மருதுடைய நாயனார் கோயில் ஆதிசண்டேச்ஂவர தேவகன்மிகளுக்கு உடையார் சோமநாத தேவரும் உடையார் விச்ஂவேச்ஂவர தேவரும் உடையார் விசுவாதி கவி வேதீச்ஂவரமுடையா

8 ரும் கோயில் ஆதிசண்டேச்ஂவர தேவர் திருவருளால் இக்கோயில் களில் தானத்தோம் இவர்கள் அருளிச் செய்ய இவ்விசத்தடை பரிவற்த்தனைத் தீட்டு எழுதினமைக்கும் இப்படிக்கிவை கோயில் கணக்குச் சருப்பேதியுடையான் அழகிய மணவாளந் ஆதியாழ்வானேன் இவை என் எழுத்து திருநாமத்துக் காணி பொத்தகப்படி நிலம் [ஐஞ்]சே மூன்றுமா முக்காணியும் காசு இருபதினாயிரத்து இருநூறும் கைக்கொண்டு முன் சொல்லப்பட்ட திருநாமத்துக் காணியும் இறையிலியும் — — இவை கோயில் கணக்கு வல்லமுடையான் வீரன் சிவதவநப் பெருமானேன் இவையென் எழுத்து திருநாமத்துக் காணி பொத்தகப்படி நிலம் ஐஞ்சே மூன்றுமா முக்காணியும் காசு இருபதினாயி

9 ரத்திருநூறும் கைக்கொண்டு முன் சொல்லப்பட்ட திருநாமத்துக் காணி நிலம் பதின்மூன்றே முக்காலும் விசத்தடை பரிவற்த்தனையாக விட்டமைக்கு இவை கோயில் கணக்குச் சாருடையான் அதிபட ஆடுவான் திருவிடை மருதுடையான் எழுத்து திருநாமத்துக் காணி பொத்தகப்படி நிலம் ஐஞ்சே மூன்றுமா முக்காணியும் காசு இருபதினாயிரத்திருநூறும் கைக்கொண்டு முன் சொல்லப்பட்ட திருநாமத்துக் காணி நிலம் பதின்மூன்றே முக்காலும் விசத்தடை — — யான திருக்காமீச்ஂவரமுடையான் சோமநாத தேவன் எழுத்து திருநாமத்துக் காணி பொத்தகப்படி நிலம் ஐஞ்சே மூன்றுமா முக்காணியும் காசு இருபதினாயிரத்திருநூறும் கைக்

10 கொண்டு முன் சொல்லப்பட்ட திருநாமத்துக் காணி நிலம் பதிந்மூன்றே முக்காலும் விசத்தடைப் பரிவற்த்தனையாக[விட்ட]மைக்கு இவை உடையார் சோமநாத தேவரும் உடையார் விச்ஂவேச்ஂவர தேவரும் உடையார் விச்ஂவாதி கவி வேதீச்ஂவரமுடையாரும் கோயிற் கணக்கு சேற்றூருடையான் திருச்சிற்றம்பலமுடையான் சோமநாத தேவந் எழுத்து இப்படிக்கிவை தேவகன்மி சோமநாத

பட்டன் எழுத்து இப்படிக்கிவை சீகாழிப்பிள்ளையாந விச்ஂவேச்ஂவர . . . . திருநாமத்துக் காணி பொத்தகப்படி நிலம் ஐஞ்சே மூந்றுமா முக்காணியும் இக்காசு 20.200 கைக்கொண்டு முன் சொல்லப்பட்ட திருநாமத்துக் காணியும் இறையிலியும் நிலம் பதின் மூந்றே முக்காலும் விசத்தடைப் பரிவற்த்தனையாக

11 விட்டமைக்கு இவை உடையார் விச்ஂவேச்ஂவர தேவர் கோயிற் காணியுடைய எதிரிலாப் பெருமாநாந நற்புருஷ பட்டன் எழுத்து இப்படிக்கிவை பாரதாயன் ஸ்ரீகண்ட பட்டந் விச்ஂவேச்ஂவர தேவந் எழுத்து இது உடையார் விச்ஂவாதி கவி வேதீச்ஂவரமுடயார் கோயிற் காணியுடைய . . . . பட்டன் சயிஞ்சதந்மைக்கு உடையார் பசுபதீச்ஂவரமுடையார் கோயில் சைவாச[ரரி]யம் சிவ லோக நாய . . . . . . எழுத்து இந்தத் திருநாமத்துப் பொத்தகப்படி நிலம் ஐஞ்சே மூன்று — — பரிவற்த்தனையாக கடமைக்குச் சைவா சாரியம் மாங்குடி அகோர சிவரான சைவ புரந்தர பிரமாராயன் எழுத்து இந்தப் பொத்தகப்படி நிலம் ஐஞ்

12 சே மூந்றுமா முக்காணியும் விசத்தடை பரிவற்த்தனையாக விட்ட மைக்கு இக்காசு இருபதிநாயிரத்திருநூறும் கைக்கொண்டு முந் சொல்லப்பட்ட திருநாம[த்துக் காணி] இறையிலியும் நிலம் பதின் மூன்றே முக்கால் — — ட்டமைக்கு இவை கவுசிகன் மாங்குடி திருச்சிற்றம்பலமுடையானான விச்ஂவேச்ஂவர பட்டன் எழுத்து இப்படிக்கிவை சைவாசாரியம் மாங்குடி . . . . . ந்தாம பிரமா ராயந் மகன் சொன்னவாறறிவானான நாயகன் திருநட — — கோயில் பூசிக்கும் மாநனையாருடையாந் பட்டன் எழுத்து இந் நாயந்மார் கோயில் அகாரணக் கண்காணி மருதூருடையான் நல்லிசை ஞானசம்பந்தன் எழுத்து இந்

13 த திருநாமத்துக் காணி பொத்தகப்படி நிலம் ஐஞ்சே மூந்றுமா முக் காணியும் காசு இருபதினாயிரத்திருநூறும் கைக்கொண்டு முன் சொல்லப்பட்ட தி — — விட்டமைக்கு இவை [மாகே]ஹச்ஂவரக் கண்காணி இலச்சியுடையான் சோமநாத தேவன் எழுத்து இப்படி அறிவேன் உடையார் திருநெடுங்களை — — கோயிற் கணக்குச் சோழமாதேவியுடையாந் பள்ளி கொ — — விடங்க — — இவை தள . . ச்ஂவர நம்பி யெழுத்து இப்படியறிவேன் உடையார் திருநெடுங்களமுடையா

14 ரைப் பூசிக்கும் நம்பிமாரில் திருவேர்த்தசாம அழகியாந் எழுத்து இப்படிக்கிவை தில்லை நாயக . . . . லான் எழுத்து இப்படிக்கு — — சோனைய பட்டனேன் இப்படியறிவேன் மலரியான் சருப்

பேதி மங்கல . . . . . ரபாணி மாசறு சோதி அருள்மாரி நம்பியேன் இப்படி அறிவேன் மலரியா . . . . பேதி மங்கலத்து வலவூர் நா . சயன் . . அழகியமணவாள நம் — — மங்கலத்து — — சருப் பேதி மங்கலத்து வலவூர் காரண — — எழுத்து இப்படியறிவேன் சோழமாதேவி சருப்பேதி மங்கலத்து . . . முடிசூட்டினான் நம்பி [அறி]

15 வேந் இப்படி அறிவேன் சோழமாதேவிச் சருப்பேதி மங்கலத்து செல்வ நம்பியேன் இப்படியறிவேன் சோழமாதேவிச் சருப்பேதி மங்கலத்து வீரசோழச்சேரி . . . . னான திருமங் . . . . நம்பியேன் இப்படியறிவேன் பாடகத்து அழகிய மணவாளந் பட்டனேன் இப்படி அறிவேன் கோமடத்துச் செல்வ நம்பியேன் — — இவை மநியமுடையான் தெந்நவந் விழுப்பரையனேன் இப்படி அறிவேன் பாகங்குடையாந் கிளியூர் நாட்டு மூவேந்த வேளாநேன் இப்படி அறிவேன்

16 — — முடையான் கற்பகப் பெருமாளான பங்களராயன் எழுத்து இப்படி அறிவேன் கிளியூருடையான் கேரளராயன் எழுத்து இப்படி அறிவேன். . . .

17 கிளியூர் நாட்டு விழுப்பரையன் கைமாட்டாங்காநமைக்கு — — தில்லை சிற்றம்பல வனசந்தராயனேன் — —

*18 . . . . அறிவேன் வயலூர் கிழ — — இப்படி அறிவேன் அரசங் குடை. . . . .

இரண்டாம் கல்வெட்டு

இடம்: தென் மதிலின் வெளிப்புறம்

செய்தி: குலோத்துங்க சோழ வளநாட்டைச் சேர்ந்த சுரசராம்பிச் சபாபதி பட்டன் என்பவர் பாண்டி குலாசனி வளநாட்டு கூத்தப் பெரு மாள் நல்லூரிலிருக்கும் அழகிய திருவிடை மருதுடைய நாயனார் கோயிலுக்குத் தம்முடைய காணியும் இறையிலியுமான பாம்பூர் நாட் டுச் செம்பியன் சிறுபாக்கம் நிலத்தையும், திருவீழிமிழலைக்கு அருகி லிருந்த நிலத்தையும் இறையிலி உட்பட இரண்டு இலட்சத்து பதினான் காயிரம் காசுகளுக்கு விற்றுத் தந்தார். நிலத்தின் எல்லைகள் குறிக்கப் படும்போது மருத மாணிக்க வாய்க்கால், கிரத்தி மானாறு போன்ற நீர்வழிகளும் பல ஊர்களும் இடம் பெறுகின்றன. 'சேட்டைப்புரம்' சேட்டை தேவிக்குத் தரப்பட்ட நிலத்தைக் குறிப்பதாகலாம்.

* இறுதி மூன்று வரிகள் சிதைந்துள்ளன.

இக்கல்வெட்டின் தொடர்ச்சியாக 'விழுப்புணைத் தீட்டு' என்ற பெயரில் மற்றொரு கல்வெட்டு காணப்படுகிறது. சுத்தமலி வளநாட்டு முடிச்சோழ நாட்டு பிரமதேயமான செயநாத சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த தேவ பட்டன் என்பார் அழகிய திருவிடை மருதுடைய நாயனார் கோயில் தேவகன்மிகளுக்கு தாம் கிழிப்புணையாய் நின்று இந்த விழுப் புணைத் தீட்டைத் தந்திருக்கிறார். முக்கியமான இடங்களில் கல் வெட்டு சிதைந்துள்ளதால் இவ்விழுப்புணைத் தீட்டின் விளக்கத்தைப் பெற முடியவில்லை.

காலம்: மூன்றாம் இராசராசனின் இருபத்தொன்பதாம் ஆட்சி யாண்டு, கி. பி. 1245.

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபு$_4$வநச் சக்ரவர்த்திகள் ராஜராஜ தே$_3$வர்க்கு யாண்டு இருபத்தொன்பதாவது இஷப$_4$ நாயிற்று அபர பக்ஷத்து. . ரேவதி நாள். . . குலோத்துங்க சோழ வளநாட்டு . . . ரட்டிச் சேரி வற்ச கோத்திரத்து சுரசராம்பிச் சபாபதி பட்டநேன் நில விலைப் பிரமாண இசைவுத் தீட்டு பாண்டி குலாசனி வளநாட்டு கூத்தப் பெருமாள் நல்லூர் உடையார் அழகிய திருவிடை மருதுடைய நாயநார் கோயில் ஆதிசண்டே[சுவர] தேவகன்மிகளுக்கு நான் நில விலைப் பிரமாண இசைவு தீட்டுக் கு

2 டுத்த பரிசாவது உய்யக் கொண்டார் வளநாட்டு பாம்பூர் நாட்டு செம்பியன் சிறுபாக்கமாய் இதே[வ]ர்க்குப் பதிநொன்றாவது நாள் 350 னால் எனக்குக் காணியும் இறையிலியு — — நாகன்பாண்டி எல்லைக்கு மேற்குந் தென்பாற் கெல்லை கீழ் நாகன் பாடியுஞ் சிறுகுடியில் சேட்டைப் புரத்துக்கு வடக்கும் மேற்பாற் கெல்லை மருத மாணிக்க வாய்க்காலுக்குக் கிழக்கும் வடபாற் கெல்லை கிரத்தி மானாற்றுக்கு தெற்கும் ஆகவிசைந்த வின்னான் கெல்லை யுள் நடுவுபட்ட நிலம் . . . . .

3 இந்த மருத மாணிக்க வாய்க்காலுக்கு மேற்கும் திருவீழிமிழலைக் குக் கிழக்குப் பட்ட நிலம்1[வே*]லியும் ஆக நிலம்18. . . . உள்வரிப் ப[டி இ]ன்னிலம் பதினெட்டே இரண்டுமா — — யே மும்மாவரை முந்திரிகைக் கீழ் முக்காலேமா[க்]காணியுஞ் சிறுகுடி நத்தத்து இவ்வூர் நிலம் ஓபாதி இறையிலி நத்தமாய்த் திருத்திப் பயிர் செய்து வருகிற குழி 15 னால் நிலம் — — இவ்வூர் எல்லைக் குத் தெற்கு உலகுணி மங்கலமான கீழ்நாகன் பாடியில் பன் னிரண்டா

4 வது நாள் 300 னால்க் காணியும் இறையிலியுமாக ப்ரஸாதஞ் செய்தருளி உள்வரி எழுதின உள்வரிப்படி பெற்று — — என்னு

த்தாய் அனுப[வித்து வ]ருகிற நிலம் 17 . . . . . . இன்னிலம் பதினே ழரையே ஒரு மாவரை முந்திரிகைக் கீழ் மாகாணியும் அந்தராயம் பாட்டம் உட்படக் காணியும் இறையிலியுமாக ப்ரஸாதஞ் செய் தருளிந உள்வரிப்படியே இறையிலி உட்பட விற்றுக் குடுத்தேன் உடையார் அழகிய திருவிடை மரு

5 துடைய நாயநார் கோயில் ஆதிசண்டேச்ᵒவர தேவகந்மிகளுக்கு வற்ச கோத்திரத்துச் சுரசராம்பிச் சபாபதி பட்டனேன் இன்னிலம் பதிநேழரையே ஒரு மாவரை[முந்திரிகைக் கீ]ழ் மாகாணியும் விற்றுக் குடுத்துக் [கொ]ள்வதான — — [இரு] நூறாயிரத் தொருபத்து நாலாயிரமும் . . . . றிக் கை செலவற கொண்டு விற்று விலைப் பிரமாண இசைவுத் தீட்டு குடுத்து இந்நிலத்து மேல் நோக்கின பல்லுருவிற் பயந்படும் மரங்களும் கீழ் நோக்கிநது உள்ளிட்ட நீர்நில . . . . [பொதுவும்] பொது வாரியும் படுகையும் பாகாசிரியங்களும் மற்று மெ

6 ப்பேர்ப்பட்ட உரிமைகளும் அகப்பட விற்றுக் குடுத்த இந்நிலத் துக்கு இவர்கள் வேணுமென்ற போதே பிரமாணம் பண்ணிக் குடுக்கக் கடவேநாகவும் குடுத்திலேநாகில் . . . . இசைவுத் தீட்டே — — இதுவே விலையாவதாகவும் இதுவல்லது வேறு பொருள் மாவறுதி . . . . . . சிலவோலை காட்டக் கடவ — — கொண்டு விற்று விலைப் பிரமாண இசைவு தீட்டுக் குடுத்தேந் உடை[யார் அழகிய] திருவிடை மருதுடைய நாயநார் கோயில்

7 ஆதிசண்டேச்ᵒவர தேவகந்மிகளுக்கு வற்ச கோத்திரத்துச் சுரசராம் பிச் சபாபதி பட்டநேந் இப்படி சம்மதித்து இந்நிலம் பதிநேழரையே — — துச் சுரசராம்பிச் சபாபதி பட்டந் எழுத்து இவர்கள் சொல்ல இந்த பிரமாண இசைவுத் தீட்டு எழுதினேன் பாண்டி குலாசனி [வளநாட்டுக்] கிளியூர் நாட்டுப் புளியங்குடையான் அரயன் உத்தமசோழன் எழுத்து இப்படிக்கிவை சுரசராம்பிச் சபாபதி பட்டன் . . . மகன்

8 நாயக பட்டன் எழுத்து இப்படிக்கிவை சுரசராம்பிச் சபாபதி பட்டந் மகன் விநாயக பட்டந் எழுத்து இப்படிக்கிவை சுரச — — தம்பி மகன் ஸ்ரீ ஸப₄ா சுந்த₃ர பட்டனேன் இவை என் எழுத்து இப்படி அறிவேன் தில்லையம்பலச் சருப்பேதி மங்கலத்துச் சுரச நம்பி வேத வனவாசி பட்டனேன் இப்படி அறிவேன் செனனாத சருப்பேதி மங்கலத்துத் துரு — —

9 வாம நாராயண பட்டனேன் இப்படி அறிவேன் ஆலங்குடியாந செயநாதச் சருப்பேதி மங்கலத்து ஆதமங்கலத்துச் சித்த பட்டனேன்

— — துக் கொண்டக்காவூர் சி கிருஷ்ணன் பட்டனேன் இப்படி அறிவேன் ஆலங்குடியான செயநாதச் சருப்பேதி மங்கலத்துப் பேச் சங்கிழ சி கிருஷ்ண பட்டனேன் இப்படி அறிவேந் செனனாத சருப்பேதி மங்கலத்து அம்பலூர் — —

10 ருஷ்ண பட்டனேன் இப்படியறிவேன் அதம்பாரில் பேச்சங்கிழச் சி ராம பட்டனேன் . . . . . . திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீராஜ ராஜ — - இருபத்தொந்பதாவது வைகாசி மாதத்து ஒரு நாள் பாண்டி குலாசனி — — [கூத்தப் பெருமாள்] நல்லூர் உடையார் அழகிய திருவுடைய மருதுடையார் கோயில் ஆதிசண்டேச்ஃவர தேவகந்மிகளுக்கு சுத்தமலி வளநாட்டு முடிச் சோணாட்டு ப்ரஹ்ம தேஃயம் ஸ்ரீ செயநாத சருப்பேதி மங்கலத்துச் ச . . தேவ பட்ட நேன் விழுப்புணைத்

11 தீட்டுக் குடுத்த பரிசாவது குலோத்துங்க சோழ வளநாட்டுத் திரு நறையூர் நாட்டு அகரம் ஸ்ரீதில்லை . . . . மங்கலத்து . . . . ருவாட்டிச் சொவ . . . . . . பட்டர்க்கு — — இறையிலியுமாக ப்ரஸாதஞ் செய்தருளிந உள்வரி எழுதிந உள் வரிப்படிப் பெற்று . . . . இறையிலியுமாக அநுபவித்து வரு வ . . . உய்யக்கொண்டார் வளநாட்டு பாம்பூர் நாட்டு செம்பியன் சிறுபாக்கம் உள்வரிப்படி — —

12 த்தது இவ்வூர் ஓபாதி இறையிலி நத்தமாய்த் திருத்திப் பயிர் செய்த நிலம்* நிலம் இவ்வூற்க்கு — — நத்தமும் குளங்களும் . . . ங்களும் உட்பட இவர்க இந்த மாதத்திலே இந்த ஸபாபதி பட்டர் தாம் காணியு மிறையிலியுமாகப் பெற்றபடியே இறையிலி உள் வரிப்படியே விற்றுக் குடுத்த பிரமாண விலைக் காசு 2,14,000 இக்காசு இருநூறாயிரத்து ஒருபத்து நாலாயிரத்துக்கு . . . .

13 ணையாய் நின்று அந்தத் தேச காலத்துக்குள்ளே இவ்வாதி சண்டேச்ஃவர தேவகன்[மி*]களோடுங் கூட இந்த — — நாதச் சேரி முறாபதி . . . . . தேவ பட்டனேன் இப்படிக்கு நான் கிழிப்புணை யாய் நின்று இக்காசு இரண்டு நூறாயிரத் தொருபத்து நாலாயிர மும் இவர்களே கொண்டு . . . . . .

14 வை ஆலங்குடியாந செநநாத சருப்பேதி மங்கலத்து முடும்பை நடுவிற் சி ராம பட்டனேன் இவை . . . . பிரமாண விலைப் படி காசு — — சுரசராம்பிச் சபாபதி பட்டர் மகன் நாயக பட்டன் எழுத்து இப்படிக்கு இவை சுரசராம்பிச் சபாபதி பட்டன் மகன் விந்நய . . . . . . எழுத்து — —

---

* நிலத்தின் அளவு குறியீட்டால் குறிக்கப்பட்டுள்ளது.

15 த்திப் பட்டன் எழுத்து இப்ப — — நாராயண — — இப்படி அறிவேன் ஆலங்குடியான செனனாதச் சருப்பேதி மங்கலத்து ஆதமங்கலத்து சித்ர பட்டனேன் இப்படி அறிவேன் கொண்டக்கா வூர் ஸ்ரீ கிருஷ்ண ப[ட்ட]னேன் இப்படி அறிவேன் ஆலங்குடியான செனநாத சரு— —

---

5. பூலோகநாதசுவாமி கோயில் கல்வெட்டுகள்

அர. அகிலா, மு. நளினி

திருச்சிராப்பள்ளி கீழரண் சாலையில் காந்தி சந்தைக்கு அருகில் உள்ளது பூலோகநாதசாமி கோயில். இக்கோயிலில் உள்ள ஆடவல்லான் செப்புத் திருமேனி சிறப்புடையது. இறைவன் ஆடும் தளத்திற்குக் கீழே ஒருபுறம் காரைக்கால் அம்மையார் தாளமிசைக்க மறுபுறம் நந்திகேசுவரர் குடமுழா வாசிக்கிறார்.

இக்கோயிலில் இருந்து இதுவரை படியெடுக்கப்படாத மூன்று கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுப் படியெடுக்கப்பட்டன.

முதற் கல்வெட்டு

இடம்: மையக்கோயிலின் மேற்கு மற்றும் தெற்கிலுள்ள குமுதம், ஜகதி

செய்தி: கல்வெட்டு சிதைந்திருப்பதால் செய்தியை முழுமை யாக அறியக்கூடவில்லை. இறைவன் அக்நீசுவரமுடைய நாயனார். அவனிவள நல்லூருடையான் மருதாண்டான் தனக்கு உரிமை யுடைய காணியாட்சியான முப்பது வட்டம் மற்றும் அதுபோழ்து வரும் அனைத்து வகையான பிராப்திகளையும் கோயில் இறைவர்க்குத் தந்த தாக ஊகிக்கலாம். பதிபாதமூல பஞ்சாசாரியன் கௌசிகன் என்பார் பெயர் குறிக்கப்படுகிறது. திருச்சிராப்பள்ளி, தென்கரை பாண்டி குலாசனி வளநாட்டுப் பகுதியாக இடம் பெற்றுள்ளது.

காலம்: வீரபூபதி உடையார் மகனார் அரியப்ப உடையார், கி. பி. 1408.

1 ஸ்வஸ்திஸ்ரீ மந் மஹாமண்ட[லே]ல ச்ஂவரந் ஹரிஹர ராய விப$_4$ாடந் ப$_4$ாஷை[க்கு தப்புவ]ரா[ய] கண்டன் மூவராய கண்டன் பூர்வ த$_3$கம் — — ஸமுத்$_3$ராதி$_4$

2 பதி எ[ம்*]மண்டலமும் திறை[கெ]ாண்டீழந் திறை கொண்டருளிய ஸ்ரீவீர பூ$_4$ . . . . . . வீர[அ]ராயண்ண உடையார் ப்ருத்$_4$வி இராஜ்யம் பண்ணி அருளாநின்ற ச$_{\circ}$காப்$_3$த$_3$ம் 1330

3 மேல் செல்லா னின்ற துன்ம[ஹி] வருஷத்து த$_4$நு நாயற்று . . பக்ஷத்து ஸ . . . . ழமையும் பெற்ற அத்தத்து நாள் தெந்கரை பாண்டி குலாசனி வளநாட்டு திருச்சிராப்பள்ளி

4 யில் வீர பூ$_4$பதி உடையார் குமாரர் வீர ஹரியப்புடையார் திரு விராஜ்யம் பண்ணுகி[ற க]ாலத்தில் . . . யே அவளிவள னல்லூரு டையான் மருதாண்டானும் என் பாமானியன் பதிபாத$_3$மூலம் பண்டுப் பஞ்சா

5 சாரியன் [கௌசிக]ன் திருவ[க்$_3$நீ]ச்$_{\circ}$வரமுடைய னாயினார் அருளி — — அருள ப்ரதிஷ்டா$_2$ா காலத்தில் த$_4$ரா பூர்வமாக யின்னாயனார் . . . ப்ர . .

6 முப்பது வட்டமும் யின்னாளுக்கு வரும் ஸமஸ்[த] ப்ர[ா]ப்திகளும் . . . சனச்$_{\circ}$ . . . . யாம் நாள் முப்பது வட்டமும் முன்னாள்ளுக்கு வரும் ஸமஸ்தப் ப்ராப்$_3$திகளும் . . . பண்டாரம். .

7 [ஆ]ராதந பண்டாரம் விஞ்சந பண்டாரமும் மு[ய]ா . . . பண்ட [ாரமு]ம் இர . . . ந்திரங்களால் உ . ம னாள் முப்பது வட்டமும் இ . . . . . னாளுக்கு வரும்

8 ஸமஸ்த ப்ரப்திகளும் த$_2$ரா பூர்வமாக என் ப[ரமாணியன்] பதி பா[தமூலம்] பண்டுடை பஞ்சாசாரியந் கௌசி$_{\circ}$கந் திருவக்$_3$நீச்$_{\circ}$ வரமுடை

9 ய னாயிநாற் [இன்னா]யினார் பிறதிஷ்டா$_2$ காலத்தில் அ ... [த]க் ஷணையாக யித்தாநதன்

10 . . தாகக் கடவ[தா]கவும் யிப்படிக்கு காணி ஆட்[சி]. . . . . த்தேன் நயிநார் தி[ருவ]க்$_3$நீச்$_{\circ}$வரமுடையார்க்கு அவள்ளிவல நல்லூருடையான் மருதாண்[டா] நேன்

இரண்டாம் கல்வெட்டு

இடம்: மையக் கோயில் தென்புறக் குமுதம், ஜகதி.

செய்தி: அங்காங்க போகத்துக்கும், பூசை, திருப்பணிக்கும் சர்வ மானியமாக நிலக்கொடை. கல்வெட்டின் ஒரு பகுதி கட்டடப் பகுதிக் குள் சிக்கியுள்ளதால் முழுச் செய்தியையும் அறியக்கூடவில்லை. பாண்டி குலாசனி வளநாட்டு அதிமங்கலப் பற்று குறிப்பிடப்படுகிறது.

காலம்: வீரராயண்ண உடையார், கி. பி. 1414.

1 ஸ்வஸ்திஸ்ரீ மந் மஹா மண்டலீச்ஶ்வரந் ஹரிஹர ராய விப$_4$ாடந் ப$_4$ாஷைக்குத் தப்புவராய கண்டந் மூவராய கண் — — — — வி மோத்தர சஂதுஸமுத்$_3$ர

2 தி$_4$பதி எம்மண்டலமுந் திறை கொண்டு ஈழந் திறை கொண்டருளிய ஸ்ரீ வீரபூ$_4$பதி உடையார் வீரராயண்ண உடையார் ப்ரதி$_4$வி ராஜ்யம் ப — — — — [சஂகா]ப்$_3$தம் 1336 மேல்

3 செல்லா னின்ற ஜ . ய ஸம்வத்ஸரத்து சுக்கிறக நாயற்று பூர்வ பக்ஷத்து தசஂமியும் சநிக்கிழமையும் பெற்ற மூலத்து நாள் திருச் சிராப்பள்ளி ஈ — — — — ற்கு அங்காங்க போகம

4 த்துக்கும் பூசை திருப்பணிக்கும் சந்த்$_3$ராதித்யவரை சஂர்வமாந்ய மாக தாரை வாத்துச் சேத உ . [பா]ண்டி குலாசநி வளநாட்டு அதிமங்கல பற் — — — — க் [காட்டு] ஊ[ர்*] ஒன்றுக்கு தேவதாந

5 ம் நிலம் பதிந . . . [ந]த்தமும் நாற்பாற் கெல்லை — — — — சர்வமாந்யமாக நடக்க கடவதாகவும் இந்த ஊர் மாறா மசக்கு

6 தல் இந்த ஊர் . . . . . ணைச்சவந் க$_3$ங்கை . . . . . . நிபவிக்[க] கடவதாகவும் தா . . . . [ஸ¬] குதமும் தநக்கு அல்லவா

7 க கடவுதாகவும் எல்லைக் குடிக்காடு ஊரடங்கலும் ஸர்வ*

மூன்றாம் கல்வெட்டு

இடம் : அம்மன் கோயில் முன்னாலுள்ள மண்டபத்தின் தரை.

செய்தி: கோயிலில் செய்யப்பட்ட பல்வேறு வகையான திருப் பணிகள் சுட்டப்படுகின்றன. செய்தவர் நல்லம நாயக்கர். இவர் மற்றும் இவருடைய மனைவியார் உருவங்களாகக் கருதத்தக்க சிற்பங் கள் கோயிலில் காணப்படுகின்றன.

காலம்: ஜெய வருடம் வைகாசி மாதம் 19 ஆம் நாள், கி.பி. 1834 அல்லது 1894.

1 செய ௵ வையாசி மீˆ 19 ஸ்ரீமந் நல்லம னாயக்கறவர்
2 கள் கட்டிவித்தது கருங்கல் கொறடு சுத்து தள வரி கல்
3 பாவித்தும் தெட்சணாமூர்த்தி சன்னதிப் படியு
4 ம் தீர்த்த தொட்டியளும் தண்டேசுவரி
5 க்கு நாலுகால் மண்டப முன் வாசலு
6 ம் வயிரவன் சன்னதி முன் கொறடு
7 ம் கிணத்து வாசல் கொணிய
8 படை திருப்பணி னாயக்க ருபய்
9 யம் சதாசேர்வை உ

* கல்வெட்டின் தொடர்ச்சியைக் கண்டறிய முடியவில்லை.

6. அய்யாறப்பன் கோயில் கல்வெட்டு

எஸ். இராமச்சந்திரன்

இடம்: தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், திருவையாறு அய்யாறப்பன் கோயில் கொடிக்கம்பத்தின் முன்னர் தளத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

காலம்: பிறமோதூத ஆண்டு, கி. பி. 1811, பிப்ரவரி.

1 ஸ்ரீபிறமோதூத ஹு மாசி மீ . . . . . தி₃னத்தில்
2 பூவோசி போசலே பொன்சாதி சிம்மணி
3 பாயி அம்மாள் சதா சேர்வை

---

7. அழகர் கோயில் சுதைப் பொறிப்பு

எஸ். இராமச்சந்திரன்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், செயங்கொண்டம் வட்டம், கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து வடக்கே ஐந்து கி. மீ. தொலைவில் அழகர் கோயில் என வழங்கப்படும் அய்யனார் கோயில் உள்ளது. இக் கோயில் கருவறையில் உருவம் ஏதுமில்லை.

இடம்: கருவறைப் பின்சுவரில் சுதைப் பொறிப்பாக உள்ளது.

காலம்: கி. பி. 1842, சனவரி.

சொஸ்திஸ்ரீ சாலிவாகன செகாற்த்தம் ஹு 1763 கலியுகாம் ஹு 4942 பிலபவ ஹு தயி மீ யிந்த கோயில் பழுது பாத்து கும்பா அபிசேஷகம் நடந்தது.

---

8. முனியூர் அகத்தீசுவரர் கோயில் தூண் கல்வெட்டுகள்

எஸ். இராமச்சந்திரன், கா. சண்முகம்

இடம்: தஞ்சை மாவட்டம், வலங்கைமான் வட்டம், முனியூரிலுள்ள அகத்தீசுவரர் கோயில் பிரஸ்தரத்தின் கீழுள்ள சுவர்த் தூண்களின் பலகைப் பகுதியில் நான்கு புதிய கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இவை உருவச் சிற்பங்களைக் குறிக்கும் பெயர்களாக இருக்கலாம்.

காலம்: சோழர் காலம்.

i) வடதிசைத் தூண் பலகைக் க்ல்வெட்டு

சோழகோன்

ii) மேற்றிசைத் தூண் பலகைக் கல்வெட்டுகள்

1. அறுபதிமன்

2. முனைமுட்டி கண்டன்

iii) தென்திசைத் தூண் பலகையில் சோழர் கால எழுத்தமைதியுடன் சிவப்புக் காவியால் எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ளன.

[விளத்] தூர்க் கிழவந் சோழோகோன்

---

9. பெருமாள் பாளையம் கல்வெட்டு

ம. காந்தி, மு. ம. கோபாலன்

இடம்: திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், பெருமாள் பாளையம் அருள்தரு வரதராசப் பெருமாள் கோயில் வளாகத்தில் வடகிழக்கு மூலையில் சாய்த்து வைக்கப்பட்டுள்ள கல்லில் காணப்படுகிறது. கல்வெட்டை அறிமுகப்படுத்தியவர் திரு. எஸ். இரவிச்சந்திரன்.

செய்தி: பூலாநால் ஊரவர்க்குப் புத்துடையான் நம்பு செய்வான் என்பவர் நில வருவாய் குறித்து செய்தளித்த திட்டம். நிலக்குடிகள் கடமை இறுக்க முடியாது ஓடிப்போன நிலையில் நிலங்கள் பயிர் செய்யப்படாதிருந்தன. அப்படிப்பட்ட நிலங்களில் பயிர் விளைவிப் பாரிடம் புனம் ஒன்றுக்கு மூன்று காசு வீதம் ஊரவர் வாரமாகப் பெற்றுக் கொள்ளலாம். பூலாநால் என்ற ஊர்ப்பெயர் மறைந்து விட்டாலும், கோயிலுக்கு அருகிலுள்ள குளம் பூலானேரி என்றும் கோயில் பூலானேரி வரதராசப் பெருமாள் கோயிலென்றும்தான் இன்றளவும் அழைக்கப்படுகின்றன.

காலம்: மூன்றாம் இராசராசனின் இருபதாம் ஆட்சியாண்டு, கி. பி. 1236.

1 திரிபுவனச்சக்
2 கரவர்த்திகள் ஸ்ரீ
3 [ராசஇராச] தேவ
4 ற்கு [யா] ண்டு [20] பதாவ
5 து பூலாநால் ஊ
6 ரவற்கு புத்து
7 டையான் நம்பு
8 செய்வாநே கல்
9 வெட்டி நாட்டி
10 க் குடுத்த பரிசா
11 வது கடமைக்கு
12 ஆற்றாமையரா
13 க ஓடிப் போமை
14 கயில் ஆடி மாத
15 வரையும் ஒருவ
16 ர் முன்னின்று
17 பயிரேற்றா திரு
18 க்கையில் பயி
19 ரேற்று மிடத்
20 து இருகையில்
21 ஒரு வாரம் கொ
22 ள்ளக் கடவதாக
23 வும் புனத்துக்கு
24 புனம் ஒன்று
25 க்கு 3 று கா
26 சு [கொள்]
27 ள கடவதா
28 கவும் இப்படி
29 தவிர மற்றெ[றா]
30 ன்றும் தேவ
31 ணை தேவிய
32 ர் ஆணை சொ[ல்]
33 லக் கடவதல்ல
34 வாகவும் வார
35 ம் கொ[ள்]கிற
36 துக்கு அழி
37 வு சொன்னா
38 ர்[யு]ண்டாகி
39 ல் கான.
40 . . . குதி
41 ரைக்கு புல்
42 லிடுகிற ப
43 ரையனுக்
44 கு தன் மணா
45 ட்டியை கு
46 டுப்பான்

---

10. திருப்பைஞ்ஞீலி கல்வெட்டுகள்

அர. அகிலா, மு. நளினி

அப்பருக்கு இறைவன் பொதிசோறு கொடுத்த இடமாக சேக்கிழார் குறிப்பிடும் திருப்பைஞ்ஞீலி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் மண்ணச்சநல்லூருக்கு அருகில் உள்ளது. இங்குள்ள குடைவரையில் சிவசக்தி உடனுறை இளமுருகு வடிவம் (சோமாஸ்கந்தர்) செதுக்கப்பட்டுள்ளது. இக்கோயிலில் கண்டுபிடிக்கப்பட்ட பல புதிய கல்வெட்டுகளுள் சில இங்குத் தரப்பட்டுள்ளன.

முதற் கல்வெட்டு

இடம்: முதல் திருச்சுற்று மாளிகையின் தென்புறப் பட்டிகை.

செய்தி: இராசராச வளநாட்டு வடவழிநாட்டுப் பாச்சில் கூற்றத்தில் இக்கோயில் அமைந்திருந்ததாகக் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

இக்கோயில் திருஅணுக்கன் வாசல் திருவிளக்கின் கீழ் நிலையில் சந்தி விளக்கொன்று எரிப்பதற்காகக் கோயில் சிவபிராமணர் சிலரிடம் நடுவிற் நாட்டு, இராசராச வளநாட்டுப் பனம்பாக்கமான சோழகுலவல நல்லூரைச் சேர்ந்த எரிகிழான் வேளான் ஆட்கொண்ட வில்லி என்பார் ழு காசுகள் கொடையளித்தார்.

காலம்: இரண்டாம் இராசராசனின் பதினாறாம் ஆட்சியாண்டு, கி. பி. 1162.

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவநச் சக்கரவத்திகள் ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு பதினாறாவது இராஜராஜ வளநாட்டு வடவழி நாட்டு பாச்சில் கூற்றத்து திருவெள்ளறை திருப்பைஞ்ஞீலியுடையார்க்கு [ந]டுவி நாட்டு ராசராச வளநாட்டு ப[னம்]பாக்கமாந சோழகுல வல நல்லூர் எரிகிழாந் வேளாந் நாட்கொண்ட வில்லி ஒரு சந்தி விள . . . . உள்[ளு] திருவனுக்கந் வடக்கில் திருவிளக்கில் கீழ் நி[லை]யிலே எரிக்[க*] கடவதாக இவ . . . .

2 இக்கோயில் சிவபிராமணர் . . கோயில் பட்டநும் அநந்த [பட்] டநும் திருவெணாவல் [பட்]டநும் தில்லை மூவாயிர பட்டநும் இவ்வனைவோமும் இவர் பக்கல் கைக்கொண்ட காசு ஏழு இக் காசு ஏழுக்கும் கா . . ற்றுகு*

இரண்டாம் கல்வெட்டு

இடம்: முதல் திருச்சுற்றின் கிழக்குச் சுவர் - வெளிப்புறம்.

செய்தி: கோயில் ஆளுடைய நாச்சியார்க்கு இரண்டு கரை நாட்டு வாணியர் செக்கொன்றும், செக்கிற்கான குடிமக்கள் எண்மரையும் சீதனமாகத் தந்தனர். ஆரண்யவிடங்கன் என்ற பெயரால் முகத்தல ளவை ஒன்று குறிக்கப்படுகிறது. சுந்தரர் இக்கோயிலைப் பாடிய பதிகத் தின் முடிப்பு வரிகள் 'சொல்லும் ஆரணீய விடங்கரே' என்று முடி வடைவது இங்கு நினைக்கத் தகுந்தது. சுந்தரர் இக்கோயில் இறை வனுக்குத் தந்த பெயரைப் பிற்காலச் சோழர் காலத்தில் இப்பகுதியில் வழக்கிலிருந்த ஒரு முகத்தலளவை கொண்டிருந்தது ஊர் மக்களின் இலக்கிய ஈடுபாட்டைக் காட்டுகிறது.

காலம்: இரண்டாம் இராசாதிராசன் (கி. பி. 1163 - 1178).

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவத்திகள் ஸ்ரீராஜாதி — — — — ஆவது இராசராச வளநாட்டு வடவழி நாட்டு உடையா

---

* கல்வெட்டு முற்றுப்பெறவில்லை.

2 ர் திருப்பைஞ்ஞீலி உடையார்க்கு வாணியரில் கவிற — — — — விண்ணப்பஞ் செய்த ஆளுடைய நாச்சியாற்கு இரண்டு கரை

3 நாட்டு வாணியரோம் ஸ்தீதனங் குடுத்த செக்காவது இத்திருப் பைஞ் — — — — ன்றும் இச்செக்கிற் குடி மக்கள் பள்ளி திருவை யாருடையானையும் உய்யவந்

4 தான் புற்றிடங் கொண்டானையும் செண்டன் உய்யவந்தானை யும் செண் — — — — பெற்[றா]ன் வாஞ்சநான நீலிவனம் மாயிலட்டியையும் கள்ளி கற்பகமுடையானையும்

5 உடையான் பெரியானையும் திருவையாறுடையான் பள்ளியும் புற்றிடங்கொ — — — — விருவரும் ஆள் ஒன்றும் ஆ . . . வெண் மரையும் ஸ்தீதனமாக குடுத்தோம் இரண்டு கரை

6 நாட்டு [வாணிய]ரோம் இச்செக்குக்கு நாளொன்றுக்குக் கலக்கடி ரு — — — — க் கடவதாகவும் இதுக்கு [ஆர]ணியவிடங்க நா[க்]கிக் கால்வாசி ஏற்றி நாநூற்று ஐம்

7 பதி நாழி நல்லெண்ணையால் வாசி ஏற்றி ஆரண்ய விடங்க[நால்] அளக்க — — — — பத்தைஞ்ஞாழி நெய்க்குக் குடி எண்மரும் எட்டாவது முதல் அளக்கக் கடவார்களாக

8 வும் இச்செக்கால் வந்த கடமை குடிமை கோயிற்றமற்கு இரண்டு கரை நா[ட்டு] — — — — துக் குடுக்கக் கடவோமாகவும் இப்படி ஸம்மதித்து இந்நாயனார் கோயிலில் கல்வெட்டி

9 க் குடுத்தோம் இரண்டு கரை நாட்டு வாணியரோம் இவ்வெண் ணைக்கு நித்த — — — — அல்லாதிது சந்தி விளக்காகச் சந்திரா தித்தவரை எரிக்கக் கடவதாக விட்டோம் வா

10 ணியரோம் இரண்டு கரை நாட்டு இவ்வ[ா]ணியரோம் பணிக்க இச்செ — — — — து வாணியரோம் . . . .

11 குடி மக்களையும் பரிகரித்து தரக்கடவோம் பாண்டியனை மென் — — — —

12 பைஞ்ஞீலி உடையார் எழுத்து இப்படிக்கு இரண்டு கரை நாட்டு — — — —

13 என் எழுத்து தென்கரை நம்புசெய்வாரில் சுந்தரசோழ — — — —

மூன்றாம் கல்வெட்டு

இடம் : இரண்டாம் திருச்சுற்று வடக்குச் சுவர் - வாழைகள் அருகே.

செய்தி : வீரசோழநல்லூர் சிறுபாக்கமுடையான் சோழன் களப்பாளராயன் என்பார் தம் காணியான நெல்வேலியில் அறுவேலி நிலத்தைப் பைஞ்ஞீலி கோயில் கணக்கருக்கு அன்றாடு நற்காசு பதினைந்தாயிரத்துக்கு விற்றுத் தந்தார். இப்படி விற்கப்பட்ட நிலத்தின் முன்னாளைய உரிமையாளரான மழவராயன் மகன் முதலியாண்டான் பெயரும் கல்வெட்டில் தரப்பட்டுள்ளது. விற்கப்பட்ட நிலத்துக்கான எல்லைகளாகக் கூறப்படும் சில நிலப்பகுதிகள் சோதிசதுரம், சுளகுமுக்கி, காதாட்டி என்று பெயரிடப்பட்டிருந்தமை கவனிக்கத் தக்கது. தச்சன் செய், ஆயன் செய் என்று உரிமையாளர்களின் தொழில் சார்ந்தும் நிலங்கள் பெயரிடப்பட்டிருந்தன. பெரிய வளவன் வாய்க்கால் என்ற பெயரே பின்னாளில் பெருவள வாய்க்கால் என்று திரிந்திருக்கலாம்.

காலம் : பதின்மூன்றாம் நூற்றாண்டு.

1 — — ரிஷப நாயற்று அபர பக்ஷத்து தெசமியும் புதன்கிழமையும் பெற்ற திருவோணத்தி நாள் வடகரை இராச இராச வளநாட்டு வடவழி நாட்டு உடையார் திருப்பைஞ்ஞீலியுடைய் நாயனார் கோயில் ஆதிசண்டேசுர

2 தேவர் தேவகன்மி கோயிற் கணக்கருக்கு மிலாடாகிய செனநாத வளநாட்டு ஆற்றூர் கூற்றத்து வீரசோழ நல்லூர் சிறுபாக்கமுடையாந் சோழந் களப்பாளராயநேன் நில விலைப் பிரமாண இசைவு தீட்டு இராசராச வளநாட்டு பாச்சில் கூற்றத்து மேல்பலாற்று பழுவூ

3 ர் கிழவந் அரவன் மழவராயன் மகன் முதலியாண்டாந் பக்கல் விலை கொண்டுடையேநாய் எந்நிதான காணி நெல்வேலியில் நாந் இவர்களுக்கு விற்றுக் குடுத்த நிலமாவது இவ்வூர்ப் பிறிந்த தியாகசமுத்திர நல்லூர் கார் மறு நிலத்துக்கு எல்லையாவது கீழ்பாற்கெ

4 ல்லை சோதி சதுரத்துக்கு மேற்கும் விளாகமுடையானுக்கு மேற்கும் தென்பாற்கெல்லை சுளகு முக்கிக்கும் தச்சன் செய்க்கும் காதாட்டிக்கும் கங்கைதரையந் செக்கைக்கும் வடக்கு இன் நிலம் உட்க்கிடைதுறைமுக நிலம் அரைக்காணியும் பெரிய வளவன் வாக்காலு

5 க்கு தெற்கு கிளிநல்லூர் எல்லைக்கு வடக்கு சென்தாமரைக் கண்ண நல்லூர் கீழ்போகிக் குழுமிக்கு கிடக்கு நிலம் அரைக்காணியும் மீபாற்கெல்லை செந்தாமரைக்கண்ண நல்லூரெல்லைக்குக் கிழக்கும் வடபாற் கெல்லை நீர் முக்காலு

6 க்கும் பள்ள வா[ய்*]க்காலுக்கும் தெற்கும் சனி மூலையில் ஆயந் செய்க்கு மேற்கும் ஆக இன் நான்கெல்லை நடுவுபட்ட கார் மறு நிலம் ஆறு வேலி இன் நிலம் ஆறு வேலியும் விற்றுக் குடுத்து கொள்வதான எம்மி

7 லிசைந்த விலைப் பொருள் அன்றாடு நற்காசு பதின் ஐயாயிரம் இக்காசு பதின் ஐயாயிரமும் ஆவணக்களியே காட்டேற்றிக் கைச் செலவற கொண்டு விற்று விலைப் பிரமாண இசைவு தீட்டு குடுத்தேன் ஆதிசண்டேஸ்வர தேவகன்மி கோயிற் கணக்கநுக்கு சிறுபா

8 க்கமுடையான் சோழன் களப்பாளராயநேன் இந்நிலம் அறு வேலிக் கும் இக்காசு பதின் ஐயாயிரமே விலையாவதாகவும் இதுவே விலை பிரமாண இசைவு தீட்டவதாகவும் இதுவே பொருள் மாவறுதிப் பொருட் செலவோலையாவுதாகவும் இதுவல்லது வே

9 று பொருள் மாவறுதிப் பொருள் செலவோலை காட்டக் கடவதிலா தாகவும் விற்றொற்றி பிரதிக்கியங்களுக்கும் தான தன்ம விக்கிரயங் களுக்கும் உரித்தாவதாகவும் ஒரு காலாவதும் இரு காலாவதும் மூக்காலாவதும் விலைக்குற விற்று பொருளறக் கைக்கொண்டு

10 விற்று விலை பிரமாண இசைவு தீட்டுக் குடுத்தேன் ஆதிசண்டேசுர தேவர் தேவகன்மி கோயில் கணக்கநுக்கு சிறுபாக்கமுடையான் சோழக் களப்பாளராயநேன் இன் நிலத்துக்கு இவ[ர்*]கள் வேண் டினபோதே பிரமாணம் பண்ணிக் குடுக்கக் கடவேனாகவும் குடுத் திலேநாகில் இப் பிரமாண

11 இசைவு தீட்டே பிரமாணமாவதாகவும் இப்படிச் சம்மதித்து விலைப் பிரமாண இசைவு தீட்டு குடுத்தேன் உடையான் திருப்பைஞ் ஞீலியுடையார் கோயில் ஆதிசண்டேசுர தேவர்கன்மி கோயில் கணக்கனுக்கும் சிறுபாக்கமுடையான் சோழன் கள

12 ப்பாளராயநேன் இவர்கள் வேண்டிக் கொள்ள இப்பிரமாணம் எழுதிநேன் திருவெள்ளறை உடையாந் மலைக்கினிய நின்றான் சீரிளங்கோவான கம்பிக்காத பிரியனேன் எழுத்து இப்படிக்கு இவை சிறுபாக்கமுடையான் சோழன் களப்பாளராயன் எழுத்து இப்படிக்கு இவை சிறுபாக்க

13 முடையான் சோழந் பொன்பரப்பினான் எழுத்து இப்படி அறி வேந் எதிர்மலையுடையான் அளகராயநேன் எழுத்து இப்படி அறி வேந் பாலையூர் கிழவன் திருச்சிற்றம்பலமுடையாந் உய்ய நின் றாடுவானேன் எழுத்து

நான்காம் கல்வெட்டு

இடம்: இரண்டாம் திருச்சுற்று மேற்குச் சுவர்.

செய்தி: திருவெள்ளறை மூலபருடையார் திருப்பைஞ்ஞீலி கோயிலார்க்கு நிலக்கொடை. நென்மலியில் இருந்த பெருமாள் கோயில் (திருமேற்கோயில்) சுட்டப்படுகிறது.

காலம்: மூன்றாம் இராசராசன் (கி. பி. 1216 - 1256).

1-6 சீர்மன்னி என்று தொடங்கும் மெய்க்கீர்த்தி

7 த்து த்ரயோதெசியு ஞாயிற்றுக் — — திருவெள்ளறை மூலபருடையோம் திரு

8 ப்பைஞ்ஞீலி உடைய நாயனார் ஆதிசண்டேசுவர தேவற்கு . . . . இசைவு தீட்டு மேல் பிடாகை . . . . . அவ

9 . . . . . . மங்கலத்து மேலைக் குளத்தின் தென் . . . . க்கிசைந்த கீழ்பாற் . . . . . . யேன் சிகா

10 . . . . ற்றுமிச் செந்தாமரைக் கண்ண — —

11 தென்பாற் கெல்லை துண்டக் கண்ணா — —

12 — — தெற்கு முதற் கண்ணாற்று மேற்கு — —

13 த்துக் கிசைந்த — — நென்மலி திருமேற் கோயில் எம்பெருமான் திருநாமத்துக்காணி

14 இம்மண்டல புருஷ . . . . மேற்கு தென்பாற் கெல்லை இம்முதற் கண்ணாற்றுக்கும் வாய்க் . . . .

15 குலங்கரைக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை துண்டக் கண்ணாற்றுக்கு மேற்கும் ஆக இசைந்த இன் நான்கெல்லைக்கு — —

16 . . . . . . த்தடி இரண்டிநா[ல் நிலம்] . . . . . நிலம் முக்காணி கீழரையும் இத்திருப்பைஞ்ஞீலி உடைய நாயனார் ஆதிசண்டேச்ₒவ

17 ர தேவற்குத் தானமாகக் கு[டுத்]து இப்படிக்குத் தானப் ப்ரமாண இசைவு தீட்டுக் குடுத்தோ — — தேவற்கு மிதுவே ப்ரமா

18 ணமாவுதாகவும் இப்படி சம்மதித்துத் தான ப்ரமாண இசைவு தீட்டு குடுத்தோம் உடையார் திருப்பைஞ்ஞீலி உடைய நாயனார் ஆதிசண்டேச்ஂவர தேவற்கு மூலபருஷையோம் உடையார் திருப் பைஞ்ஞீலி உடைய நாயனார் ஆதிசண்டே

19 ச்சுர தேவற்கு இந்நில முக்காணி கீழ் அரையும் தரமாகப் பண்ணி தானப் ப்ரமாண விசைவுத் தீட்டுக் குடுத்தோம் மூலபருஷையோம் இப்படிக்கு இவை கவுசிகன் நரசிங்கன் சுந்தரதோளுடையான் செல்வ நம்பி எழுத்து இப்ப

20 டிக்கு இவை காசிவன் ஆதிச்சன் அழகிய மணவாளனான திரு — — யென்னெழுத்து இப்படி இவை ஆரிதன் சக்ரபாணி ஸ்ரீராம னான ராமபிரான் பட்டன் எழுத்து இது கவிகேசி நராசிங்கன் தேவன் உத்தம நம்

21 பி ஸஞ்ஞுதன்மைக்கும் இது கவுசிகனான — — நராசிங்க சீரிளங் கோவேள் எழுத்து இப்படிக்கு இவை

22 கோவனான இராமன் விசுப்பிரம்மராயன் எழுத்து — —

23 சீரிளங்கோவான இராசபண்டித பிரம்மமாரையன் எழுத்து

ஐந்தாம் கல்வெட்டு

இடம்: பழைய அம்மன் கோயில் மகாமண்டபக் கிழக்குச் சுவர்.

செய்தி: முன்னாளில் விலைக்குப் பெறப்பட்டு கோயில் திருநாமத் துக் காணியாக உள்ள 415 வேலி நிலத்தைத் தேவதான இறையிலி யாகக் கோயில் பூசைக்கும் திருப்பணிக்கும் உடலாகக் கொள்ளுமாறு கோயில் ஆட்சியருக்கு அரசன் அனுப்பிய ஆணை. இதற்குப் பரிந் துரைத்தவர்கள் சோழகோனும், வாணாதராயனும் ஆவர்.

காலம்: மூன்றாம் இராசராசன், கி. பி. 1216 - 1256.

1 திரிபுவனச் சக்ரவத்திகள் கோனேரின்மை கொண்டான் ராஜராஜ வளநாட்டு உடையார் திருப்பஞ்ஞீலி உடைய நாய

2 னார் கோயிற் தேவர்கன்மிகளுக்கும் ஸ்ரீமாகேச்ஂவர கண்காணி செய்வார்களுக்கும் இன்னாட்டு வடவழி நாட்டு வெங்காநத்தமா

3 ன சோழங்க நல்லூரும் செட்டி மங்கலமும் உலகன் அங்ககாற நல்லூரும் எல்லைக்கு வடக்கும் சிற்றாம்பூ ரெல்

4 லைக்கு கிழக்கும் இத்தேவர் திருனாமத்துக் காணியும் தேவதானமு மான குன்றத்தூரும் குளக்குடியும் எல்லைக்கு தெற்கும் திரு

5 ப்பைஞ்ஞீலி எல்லைக்கு மேற்கும் நடுவுபட்ட காடும் கொல்லையும் நத்தமும் உட்பட நானூற்றொருபத்தைய் வே

6 லி நிலம் முன்னாளில் திருநாமத்துக் காணியாக விலை கொண்டு அனுபவித்து வாரா நின்றதென்றும் இந்நிலம் இத்தேவ

7 ர்க்கு பூசைக்குந் திருப்பணிக்கும் உடலாகத் தேவதான இறையிலியாய் நிற்கக் கடவதாகப் பெற வேணுமென்று

8 சோழகோன் சொல்லி வரக் காட்டினாநாக வாணாதராயன் நமக்குச் சொன்னமையில் இப்படிச் செய்யக் கடவ*

ஆறாம் கல்வெட்டு

இடம்: இரண்டாம் திருச்சுற்று-மடைப்பள்ளியின் தென்புறநிலை.

செய்தி: திருமடைப்பள்ளியைக் கட்டித் தந்தவரின் பெயராகலாம்.

காலம்: பன்னிரண்டாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ

2 இத்திரும

3 டைப் பள்

4 ளி கிளைவா

5 ழ வாழ்ந்

6 தான்

ஏழாம் கல்வெட்டு

இடம்: இரண்டாம் திருச்சுற்று கிழக்குச் சுவர், வாயிலுக்கு இடப்புறம்.

செய்தி: முதல் திருச்சுற்றிலுள்ள திருச்சுற்று மாளிகையை எடுப்பித்தவர். பெயர் முழுமையாகக் கிடைக்கவில்லை.

காலம்: பன்னிரண்டாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ இத்திருமாளிகை அழகி — —
2 ந இது செய்வித்தான் திருவாளந் — —
3 இருக்குவேள் நாடாழ்வான்

* கல்வெட்டு முற்றுப் பெறவில்லை

எட்டாம் கல்வெட்டு

இடம் : மகாமண்டபம் தெற்கு மற்றும் மேற்குச் சுவர்.

செய்தி : கோயில் இறைவர்க்குச் செய்யும் நிவந்தங்களுக்கு இறையிலியாக நிலவிற்பனை.

காலம் : இரண்டாம் இராசேந்திரனின் ஆறாம் ஆட்சியாண்டு, கி. பி. 1057.

1–37 திருமாது புவியெனும் என்று தொடங்கும் மெய்க்கீர்த்தி*

38 — — உடையார் ராஜேந்தரதேவற்கு யாண்டு 6 ஆவது

39 115 னாள் ராஜமஹேந்த்₃ர வளநாட்டு வடவழி நாட்டு — —

40 யோம் மிதுன னாயிற்று பூர்வ பக்ஷத்து . . . யும் வியாழக் கிழ

41 மையும் பெற்ற பூரட்டாதி நாள் இவ்வூர் கீழைச்சேரிப் [பே]ரம் பலத்தோம் கூட்ட

42 க் குறைவறக் கூடி [எங்]கள் மேல் பிடாகை புத்தூர் ஸ்ரீ கண்டரா தித்தம

43 ங்கலத்து — — கிழான்

44 ராஜந் மதுராந்தக தேவனான ரா . . . . . திருப்பைஞ்ஞீலி உ

45 டைய மஹாதே₃வர்க்கு செ[ய்]கிற நிமந்தங்களுக்கு இறையிலி . . . விற்றுக் கு — —

46 கீழ்பாற் கெல்லை . . . . . ஆதித்தந் அ . . ந்தன் உள்ளிட் டார் — —

47 எல்லை . . . . பொதுவான நிலம் . . . கோல் விட்டு கிழக்கு நோக்கி அறுபத்தைங்

48 கோல் . . . . க்கு மேற்கு தென்பாற்க் கெல்லை காச்₀யபன் ஜாதவேதந் தாமே

49 ாதர . . . . தெற்கு ஸபை₄ப் பொதுவாந நிலத்தில் இருபத்

* மெய்க்கீர்த்தியின் பெரும்பகுதி சிதைந்துள்ளது.

50 தைங்கோல் விட்டு தெற்கு நோக்கி [இரு]பதின் கோலிட்டு இதன் சொங்வை

51 க்கு வடக்கும் மேல்பாற்கெல்லை முன் குறித்த ஸபை$_4$ பொது வாந நில

52 த்துக்கு கிழக்கும் வடபாற்கெல்லை . . . . ஸபை$_4$ பொது வாந நில

53 த்துக்கு [தெற்]க்கும் ஆக இசைந்த இன் நான்கெல்லை

54 — —

55 கன்மிகளுக்கு திருவெள்ளறை மூலபருடையோம்

56 . . நீர்நிலன் பதிற்று வேலியும்

57 . . . . வேலியும் ஊர் நத்தத்தில் மேற்கடையச் செ

58 . . . . ற்றுவன் நிலத்துக்கு

59 . . . . மாவறுதிப் பொருட்

*60-61

62 — — எப்பேர்பட்ட இறையும் . . . . .

63 . . . . விசைந்து இந்நிலம் விலைக்கற விற்று

64 விலை ஆவண வோலை எழுதி குடுத்தேன் பெரிய ஸ்ரீ

65 . . . . . . ளறை மூலபருடையோம் இப்பரிசு பணிப் பணியால் பணி

66 . . . . . மத்யஸ்தன் திருமழபாடி வேம்பனான ப்$_3$ரஹ்ம மங்க$_4$ல்ய நேன் இ

67 . . . . ப்பநான மூவாயிரத் தெழுநூற்றுவனேன் இவை என் னெழுத்து

68 . . . . . . கரப்ரியனேன் ராசராச தேவன் அலங்[க]தன் கேசுவந்

69 . . . . அறிவேன் காச்சுவன் கிருஷ்ண நாராயண

---

* மிகவும் சிதைந்துள்ளன.

70 நேந் காச்சுவன் நாகன் செந்தாமரைக்கண்ணன் அறிவன் ஸிதா

71 . . . . சேந்தன் ப$_4$ர[த்$_3$வ]ாஜி கல்லந் நீலகண்டன் இப்படி அறிவேன்

72 [இப்படி] அறிவேன் காச்சுவன் இசக்கப் பசுவதி அறிவேன் கவிணியன்

73 நாராயணந் அறிவன் பாதகாரி பசுவதி நாராயணந் அறிவன்

74 பாதகாரி பரமேச்$_\circ$வரதாயன் ப$_4$ட்டன் அறிவன் பாரதாயன்

75 . . . . . அறிவன் அவிசாதி அனந்த கல்லன் அறிவன் ந

76 . . . . . அனந்தம் திருவிக்கிரமன் அறிவன் ஶ்ரீராமாணி கூ

77 ற்றனத்தன் அறிவன் அவிசாதி நீலகண்டன் ஶ்ரீகிருஷ்ணந்

78 அறிவன் கவிகேசி துருக்கன் பாண்டன் அ

79 றிவன் இப்படி அவிசாதி நாராயணன் பசுவதி அறிவன் . . . . . .

80 — — க்$_3$ரம வித்தய

81 சங்கர நாராயணனே நாலிலி . . . கிருஷ்ண நாகூநர் அவிசாதி

82 ஈச்$_\circ$வரன் செந்தாமரைக்கண்ணந் அறிவன் காச்சுவன் சேந்தன்

83 மாறனறிவன் பாதகாரி நாராயண விநாசகந் அறிவன் காச்சுவ

84 ந் சோம ஆதித்தன் அறிவன் பாரதாயன் கே$_3$ாவி

85 ந்த நாராயணந் அறிவன் காச்சுவன் நாராயணந் சுந்தரதோள் உடையான் அறிவன் அவிசாதி கெங்க[ந்]

86 அறிவன் அவிசாதி கோவிந்தன் செந்தாமரைக்கண்ணந் அறிவன் காச்சுவன் நாராயண . . தேவந் அறிவன்

87 காச்சுவன் இசக்கன் கோவிந்தன் அறிவன் காச்சுவன் அங்கி நீலகண்டன் அறிவன் அவிசாதி நாராயணன் நீலக

88 ண்டன் அறிவன் அவிசாதி [திரு]வரங்கன் நாராயணந் அறிவன் காச்சுவன் கூத்தந் மாறன் அறிவன் அவி

89 சாதி கேசவன் செந்தாமரைக்கண்ணன் அறிவன் கவிணியன் மாறன் நாராயணந் அறிவன் பாரதாயன் நாராயணந்

90 நாராயணந் அறிவன் கவி[ணி]யன் அலங்கத நாராயணன் அறிவன் கவிணியன் செந்தாமரைக்கண்ணன் அறிவன்

91 காச்சுவன் நாகன் சாத்தன் அறிவன் ஆரிதன் பசுவதி கணத்தான் அறிவன் கவிணியன் நாராயணந் சா

92 த்தன் அவிசாதி கீரண் ஸ்ரீ நாராயணந் ப்ரியன் அறிவன் காச்சுவன் சாத்தன் சாத்தன் அறிவன்

93 ஸ்வஸ்திஸ்ரீ

---

11. கருந்திட்டைக்குடி வசிஷ்டேசுவரர் கோயில் கல்வெட்டுகள்

மு. வீரசாமி, இரா. லலிதாம்பாள், அர. அகிலா, மு. நளினி

தஞ்சாவூரின் ஒரு பகுதியாய் விளங்கும் கருந்திட்டைக்குடியில் (கரந்தை) அமைந்துள்ளது வசிஷ்டேசுவரர் கோயில். செம்பியன் மாதேவியாராலும், தொடர்ந்து பலராலும், அண்மைக் காலத்தில் திரு. வி. ஆர். கோவிந்தராசனாராலும் திருப்பணி செய்யப்பட்ட இத் திருக்கோயிலில், சில புதிய கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. கல்வெட்டுகளில் கருந்திட்டைக்குடி, கருவிட்டகுடி, சுங்கந் தவிர்ந்த சோழ நல்லூர் என்று பல பெயர்களால் இவ்வூர் குறிக்கப்படுகிறது.

முதற் கல்வெட்டு

இடம்: இடைநாழிகை மற்றும் கருவறையின் வடபுற ஜகதி.

செய்தி: ஐம்பது கோயிற் காணியுடைய குடிமக்கள், தஞ்சாவூர் நகரத்தார் கூடித் தங்களுக்குள் கலந்து பேசி இசைவு கண்டு மேற் கொண்ட முடிவைத் தெரிவிக்கிறது. இம்முடிவு திருஆணை என்றும், உலகுடை முக்கோக்கிழானடிகள் ஆணை என்றும் குறிக்கப்படுகிறது. முற்காலத்தே தலைநிலம், கடைநிலம் சரியான முறையில் கூறிட்டு அநுபவிக்கப் படாமையால் மன்னனின் ஏழாம் ஆட்சியாண்டில் கூறிட்டுக் கரையெடுத்தபடி அநுபவிக்கத் தீர்மானமானது. இதுவே ஆணையாகக் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது.

காலம்: இரண்டாம் இராசாதிராசனின் ஏழாம் ஆட்சியாண்டு, கி. பி. 1170.

1 ஸ்வஸ்திஸ்ரீ கடல் சூழ்ந்த பார் மாதரும் பூ மாதருங் கலை மாதரும்

2 கடல் சூழ்ந்த போர் மாதரும் சீர் மாதரும் அமர்ந்து வாழ நாற் கடல் சூழ்

3 புவியேழும் பாற்கடல் பொற் புகழ் பரப்ப ஆதி யுகமாமென்ன

4 ச் சோதி முடி புணைந்தருளி அறு சமயமு மைம் பூத

5 மும் நெறி நின்று பாலிப்ப தெந்நவருஞ் சேரலருஞ் சிங்

6 களரு முதலாய மன்னவர்கள் திறை சூழ்ந்துவந் திண்டிச் சே

7 சவிப்ப ஊழியூழி யொரு செங்கோ லேழு பா

8 ரு மினிதளிப்பச் செம்பொன் வீர ஸிங்காஸந

9 த்து உலகுடை முக்கோக்கிழானடிகளோடும் வீற்றிருந்

10 தருளிய கோவி ராஜகேஸரிபந்மரான த்ரிபு$_4$வந சக்ர

11 வத்திகள் ஸ்ரீ ராஜாதிராஜ தேவர்க்கு யாண்டு 7 ஆவ

12 து பாண்டி குலாசநி வளநாட்டு தஞ்சாவூர் கூற்றத்து

13 தஞ்சாவூர் நகரத்தோம் ஐம்பது கோயிற் காணி உடைய குடி மக்கள் எல்லோமும் எங்களவற் இசைந்து ஸ்மக

14 ரித்தபடி எங்கள் காணி கருந்திட்டை குடியான சுங்கந் தவிந்த சோழநல்லூர் முன்பிலாண்டுகள் தலை நிலக் கடை நிலம் ஒக்கக் கூறிட்டு

15 அநுபவியாமையில் ஏழாவது தலை நிலக் கடை நிலம் ஒக்கக் கூறிட்டு கரை எடுத்தபடியே சந்திராதித்தவற் செல்வதாக திரு வாணை உலகுடை முக்கோக்கிழானடிக ளா

16 ணை இட்டு இப்படி கல்லில் வெட்டிக் கொண்டோம் இந் நகரத் தோம்

இரண்டாம் கல்வெட்டு

இடம்: கருவறையின் தென்புறம் ஆலமர் அண்ணலின் கீழுள்ள ஜகதி.

செய்தி: இராசகேசரிவர்மனின் பதினேழாம் ஆட்சியாண்டில் (சுந்தரசோழன், கி. பி. 969) சிவிகையார் சேரியைச் சேர்ந்த பெண்டாட்டி பொய்யிலி என்பார் தம் மகன் அரையன் வீரசோழன் நினைவாக இக்கோயிலில் நந்தா விளக்கொன்று எரிக்கக் கொடையளித்தார். இவ்விளக்கெரிக்கத் தேவைப்படும் நெய்யில் பாதியைத் தரும் பொறுப்பை இடையன் முள்ளூரன் சிவன் வழி இத்தளி திருக்கோயிலுடையார்கள் நால்வர் ஏற்றனர். என்ன காரணத்தாலோ அடுத்து ஆட்சிக்கு வந்த பரகேசரிவர்மனின் பதினொன்றாம் ஆட்சியாண்டு வரை(உத்தமசோழன், கி. பி. 980) அக்கொடை நிறைவேற்றப் படவில்லை. கோயில் ஸ்ரீகார்யம் செய்யும் மிலட்டூர் உடையாரான மனுகுல மார்த்தாண்ட மூவேந்த வேளார் இது குறித்து விசாரித்துத் தவறியவர்க்குத் தண்டம் விதித்தார். இக்கல்வெட்டில் குறிக்கப்படும் மிலட்டூர் தஞ்சாவூரிலிருந்து ஏறத்தாழ பதினேழு கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இன்றளவும் பாகவத மேளா எனப்படும் பழஞ் சிறப்புடைய நாட்டிய நாடகம் இங்கு ஆண்டுதோறும் தொடர்ந்து நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.

காலம்: உத்தமசோழனின் பதினோராம் ஆட்சியாண்டு, கி.பி.980.

1 கோப்பரகேசரிபந்மற்கு யாண்டு 11ந்றாவது தஞ்சாவூர்க் கருந்திட்டைக்குடி மகாதேவர்க்கு கோவிராசகேசரிபந்மர்க்கு யாண்டு 17வது சிவிகையார் சேரி இருக்கும் பென்டாட்டி பொய்யிலி

2 தந் மகந் அரையன் வீரசோழனைச் சாத்தி ஒரு திருநொந்தா விளக்கு வைக்க அதனில் பாதி விளக்குக்கு னெய் அட்ட கடவ இடையந் முள்ளூரந் சிவனிடை விளக்காலும் வந்த காசு கொண்டு இத்தளித் திருக்கோயிலுடையாந்கள் ந

3 ந்தி வேம்பனும் நந்தி அய்யாறனும் ஊர் கிழான் சத்தியும் பகைமதந் சத்ருகாலனும் இவ்வனைவரும் கோகாட்டி அரை விளக்காலும் 4[8] ஆட்டாலும் தங்களில் லிசைந்த காசுகொண்டு தேவர்க்கு இடையனிட்டு குடுத்த முதலடை யோலையுங் கு[டு*]த்து அரை விள

4 க்குச் சுட்டி மேல் பேசாதிதாக . . ஆதித்தடறங் குடுத்து அரை விளக்கும் இவ்வளவும் முட்டிக் கிடக்க இவ்வாண்டு ஸ்ரீகாரியம்

செய்கின்ற மிலட்டுருடையானான மனுகுல மார்த்தாண்ட₃ மூவேந்த வேளாந் இது கேட்டு இரண்டு திறவரையும் அழைத்து ஆராந்து வெளிப்ப

5 ட இமந்றாடி முந்தேவர்க்கு இட்டு குடுத்த முதலடை யோலையும் அறுதி கைத்தீட்டுங் [கு]டுத்து கோகாட்டி காசு கொண்ட திரு கோயிலுடையார்கள் செத்து போனமையில் அவர்களில் ஊர்கிழாந் சத்தியும் பகை மதந் சூற்றி

6 யனையும் க[ண]வதி சூற்றியனையும் இப்பரிசு வைத்தார் வைத்த [தந்]மத்தைக் கெடுத்து உங்கள் [பி]துக்கள் காசு கொண்டமை யில் இதிநு[க்கு] தண்டமாக இந்று முன்பு நிந்ற இம்மூவிரும் இவிளக்கு ஒன்றினா[ல்*] ஆடு தொண்ணூற்றாரும் நீங்களே கொண்டு*

மூன்றாம் கல்வெட்டு

இடம்: உள் மண்டபத்தின் வடபுற ஜகதி.

செய்தி: பீமபையார் மகளார் சிலவயார் என்பார் (தேவியார் மகளார் என்று கல்வெட்டின் தொடக்கத்தில் இவர் குறிக்கப்படுகிறார்) மதுரை கொண்ட கோப்பரகேசரியான முதலாம் பராந்தக சோழனின் முப்பத்தெட்டாம் ஆட்சியாண்டில் (கி. பி. 945) ஆலூர்க் கூற்றத்து மண லொக்கூர் ஊராரிடம் விலைக்கு வாங்கிய நிலத்தைக் கோயில் இறைவ னுக்கும் உமா பட்டாரகியார்க்குமாய்க் கொடையளித்தார். இக் கொடை பற்றிய செய்தி கோயிலில் கல்வெட்டாகப் பொறிக்கப்படாமல் நெடுங்காலம் ஓலைச் செய்தியாகவே இருந்தது. உத்தம சோழனின் பதினான்காம் ஆட்சியாண்டில் (கி. பி. 983) திருநறையூர் நாட்டுக் குறுக்கையுடையான் இவ்வோலை தம்மிடம் இருப்பதாகச் சிறுவேலூ ருடையானிடம் கூறி ஓலையைக் காட்டத் தகவலறிந்த கோயில் தேவகன்மிகளும், கணத்தானும், கற்றளிப்பிச்சனும் ஸ்ரீகார்யம் செய் யும் மனுகுல மார்த்தாண்ட மூவேந்த வேளானும் இவ்வோலைச் செய்தியைக் கோயிலில் கல்வெட்டாக்கினர். கோயிலுக்குரிய இந்நிலம் தொடர்பாக எத்தகு தடையும் இடையூறும் ஏற்படாது இதற்குரிய இறையிலி உரிமையைக் காத்து இவ்வறத்தைச் செய்வதாகப் பழை யாற்றைச் சேர்ந்த கிழான் அப்பன் வேம்பன், மண்டைதாழி, கலிவிசை யன், அணிகால நக்கன் ஆகியோர் ஒப்புக்கொண்டுள்ள தகவலும் கல்வெட்டின் ஆறாம் வரியால் கிடைக்கிறது. இக்கல்வெட்டில் கோயில்

* கல்வெட்டின் தொடர்ச்சியைப் படிக்க முடியாதபடி தரையமைப்பு அமைந்துள்ளது.

5

உமா பட்டாரகியைச் சிலவையார் தம் மகளாகக் குறிப்பிடுவது சிறப்புக் குரியதாகும். இதுபோல் வயலூரைச் சேர்ந்த சேந்தன்காரி என்னும் பெருமாட்டி அவ்வூர்க் கோயில் உமா பட்டாரகியைத் தத்தெடுத்துக் கொண்டு இறைவிக்கும் இறைவனுக்கும் திருமணம் செய்வித்து மகிழ்ந்ததுடன் தமக்குச் சீதனமாய் வந்த நிலம் முழுவதையும் இறை விக்குரிய நாள் வழிபாட்டிற்கும் படையலுக்குமாய் எழுதி வைத்த செய்தியைத் திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த குமாரவயலூர்க் கல்வெட் டொன்று குறிப்பிடுவது இங்கு ஒப்பு நோக்கத் தக்கது (ARE 151, 1936).

காலம்: உத்தமசோழனின் பதினான்காம் ஆட்சியாண்டு, கி.பி.983.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரிபந்மற்கு யாண்டு 14 ஆவது தஞ்சாவூர் கூற்றத்து கருவிட்டகுடி மகாதேவர்[க்*]கு தேவியார் மகளார் சி◦லவயார் தம் மகளார் உமா ப₄ட்டாரகியார்[க்*]கு மதிரை கொண்

2 ட கோப்பரகேசரிபந்மற்கு யாண்டு 38ஆவது ஆவூர்க் கூற்றத்து மணலொக்கூர் ஊராரிடை விலை கொண்ட பூமியால் தடையு மிடை யூறும் படாமே யிறையிலி காத்தூட்டுவதாக

3 தந்த கைத்தீட்டு திருநறையூர் னாட்டு மூவேந்த வேளாந் வாழைக் கண்ணாற்று ஓலை என் வசம் இருந்ததெந்று மதிணா யாம் செய்கின்ற சி

4 றுவேலூருடையானுக்கு கைத்தீட்டுக் காட்ட இத்தளி தேவகந்மி களும் . . ந கணத்தானும் கற்றளிப்பிச்சனும் ஸ்ரீகார்ய்ய[ஞ்] செய்கின்ற மனுகுல மாத்தாண்ட மூவேந்த வேளானையும் இவ் வோலைப்படி திருக்கற்றளி

5 யில் கல்மேல் வெட்டுக எந்று ஏவ மதிரை கொண்ட கோப்பர கேசரிபந்மற்கு யாண்டு [38]ஆவது ஆவூர்க் கூற்றத்து மண லொக்கூராரிடைக் கருவிட்டகுடி மஹாதேவர்க்கு பீ₄மபையார் மகளார் சி◦லவயார் தம் மகளார் உமா ப₄

6 ட்டாரகியார்க்கு எங்களிடை விலை கொண்ட பூமியால் தடையு மிடையூறு[ம் படாமே*] இறையிலி காத்தூட்டு[வ்வோ]ம் பழை யாறு கிழான்னப்பன் வேம்பனு மண்டைதாழியு மாடம் கலிவிசை யனும் அணிக்ாலனக்கனும்*

---

* இறுதி வரி படிக்க இயலாதபடி கட்டடப் பகுதிக்குள் மறைந்துள்ளது.

நான்காம் கல்வெட்டு

இடம்: கருவறை மேற்குக் குமுதம் மற்றும் ஜகதி.

செய்தி: முதலாம் இராசராசனின் பெருந்தரத்து அலுவலரில் ஒருவரான வளவன் சூற்றி இக்கோயிலில் ஆடவல்லாருக்குரிய நம்பிராட்டியாராக மகா பரமேசுவரியை எழுந்தருளுவித்து, அவ்வம்மையின் திருமுன் 'ஸ்ரீ ராஜராஜன்' என்ற பெயருடைய சந்தி விளக்கொன்று என்றென்றும் எரியும் பொருட்டு கோயில் ஆட்சியரிடம் பன்னிரண்டு காசுகள் தந்தார். கல்வெட்டில் முதலாம் இராசராசன் இக்கோயிலுடையார்க்கு அறுநூறு காசுகள் தண்டம் விதித்த குறிப்பு காணப்படுகிறது.

காலம்: முதலாம் இராசராசனின் இருபத்தொன்பதாம் ஆட்சியாண்டு, கி. பி. 1014.

1 ஸ்வஸ்திஸ்ரீ திருமகள் போல பெருநிலச் செல்வியுந் தனக்கேய் உரிமை பூண்டமை மனக்கொளக் காந்தளூர் சாலைக் களமறுத்தருளி வேங்கை நாடும் கங்கைபாடியும் நுளம்பபாடியும் தடிகைபாடியும் குடமலை நாடும்

2 கொல்லமும் கலிங்கமும் எண்டிசை புகழ்தர ஈழ மண்டலமும் இரட்டபாடி ஏழரை இலக்கமும் திண்டிறல் வென்றி தண்டால் கொண்டதன் பொழில் வளர் ஊழியுள் எல்லா யாண்டிலும் தொழுதகை

3 விளங்கும் யாண்டே செழிஞரை தேசுகொள் ஸ்ரீகோவிராஜராஜ கேசரிபந்மரான ஸ்ரீராஜராஜ தேவற்கு யாண்டு 29 வது உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் பெருந்தரத்து ராஜராஜத் தெரிஞ்சவலை . . . . . ல உழ்படுவான் வளவன் சூற்றி

4 தஞ்சாவூர் புறம்படி கருந்திட்டைகுடி மஹாதேவர் கோயிலில் நாளெழுந்தரு[ளு*] விச்ச ஆடவல்லார் நம்பிராட்டியார் மஹாபரமேச்ஂவரிக்கு சந்திராதித்தவற் ஸ்ரீராஜராஜ சந்தி விளக்கு நின்றெரிய இத்தேவர் அதிகாரிகள் இசண்டேச்ஂவ

5 ரர் வசம் வளவன் சூற்றி கொடுத்த காசு பன்னிரண்டு இத்தளி ஸ்ரீகோயிலுடையோமை ஸ்ரீராஜராஜ தேவர் தண்டமாக திருவாய் மொழிந்தருளின காசு 600 அறுநூறு இக்காசு முன்னின்று இது ஒளி

6 ச்சுப் போக போனார்க்கும் னானக்குமாக முன்பு நின்று ஆபத்துப் பட்டு காரி[க்கு] நின்று மாதே₃வர்க்கு ஸ்ரீகோயிலில் திருப்பணி முட்டாமைச் செய்யா நின்றும் சந்தி விளக்கு நாலும்

7 சந்தி₃ராதித்தவற் முட்டாமை முன்னின்ற ஸ்ரீகோயிலுடையோமே எரிப்பதாக இக்காசு பன்னிரண்டுங் கொண்டேனேன் கவிசியந் கணவதி சூற்றியான அஞ்ஞா

8 ற்றுவ பட்டனேன் உள்ளிட்ட ஸ்ரீ கோயிலுடையோம் கவிசியன் கணவதி சூற்றியன் திருக்கோயிலுடையார்

ஐந்தாம் கல்வெட்டு

இடம்: மையக்கோயில் உள் மண்டப உத்திரம்.

செய்தி: ஓர் உத்திரமும் பாக்கல் மூன்றும் ஏற்றடிகள் தந்தவை.

காலம்: பத்தாம் நூற்றாண்டாகலாம்.

1 ஸ்ரீ நூ . . . ஏற்றடிகள்ளி
2 ட்ட உத்திரம் 1 பாக்கல்
3 மூன்றும்

---

12. பேரூர்க் கல்வெட்டு

அர. அகிலா

இடம்: திருச்சிராப்பள்ளி குழுமணி சாலையில் உள்ள பேரூர் வரதராசப் பெருமாள் கோயில் முன் மண்டபக் கிழக்குச் சுவர், வாயிலுக்கு வலப்புறம்.

செய்தி: திருவாசல் திருநிலை வரந்தரும் பெருமாளால் கொடையளிக்கப்பட்டது.

காலம்: பதின்மூன்றாம் நூற்றாண்டாகலாம்.

1 ஸ்வஸ்திஸ்ரீ இந்தத்
2 திருவாசற் திருநி
3 லை கால் வரந்த
4 [ரு]ம் பெருமாள் த₄
5 ம்மம்

13. நங்கவரம் கல்வெட்டு

மு. வீரராசாமி, மு. நளினி

திருச்சிராப்பள்ளி மாவட்டம் குழித்தலை வட்டம், குழுமணி இனுங்கூர் சாலையில் நங்கவரம் அமைந்துள்ளது. இவ்வூரில் இருக்கும் மூன்று கோயில்களிலிருந்தும் கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. ஆனால் இன்று பிடாரி கோயிலில் கல்வெட்டு இல்லை. சுந்தரேசுவரர் கோயில் மண்டபத்துக் கல்வெட்டுகள் திருப்பணியின் காரணமாகத் துணுக்குகளாய்ச் சிதறியுள்ளன. மடப்பள்ளி மற்றும் மண்டப வாயிற் சுவர்களில் இருப்பதாக கல்வெட்டறிக்கை குறிப்பிடும் கல்வெட்டுகள் காணுமாறு இல்லை. அறிவியல் நோக்கற்ற திருப்பணிகளும், குடமுழுக்குகளும் எந்த அளவுக்கு இந்த நாட்டின் வரலாற்றழிவிற்குக் காரணமாகின்றன என்பதற்கு நங்கவரமே நல்ல சான்றாய் நிற்கிறது.

இக்கோயிலில் இதுவரையிலும் படியெடுக்கப்படாத கல்வெட்டொன்று இருப்பதை அறிந்து அதைப் படிக்கவும் படியெடுக்கவும் முனைந்தபோது கோயில் சிவாச்சாரியார் திரு. காளீசுவரன் குருக்கள் மிகுந்த பரிவுடன் துணை நின்று வேண்டிய உதவிகளைச் செய்து தந்தார். அவருக்கு நன்றி.

இடம்: கருவறையின் வடபுறக் குமுதம்.

செய்தி: கல்வெட்டில் காவிரியின் தென்கரையில் அமைந்த தேவதான நங்கை பிரமதேயமான அரிஞ்சிகை சதுர்வேதி மங்கலமென்று இவ்வூர் அழைக்கப்படுகிறது. கோயிலின் பெயர் மறவனீசுவரம். இக்கோயிலைச் சேர்ந்த ஆதிசண்டேசுவர தேவகன்மிகளும் கோயில் கண்காணி செய்வாரும் கோயிலோடு பணித் தொடர்புடைய கொல்லர்க்கும் தச்சர்க்கும் இறையிலியாக நிலமளித்தனர். திருவிழா நடக்கும் பத்து நாட்களும் சிறப்புச் சோறு வழங்கப்பட்டது.

காலம்: பதின்மூன்றாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ சுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு . . . உடையார் திருமறவநீசுரமுடையார் தெந்[கரை*]

2 தேவதாந நங்கை பிரமதேசமான அறிஞ்சிய சருப்பேதி மங்கலத்து உடையார் திருமறவநீசுரம்

3 உடையார் கோயி[ற்] ஆதிசந்[டேசுர*] பண்டார தேவகன்மி கே[ா*]யில் கண்காணி செய்வார்க

4 ளும் இவூர் காணி உடைய கொல்லரி[ல்*] வடவாய் மகமாணி [க்*]கந் அமர சந்திரக் கொல்ல[ர்]க்கும் நம்பி . . . ம ஆந அறிய கொல்ல[ர்*] உள்[ளிட்]டார்க்கும்

5 இறையிலி ஒரு மாவும் இவூர் காணி உடைய த

6 ச்சரில் உடைய பிள்ளை மகன்னான அறிஞ்சய தச்ச[ர்*] உள்ளிட் டார்க்கும்

7 உடையார் உமைய அமர சுந்தர தச்ச[ர்*] உள்ளிட்டார்க்கும்

8 இறையிலி ஒரு மாவில் இந்நாயனார் தேவ

9 தான இறையிலி நாற்பத்தெண்ணாயிரவன் வயக்கலி[ல்] கிழக் கடைய . இரண்டும் இந்நில

10 அரைமாவு[ம்] இறையிலியாகப் பெற்று இக்கோயிலுக்கு இவர்கள் செய்யு[ஞ்] சேவை செய்து[ம்]

11 சோறு பெறக் கடவார்களாக திருந[ா*]ள் பத்து சிற[ப்*]பு சே[ா*] று பெறவு[ம்*] இப்படிக்கு கல்லு வெட்டிக்

12 குடுத்தோம்

---

14. குழுமணி கல்வெட்டுகள்

மு. நளினி

திருச்சிராப்பள்ளி வட்டத்தில் அமைந்துள்ள குழுமணி வயல் வளத்தில் மிகச் சிறந்த சிற்றூர். இங்குள்ள நாகநாதசாமி கோயில் பழைய தாங்குதளமும் அண்மைக்கால செங்கல் திருப்பணியுமாய்க் காட்சியளிக்கிறது. இக்கோயிலில் மூன்று கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இவற்றால் இவ்வூரின் பழம் பெயர் குளிர்மணி என்பது தெரியவந்துள்ளது. இக்கோயிலைக் குறிக்கும் கல்வெட்டொன்று திருப்பராய்த்துறை*, திருச்செந்துறை, உய்யக்கொண்டான் திருமலை ஆகிய ஊர்களிலுள்ள திருக்கோயில்களில் வெட்டப்பட்டுள்ளது.

முதற் கல்வெட்டு

இடம்: மையக் கோயில் உள் மண்டப வடபுறக் குமுதம்.

செய்தி: கல்வெட்டு வரிகளின் முடிவு கட்டடப் பகுதிக்குள் சிக்கி யுள்ளது. ஒற்றி மதுராந்தகனாயின வீரசோழ இளங்கோ வேளார்க்கு

* இக்கோயிலில் இந்தக் கல்வெட்டு இன்று காணுமாறு இல்லை.

விண்ணப்பம் செய்து உறத்தூர்க் கூற்றத்துப் புதுக்குடியைச் சேர்ந்த மயிலை திண்டனான செம்பியன் உறத்தூர் நாட்டுக் கோன் என்பார் இக்கோயில் இறைவர்க்கு திருஅமுது படைக்கவும், நந்தா விளக்கொன்று எரிக்கவும் நிலக்கொடையளித்தார். நாகமங்கலம், தச்சக்குடி போன்ற ஊர்களின் பெயர்கள் கிடைக்கின்றன. இரண்டு ஊர்களும் இன்றும் பக்கத்திலேயே உள்ளன.

இக்கல்வெட்டில் குறிக்கப்படும் மயிலை திண்டன் சோமரசம் பேட்டைக்கு அருகிலுள்ள பெருங்குடி அகத்தீசுவரர் கோயிலை எடுப்பித்தவர் (ARE 395, 1939 - 40).

காலம்: இரண்டாம் பராந்தகனான சுந்தர சோழனின் எட்டாம் ஆட்சியாண்டு கி. பி. 961.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோராஜகேஸரிபன்மற்கு யாண்டு 8 ஆவது உறத்தூர் கூற்றத்து பு[துக்கு]டி மயிலை திண்டன் ஆயின செம்பியன் உறத்தூர் நாட்டு[க் கோ]ன் ஒற்றி மதுராந்தகனாயின வீரசோழ விளங்கோ வேளார்க்கு விண்ணப்பஞ் செய்து உறையூர் கூற்றத்து நாட்டார்க்கும் ப்₃ர — —

2 குணந்து இஞ்ஞாட்டு நாகமங்கலத் தெல்லைஇல் ப்₃ரஹ்ம — — நிலத்தை கல்லி விளை நிலமாக வயக்கி திருக்குளிர்[மணி] — — ந்தியில் அ[மு]து செய்ய திருவமுது 1 அரிசி பத்தெட்டு குத்தல் சூழநாழியால் ½ உழக்கு நெய்யு — —

3 கொண்டு அமுது செய்ய கல்லி . . த்த திண்டன் உ . . . . பார் கெல்லை தன்னை — — மேற்கும் தென்பார் கெல்லை தச்சகுடி — — க்கும் மேல்பார் கெல்லை . . தன்னை கல்லி நின்ற மண்ணிலைக்கு கிழக்கும் வடபாற் கெல்லை தன்னை — —

4 ன் கெல்லை உளகப்பட்ட நி[ல*]ன் கொண்டு இப்படி செல்வதாக . . . . . நொத்தா விளக்கு 1 இரவும் பகலும் எரிய . . . . . யெகில வயக்கின மணியன் வயக்கலுக்கு கிழக் — — ஏற மண்ணிலைக்கும் மேற்கும் தென்பார் கொல்லை . . . . . பாயும் வாய்க்காலு மதுராந்தக தென்னாற் — —

5 ண்ணுக்கு கிழக்கும் வடபார்க் கெல்லை தந்னை கல்லியட்டின மண்ணுக்கு. . . . . . ஞ்ஞிலன் கொண . . ஸ்ரீகோஇல் படச . . . . கும் தி[ருவ]முதும் நிசதமு சந்திராதித்தவல் — — குச் செய்து குடுத்தேன் மயிலை திண்ட . . . . . ண் வேண்டுவாரடி என் தலை மேலன தி —

இரண்டாம் கல்வெட்டு

இடம்: மையக் கோயில் உள் மண்டப வடக்குச் சுவர்.

செய்தி: திருமலை நாயக்கர் நாயக்கத்தனமாகத் தந்த குழுமணி வயலில் மாஞ்செய்யும் காணியும் ஞானவரோத அநமானார்க்கு விசுவாவசு ஆண்டு அய்ப்பசித் திங்கள் நான்காம் நாள் மடப்புறமாகத் தரப் பட்டது. இதைத் தரும தட்சிணையாக சர்வமான்ய அநுபவிப்பிற்குத் தந்ததாகக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. கொடையளித்தவர் ?வாகண மனார் (இப்பெயரின் முன் பகுதி சிதைந்துள்ளது).

காலம்: பதினேழாம் நூற்றாண்டு.

1 விச்₀வாவஸு வருஷம் அற்பசி மாதம் 4 வ சொ . ர வ . ம

2 வாகணமனார் ஞானவரோத அநமனார்க்கு தரும த₃க்ஷணையாக உதகம் [பண்]

3 ணிக் குடுத்தபடி நமக்குத் திருமலை தேவ மஹாராசர் நாயக்கத் தன[மாக]

4 க் குழுமணி வயிலிலே மாஞ்செய்யும் காணியும் மடப்புறமாக குடுத்த ப

5 டியாலே இந்த நிலம் உள்ளது சந்த்₃ராதி₃த்தவரையும் ஸர்வ மாந்யமாக [அநுப]

6 விக்க கடவதாகவும் இந்த த₄ம்மத்துக்கு யாரொருத்தர் அகிதம் செய்தார் செ[க]

7 ங்கை கரையிலே செய்த . . . . யை ப்₃ரஹ்மஹத்தி தே₃ாஸ . . .

8 . கக் கடமார்களாகவும் உ

மூன்றாம் கல்வெட்டு

இடம்: அம்மன் கோயில் கருவறை மேற்குச் சுவர்.

செய்தி: கோயில் இறைவர்க்குப் பிறவிக்கிலான் மகன் பிறவிக் கிலான் நிலக்கொடை. சித்திரா பௌர்ணமி மண்டபம் என்ற பெயரில் ஒரு மண்டபம் குறிக்கப்படுகிறது. கோயிலில் மண்டபம் எதுவும் தற் போது காணுமாறு இல்லை.

காலம்: கி. பி. 1635.

1 ஸ்வஸ்திஸ்ரீ ச₀காப்₃தம் 1557

2 இதன் மேல் ஸெல்லா நின்ற . .

3 விதிகி ஸு ஆனி மீ — —

4 களில் பிறவிக்கிலான் மகன்

5 பிறவிக்கிலான் சுவாமி உ

6 குழுமணி இசுரஸா . . . .

7 சித்திரா [பௌர்ண்ய] மண்டபத்தில்

8 அடியேன் உபயமாக சுவாமிக்கு

9 எழுநூறு ரு திறத்து . கொண்ட நிலம்

*10 — — — —

11 குழுமணியில் தரும — —

12 ற் [செ]ட்டியார் . . யால் அண்ணந் தெய்

13 தா . ண்டவன் கையில் சாஸநம் . . . .

14 கொண்ட நிலம் இந்நிலம் மு[க்*]காணி

15 யும் மண்டபப் பொலியூட்டு[க்கு] கொண்ட

16 வளவும் உ சதாசேர்வைய்

---

15. உய்யக்கொண்டான் திருமலை கல்வெட்டுகள்

மு. நளினி

திருச்சிராப்பள்ளி சோமரசம்பேட்டை சாலையில், திருச்சிராப்பள்ளி யிலிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலைவில், சாலையின் வலப் புறத்தே அமைந்துள்ள உய்யக்கொண்டான் திருமலை திருக்கோயில், தருமபுர ஆதீனத்தின் ஆளுகையில் உள்ள பாடல் பெற்ற திருத்தல மாகும். இங்கிருந்து மைய அரசின் கல்வெட்டுத் துறையினர் எழுபத் தோரு கல்வெட்டுகளைப் படியெடுத்துள்ளனர். இவற்றுள் முதலாம் இராசேந்திர சோழனின் கல்வெட்டுகளே அதிக எண்ணிக்கையில் உள் ளன. காலத்தால் பழமையானது முதலாம் பராந்தகனின் கல்வெட்டு. தேவார காலத்தில் திருக்கற்குடி என்றழைக்கப்பட்ட இத்திருக்கோயில் தொடக்கக் காலக் கல்வெட்டுகளிலும் அவ்வாறே அழைக்கப்பட்டுள்ளது. உய்யக்கொண்டான் என்பது முதலாம் இராசராசனின் விருதுப் பெயர் களுள் ஒன்றாகும். முதலாம் இராசராசன் காலத்தில் வளநாடு ஒன்றிற்கு இப்பெயர் இடப் பெற்றிருந்தது. இக்கோயில் கல்வெட்டுகளில் இறை வன் விழுமிய தேவரென்றே அழைக்கப்படுகிறார். உலாப்போந்த திரு

* சிமெண்ட் பூச்சு மறைத்துள்ளது.

மேனி ஒன்றிற்கே உய்யக்கெண்டார் என்ற பெயர் வழங்கப்பட்டுள்ளது. அதுவும் இரண்டாம் குலோத்துங்கனின் கல்வெட்டிலேயே முதன் முதலாக இடம் பெறுகிறது. கிடைத்துள்ள கல்வெட்டுகளில் தேவராய மகாராயர் காலத்துக் கல்வெட்டில்தான் (கி. பி. 1443) முதன் முறையாக இக்கோயில் உய்யக்கொண்டார் திருமலை என்ற பெயரைப் பெறுகிறது.

இக்கோயிலில் இருந்து அண்மை ஆய்வுகளின் போது கண்டு பிடிக்கப்பட்ட புதிய கல்வெட்டுகளுள் சில இங்கு இடம் பெற்றுள்ளன.

முதற் கல்வெட்டு

இடம்: இரண்டாம் திருச்சுற்று, கிழக்குச் சுவர்.

செய்தி: முதலாம் இராசேந்திரனின் பிறந்த மீனான திருவாதிரையன்று திங்கள் தோறும் இறைவர்க்குப் பஞ்சகவ்ய முழுக்காட்டு செய்யக் கொடை. பஞ்சகவ்யம் என்பது நெய், தயிர், பால், கோமயம், கோமூத்திரம் என்பனவாகும். இவற்றைத் தமிழில் ஆனைந்து என்பர். மூவர் முதலிகளின் பதிகங்களில் இறைவனின் ஆனைந்தாடல் பல இடங்களில் குறிக்கப்படுகிறது.

இது தவிர, மஞ்சள், சந்தனம், சிதாரி, கற்பூரம் போன்றவற்றிற்கும், பஞ்சகவ்யமாட்டும் குடத்திற்கும், அதற்கிட்ட நூலிற்கும், முழுக் காட்டிற்குப் பிறகு இறைவன் அருந்தியருளும் பருப்பமுது, சர்க்கரையமுது, நெய்யமுது, கறியமுது, தயிரமுது, அடைக்காய் அமுது, இலையமுது போன்ற பலவகைப் படையல்களுக்கும் அவற்றிற்கான கடுகு, மிளகு, உப்பு போன்றவற்றிற்குமாகக் கொடை தரப்பட்டுள்ளது.

திருமலைக்குக் கீழே இராசேந்திர சோழன் என்ற பெயரில் அமைந்திருந்த அக்கிர சாலையில் வேதம் வல்ல சிவயோகியர் பன்னிருவரை உண்பிக்கவும் அதற்குக் கலசம் செய்து தரும் குசவருக்கு ஊதியம் அளிக்கவும் மூன்று திருமண்டபங்களைப் புதுக்கவும் இக்கொடை வகை செய்கிறது.

இக்கொடையை அளித்தவர் மடமுடைய தாயன் திருப்பராயன் ஆடல் விடங்க பிடாரன். இக்கொடைக்காக இவரளித்த காசு 225. இப்பொருளைக் கொண்டு மூவரிடமிருந்து நிலம் விலைக்குப் பெறப் பட்டது. இதன் விளைவு கொண்டு கொடை நிறைவேற்றப்பட்டதாகக் கொள்ளலாம்.

காலம்: முதலாம் இராசேந்திரனின் பத்தாம் ஆட்சியாண்டு, கி. பி. 1022.

1-8 மெய்க்கீர்த்தி

9 ரான ஸ்ரீராஜேந்த்ர சோழ தேவற்கு யாண்டு 10 ஆவது கேரளாந்தக வளநாட்டு உறையூர் கூற்றத்து திருக்கற்குடி விழுமிய தேவர்க்கு உடையா

10 ர் ஸ்ரீராஜேந்த்ர சோழ தேவர் திருநக்ஷத்ரம் திருவாதிரை நான்று திங்கள் தோறும் உடையார் உத்தமோ உத்தமம் பஞ்ச கெவ்வ்யம் ஆடியருள நெய் நாழிக்கு நெல்

11 லு தூணியும் தயிர் இருநாழிக்கு நெல்லு நானாழியும் பால் முன்னாழிக்கு நெல்லு அறு நாழியும் கோமயம் நானாழிக்கு நெல்லு

12 உரியும் கோமூத்திரம் அறு நாழிக்கு நெல்லு [நா]ழி உரியும் மஞ்சள் இரு பலத்துக்கு நெல்லு இரு நாழியும் திருமெய்பூச்சு சந்தனம் இரு

13 பலத்துக்கு நெல்லுக் குறுணி நானாழியும் திருப்புகைக்கு சிதாரி ஒரு பலத்துக்கு நெல்லு குறுணி நானாழியும் திருமே[ல்]பூச்சு கற்

14 பூரம் மூன்று மாவுக்கு நெல்லு அறு நாழியாக பஞ்சகெவ்வ்யம் ஆட்டும் குடம் ஒன்றுக்கு நெல்லு இரு நாழியும் நூலுக்கு நெல்லு இரு நாழி

15 யும் ஆடியருளி யமுது செய்தருளப் போனகப் பழவரிசி தூணிக்கு ஐஞ்சிரண்டு வண்ணம் நெல்லு இரு தூணி பதக்கும் நெய்யமுது

16 உரிக்கு நெல்லு பதக்கும் சற்கரையமுதுப் பலத்துக்கு நெல்லு முன்னாழியும் பருப்பமுது இரு நாழியினால் பயறு முன்னாழிக்கு நெல்

17 லுக் குறுணி இரு நாழியும் கடுகு மிளகு உழக்கினுக்கு நெல்லு அறு நாழியும் உப்பமுதுரிக்கு நெல்லு நாழியும் கறியமுதுக்கு நெல்லுக் கு

18 றுணியும் தயிரமுது நானாழிக்கு நெல்லுக் குறுணியும் விறகுக்கு நெல்லுக் குறுணியும் அடைக்காயமுது இருபதினுக்கு நெல்லு நானாழியு

19 ம் இலையமுது பற்று ஒன்றுக்கு நெல்லு இரு நாழியும் ஆக் திங்கள் தோறும் நெல்லு இரு கலனே தூணியாக ஆண்டுவரை நெல்லு இருப

20 த்தெண்கலமும் திருமலை அடிவாரத்தே திரு வ[க்$_{3}$ர]ம் ராஜேந்த்ர சோழநில் உண்ணும் வேத$_{3}$ம் வல்ல சிவயோகி$_{3}$ ஒருவனுக்கு நிசதம் ெ

21 நல்லுக் குறுணியாக சிவயோகிகள் பன்னிருவற்கு நிசதம் நெல்லு கலமாக சந்திராதித்தவல் உண்பதற்கு ஆண்டுவரை நெல்லு முன்னூ

22 ற்றறுபதின் கலமும் அமுது செய்யவுள்ளிட்டு வேண்டும் கலமிடுங் குசவனுக்கு திங்கள் தோறும் நெல்லு கலமாக ஆண்டுவரை நெ

23 ல்லு பன்னிரு கலமும் திருமண்டபம் மூன்றும் புதுக்க ஆண்டு வரை நெல்லு நூற்றுக் கலமும் ஆக ஆண்டு வரை நெல்லு ஐஞ்னூற்று கல

24 த்துக்கும் உடையார் ஸ்ரீ இராஜேந்த்ர சோழ தே$_{3}$வர் ஸ்ரீபாதஞ் சாத்தி[ய*]ருள்ளி வந்தம் சந்த்ராதித்தவல் செல்ல மடமுடைய தாயன் திருப்பராயன் ஆடல் விட

25 ங்க பிடாரன் உடையார் திருக்கற்குடி விழுமிய தே$_{3}$வர் பண்டாரத்து வைத்த காசு இருநூற்றிருபத்தைஞ்சு இக்காசு இருநூற்றிருபத்தைஞ்சுக்கும் இரா

26 ஜாச்$_{\circ}$ரய சதுர்வ்வேதி மங்கலத்து பதிநெட்டாஞ் சேரிக் கண்டேற்று சோலை பிரான் க்ரமவித்தனும் இவ்வூர் பதினொன்றாஞ் சேரி ஆத்ரையன் தி

27 ருநீலகண்டன் தேவனும் இச்சேரி ஆத்ரையன் தேவன் ஸ்ரீக்ரு$_{\circ}$ஷ்ணனும் இம்மூவோம் விழுமிய தேவற்கு விற்றுக் குடுத்த நிலவிலையாவணம் நா

28 ங்கள் — — வது இவ்வூர் ெ

29 தன் பிடாகையான குடிமிச்செ . . . . [ய]ன் க்ரமவித்த

30 னேன் எ[ன்] பிதா சுந்தர சோழ க்ரம . . . . . . இவை ப[தி]

31 [னெ] சேரி உத்தம மத்தியமர் ப[க்கல் வி]லை கொண்

32 டுடைய என்னிலம் ஒன்ப[து] கூற்றால் வந்த நி

33 லம் விற்றுக் குடுத்துக் கொண்ட விலைப் பொ
34 ருள் அன்றாடு நற்காசு இருநூறும் திருநீலக்
35 [கண்ட] தேவனேன் இறைப்படி ஐஞ்சாஞ்
36 சே . . . கூற்றில் என் பிதா உத்தமக் குர
37 லால் . . பெற்றுடைய என்னிரண்டு கூற்றால்
38 [வந்த] நிலமும் விற்றுக் குடுத்துக் கொண்ட வி
39 லைப் பொருள் அன்றாடு நற்காசு பதினைஞ்
40 சும் தேவன் ஸ்ரீக்ரு௱ஷ்ணனேன் இச்சேரி ஒரு க[1]
41 ற்றால் மத்தியமப் போால் நானுடைய [ஒ]ரு
42 கூற்றால் வந்த தி[2]லமும் விற்றுக் குடுத்துகூ[3]
43 கொண்ட விலைப் பொருள் அன்றாடு நற்காசு
44 பத்தும் ஆக இக்காசு இருநூற்றிருபத்தைஞ்
45 சும் ஆவணக்களியே கைச்செல்லப் பெ
46 பாருளறக் கைக் கொண்டு இவ்வாணகுடி சுட்
47 டிய நில மென்செய்யும் புன்செய்
48 யும் குளமுங் கரையும் குளக்கோப்பு
49 ம் கால்வாயும் ஊரிருக்கையும் மற்றம்
50 உடும்போடி ஆமை தவழ்ந்த தெற்பேற் ப
51 ட்டிதும் விலைக்கற விற்றுப் பொருளறக் கெ
52 [கா*] ண்டு விற்று விலையாவணம் செய்து
53 குடுத்தோம் விழுமிய தே3வற்கு இக்கண்
54 டேற்றுச் சோலைப் பிரான் க்ரமவித்தனு
55 ம் திருநீலகண்டன் தேவனும் தேவன் ஸ்ரீ
56 க்ரு௱ஷ்ணனும் இம்மூவோம் இவ்விலையா
57 [வ*]ண மெழுதினேன் பதினெட்டாஞ் சே
58 ரிக் கண்டே[ற்று]ச் சோலைப் பிரான்க் க்ர
59 மவித்தனேன் இவை என்னெழுத்து

---

[1] 'கூ' என்று படிக்கவும்.
[2] 'நி' என்று படிக்கவும்.
[3] 'க்' என்று படிக்கவும்.

60 . . . ன் ஏழாஞ் சேரிப் ப[ரர]தாயன் சீதரனங்கியேன் இவை யென் னெழுத்து இப்படி அறிவேன் . . . . . சேரிப் பாலாசயன் சங்கர நாராயணன் மணியனான

61 . . . . னேன் எட்டாஞ் சேரி ப$_4$ாரத்$_3$வாஜி கெங்காதரன் ஸ்ரீரங்க$_3$நாத$_4$னேன் இவை என்னெழுத்து இப்[படி அறிவே]ன் பன்னிரண்டாஞ் சேரிக் காச்சுவன் தேவன் . . கர

62 னெழு[த்து இவ்விலையாவ]ண மெழுதினேன் மூன்றாஞ் சேரி வேழக . ச சனநாத$_4$ க்ரமவித்தனேன் இவை என்னெழுத்து இப்படி அறிவேன் [இரு]பத . . சரி

63 த்துதி . . . . . த . . றை பட்டனேன் இவை என்னெழுத்து இது பந்மாஹேச்$_0$வர ரக்ஷை

இரண்டாம் கல்வெட்டு

இடம்: மேலது.

செய்தி: இறைவன் உச்சம் போது அமுது கொள்ளும் காலத்தே மாகேசுவரரான அபூர்விகளுக்கு ஒரு சட்டிச் சோறு உணவிடுவதற்கு வாய்ப்பாக கொடும்பாளூரைச் சேர்ந்த உத்தம சோழ இருக்குவேளார் தேவியார் இரணமுகராமியாரின் பணிப் பெண் (பெண்டாட்டி) அங்காடி உத்தமசோழி என்பார் கோயில் பண்டாரத்தில் வைப்பு நிதியாக அறுபது காசுகள் தந்தார். அதன் வட்டி கொண்டு ஆண்டுதோறும் இவ்வறம் செய்வதாகக் கோயில் தேவகன்மிகள் உறுதி கூறினர். கொடும்பாளூர் உத்தம சோழ இருக்குவேளாரும் அவரது துணைவி யார் இரணமுகராமியாரும் முதன் முறையாக இக்கல்வெட்டின் மூலமாக வரலாற்று வெளிச்சத்திற்கு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

காலம்: முதலாம் இராசேந்திரனின் பத்தாம் ஆட்சியாண்டு, கி. பி. 1022.

1-11 மெய்க்கீர்த்தி

12 — — ஸ்ரீராஜேந்த்ர சோழ தே$_3$வற்கு யாண்டு 10 ஆவது கேரளாந் தக வ

13 ளநாட்டு உறையூர் கூற்றத்து ஸ்ரீகற்குடி விழுமிய தே$_3$வர் கோயி லில் உடையார் உச்சம் போது

14 அமுது செய்தருளும் போது நிசதங் குறுணி நெல்லு நேர் ஒரு சட்டிச் சோறு . . மாகேச்$_0$வரான அ[பூ]

15 ர்வ்விகளுக்கு குடுக்க கோனாடான உறத்தூர் கூற்றத்து கொடும் பாளூர் உத்தம சோழ இருக்குவே

16 வளார் தேவியார் இரணமுகராமியார் பெண்டாட்டி அங்காடி உத்தமசோழி காசு 1க்குப் பலி

17 சை நெல்லு தூணிப் பதக்காக ஆண்டு வரை பலிசை நெல்லு முப்பதின் கலத்துக்கு சந்திர

18 ாதித்தவல் பலிசையால் செல்வதாக பண்டாரத்து வைத்த முதற் காசு 60 இக்காசறு[ப]தி

19 னாலும் செலுத்துவோமானோம் இதேவர்கன்மிகளோம் இது பன்மாஹேச்₀வர ரக்ஷை

மூன்றாம் கல்வெட்டு

இடம்: மேலது.

செய்தி: இறைவரின் உச்சி சந்திப் படையலின் போது ஸ்ரீமாகேசுவரர்க்குச் சட்டிச் சோறு உணவிட முதலாம் இராசேந்திர சோழனின் பெருந்தர அலுவலர் சேனாபதி ஆடிப்புலியூர் உடையான் கோவன் ஆச்சானான மதுராந்தகப் பல்லவரையர் தாயார் தந்த கொடை நூற்றைந்து கழஞ்சு பொன். இப்பொன்னை முதலாகக் கொண்டு இதன் வட்டி வழி மேற்கண்ட அறத்தை நிறைவேற்ற வகை செய்யப்பட்டுள்ளது.

காலம்: முதலாம் இராசேந்திரனின் பத்தாம் ஆட்சியாண்டு, கி. பி. 1022.

1-10 மெய்க்கீர்த்தி

11 கோப்பரகேசரிபன்மரான ஸ்ரீராஜேந்த்ர சோழ தேவற்கு யாண்டு 10ஆவது கேரளாந்தக வளநாட்டு உறை

12 யூர்க் கூற்றத்து ஸ்ரீகற்குடி விழுமிய தேவர் கோயிலில் உச்சம் போதை ஸந்தி அமுது செய்தருளும் போ

13 து ஸ்ரீமாகேச்₀வரற்கு சட்டிச் சோறு ப்ரஸாதஞ் செய்தருள உடையார் ஸ்ரீராஜேந்த்ர சோழதேவர்

14 பெருந்தரத்து சேனாபதி உய்யக்கொண்டான் வளநாட்டு திரு நறையூர் நாட்டு ஆடிப்புலியூர் உடையான்

15 கோவனாச்[ச]னான மதுராந்தகப் பல்லவரையர் தாயார் நிசதம் முக்குறுணி நானாழி நெல்லு நேர் [மூன்று] சட்டி

16 ச் சோற்றுக்கு பொன் கழஞ்சுக்கு பலிசை நெல்லுக் கலமாக ஆண்டு வரை பலிசை நெல் நூற்றை

17 ங்கலத்து

18 க்கு சந்திராதி

19 தவல் செல்

20 வதாக வை

21 ய்த்த முதற்

22 பொன் நூ

23 ற்றைங் கை

24 ழஞ்சு இது

25 பந்மாஹே

26 ச்₀வர ரை

27 க்ஷ

நான்காம் கல்வெட்டு

இடம்: இரண்டாம் திருச்சுற்று, கிழக்குச் சுவர். கல்வெட்டு வரிகளின் தொடக்கம் கட்டடப் பகுதிக்குள் சிக்கியுள்ளது.

செய்தி: பலருடைய கொடைகள் குறிக்கப்படுகின்றன.

i) முதலாம் இராசேந்திரனின் சிறுதனப் பெருந்தனத்து அலுவலர் முண்டங்குடையான் விழுப்பரையன் (பெயர் முழுமையாகக் கிடைக்கவில்லை) இறைவன் கோயில் திருவுண்ணாழிகையில் விளக்கெரிக்கவும், இறைவனுக்குப் பால் முழுக்காட்டவும் கொடையாகப் பசுக்களை அளித்துள்ளார்.

ii) இறைவன் உச்சம் போது பாலாடியருள காடன் கணவதியாரான இருமுடி சோழ மூவேந்த வேளார் பசுக்களைக் கொடையளித்துள்ளார்.

iii) மடமுடைய தாயன் திருப்பராயன் ஆடல் விடங்க பிடாரன் இறைவன் உச்சம்போது அக்காரடலை அமுது செய்தருள பசு கொடை.

காலம்: முதலாம் இராசேந்திரன்.

1-14 மெய்க்கீர்த்தி

15 — — — — கோப்பரகேசரிபந்மரான ஸ்ரீராஜே

16 — — — — து தென்கரைக் கோளாந்தக வளநாட்டு உறையூர் கூற்றத்து ஸ்ரீகற்குடி விழுமிய தே₃

17 — — — — ந்த்ர சோழ தே₃வர் சிறுதனப் பெருந்தனத்து ஊயக் கொண்டார் வளநாட்டு முண்டங்குடையான்

18 — — — — தக விழுப்பரையன் உடையார் திருவுண்ணாழிகையில் இரவும் பகலும் சந்திராதித்தவல்

19 — — — — உழக்கால் நிசதம் நெய் உரியாக ஆண்டு வரை நெய் நூற்றெண்பதி னாழிக்கு வைய்த்த சா

20 — — — — மேற்படியான் உச்சம் போது புரவினால் [நா]னாழி பால் ஆடியருள வைத்த சாவா மூவாப் ப

21 — — — — ன்காடன் கணவதியாரான இருமுடி சோழ மூவேந்த வேளார் உச்சம் போது பாலாடியருள புரவினால்

22 — — — — த்திரண்டும் மடமுடைய தாயன் திருப்பராயன் ஆடல் விடங்க பிடாரன் உடையார் உச்சம் போ

33 — — — — அறு நாழிக்கும் அக்காரடலை யமுதுக்கு நிசதம் பால் குறுணிக்கும் அமுது செய்தருள

24 நிசதம் . . . . நாழி உரிக்கும் இத்தேவற்கு யாண்டு . நா[ள்] . . வது . . . . தினொான்

25 — — வைத்த பசு . . . . பத்தொன்றுக்கு [ப]சு ஒன்றுக்கு நிசதம் பால் . . . . . . இரு செவிடரை

26 — — நாழி உரியும் சந்தி[ராதித்]தவல் செல்வதாக வைத்த சாவா மூவா பசு [நூற்றெ]ண்பத்தொ

27 — — ரக்ஷை

எண்ணங்களை எழுதுங்கள்

வரலாறு முதல் இதழைப் படிக்கும் அன்பர்கள் இந்த இதழின் அமைப்பு, இதில் இடம் பெற்றிருக்கும் செய்திகள், கட்டுரைகள் ஆகிய வற்றைப் பற்றித் தத்தம் கருத்துக்களை எழுதுமாறு வேண்டுகிறோம். புதியனவாகவும், பயனுள்ளவையாகவும் எவ்வெப் பகுதிகளைச் சேர்க்க லாம் என்பதற்கும் வழிகாட்டுங்கள். இவ்விதழில் வெளியாகியுள்ள ஆய்வுக் கருத்துக்களுக்கு மாறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும் தெரி வித்தருள்க. வரலாறு உரியவற்றை வெளியிட்டு மகிழும். —ஆர்

16. திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை கல்வெட்டு

மு. நளினி

மலைக்கோட்டையில் அமைந்துள்ள குகைத்தள முகப்பின் தென்புறத்தே இக்கல்வெட்டு காணப்படுகிறது. கல்வெட்டறிஞர் திரு. ஐராவதம் மகாதேவன் அவர்களுடன் களப்பணிக்குச் சென்றிருந்த போது கண்டுபிடிக்கப்பட்ட இக்கல்வெட்டு வட்டெழுத்தில் அமைந்துள்ளது.

செய்தி: அகரத்தைச் சேர்ந்த குசலன் என்பாரின் பெயர் செதுக்கப்பட்டுள்ளது.

காலம்: ஐந்தல்லது ஆறாம் நூற்றாண்டாகலாம்.

கல்வெட்டு

அகரம் குசலன்

இதே குகைத் தளத்தில் காணப்படும் கட்டுணை எனப்படும் வட்டெழுத்துக் கல்வெட்டு கல்வெட்டறிக்கையில் கம்ட்டுஹ என்று குறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு பல்லவ கிரந்தத்தில் இருப்பதாகவும் கல்வெட்டறிக்கை சொல்கிறது (ARE 134, 1937-38).

இறையியல் பொழிவுகள் இனிய சொற்கவிகள்

இன்று மகளிர் கவியரங்கேறுவதும், பட்டி மன்றம் பேசுவதும் அன்றாடக் காட்சி. இது ஏழாம் நூற்றாண்டில் நடந்திருக்க முடியுமா? சங்க மகளிர்க்குப் பிறகு காரைக்கால் அம்மை மட்டும்தானே கண்ணில் படுகிறார் என்பார் ஏக்கம் தவிர்க்கவே சம்பந்தர் தம் ஆவூர்ப் பதிகத்தில் ஏழாம் நூற்றாண்டுப் பெண்ணரசிகளின் பேச்சுத்திறன் காட்டுகிறார்.

ஆவூரில் விழாக் காலத்தே கவியரங்குகளில் மகளிர் சொற்கவி பாடுவராம். கேட்டு மகிழ்ந்த மக்கள் பொன்னை அள்ளியளித்து வாழ்த்துவராம் (1:8). இது ஏதோ மகளிர் தொடர்பான விழா என்று யாரும் நினைத்துவிடக் கூடாதென்றுதான் அதே ஆவூரில் நிகழ்ந்த மற்றொரு காட்சியையும் சம்பந்தர் காட்டுகிறார். இங்கும் விழாக் களம் தான். அழகு செய்யப்பட்ட அரங்கத்தில் பொழிவாளர்களாய்ப் பெண்களும் ஆண்களும். இவர்கள் பாலொத்த மொழியில் இறைவனின் பெருமைகளை மக்களுக்கு இதமாக எடுத்துச் சொல்கிறார்களாம்.

இறையியல் பொழிவுகளும், இனிய சொற்கவிகளும் ஏழாம் நூற்றாண்டில்; தந்தவர்கள் பெண்கள். பதிகவரிகளுக்குள் பண்பாட்டு வரலாறு.

2. விட்டுப்போன தொடர்ச்சிகள்

1. கருந்திட்டைக்குடி கல்வெட்டுகள்

கோயில்களில் ஆவணங்களை வெட்டியவர்கள் பெரும்பாலும் அவற்றின் அளவுக்கேற்ப இடம் தேர்ந்தும், ஒரு சில சமயங்களில் இருக்கும் இடத்திற்கேற்ப ஆவணத்தைப் பல பகுதிகளாகப் பிரித்து, கட்டடத்தின் ஒரு பகுதியைச் சேர்ந்த பல இடங்களில் செதுக்கியும் கல்வெட்டாக்கியுள்ளனர். இந்தக் கல்வெட்டுகள் பெரும்பாலும் முழுமையடைந்திருக்கும். சில கல்வெட்டுகள் முற்றுப் பெறாமலும் காணப்படுவதுண்டு. பெரும்பாலான நேரங்களில் திருப்பணி செய்த வர்கள் இவற்றின் அருமை அறியாமல் கற்களை மாற்றி வைத்துக் கட்டடத் திருப்பணி செய்து விடுவதாலும் கல்வெட்டுகள் தொடர்ச்சி இழந்து தத்தளிப்பதுண்டு. அதனால் கோயிலில் ஒரு கல்வெட்டைப் படிக்கும் போதும், படியெடுக்கும் போதும் நிறைந்த கவனம் வேண்டும். கல்வெட்டு தரும் செய்தி முழுமையடையாது இருக்குமானால் அதன் தொடர்ச்சியைப் பக்கத்தில் இருக்கும் கட்டடப் பகுதிகளில் தேட வேண் டும். சில சமயங்களில் சுவரில் தொடங்கும் கல்வெட்டு ஜகதியில் முடியலாம்; மேற்குச் சுவரில் தொடங்கித் தெற்குச் சுவரில் முடியலாம். ஒரு கல்வெட்டு எங்குத் தொடங்கி எங்கு முடிகிறது என்பதை முதலில் கண்டுபிடித்து, அக்கல்வெட்டு முழுவதையும் படித்து, செய்தி முழுமை யாகியுள்ளதா என்பதை அறிந்த பிறகு படியெடுப்பதே தவறுகளைத் தவிர்க்கும் எளிய வழியாகும்.

கல்வெட்டுகளைப் படியெடுப்பவர்கள் சில நேரங்களில் தொடர்ச்சி கள் பக்கப் பகுதிகளில் இருப்பதை அறியாமல் கிடைத்ததை மட்டும் படியெடுத்து வந்து பதிப்பித்து விடுவதுண்டு. சில நேரங்களில் முதல் முறை படியெடுக்கும் போது கல்வெட்டின் சில பகுதிகள் கட்டடப் பகுதிக்குள் இருந்திருக்கும். பிற்காலத் திருப்பணிகளில் அக்கட்டடப் பகுதிகள் அகற்றப்பட்டு விட்டுப்போன தொடர்ச்சிகள் வெளிவரும். இப்படிப் பல்வேறு காரணங்களால் விட்டுப்போன தொடர்ச்சிகளைக் கள ஆய்வுகளில் கண்டுபிடிப்பவர்கள் இப்பகுதியில் அவற்றை வெளி யிடத் தந்துதவலாம்.

கருந்திட்டைக்குடியில் உள்ள வசிஷ்டேசுவரர் கோயிலில் இருந்து 1897 இல் சில கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டன. அவற்றுள் சில பாதியளவே படியெடுக்கப்பட்ட நிலையில் தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி எண் ஐந்தில் இடம்பெற்றுள்ளன. அண்மைக் கள ஆய்வு களில் இக்கல்வெட்டுகளின் விட்டுப்போன தொடர்ச்சிகளை மைய ஆய்வர்கள் கண்டறிந்தனர்.

1. முதற் கல்வெட்டு

தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி ஐந்தில், 1405 ஆம் எண்ணிடப்பட்டு, மையக் கோயிலின் தெற்குச் சுவரில் இருப்பதாக ஒரு கல்வெட்டின் முதலிரண்டு வரிகள் மட்டுமே பதிப்பிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டு முற்றுப் பெறவில்லையென அடிக்குறிப்பு பேசுகிறது. ஆனால் கல்வெட்டின் தொடர்ச்சி அதே சுவரின் தாங்குதளப் பகுதியிலுள்ள குமுதம் மற்றும் ஜகதியில் காணப்படுகிறது.

பதிப்பிக்கப்பட்ட கல்வெட்டுப் பகுதி

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரிபன்மற்கு யாண்டு பத்தாவது தஞ்சாவூர்க் கூற்றத்து தஞ்சாவூர்ப் புறம்படிக் கருந்தி[ட்*]

2 டைகுடி மகாதேவர்க்கு மதுராந்தகன் கண்டராதித்தன் வைத்த ஆடு தொண்ணூற்றாறும் கொண்டு நெய் அட்டக் கடவ மன்றாடி

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட அதன் தொடர்ச்சி

3 அமரன் குறும்பன் இராயேரியால்* நொந்தா விளக்கொன்றுக்கு அட்டக் கடவ நெய்

4 உழக்கு இவை சாவா மூவா பேராடு இவை பன்மாஹேச்ᵒவர ரக்ஷை || -யாண்டு 11ஆவது இவ்விளக்கு

5 மதுராந்தகன் கண்டராதித்தன் இடை ஆடு தொண்ணூற்று ஆறு கொண்டு இராசகேசரியால் நிசதம் உழக்கு நெய் அட்ட கடவ எமை

6 யன் அமரன் குறும்பன் அட்டி வாரா நிற்க இவ்வாண்டு இவ நிடையே நாற்பத்தெட்டு ஆடுங் கொண்டு நிசதம் இராஜசேகரியால் ஆழாக்கு நெய் அட்டுவேனாநேன்

7 அமரன் கருவூரநேன் இவை சா[வா*] மூவாப் பேராடு இவை பந்மாஹேச்ᵒவர ரக்ஷை

2. இரண்டாம் கல்வெட்டு

தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி ஐந்தில் 1408 ஆம் எண்ணிடப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டிருக்கும் கல்வெட்டின் இடைப்பகுதி கிடைத்திருக்கிறது. வெளியிடப்பட்டுள்ள கல்வெட்டுச் செய்தி, தொடர்ச்சி ஒழுங்கின்றி இருந்தும், பதிப்பில் வரிகளின் எண்கள் தொடராகத் தரப்பட்டுள்ளன.

---

* இராசகேசரியால் என்று படிக்கவும்

பதிப்பிக்கப்பட்டிருக்கும் முதற் பகுதியான **1 – 20** வரிகள்

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்ப

2 [ரகே] சரிபன்மரான ஸ்ரீராஜேந்திர சோழ

3 தேவற்க்கு யாண்டு . . . .

4,5 — -

6 . . . . . ர் பாலா . . . .

7 . . . .

8 . . . . [த்த] நில [விலை ய]ாவணமா

9 வது தஞ்சாவூர்க் கூற்றத்[து]த் த

10 ஞ்சாவூர்க் கருந்திட்டைக்குடி ம

11 ஹ[ா*] தே$_{3}$வர்க்கு மூலப்$_{4}$ரு$_{0}$த்யரான

12 சண்டே$_{3}$ச்$_{0}$வர தே$_{3}$வர்க்கு நான்

13 விற்றுக் குடுத்த நிலமாவ

14 து இவ்வூர் என் நிலம் முள்ள

15 ங்காலென்று பேர் கூவப்படும்

16 நிலம் பொத்தகப்படி நூற்றி

17 ருபத்தெட்டுக் குழி கொண்டது

18 ஒரு மாவாக வந்த நிலம் . . . . து மா மு[க்]காணி அரைக் கா[ணி]

19 முந்திரிகை நிலமும் . . . . . . வெள்ளானூர் நிலத்து

20 க்கு மேர்க்கும் தென்பார் கெல்லை இச்செய்

*21 [க்கே]ய் புகுதப் பாய்ந்த வாய்க்காலுக்கும் வெள்ளா

---

* இந்த வரி கல்வெட்டில் தனி வரியாக இருக்கிறது. ஆனால் கல்வெட்டுத் தொகுதியில் இது இருபதாம் வரியின் தொடர்ச்சியாகக் காட்டப்பட்டுள்ளது. இருபத்தோராம் வரி புள்ளிகளால் நிரப்பப் பட்டுள்ளது.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இடைப்பகுதி

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட பதினான்கு வரிகளும் இருபத்திரண்டிலிருந்து எண்ணிடப்பட்டுத் தரப்பட்டுள்ளன,

22 [னூர்] நிலத்துக்கு வடக்கு மேற்பாற் கெ

23 ல்லை [வெள்ளா]னூர் நிலத்து[க்கு] கிழக்கும்

24 வடபா லெல்லை . . . . ங்கிணி . . . ம் கிழக்கு

25 நோக்கிப் போன வாய்க்காலுக்கும் வெள்ளானூர் நிலத்துக்குத் தெர்க்கும்

26 இவ்விசைந்த பெருநான் கெல்லை உ[ள்ள]கப்பட்ட நிலம் நான்கு ம

27 . . . ரைக் காணிக் கீழ் எட்டு மா முக்காணி யரைக்காணி முந்திரி கையினால்

28 இவ்வூரில் ஸப$_4$ா வ்யவதி$_3$ஸ்தப்படி மூன்றாந்தர மடக்கி வந்த நில முக்காணி யரைக்காணி முந்தி

29 ரிகைக் கீழ் எட்டு மாக்காணி நிலத்துக்கு இறையிறுத்து உண்ணக் கடவாராக விற்றுக் குடுத்தேன் ச

30 ண்டேச்$_{\circ}$வர தே$_3$வர்க்கு பாலாச்$_{\circ}$ரியன் பரமேச்$_{\circ}$வரன் ஸ்ரீராகவனேன் இக்காசு 20 இக்காசு இருப

31 துக்கும் இந்நிலம் இப்பரிசு விற்று விலையாவணஞ் செய்து கு[டு*]த்தேன் இந்நிலத்

32 துக்கு இதுவே விலையாவணமும் இதுவே

33 பொருள் மாவறுதிப் பொருட் செலவோலையும்

34 இதுவே யாவதாகவும் இதுவல்லது வேற்றாவனமும்

35 பொருட் செலவோ

பதிப்பிக்கப்பட்டிருக்கும் பிற்பகுதியான 22-53 வரிகள்

பதிப்பில் கல்வெட்டின் பிற்பகுதி இருபத்திரண்டாம் வரியாகத் தொடர்கிறது. இப்போது விட்டுப்போன இடைப் பகுதியாகப் பதினான்கு வரிகள் கிடைத்திருப்பதால், இங்குப் பிற்பகுதி வரிகளின் எண்கள், தொடர் ஒழுங்கு கருதி மாற்றப்பட்டுள்ளன. அடைப்புக் குறிக்குள் தொகுதியில் தரப்பட்டிருக்கும் பழைய வரி எண் தரப்பட்டுள்ளது.

36 (22) லை காட்டக் கடவர
37 (23) ல்லாதாராக இப்பரி
38 (24) சு விலைக்கற விற்று பொருளறக் கொ
39 (25) ண்டு இக்காசு இருபதுக்கும் விற்று
40 (26) விலையாவணஞ் செய்து குடுத்தே
41 (27) ன் ஸ்ரீசண்டே3ச்°வர தே3வர்க்கு பா[லா*]சி°ரிய
42 (28) ன் பரமேச்°வரன் ஸ்ரீராகவனேன்
43 (29) இவர் பணிக்க இந்நில விலையா
44 (30) வணம் எழுதினேன் இவ்வூர் மத்4ய
45 (31) ஸ்தன் நானூற்றுவன் ஸ்ரீக்ரு°ஷ்ணனான
46 (32) கற்பகப் பிரியனேன் இவை எ
47 (33) ன் எழுத்து இ[ப்*]படி அறிவேன்
48 (34) வாதுலன் கண்ணன் ஒலோகநாதனேன்
49 (35) இப்படி அறிவேன் பாரதாயன் குஞ்சர
50 (36) மல்லன் நின்றானேன் இப்படி அ
51 (37) றிவேன் பாரதா[யன் நி]ன்றா னக்க
52 (38) னேன் இப்படி அறிவேன்
53 (39) வைகாஸனன் பார[த்வா]ஜி வாஸுதே3
54 (40) வன் அப்பியேன் இப்படி அறிவே
55 (41) ன் பாரதாயன் காடன் சாத்தனேன்
56 (42) இப்படி அறிவேன் பாரதாயன் பரமே
57 (43) மச்°வரன் திருவரங்கனேன்
58 (44) இப்படி அறி
59 (45) வேன் பாரதா
60 (46) யன் பாண்ட
61 (47) ன் பாண்டமே
62 (48) னன்
63 (49) இப்படி அறிமே
64 (50) வன் வைகாஸ
65 (51) னன் கைசிகன் சி
66 (52) தரன் அருமொ
67 (53) ழியேன்

3. மூன்றாம் கல்வெட்டு

தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி ஐந்தில் 1412 ஆம் எண்ணிடப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டிருக்கும் கல்வெட்டின் பிற்பகுதி கிடைத்திருக்கிறது.

பதிப்பிக்கப்பட்டிருக்கும் பகுதி **1-22** வரிகள்

1 ஸ்வஸ்திஸ்ரீ
2 கோப்பரகேசரி
3 பந்மற்கு யாண்டு
4 3*ஆவது புறம்படி
5 கருந்திட்டைகுடி மா
6 தேவர் கோயில் [உடை]
7 டய கௌசிய[ந்*] க[ண]
8 ப[தி] சூற்[றிய]னு
9 ம் பக்குடி சத்தி நந்தி**
10 யும் இவி[ருே]வாம் இ
11 த் த[ஞ்]சாவூர் வீரசோழ
12 [ப் பெருந்தெ]தருவில் திருத
13 ான சோமபிராந் கோ
14 யில் காணி உடைய
15 ஆத்திரையந் சிதர
16 ந் தாழியாந பிர***
17 மீச்ͦவரமுடை
18 யா(ந்)நுக்கு இக்கருந்திட்டைகுடி மாதேவர் கோயி
19 லில் விற்று குடுத்த நாள் திங்கள் முப்பது வட்ட
20 த்து இருபதும் இவூர் பிடாரி கோயில் நாள்
21 இருபதும் நந்தி மாகாளி கோயில் நாள் இருபதும்
22 இவ நநுபவிக்க நாங்கள் மூவ[ரொடந்]படி

புதிதாகக் கிடைத்திருக்கும் பிற்பகுதி

23 செய கடவோமாக இக்கோயில்கள் விலை கொ
24 ண்டுடைய ஆத்திரையன் சீதரன் தாழி
25 யாந பிரமீச்ͦவரமுடையானுக்கு தீட்டு கு
26 டுத்தோம் கௌசியன் கணவதி சூ
27 ற்றியும் சத்தி நந்தியேனும் இது
28 பந்மா [ஹேச்ͦவர ரக்ஷை]

---

* தொகுதியில் ஆட்சியாண்டு '2' என்று தரப்பட்டுள்ளது. ஆனால் கல்வெட்டில் '3' என்றுதான் உள்ளது.

** தொகுதியில் 'சுதந்தி' என்ற பெயர் காணப்படுகிறது. கல்வெட்டில் தெளிவாக 'சத்தி நந்தி' என்ற பெயர் உள்ளது.

*** தொகுதியில் 'இராமீச்ͦவரமுடையான்' என்றிருப்பது சரியல்ல. கல்வெட்டில் பிரமீச்ͦவரமுடையான் என்ற பெயரே காணப்படுகிறது.

3. செப்பேடுகள்

1. விசயரங்க சொக்கநாத நாயக்கரின் ஆதனூர் — சாத்தனூர் பட்டயம்

பெ. கௌதமபுத்திரன், எஸ். இராமச்சந்திரன்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கொள்ளிடத்திற்கு வடக்கே ஊற்றத்தூர் சீமையில் ஆதனூர், சாத்தனூர் என்னும் அக்ரகாரங்களை உருவாக்கி அவற்றை அந்தணர் பலருக்கு மதுரை அரசி மங்கம்மாளின் பெயரன் விசயரங்க சொக்கநாதர் அளித்த செய்தி இச்செப்பேட்டில் தரப்பட்டுள்ளது. தெலுங்கில் எழுதி, இறுதியில் 'விஜயரங்க சொக்கநாதய்யவ்ராலு' என்று முத்திரைக் கையொப்பம் இடப்பட்டுள்ளது. ஒரே ஏட்டின் இருபுறமும் எழுதப்பட்டுள்ள இச்செப்பேட்டில் நாயக்க அரசின் கீழ் சிற்றரசராக இருந்த பெரிய ரங்கப்ப மழவராயரின் பெயரும் இடம் பெற்றுள்ளது.

காலம்: 6.11.1710

செப்பேட்டுச் செய்தியின் தமிழ் மொழிபெயர்ப்பு[1]

ஸ்வஸ்திஸ்ரீ விஜயாப்யுதய சாலிவாகன சகாப்தம் 1632 விரோதி வருடம் கார்த்திகை மாதம் பௌர்ணமி தினத்தன்று, ஸ்ரீ வீரப்பிரதாப ஸ்ரீ வீரவேங்கடதேவ மகாராயர் ஐயன் அவர்கள் கனகிரி[2] என்னும் நகரத்தில் ரத்தின சிம்மாசனத்தில் அமர்ந்து இவ்வுலகை யாளுகின்ற போது, காஸ்யப கோத்திரத்தைச் சேர்ந்த சொக்கநாத நாயக்கரின் பேரனும் ரங்க கிருஷ்ண முத்து வீரப்ப நாயக்கர் அவர்களின் புதல்வனுமான விஸ்வநாத நாயக்க விஜயரங்க சொக்கநாத நாயக்கர் ஐயன் அவர்கள், லக்ஷண மழவராயரின் பேரனும் வெங்கடப்ப மழவராயரின் புதல்வனுமான பெரிய ரங்கப்ப மழவராயரின்[3] (ஆட்சிக்குள் அடங்கிய) சரபிடி[4] பல கோத்ரங்களையும் பல சூத்ரங்களையும் சேர்ந்த பல சாகாத்யாயிகளான பிராமணர்க்கு வழங்கிய தாராபூர்வ தர்ம சாசனம் என்னவென்றால், ராயர் அவர்கள் எங்களுக்கு நாயங்கர[5] முறைப்படி அளித்துள்ள பாண்டி மண்டலம் மதுரை சமஸ்தானத்தைச் சேர்ந்த திரிசிரபுரத்தில் உத்தர காவேரிக்கு[6] வடக்கில் உள்ள ஊட்டத்தூர் சீமையில் ஆதனூர், சாத்தனூர் என்ற அக்ரகாரங்கள் உருவாக்கக் கட்டளையிட்டபடி உருவாக்கினோம்.

ஆதனூர் எல்லையாவன: மதிசத்தம் கொட்டடைக்குக் கிழக்கும், மூங்கில் தோப்பு வழிக்குத் தெற்கும்,இலந்தைக்குடிக்கு மேற்கும், புரிமிசைக்கு வடக்கும் ஆகும்.

சாத்தனூர் எல்லையாவன: மாதேவிக்குக் கிழக்கும் கொட்டடைக் குத் தெற்கும், இலுப்பைக் கோயிலுக்கு மேற்கும், குளக்கானலுக்கு வடக்கும் ஆகும்.[7]

இவ்வெல்லையில் அடங்கிய நஞ்சை, புஞ்சை, மாவடை, மரவடை, தோப்பு, துரவு, நிதிநிக்ஷேப, ஜலதரு, க்ஷீண்யாகமி, சித்த சாத்ய அஷ்ட போக, தச ஸ்வாம்யங்களும் புத்திர பவுத்திர பாரம்பரியமாக தானாதி வினிமய விக்கிரயங்களுக்கு யோக்யமாக ஆசந்திரார்க்கம் அனுபவித்து வருவீராக.[8]

அடிக்குறிப்புகள்

1 இச்செப்பேட்டினைப் படிப்பதற்கு உதவி புரிந்தவர் சரசுவதி மகால் நூலகத்தில் தெலுங்குப் பண்டிதராகப் பணிபுரிந்த திரு. விசுவ நாதம் அவர்கள் ஆவார்.

2 ஆனகுண்டி நகரமாக இருக்கலாம். கி. பி. 1710 ஆம் ஆண்டில் வேங்கடராயர் என்பவர் ஆனகுண்டியில் ஆட்சி புரிந்ததாகக் கல்வெட்டுகள் மூலம் தெரியவருகிறது என்று ராபர்ட் சிவெல் குறிப் பிட்டுள்ளார் (Forgotten Empire, P. 234).

3 மழவராயர் அரசர்களின் பெயர்கள், விசயநகர அரசர்களின் அல்லது தண்ட நாயகர்களின் பெயர்களை ஒட்டியே அமைந்துள்ளன. சான்றாக லக்கண தண்டநாயகர், வேங்கடபதிராயர், ஸ்ரீரங்கராயர் ஆகிய பெயர்களைக் குறிப்பிடலாம்.

4 பல்வேறு வகையினர் எனப் பொருள்படும்.

5 முற்காலத்திலிருந்து உள்நாட்டில் அரசாட்சி செய்து வந்த பரம் பரையினர்க்கு வழங்கப்பட்ட ஆட்சியுரிமை 'அமரம்' எனவும், புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட பாளையக்காரத் தலைவர்களின் ஆட்சியுரிமை 'நாயங்கர' எனவும் விசயநகர அரசர்களால் அழைக்கப்பட்டன.

6 கொள்ளிட நதி.

7 மதிசத்தம் கொட்டடை என்ற ஊர் தற்போது கொட்டடை என்றும், மூங்கில்தோப்புவழி தற்போது மூங்கில்பாடி என்றும், இலந்தைக்குடி, இலந்தைக் குழி என்றும், புரிமிசை பிலிமிசை என்றும், மாதேவி, மாதவி என்றும், குளக்கானல் தற்போது குளக்காநத்தம் என்றும் அழைக்கப்படுகின்றன. (குளக்கானத்தூர் என்று 1633 ஆம் ஆண்டைச் சேர்ந்த குளக்காநத்தம் பெருமாள் கோயில் கல்வெட்டு

கூறுகிறது. கொட்டடை என்றழைக்கப்படும் ஊர் கொட்டறை என்று அக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது.)

8 5-7-1984 அன்று இச்செப்புப் பட்டயம் சென்னைப் பதிவு அலுவலர் அலுவலகத்திலிருந்து தஞ்சாவூர் மராட்டியர் அரண்மனை அகழ் வைப்பகத்திற்குப் பெறப்பட்டது. தற்போது அகழ் வைப்பக பராமரிப்பில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

சங்க காலத்துக் கோழிப் போர்

முதலாம் இராசராசனின் ராஜராஜீசுவரத்துக் கல்வெட்டொன்று கோழிப் போரைச் சுட்டுகிறது. அண்மையில் விழுப்புரத்திற்கருகே அரசலாபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட நடுகல் கல்வெட்டு போரில் மாய்ந்த சேவலின் சிற்பத்தோடு அமைந்துள்ளது. கல்வெட்டுப் புகழுடைய இக்கோழிப் போர் சங்கப் பழமையது.

தலைவனின் பிரிவால் வாடும் தலைவி ஒருத்தி, தோழியிடம் தன் ஏக்கத்தைப் பகிர்ந்து கொள்ளும் பாலைப் பாடலில், அகநானூறு, சேவல் போரைக் குறிப்பிடுகிறது. தலைவி சொல்கிறாள், ''கூரிய வாயினையும், கொழுந்து விட்டெரியும் தீப்போன்ற சிறகினையும் உடைய வீட்டுக் கோழியின் வீரச் சேவல் போர் செய்யுங்கால் கிளர்ந்தெழும் கழுத்தினையுடையது. இத்தகு கழுத்தினையொத்த செம்முருக்க மலர்கள் பூத்திட இளவேனில் வந்தது. ஆனால் வருவதாய்ச் சொன்ன அவர் வந்திலரே.''

பூவுக்கு உவமையாய்ப் போர்ச் சேவலின் கழுத்து. நமக்கோ பண்பாட்டுச் செய்தி.

'' மனையுறை கோழி மறனுடைச் சேவல்
போர்புரி எருத்தம் போலக் கஞலிய
பொங்கழல் முருக்கின்''

(அகம். 277)

2. சென்னை அருங்காட்சியகச் செப்பேடுகள்

மு. நளினி

சோழர்களுடையதாகக் கிடைத்திருக்கும் பல்வேறு செப்பேடுகளுள் அதிகம் பேசப்படாதவை உத்தம சோழரின் சென்னை அருங்காட்சியகச் செப்பேடுகள். எப்படி, எப்போது, எங்கிருந்து இச்செப்பேடுகள் சென்னை அருங்காட்சியகத்திற்கு வந்து சேர்ந்தன என்பது குறித்துத் தகவல் இல்லை.[1] இச்செப்பேட்டுத் தொகுதியில் ஐந்து ஏடுகளே உள்ளன. முன்னால் இருக்க வேண்டிய சில ஏடுகளும் பின்னால் ஓர் ஏடும் கிடைக்காமல் போய்விட்டன. கிடைத்திருக்கும் ஐந்து ஏடுகளின் இரு புறங்களிலும் செய்தி வெட்டப்பட்டுள்ளது. முதல் ஏட்டின் முன் புறம் பன்னிரண்டு வரிகள் உள்ளன. இவற்றுள் பதினோரு வரிகள் வடமொழியில் உள்ளன. பதினோராம் வரியின் பிற்பகுதியில் தொடங்கும் தமிழ்ப் பகுதி ஐந்தாம் ஏட்டின் இறுதிவரை தொடர்கிறது. உரை நடையாகவும், பாடல்களாகவும் கலந்து அமைந்துள்ள வடமொழிப் பகுதி கிரந்த எழுத்துக்களில் வெட்டப்பட்டுள்ளது. தமிழ்ப் பகுதி முழுவதும் உரைநடையாகவே அமைந்துள்ளது.

இந்த ஏடுகளின் வலப்புறம், ஏட்டின் மையப் பகுதியில் வட்ட மாகத் துளையிடப்பெற்றுள்ளது. இத்துளைகளின் வழியே இவ்வேடு களைப் பிணைத்திருக்கும் வளையத்திலுள்ள முத்திரை மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த முத்திரையில் சோழர்களின் சின்னமான புலி அமர்ந்த நிலையில் காணப்படுகிறது. இதன் முன்னால் இரண்டு மீன்கள். இந்த மூன்றையும் அரவணைத்தாற்போல், கீழ்ப் பகுதியில் சேரரைக் குறிக்கும் வில். மேலே கொற்றக் குடையும் அதற்குச் சற்றுக் கீழாகப் பக்கவாட்டில் இருபுறமும் சாமரங்களும் உள்ளன. மையத்திலுள்ள பாண்டிய, சோழச் சின்னங்களின் இரு புறமும் பக்கத் திற்கொன்றாய் இரண்டு குத்து விளக்குகள். முத்திரையின் விளிம்பை யொட்டி, 'அரசர் பரகேசரிவர்மரின் இணையற்ற இந்த ஆணை, அவரது ஆட்சிப் பகுதியிலுள்ள அரசர்களுக்கு நீதியைக் கற்பிக்கிறது' என்னும் பொருளில் அமைந்த வடமொழி சுலோகம் வெட்டப்பட் டுள்ளது.[2]

இச்செப்பேட்டின் எஞ்சியிருக்கும் வடமொழிப் பகுதியால், கச்சிப் பேட்டிலுள்ள கருவுழான்பாடி,[3] கம்சகப்பாடி,[4] அதிமானப்பாடி மற்றும் எற்றுவழிச்சேரி ஆகிய பகுதிகளில் குடியிருந்த இரு வகுப்புப் பட்டு நெசவாளர்களிடம் இருநூறு பொன் வைப்பு நிதியாகத் தரப்பட்ட தையும், மேற்கண்ட நான்கு பாடிகளுள் அதிமானப்பாடி, கருவுழான் பாடி ஆகியவற்றில் குடியிருந்தாரைக் கோயில் மேலாளர்களாக உத்தம சோழர் நியமித்ததையும், கச்சிப்பேட்டிலுள்ள மற்றொரு பகுதியான

சோழா நியமத்தில் குடியிருந்தோர் ஊரகத்திலிருக்கும் கடவுளுக்குத் திங்கள் தோறும் இரண்டு பிரஸ்தம் ஒரு குடுபகம் அரிசியும், ஒரு பிரஸ்தம் எண்ணெயும் தரவேண்டும் என்பதோடு அரசருக்குத் தர வேண்டிய அனைத்து வரிகளில் இருந்தும் அவர்களுக்கு விலக்களித்து மதுரை கொண்ட கோப்பரகேசரிவர்மர்[4A] ஆணையிட்டதையும் அறிகிறோம். மேலும் ஊரகத்திலுள்ள பெருமாள் கோயில் கணக்குகளை இச்சோழா நியமத்தாரும், கோயில் மேலாளர்களுமாய் முறை வைத்து எழுதி அவற்றை ஒவ்வொரு மாதமும் இந்நான்கு குடியிருப்புகளில் இருந்த அரச ஆடைகள் தயாரிக்கும் நெசவாளர்களிடம் காட்டுதல் வேண்டும்.

இந்த வடமொழிப் பகுதியை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கும் திரு. எச். கிருஷ்ண சாஸ்திரி, இறுதிச் செய்தியைத் தம் மொழி பெயர்ப்பில் சரியாகச் சொல்லியிருக்கிறார்.[5] ஆனால் இச் செப்பேடுகளுக்கான முன்னுரை விளக்கம் எழுதுமிடத்தில் வேறுவிதமாகப் பொருள் தந்து எழுதியிருக்கிறார்.[6] அதன்படி சோழா நியமத்தார், அரசர்க்குரிய ஆடைகள் தயாரிக்கும் நெசவாளர்களாக அதிமானப்பாடி, கம்சகப்பாடி, கம்புழான்பாடி, எற்றுவழிச்சேரி ஆகிய நான்கு குடியிருப்புகளிலும் வாழ்ந்து வந்தவர்களிலிருந்து நியமிக்கப்படும் கோயில் மேலாளர்களுடன் இணைந்து முறை வைத்து, ஊரகத்துப் பெருமாள் கோயில் கணக்குகளை எழுதுதல் வேண்டும்.

நூற்றுப் பத்தேகால் வரிகளில் அமைந்துள்ள தமிழ்ப் பகுதி, கச்சிப்பேட்டிலுள்ள ஊரகம் பெருமாள் கோயிலுக்குரிய வரவினங்களைக் கோயிற் செயற்பாடுகளுக்காக ஒழுங்குபெற ஒதுக்கீடு செய்தும், கச்சிப் பேட்டின் இரண்டு சேரிகளில் குடியிருப்பாரில் இருந்து கோயிற் கணக்குகளை எழுதவும், செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தவும் அலுவலர்களை அமைத்தும், அரசர் உத்தம சோழர் ஆணையிட வேண்டுமென, அரச அலுவலர் சிக்கருடையான் நக்கன் கணிச்சனான சோழ மூவேந்த வேளார் அரசரது பதினாறாம் ஆட்சியாண்டில், கச்சிப்பேட்டு அரண்மனையினுள் தென்புறத்தே அமைந்திருந்த சித்திர மண்டபத்தில் அரசர் பெருமான் எழுந்தருளியிருந்தபோது, வேண்டுதல் வைத்ததையும், அதன் விளைவுகளையும் மிக விரிவாக எடுத்துரைக்கிறது.

கோயிலுக்குரிய வரவினங்களாகக் கச்சிப்பேட்டுக் கோல் நிறை கூலி, காலளவு கூலி, கச்சிப்பேட்டிலும், துண்டுணுக்கச் சேரியிலும் ஊரகப் பெருமாளுக்காக விலைக்குப் பெறப்பட்ட நிலங்களிலிருந்து வந்த விளைவு, பல பழம் கல்வெட்டுகளின் வாயிலாகக் கோயிலுக்குத் தரப் பட்டுப் பல ஊரவைகளால் நிர்வகிக்கப்பட்ட வைப்பு நிதிகளின் வட்டி வருவாய் ஆகியன குறிக்கப்பட்டுள்ளன.

மூவேந்த வேளாரின் விண்ணப்பம் கேட்ட உத்தம சோழ தேவர், வரவினங்களைக் கோயிற் செயற்பாடுகளுக்கு ஒதுக்கும் பணியை வேளாரிடமே ஒப்படைத்துக் ('நீயேய் நிவந்தஞ் செய்வீய்'), கோயிற் செயற்பாடுகளைக் கவனிக்கும் பொறுப்பைக் (ஸ்ரீகார்யம் ஆராய) கம்புழான்பாடி, அதிமானப்பாடி ஆகிய இரு சேரிகளும் ஏற்றுக் கொள்வதெனத் திட்டம் செய்தருளினார். அரசர் ஆணைப்படி வரவினங் களைக் கோயிற் செயற்பாடுகளுக்காக ஒழுங்குபடுத்தும் பணியைச் சோழ மூவேந்த வேளார் மேற்கொண்ட வகைமையைச் செப்பேட்டின் அடுத்துவரும் வரிகள் விளக்குகின்றன.

வரவினங்கள்

1. காலளவு கூலி, கோல் நிறை கூலி.

2. இறைவனுக்காக விலைக்குப் பெறப்பட்ட நிலங்களின் விளைவு.

3. கல்வெட்டுகளின்படி இறைவனுக்கு வரவேண்டிய வட்டி (பொலியூட்டு).

இம்மூன்றாம் வரவினத்தைக் குறிக்கும் கல்வெட்டுகளின் சாரமும் தரப்பட்டுள்ளது.

கல்வெட்டு எண். 1

பரகேசரிவர்மரின்[8] இருபத்திரண்டாம் ஆட்சியாண்டில் கூரத்து[9] மகாசபையாரும் அரியற்பெரும்பாக்கத்து சபையாரும் கோயிலிடமிருந்து பெற்ற பொன் 250 கழஞ்சு. இதற்கான வட்டியாக ஆண்டுதோறும் இவ்விரு சபையாரும் சேர்ந்து தங்களூர் எண்ணாழிப் பொற்கால் என் னும் முகத்தல் அளவையால் 500 காடி நெல்லைக் கோயிலுக்கு அளக்க வேண்டும்.

கல்வெட்டு எண். 2

இதே மன்னரின் இதே ஆட்சியாண்டில் உழையூர் சபையார் கொண்ட பொன் 50 கழஞ்சு. இதற்கான வட்டியாக சபையார் ஆண்டு தோறும் அளக்க வேண்டிய நெல் 150 காடி.

கல்வெட்டு எண். 3

கோவிசைய கம்பவர்மரின் ஒன்பதாம் ஆட்சியாண்டில் ஒழுக்கைப் பாக்கத்து சபையார் கொண்ட பொன் 24 கழஞ்சு. இதன் வட்டியாக

ஆண்டுதோறும் சபையார் தரவேண்டிய பொன் ஒரு கழஞ்சே நான்கு மஞ்சாடி.

காலளவு மற்றும் கோல் நிறை கூலி, நிலங்களின் விளைவு, மூன்று கல்வெட்டுகளின்படி அந்தந்த சபையார் இறுக்கவேண்டிய ஆண்டு வட்டி ஆகிய வருவாய் கொண்டு மூவேந்த வேளாரால் திட்ட மிடப்பட்ட கோயிற் செயற்பாடுகளை இரண்டாம் ஏட்டின் பின்புறத் தொடக்கத்திலிருந்து தொடர்ந்து காண முடிகின்றது.

ஊரகம் கோயிலுக்கான அறக்கட்டளைகள்

படையல் மற்றும் வழிபாட்டுப் பொருட்களுக்கான ஒதுக்கீடுகள், கோயிற் பணியாளர்களுக்கான ஒதுக்கீடுகள் என்னும் இரண்டு தலைப்பு களில் ஊரகம் கோயிலுக்கான அறக்கட்டளைகளைப் பிரிக்கலாம்.

I. படையல், மற்றும் வழிபாட்டுப் பொருட்களுக்கான ஒதுக்கீடுகள்

1. படையல்

அ. மூன்று சந்திக்கும்

திரு அமுது	— முக்குறுணி அறுநாழி நெல்
இரண்டு கறி அமுது	— நானாழி நெல்
போது உரியாக மூன்று சந்திக்கும் நாழி உரி தயிரமுது	— முன்னாழி நெல்
அடைக்காய் அமுது	— முன்னாழி நெல்

ஆ. நாள்தோறும்

நெய்யமுது ஓர் உழக்கு	— ஐந்நாழி நெல்
மடைப்பள்ளி விறகுக்கு	— இருநாழி நெல்

2. வழிபாட்டுப் பொருட்கள்

திருமெய்ப்பூச்சு, திருப்புகைக்காக[10]	—திங்கள் தோறும் $\frac{1}{8}$ கழஞ்சு பொன்னாக, ஆண்டுக்கு $1\frac{1}{2}$ கழஞ்சு
திருநமனிகை[11] மூன்றிற்காக	-ஆண்டுக்கு $\frac{3}{4}$ கழஞ்சு பொன்
திருபரிசட்டம் மூன்றிற்காக	-ஆண்டுக்கு 1 கழஞ்சு பொன்

II. கோயிற் பணியாளர்களுக்கான ஒதுக்கீடுகள்

ஒவ்வொரு பணியாளருக்கும் நாள்தோறும் குறிப்பிட்ட அளவு நெல்லும், துணிகளுக்கு ஆண்டுக்கு ஒரு முறை புடவைமுதல் என்ற பெயரில் குறிப்பிட்ட அளவு பொன்னும் தருவதற்கு ஏற்பாடானது.

எண்	பணியாளர்	நாள்தோறும் கொடுக்கப்பட்ட நெல்லளவு	ஆண்டு தோறும் துணிக்குத் தரப்பட்ட பொன்
1.	கோயிலில் வழிபாடு செய்யும் வேதங்கள் அறிந்த பிராமணர் ஒருவர்	பதக்கு	5 கழஞ்சு
2.	பரிசாரகம் செய்யும் மாணி ஒருவர்	அறுநாழி	1 கழஞ்சு
3.	திருமெய்க்காப்பாளர் ஒருவர்	குறுணி	2 கழஞ்சு
4.	நந்தவனப் பணியாளர் இருவர்	குறுணி நானாழி	1 கழஞ்சு
5.	திருமெழுக்கிடுவார் (எத்தனைப் பேர் என்று குறிப்பிடப்படவில்லை)	முன்னாழி	——

இவர்கள் தவிர கோயிலில் இசைக்கருவிகள் வாசிக்கும் உவச்சர்கள் ஒன்பதின்மருக்கும் அவர்களுக்குரிய புடவைமுதல் உட்பட அனைத்திற்குமாக உழையூர்ப் பொலியூட்டாக வந்த 150 காடி நெல்லும், இரண்டு பட்டி நிலமும் தரப்பட்டது. இந்த இரண்டு பட்டி நிலம் எப்படிப் பெறப்பட்டது, எங்கிருந்தது என்ற விவரங்களும் தெளிவாகத் தரப்பட்டுள்ளன.

1. கச்சிப்பேட்டு நகரத்தாரிடம் விலைக்கு வாங்கிய நிலத்தில் ஒரு பட்டி. இதன் பெயர் சித்திரவல்லிப் பெருஞ்செறு.
2. துண்டுணுக்கச் சேரியில் விலைக்கு வாங்கிய நிலத்தில்

i)	மேட்டு மதகாறு பாய்ந்த சேந்தறைப் போத்தன் நிலத்துக்கு வடக்கில்	தடி மூன்று	ஆகத் தடி ஐந்து	ஒரு பட்டி
ii)	காடாடி குண்டிலின் வடக்கில்	செறுவு ஒன்று		
iii)	பள்ள மதகாறு பாய்ந்த நிலத்தில் ' கோனேரியார் போகத்தில் வடக்கில்	1 குண்டில்		

உவச்சர்கள் ஒன்பதின்மர் என்று குறிக்கும் செப்பேடு அவர்கள் வாசித்த கருவிகளையும் பட்டியலிடுகிறது.

எண்	இசைக் கருவியின் பெயர் - எண்ணிக்கை	இயக்கியவர் எண்ணிக்கை	கருவியின் வகை
1.	தலைப்பறை - 1	1	தோல் கருவி
2.	மத்தளி - 2 (மத்தளம்)	2	தோல் கருவி
3.	கரடிகை - 1	1	தோல் கருவி
4.	தாளம் - 1	1	கஞ்சக் கருவி
5.	செகண்டிகை - 1	1	கஞ்சக் கருவி
6.	கைமணி - 1	1	கஞ்சக் கருவி
7.	காளம் - 2	2	துளைக் கருவி

ஊரகப் பெருமாளின் வழிபாடு, படையல் மற்றும் அக்கோயில் பணியாளர்களின் ஊதியம் ஆகியவற்றிற்கான அறக்கட்டளைகளை நெறிப்படுத்திய நிலையில், கரிகாலத்தெற்றி என்னுமிடத்தில் இருந்த இரண்டு தெய்வங்களுக்கான வழிபாடு மற்றும் படையல்களுக்காய் அறக்கட்டளைகள் வகுக்கப்பட்டன.

கரிகாலத்தெற்றி தெய்வங்கட்கான அறக்கட்டளைகள்

எண்	பொருள்	நெல் ஒதுக்கீடு	வேளை	அளவு
1.	திரு அமுது	3 குறுணி 6 நாழி	3 சந்திக்கும்	—
2.	கறி அமுது	4 நாழி	3 சந்திக்கும்	—
3.	விறகு	3 நாழி	—	—
4.	நெய்யமுது	5 நாழி	3 சந்திக்கும்	உழக்கு
5.	இரண்டு நந்தா விளக்குகளுக்காகும் நெய்க்காக	குறுணி 4 நாழி	—	—

இவை தவிர திருமெய்ப்பூச்சு, திருப்புகை இவற்றிற்காகத் திங்கட்கு ஒரு மஞ்சாடிப் பொன் என்ற அளவில் ஓராண்டிற்குக் கணக்கிட்டுப் பன்னிரண்டு மஞ்சாடிப் பொன் பெற வகை செய்யப்பட்டது.

நான்காவது ஏட்டின் முன்புறத்தில் பரகேசரிவர்மரின் பதினாறாம் ஆட்சியாண்டில் மேற்கொள்ளப்பட்ட அறக்கட்டளை பேசப்படுகிறது. இப்பரகேசரிவர்மர் உத்தம சோழராக இருக்கலாமென்று திரு எச். கிருஷ்ண சாஸ்திரி கருதுகிறார்.

புதிய அறக்கட்டளை

ஊரகப் பெருமாள் கோயிலில் இருந்து கச்சிப்பேட்டைச் சேர்ந்த நான்கு குடியிருப்பாளர்கள் 200 கழஞ்சு பொன்னை முதலாகப் பெற்றுக் கொண்டு அதனால் வரும் ஆண்டு வட்டி முப்பது கழஞ்சினால் கோயிலில் சித்திரைத் திருவிழா எடுக்க ஒப்புதலானது. இவ்விழா ஏழு நாட்கள் நிகழ்ந்தது.

கம்புழான்பாடியார் பெற்ற பொன்	$73\frac{1}{2}$ கழஞ்சு
அதிமானப்பாடியார் பெற்ற பொன்	$73\frac{1}{2}$ கழஞ்சு
கஞ்சகப்பாடியார் பெற்ற பொன்	35 கழஞ்சு
எற்றுவழிச்சேரியார் பெற்ற பொன்	18 கழஞ்சு
	200 கழஞ்சு

இதன் வட்டிக்கான சித்திரைத் திருவிழா செலவினங்கள்

எண்	செலவினம்	நாள்	ஒதுக்கப்பட்ட பொன் கழஞ்சு
1.	எண்ணெய்	7	7
2.	மணம் மிக்க பூ. மணம் ஊட்டப் பெற்ற சந்தனம்	7	2
3.	கொட்டி செய்யும் தேவர் அடியார்க்குக் கொற்றுக்கும் பூசைக்கும்	7	5
4.	பிராமணர் உணவுக்கு	7	10
5.	i) இறைவனுடைய பள்ளியறைச் சிவிகையைச் சுமப்பார்க்கு ii) விழாவுக்கென்று சிறப்பாக அழைக்கப் பெற்ற இசைக் கலைஞர்கட்கு	7	1
6.	கண்டழிவு (பல்வேறு செலவுகள்)	—	5

இந்தச் செலவினங்களை முடிக்கும் இடத்தில் 'ஆகப் பொன் நேர்' என்று குறிப்பதன் வழி, வட்டித் தொகையான முப்பது கழஞ்சும் பயன்

படுத்தப்பட்டு வரவும் செலவும் நேராகிவிடுவது உணர்த்தப்படுகிறது. இந்தப் பகுதியிலுள்ள நான்கு செய்திகள் நம் கவனத்தைக் கவர் கின்றன.

i) ஏற்கனவே கோயிலில் ஒன்பது இசைக் கலைஞர்கள் இருந்த போதும் சித்திரை விழாவுக்கென்று சிறப்பு உவச்சர்கள் அழைக்கப் பட்டுள்ளனர். அவர்களுக்கென விழாச் செலவினத்தில் முன்கூட்டியே திட்டமிட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ii) சிவிகை, காவுதல் போன்ற அழகிய தமிழ்ச் சொற்களின் பயன் பாடு. பின்னாளில் பல்லக்காகிப் போன சிவிகை, இன்று முற்றிலுமாய் வழக்கொழிந்து போன சொல்லாகும். காவுதல், தோளில் கவ்விச் சுமத்தலைக் குறிக்கும்.[12] அறன் வலியுறுத்தல் அதிகாரத்தில் வரும் 'அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை பொறுத்தானோடு ஊர்ந் தான் இடை' என்ற குறளுக்குப் பொருள் கூறும் இடத்தில் காவுதல் என்ற சொல்லைப் பரிமேலழகர் பெய்துள்ளார்.[13]

iii) 'கொட்டி செய்யும் தேவர் அடியர்க்குக் கொற்றுக்கும் பூசனைக்குமாக' என்னும் சொற்றொடருக்குப் பொருள் கூறுமிடத்தில், 'ஏழு நாட்களும் கூட்டமாக வந்து வழிபடும் அடியார்களுக்குரிய உணவிற்கும் பரிசுகளுக்குமாக' என்று விளக்கம் தருகிறார் திரு. எச். கிருஷ்ண சாஸ்திரி.[14] கொற்று என்ற சொல் சிறப்பமைந்த, தெரிந்தெடுத்த கோயில் சார்ந்த குழுக்களையும், பூசனை என்ற சொல் இறை வழிபாட்டையும் குறிப்பன. இந்நிலையில் இச்சொற்களுக்கு உணவு, பரிசுகள் என்று பொருள் தந்திருப்பது பொருத்தமாகத் தெரிய வில்லை. சித்திரைத் திருவிழாவில் ஏழு நாட்களும் கூட்டமாக வந்து வழிபடும் திருமால் அடியார்களுக்கு அவரவர் குழுக்களுக்கும், அக் குழுக்கள் செய்யும் வழிபாட்டிற்குமாய்ப் பொன் ஒதுக்கப்பட்டது என் பதே நேரிய பொருளாகும். இன்றைக்கும் பல பெருமாள் கோயில்களில் வைகுண்ட ஏகாதசி போன்ற பெருவிழாக்களின் போது, இது போன்ற மாலடியார் கூட்டங்கள் சிறு சிறு குழுக்களாகப் பல ஊர்களில் இருந்து, இசைக் கருவிகளுடன் சேர்ந்திசை பாடி வந்து, தங்கியிருந்து, வழி பட்டுச் செல்வதையும், அக்குழுவினர்க்கு ஊராரும் கோயிலாரும் உரிய மரியாதைகள் செய்வதும் கண்கூடாகும்.[15]

iv) கண்டழிவு என்ற சொல் பிற செலவுகள் (Miscellaneous) என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதே சொல் செப்பேட் டின் மற்றோர் இடத்திலும் இதே பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஸ்ரீ கோயிலு ள் குறைவுள்ளன நிவந்தம் பாராதே கண்டழிவிலே செய்வ தாகவும்.' கோயிற் செயற்பாடுகளில் அல்லது தேவைகளில் அறக்

கட்டளை அமைப்புக்குள் வராது எதுவும் விடப்பட்டிருக்குமானால், அறக்கட்டளையில் சொல்லப்படவில்லையே என்றிருந்து விடாமல், அதைப் பிற செலவினங்களின் கீழ் செய்யலாம் என்ற உரிமை வழங்கப் பட்டுள்ளது. இன்றளவும் எதிலும் அடங்காத அல்லது பிடிபடாத செலவுகளைப் பிற செலவினங்கள் என்ற தலைப்பின் கீழ் தள்ளி விடுவது நடைமுறையாய் இருப்பதை நினைக்கையில், கண்டழிவையும், அதற் கென செய்யப்பட்ட பொன் ஒதுக்கீட்டையும், அந்த முன்னோக்கு எண்ணத்தையும் போற்றாமல் இருக்க இயலவில்லை.

சித்திரைத் திருவிழா செலவினங்களுக்குரிய நிதி ஒதுக்கீடுகள் பற்றிப் பேசி முடித்த நிலையில், கச்சிப்பேட்டைச் சேர்ந்த கம்புழான் பாடியாரும், அதிமானப் பாடியாரும், கஞ்சகப்பாடியாரும், எற்று வழிச்சேரியாரும் அவ்விழாவில் விளக்கு பிடித்தல், கொடி எடுத்தல் போன்ற பணிகளைச் செய்ய வேண்டுமென கூறும் செப்பேடு அடுத்து, சோழா நியமம் என்னும் குடியிருப்பின் வரலாற்றை எடுத்து வைக் கிறது.

சோழா நியமம்

இக்குடியிருப்பின் பழங்குடிகள் தோளாச் செவியரான ஏலாக் கையர் என்று அழைக்கப்பட்டனர். பழைய வழக்கப்படி இவர்கள் வரிகள் செலுத்த வேண்டியதில்லை என்ற நிலைமை இருந்தது. இக்குடிகள் எண்ணிக்கையில் குறைந்த காரணத்தால் வெளியிடங்களில் இருந்து இக்குடியிருப்பிற்கு வந்து குடியமர்ந்தவர்களும், பழைய வழக்கப்படி வரிகள் ஏதும் செலுத்த வேண்டாமென்று விலக்களிக்கப்பட்டது. அதற்கு மாறாக ஒவ்வொரு வீட்டுக்கும் திங்கள்தோறும் நாழி உழக்கு எண்ணெயும், இருநாழி அரிசியும் இக்கோயிலுக்கு இவர்கள் வரியாகச் செலுத்த வேண்டும். இந்த எண்ணெய் கோயிலில் சந்தி விளக்கெரிக்கப் பயன்படும். கச்சிப்பேட்டு நகரத்தார் தாம் விதித்திருக்கும் வேறெந்த வரிகளையும் இச்சோழா நியமத்தாரிடமிருந்து பெறக்கூடாது. மதுரையும் ஈழமும் கொண்ட பரகேசரியான முதலாம் பராந்தக சோழரின் பதினெட்டாம் ஆட்சியாண்டிலேயே நகரத்தாரால் திட்டம் செய்யப்பட்ட இந்த ஏற்பாட்டை மீறி இச்சோழா நியமத்தார் வேறு வரிகள் செலுத்தவேண்டுமென்று யாரேனும் சுட்டினால் அவர்கள் கங்கைக்கும் குமரிக்கும் இடையிலுள்ளார் செய்த பாவங்களையெல் லாம் கொள்வார் என்று செப்பேடு சாபமிடுகிறது.

சோழா நியமத்துப் பழங்குடிகளின் பெயர்கள் கவனத்தைக் கவர் கின்றன. தோளாச் செவியர் — தோட்கப்படாத காதுகளை உடைய வர்கள். ஏலாக் கையர் — எதையும் ஏற்காத கைகளை உடையவர்கள். இப்பெயர்களின் சிறப்பும், இக்குடிகளின் வரலாறும் ஆய்வுக்குரியன.

பெருமாள் கோயில் கணக்கும் நந்தா விளக்கும்

சோழா நியமத்தார் பெருமாள் கோயில் கணக்குகளை எழுதுவதற்கு ஆளிட வேண்டுமென்றும், அக்கணக்கருக்குப் பெருமாள் கோயில் பண்டாரத்தில் இருந்து நாள்தோறும் குறுணி நெல்லும், இரண்டு கழஞ்சு பொன்னும் தரவேண்டுமென்றும் ஐந்தாம் செப்பேட்டின் முன் பக்கத் தொடக்க வரிகள் கூறுகின்றன தொடரும் வரிகள் கச்சிப் பேட்டிலிருந்த இரணஜயப்பாடி, ஏகவீரப்பாடி, வாமன சங்கரப்பாடி என்னும் மூன்று குடியிருப்புப் பகுதிகளையும், அங்கு வாழ்ந்தவர் சங்கரப்பாடியார் என்பதையும் சுட்டுவதோடு, அவர்களிடம் இருபது கழஞ்சு பொன் வைப்பு நிதியாக ஒப்புவிக்கப்பட்டதாகவும், அதன் வட்டி கொண்டு ஊரகம் கோயிலில் அவர்கள் நந்தா விளக்கொன்று எரிக்க ஒப்புக் கொண்டதாகவும் கூறுகின்றன. இக்குடியிருப்புப் பெயர்களுள் இரணஜயன், ஏகவீரன் என்பன பல்லவ அரசர்களின் விருதுப் பெயர்களாகும்.[16] உத்தம சோழர் காலம் வரை அப்பெயர்கள் நீடித்திருந்தது தொடக்கக் காலச் சோழர்களின் சகிப்புத் தன்மையைக் காட்டுவதாகக் கொள்ளலாம்.

சிறப்பு நிகழ்ச்சிகள்

உத்தரமயன சங்கராந்தி, சித்திரை விஷு ஆகிய இரண்டு சிறப்பு நிகழ்ச்சிகளுக்கான ஒதுக்கீடுகள் அடுத்து சொல்லப்பட்டுள்ளன. இத் திருவிழாக்களின் போது இரண்டு கோயில் தெய்வத் திருமேனிகளைத் திருமுழுக்காட்டும் திருப்பணிக்கும், விளக்கு பிடிப்பார், கொடி எடுப்பார், விழாக்களின் போது கோயில் வளாகத்திற்கு வருகை தரும் ஊரவைத் தலைவர்கள் (பருடை நாயன்மார்கள்) ஆகியோருக்கும் தூணி அரிசி தரப்பட்டது. அடியவர் கூட்டங்களைக் கூட்டியவருக்கு அரிசி தூணிப் பதக்கும் பூசனைக்குப் பொன் அரைக் கழஞ்சும் தரப்பட்டது.

இவை தவிர அறக்கட்டளையில் சொல்லப்படாத ஆனால் கோயிலுக்குத் தேவையான வேறேதேனும் இருக்குமானால் அவற்றையும் கண்டழிவிற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் பொன் கொண்டு செய்யலாம் என்றும் செப்பேடு வழிகாட்டுகிறது.

தணிக்கையும் தேர்வும்

ஊரகப் பெருமாள் கோயிற் செயற்பாடுகளில் ஏதேனும் இடையூறுகள் ஏற்பட்டால் பதினெட்டு நாட்டு அடியார்கள் மட்டுமே கூடி அவற்றை நேர் செய்தல் வேண்டுமென்றும், கச்சிப்பேட்டு நகரையாளும் நகரத்தார் குழுவின் தலைவரும், ஆண்டு வாரியத்தாரும், எற்றுவழிச் சேரி மற்றும் கஞ்சகப்பாடி குடியிருப்புகளைச் சேர்ந்தாரும் இக்கோயில்

திருவிழாக்கள் முடிந்த அளவிலேயே கோயிற் கணக்குகளைப் பார்வையிட வேண்டுமென்றும், பெருமாள் கோயில் பண்டாரத்தில் வைத்த அறக்கட்டளை கொண்டு கஞ்சகப்பாடியாரும் எற்றுவழிச்சேரியாருமே கோயிலுக்கு மெய்க்காப்பாளரை இடவேண்டும் என்றும், கோயிற் செயற்பாடுகளை மேற்பார்வையிடுவார், திருமெய்க்காப்பு, கணக்கெழுதுவார் ஆகியோரை நகரத்தாரே தேர்ந்தெடுத்துப் பணியமர்த்தி அவர்களுக்கு வரி விலக்களிக்க வேண்டுமென்றும், பெருமாள் கோயிலில் வழிபாடு செய்யக் கோயில் வழிபாட்டு நடைமுறைகளை நன்கறிந்து அவற்றில் தேர்ந்த ஸ்ரீகோயில் நம்பிமார் கிடைக்காது போனால், வேதங்களில் வல்ல பிராமணரையே வழிபாடு செய்யக் கொள்ள வேண்டுமென்றும் செப்பேட்டின் இறுதிப் பகுதி சில வரையறைகளை வகுத்துள்ளது.

அறையோலை செய்தவரும் செப்பேட்டை வெட்டியவரும்

இச்செப்பேட்டிற்கான அறையோலையைச் செய்தவராக நகரத்தைச் சேர்ந்த வீரப்பாடி நடுவர் நாற்பத்தெண்ணாயிர மங்கலாதித்தன் கையெழுத்திட்டுள்ளார். இதற்குப் பிறகு நில விற்பனைச் செய்தியொன்று தரப்பட்டுள்ளது. இதன்படி கச்சிப்பேட்டு நகரத்தாரிடம் விலைக்குப் பெற்ற ஒலோக மாராயப் பெருஞ்செறுவில் கிழக்கு மேற்காகக் கிடந்த நிலத்தை மாநகரத்தார் விற்றுத் தந்தனர். இதையடுத்து அறந்தாங்கி போர்மிக வீரன் செப்பேட்டை வெட்டியவராக அறிமுகமாகிறார். இறுதி ஏடு கிடைக்காமையால் போர்மிக வீரனைப் பற்றி அதிகம் தெரிந்துகொள்ள முடியவில்லை.

வரிவடிவமும் எழுத்து வேறுபாடுகளும்

இச்செப்பேட்டில் வெட்டப்பட்டுள்ள எழுத்துக்களின் வரிவடிவை ஆராய்ந்து திரு. எச். கிருஷ்ண சாஸ்திரி எழுதியுள்ள கருத்துக்கள் பெரும்பாலும் சரியாக உள்ளன. ஒகர ஓகாரங்களை வேறுபடுத்த ஒகரத்தின் அருகே காலிட்டு எழுதியுள்ள முறை பெரும்பாலான இடங்களில் பின்பற்றப்படவில்லை.[17] இகரத்துடன் இணையும் ஊகாரம், அதன் வரிவடிவத்தில் ஏற்படுத்தும் மாறுபாடாகத் திரு. சாஸ்திரி குறிப்பிடுவது பெரும்பாலான இடங்களில் இடம் பெறவில்லை.[18] துணை எழுத்தையும், ரகரத்தையும் வேறுபடுத்திக் காட்டத் துணையெழுத்திற்குத் தலைப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். இம்முறை செப்பேட்டின் அனைத்து இடங்களிலும் பின்பற்றப்பட்டுள்ளது.

கல்வெட்டுத் தொகுதியில் வெளியிடப்பட்டிருக்கும் மசிப்படிக்கும், எடுத்து எழுதப்பெற்றுள்ள பாடத்திற்கும் சில எழுத்து வேறுபாடுகள்

உள்ளன. சென்னை அருங்காட்சியகத்திலிருக்கும் செப்பேடுகளைப் பார்வையிட்டபோது அவற்றின் பாடத்திற்கும், கல்வெட்டுத் தொகுதி யின் மசிப்படி மற்றும் பதிப்பிற்கும் சிறு வேறுபாடுகளைக் காண முடிந் தது. குறிப்பாக வரி 109ல் மசிப்படியிலும், செப்பேட்டிலும் 'தீர்ந்து' என்று இருக்கும் சொல் பதிப்பிக்கப்பட்டிருக்கும் பாடத்தில் 'திரந்து' என்று தரப்பட்டுள்ளது.

முடிவுரை

செப்பேடு குறிப்பிடும் இந்த ஊரகப் பெருமாள் கோயில் பிரபந்தப் பெருமையுடையது. இன்று காஞ்சி மாநகரில் உலகளந்த பெருமாள் திருக்கோயிலாகப் பெருமிதத்துடன் திகழும் இக்கோயிலின் வாழ்விலும், வளர்ச்சியிலும் அக்கறை கொண்டிருந்த அரசு அலுவலர் சோழ மூவேந்த வேளாரை எங்ஙனம் மறத்தல் இயலும்! கோயிலின் நடை முறைகளை நன்கு திட்டமிட்டு, அவை தொடர்ந்து நடக்க உரிய முறையீடுகளை ஒழுங்குபெற அமைத்து, இவையிவை இப்படித்தான் நடக்க வேண்டுமென வரையறை செய்து, விட்டுப் போனவற்றுக்கும் வழிகாட்டி, அரசு அனுமதியுடன் ஊரகப் பெருமாள் கோயிலை என் றென்றும் சிறக்க இயங்க வைத்த இவர் போல் அரசு அலுவலர்கள் இந்நாளிலும் இல்லாமல் இல்லை.

திருச்சிராப்பள்ளியின் மேனாள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் திரு. பி. நடேசன், திரு. வ. விசுவநாதன், திரு. க. செ. கிருஷ்ணசாமி ஆகியோர் சோழ மூவேந்த வேளாரொத்த பெருமக்கள். சிற்பங்களா லும், கல்வெட்டுகளாலும், கட்டுவித்தவராலும் பெருமை கொண்ட திருச்செந்துறை சந்திரசேகரர் திருக்கோயில் இன்று முறையான திருப் பணிகளுக்கு ஆளாகி, இழந்த பெருமைகளை மீண்டும் பெறத் தொடங்கி யிருப்பதற்கு மேனாள் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. செ. கிருஷ்ணசாமி அவர்களின் தொடர்ந்த முயற்சிகளே காரணம். அவரது ஆர்வமும், ஈடுபாடும், விடாமுயற்சியும் செப்பேடு களில் இடம் பெறாமல் போகலாம். ஆனால் திருச்செந்துறை மண் அவரை மறக்காது.

அடிக்குறிப்புகள்

1 SII vol. III, Part III, P. 264.

2 ARE 1891, PP. 4—5, Epigraphia Indica vol. III, plate facing P. 104, Fig. 3.

3 தமிழ்ப் பகுதியில் இக்குடியிருப்பின் பெயர் கம்புழான்பாடி என்று தரப்பட்டுள்ளது.

4 இக்குடியிருப்பின் பெயர் கஞ்சகப்பாடி என்றுள்ளது.

4A இவரை உத்தம சோழர் என்று திரு. எச். கிருஷ்ண சாஸ்திரி குறித்துள்ளது சரியன்று.

5 SII vol. III, Part III, P. 272.

6 Ibid., P. 266.

7 கோல்நிறை கூலி, காலளவு கூலி என்பன நிறுத்தல் மற்றும் முகத்தலுக்குரிய பொருட்களின் மீது விதிக்கப்பட்டிருந்த வரிகள். SII vol. III, Part III, P. 268.

8 இப்பரகேசரிவர்மர் விசயாலய சோழராகலாம் என்று திரு. எச். கிருஷ்ண சாஸ்திரி கருதுகிறார்.

9 காஞ்சிபுரத்திலிருந்து பத்து கிலோமீட்டர் தொலைவில் காஞ்சிபுரம் அரக்கோணம் சாலையில் கூரம் அமைந்துள்ளது. இங்குள்ள வித்யா விநீத பல்லவ பரமேசுவர கிருகம் பல்லவர் கட்டிய கோயில்களுள் காலத்தால் பழமையானது. இக்கோயில் குறித்து எழுந்த செப்பேடுகளே கூரம் செப்பேடுகள்.

10 *கோயில்களில் மணத்திற்காக எரிக்கப்படும் சிதாரியின் புகை.*

11 புனிதத் திருமுழுக்காட்டு (Sacred Bath) என்று பொருள் விளக்கம் தருகிறார் திரு. எச் கிருஷ்ண சாஸ்திரி. SII vol. III, Part III, P. 273.

12 அறிஞர் வீ. ப. கா. சுந்தரனார் அஞ்சல் வழி தந்த விளக்கம்.

13 *திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும், முதற்பகுதி, அறத்துப்பால், மதுரைப் பல்கலைக் கழக வெளியீடு, 1972, பக். 49. இத்தகவலைத் தந்தவர் புலவர் திரு. பி. தமிழகன்.*

14 SII vol. III, Part III, P. 274.

15 3.1.1993 அன்று நடந்த வைகுண்ட ஏகாதசிப் பெருவிழாவின் போது தென்ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சிங்கவரம்

ரங்கநாதப் பெருமாள் குடைவரைக்கு ஆய்வுக்குச் சென்றிருந்த போது இது போல் கோட்டி செய்யும் தேவரடியார் பலரை நேரில் கண்டு உரையாடியதில் பல பயனுள்ள தகவல்கள் கிடைத்தன. இதுபோல் ஒரு குழுவினர் மல்லைக்கு அருகிலுள்ள நென்மேலியிலிருந்து திருப்பதிக்குக் கால்நடையாகக் கோலாட்டம் ஆடியவாறே சென்றதையும் காண முடிந்தது. அவர்களிடமும் உரையாடித் தகவல் பெறப்பட்டது.

16 இரணசயன், ஏகவீரன் என்பன இராசசிம்மப் பல்லவரின் விருதுப் பெயர்களாகும். தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர் — பாண்டியர் காலம், தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு, தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை - 600 108, 1990, பக். 163.

K. R. Srinivasan, The Dharmaraja Ratha and its Sculptures, Mahabalipuram, Abhinav publications, New Delhi, 1975, P. 89.

17 SII vol. III, Part III, Plate iiia, lines 51, 52.

18 Ibid, Plate ib, lines 21, 22; Plate iia, lines 26, 29.

சென்னை அருங்காட்சியகச் செப்பேடு*

முதல் ஏட்டின் முன்புறம்

11** ஸ்ரீ கோப்பர

12 கேசரிபந்மரான ஸ்ரீஉத்தம சோழ தேவர்க்கு யாண்டு பதினாறா வது உடை

முதல் ஏட்டின் பின்புறம்

13 யார் கச்சிப்பேட்டு கோயிலினுள்ளால் தெற்கில் சித்திர மண்டபத் தெழுந்

14 தருளி இருக்க அதிகாரிகள் சோழ மூவேந்த வேளார் எம்பெருமான் இ[க்*] கச்சிப்பேட்டு

---

* 26.5.1993 அன்று இச்செப்பேடு நேரிடையாகப் படிக்கப் பெற்று, இதன் பாடம் ஏற்கனவே வெளியிடப்பட்டிருக்கும் பாடத்தோடு (SII vol. III, Part III) ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டது.

** பதினோராம் வரியின் இறுதியில்தான் தமிழ்ப் பகுதி தொடங்குகிறது. முதல் பத்து வரிகளும், பதினோராம் வரியின் பெரும்பகுதியும் கிரந்த எழுத்துக்களில், வடமொழியில் உள்ளன. அப்பகுதி இங்குத் தரப்படவில்லை.

15 ஊரகத்து நின்றருளின தே$_{3}$வர்க்கு இக்கச்சிப்பேட்டுக் கோல்நிறை கூலியும் கால

16 ளவு கூலியும் இவர்க்கு போகமாய் வரும் மற்றும் இத்தேவர்க்கே கச்சிப்பேட்டும் து

17 ண்[டு]ணுக்கச்சேரியிலும் விலை கொண்டுடைய பூ$_{4}$மியும் மற்றும் பொலி

18 ஊட்டுள்ளனவும் முன்பு இத்தேவர்க்கு நிவந்தஞ் செய்திலாமையி

19 ல் நிவந்தஞ் செய்யவும் இக்கச்சிப்பேட்டு இரண்டு சேரி இத்தேவருடை

20 ய ஸ்ரீகாரியங் கடைக் காணவும் அருளிச் செய்வதென்று விண்ணப்பஞ் செய்ய இ

21 க்கச்சிப்பேட்டு ஊரகத்து நின்றருளின தே$_{3}$வர்க்கு இவ்வூர் கோல் நிறை கூலியும் காலள

22 வு கூலியும் விலை கொண்டுடைய பூ$_{4}$மிகளும் பொலிஊட்டுள்ளனவும் நீயே நி

23 வந்தஞ் செய்வீயென்றும் இவ்வூர்க் கம்புழான்பாடியும் அதிமானப் பாடியும் இ

24 வ்விரண்டு சேரியும் இதே$_{3}$வர் ஸ்ரீகாரிய மாராயவும் இப்பரிசு நிவந்[த*]ஞ் செய்க வெ

இரண்டாம் ஏட்டின் முன்புறம்

25 ன்றும் அருளிச் செய்ய அதிகாரி சிக்கருடையான் நக்கன் கணிச் சண்ஈன் சோ

26 ழ மூவேந்த வேளான் விண்ணப்பத்தால் நிவந்தஞ் செய்வித்தபடி காலள

27 வு கூலியும் கோல் நிறை கூலியும் இதே$_{3}$வர் விலை கொண்டுடைய நிலங்களில்

28 போகமும் இதே$_{3}$வர் பொலிஊட்டு சி$_{2}$லாலேகை$_{2}$ப்படி கோப்பர கேசரிபன்மற்கு

29 யாண்டு இருபத்திரண்டாவது கூரத்து ஸபை₄யாரும் அரியற் பெரும்பாக்கத்து

30 ஸபை₄யாரும் கொண்ட பொன் இருனூற்றைம்பதின் கழஞ்சினுக்கு

31 தங்களூர் எண்ணாழிப் பொற்காலால் ஒராட்டை நாளைக்கு அட்டக்க

32 [ட*]வ பொலிசை நெல்லு ஐஞ்ஞூற்றுக் காடியும் உழையூர் ஸபை₄ யார் சி₀லா

33 லேகை₂ப்படி கொண்ட பொன் ஐம்பதின் கழஞ்சினால் ஒராட்டை நாளை

34 க்கு [அ]ளக்க [க*]டவ பொலிசை நெல்லு னூற்றைம்பதின் காடி யும் கோவி

35 சைய கம்பபந்மற்கு யாண்டு ஒன்பதாவது ஒழுக்கை பாக்கத்து ஸபை₄

36 யார் சி₀லாலேகை₂ப்படி கொண்டு கடவ பொன் இருபத்துநாற் கழஞ்சினால் ஓரா

இரண்டாம் ஏட்டின் பின்புறம்

37 ட்டை நாளைக் கிடக் கடவ பொலிசைப் பொன் கழஞ்சே நாலு மஞ்சாடியும் நி

38 வந்தஞ் செய்தபடி திருவமிர்து மூன்று ஸந்திக்கு நெல் முக்குறுணி அறு நாழியு

39 ம் கறியமுது இரண்டுக்கு மூன்று ஸந்திக்கு நெல் நானாழியும் நெய்யமுது நிசதம்

40 உழக்கினுக்கு நெல் ஐஞ்ஞாழியும் தயிரமுது போது உரியாக மூன்று ஸந்திக்கு த

41 யிரமுது நாழி உரிக்கு நெல் முன்னாழியும் அடைக்காயமுது மூன்று ஸந்திக்கு

42 நெல் முன்னாழியும் விறகினுக்கு நெல் இரு நாழியும் ஆராதிக்கும்

43 வேத ப்₃ராஹ்மணன் ஒருவனுக்கு நெல் பதக்கும் இவனுக்கு புடவைமுதல்

44 ஓராட்டை நாளைக்கு பொன் ஐஞ்கழஞ்சும் பரிசாரகஞ் செய்யும் மாணி ஒருவனுக்கு

45 நெல் அறு நாழியும் இவனுக்கு புடவைமுதல் ஓராட்டை நாளைக்கு பொன்

.46 கழஞ்சும் திருமெய்காப்பான் ஒருவனுக்கு நிசத நெல் குறுணியும் இவனு

47 க்கு புடவைமுதல் ஓராட்டை நாளைக்கு பொ[ன்*] னிரு கழஞ்சும் நந்தனவனம் உழப்

48 பார் இருவர்க்கு நிசத நெல் குறுணி நானாழியும் இவர்களுக்கு புடவைக்கு பொன்

மூன்றாம் ஏட்டின் முன்புறம்

49 கழஞ்சும் சங்கிராந்தி ஒன்றினுக்கு ஆசார்ய்ய பூசனை உட்பட பொன் கழஞ்சேய் காலா

50 க சங்கிராந்தி பன்னிரண்டினுக்கு பொன் பதினைங் கழஞ்சும் திருமெய்ப்பூச்சு

51 க்கும் திருபுகைக்கும் திங்கள் அரைக்கால் பொன்னாக ஓராட்டை நாளைக்கு

52 பொன் கழஞ்சரையும் திருநமனிகை மூன்றுக்கு ஓராட்டை நாளைக்கு பொ

53 ன் முக்காலும் திருபரிசட்டம் மூன்றுக்கு ஓராட்டை நாளைக்கு பொன் கழஞ்

54 சும் உகச்சகள் தலைப் பறை ஒன்றும் மத்தளி இரண்டும் கறடிகை ஒன்

55 றும் தாளம் ஒன்றும் செகண்டிகை ஒன்றும் காளம் இரண்டும் கை

56 மணி ஒன்றுமாக ஆள் ஒன்பதினுக்கு புடவைமுத லுட்பட உழை ஊர் பொலி

57 ஊட்டு நெல் னூற்றைம்பதின் காடியும் கச்சிப்பேட்டு நகரத்தார் பக்கல் விலை கொ

58 ண்டுடைய நிலத்தில் சித்திரவல்லிப் பெருஞ் செறுவான பட்டியும் துண்டு

59 ணுக்கச் சேரியில் விலை கொண்டுடைய நிலத்தில் மேட்டு மதகாறு பாஞ்ச

60 சேந்தறைப் போத்தன் நிலத்துக்கு வடக்கில் தடி மூன்றும் காடாடி குண்

மூன்றாம் ஏட்டின் பின்புறம்

61 டிலின் வடக்கில் செறுவு வொன்றும் பள்ள மதகாறு பாஞ்ச நிலத்துள்

62 கோனேரியார் போகத்தில் வடக்கில் குண்டிலுமாக தடி ஐஞ்சினால் ப

63 ட்டி நிலமுமாக இந்நிலம் இரண்டு பட்டியும் இப்பொலியூட்டு நெல் னூற்

64 றைம்பதின் காடியும் உவச்சர்கள் ஒன்பதின்மர்க்கு நிவந்தமாகவும் திருமெ

65 ழுக்கிடுவார்க்கு நிசத நெல் முன்னாழியும் கரிகால தெற்றியில் இருவர் தே₃வர்க்

66 கு மூன்று ஸந்திக்கு நிசதமரிசி யறு நாழியாக நிசதமரிசி குறுணி நா

67 னாழிக்கு நெல் முக்குறுணி அறு நாழியும் கறியமுது மூன்று ஸந்தி

68 க்கு நெல் நானாழியும் விறகுக்கு நெல் முன்னாழியும் மூன்று ஸந்திக்கு நெய்[ய*]

69 முது உழக்கினுக்கு நெல் [ஐ*]ஞ்ஞாழியும் இருவர் தே₃வர்க்கும் திருநொந்தா விளக்கி

70 ரண்டினுக்கு நெ[ய்*] யுரிக்கு நெல் குறுணி நானாழியும் திருமெய்ப் பூச்சுக்கும்

71 திருபுகை[க்*]கும் திங்கள் மஞ்சாடிப் பொன்னாக ஓராட்டை நாளைக்கு பொன் பன்

72 ணிரண்டு மஞ்சாடியும் இவ்விருவர் தே₃வர்க்கும் நிவந்த₄மாகவும் கோப்பரகேசரிப

நான்காம் ஏட்டின் முன்புறம்

73 ந்மற்கு யாண்டு பதினாறாவது கச்சிப்பேட்டு ஊரகத்து நின்றருளின தே₃வர் பக்கல் இ

74 வ்வூர் கம்புழான்பாடியார் கொண்ட பொன் எழுபத்து முக்கழஞ் சரையும் அ

75 திமானப்பாடியார் கொண்ட பொன் எழுபத்து முக்கழஞ்சரையும் கஞ்[ச*]க

76 ப்பாடியார் கொண்ட பொன் முப்பத்தைங்கழஞ்சும் எற்றுவழிச் சேரியார்

77 கொண்ட பொன் பதினெண் கழஞ்சும் ஆகப் பொன் இருநூற்றுக் கழஞ்

78 சினுக்கு கழஞ்சின் வாய் பிளவு பொலிசையாக ஓராட்டை நா

79 ளைக்கு வந்த பொலிசைப் பொன் முப்பதின் கழஞ்சு இப்பொ

80 ன் முப்பதின் கழஞ்சும் இதே₃வர் சித்திரை திருவிழாவுக்கு நிவந்தஞ் செய்த

81 படி திருவிழா ஏழு நாளைக்கும் எண்ணைக்கு பொந் ஏழு கழஞ்சும் ஏழு நாளைக்கு நா

82 று பூவும் நாறு சாந்துக்கும் பொன் இரு கழஞ்சும் ஏழு நாளும் கொட்டி செய்

83 யும் தே₃வரடியர்க்கு கொற்றுக்கும் பூசனைக்குமாக பொன் ஐங் கழஞ்சும் ஏழு

84 நாளும் ப்₃ராஹ்மண பே₄ாஜனத்துக்கு அன்றாட 1 க[ல*]த்தால் நெற் கொண்டு

நான்காம் ஏட்டின் பின்புறம்

85 ஊட்டுவதான பொன் பதின்(க்) கழஞ்சும் தே₃வர் பள்ளிச் சிவிகை காவுஞ் சிவி

86 கையார்க்கும் சிறப்பு வந்த உவச்சர்க்கும் ஏழு நாளைக்கு பொன் கழஞ்சும்

87 கண்டழிவு பொன் ஐங்கழஞ்சு[ம்*] ஆகப் பொன் நேர் திருவிழா வுக்கு விளக்கு பி

88 டிப்பாரு[ம் கொ]டி எடுப்பாரும் கம்புழான்பாடியாரும் அதிமானப் பாடியாரும்

89 எற்றுவழிச்சே[ரி]யாரும் கஞ்சகப்பாடியாரும் இதேவர் சேரியான சோழா நிய

90 மத்து முன்புள்ள தோளாச் செவியரான ஏலாக்கையர் எச்சற்றமை

91 யில் இவ்வேலாக் கைய்யர் பூர்வ்வமர்ஜ்ஜாதி இறை இறுக்க கடவ ரல்லாமை

92 யி[ல் இ]ச்சேரிக்கு புறத்து நின்று வந்தேறின குடிகளை மனையால் திங்கள் நாழி

93 உழக்கெண்ணையும் இரு நாழி அரிசி[யு*]ம் இதேவர்க்கே யிறை யாக கொண்டு மற்று இந்ந

94 கரஞ் சுட்டின இறை எப்பேற்பட்டதும் கொள்ளாதிதாகவும் இவர்களை இதன்றி மற்

95 று இறை காட்டினார் கெங்கை இடை குமரி இடை செய்தார் செய்த பாவங் கொள்வ

96 தாகவும் என்று இப்பரிசு மதிரையும் ஈழமுங் கொண்ட ஸ்ரீபரகேசரி பந்மற்கு

ஐந்தாம் ஏட்டின் முன்புறம்

97 யாண்டு பதினெட்டாவது இக்கச்சிப்பேட்டு நகரத்தார் செய்த வ்யவஸ்தைபடியேய் இ

98 தேவரும் இவர்களை இ[வ்*]விறையேய் கொள்வதாகவும் இச் சேரியார் இதேவர்க்கு

99 கணக்கு இடுவதாகவும் இவனுக்கு இதேவர் பண்டாரத்தே நிசதம் குறுணி நெல்லும்

100 ஆண்டுவரை இரு கழஞ்சு பொன் இடுவதாகவும் இவ்வூர் இரண ஜயப்பாடி ஏகவீரப்

101 பாடி வாமன சங்கரப்பாடியுமாக மூன்று சேரிச் சங்கரப்பாடியாரும் கொண்ட பொன்

102 இருபதின் கழஞ்சினால் முன்பு நின்ற சேரியாரே கடவ நொந்தா விளக் கொந்

103 றும் சோழ[ர*] நியமத்தாரட்டும் எண்ணை ஸந்தி விளக் கெரிப்ப தாகவும் இர

104 ண்டு ஸ்ரீகோயிலுள் தேவர்களை உத்தரமயந ஸங்க்$_3$ராந்தியும் சித்திரை விஷுவும் ஸ்ந

105 பனமாட்டுவதற்கும் திருவிழாவிற்கு விளக்கு பிடிப்பாற்கும் கொடி எடுக்குமாளுக்

106 கும் திருமுற்றம் [பு]குந்த பருஷை நாயன்மாற்கு அரிசி து[ர*]ணி யும் கோஷ்டி செய்தானு

107 க்கு அரிசி து[ர*]ணிப்பதக்கும் பூஜனைப் பொன் அரைக் கழஞ்சும் மற்றும் ஸ்ரீகோயிலுள்

108 குறைவுள்ளன நிவந்தம் பாராதே கண்டழிவிலே செய்வதாகவும் இத்தேவர் ஸ்ரீகா

ஐந்தாம் ஏட்டின் பின்புறம்

109 ர்ய்யம் இடையூறுள்ளன பதினெட்டு நாட்டியாருமே கடைக் கண்டு தீர்ந்து குடுப்[பா]

110 ராகவும் இஞ்ஞகரத்து நகரமாள்வானும் ஆட்டை வாரியரும் எற்றுவழிச்சேரியாரும்

111 கஞ்சகப்பாடியாரும் இத்தேவர் விசம் அழிந்தது ஆண்டு தோறும் திருவிழாச் செய்த

112 வளவே கணக்கு காண்பதாகவும் இச்சுட்டப்பட்ட இரண்டு சேரியாருமே தேவர் பண்

113 டாரத்து வைத்த நிவந்தங் கொண்டு திருமெ[ய்*] காப்பு இடுவ தாகவும் இத்தேவர் ஸ்ரீகார்ய்ய

114 ம் கடைக் காண்பாரையும் திருமெய்காப்பானையும் கணக்கெழுதுவானை

115 யும் நகரமே ஜவஸ்தை$_2$ செய்து இறை கொள்ளப் பெறாததாகவும் ஸ்ரீ கோயி

116 லுக்கு ஸ்ரீகோயில் நம்பா[ய்] நிரம்பினாரைப் பிறாதுவிடில் வேதம் வ[ல்*]ல ப்$_3$ரா

117 ஹ்மணனையே ஆராதிக்க இடுவதாகவும் இப்பரிசு அதிகாரஞ் செய்வாரேவ அறை [ஓ]

118 லை செய்தேன் இஞ்ஞுக[ர*]த்திர் வீரப்பாடி மத்$_4$யஸ்தன் நாற்ப[த்*]தெ[ண்*]ணாயிர மங்கலாதித்த

119 நேன் எழுத்து இக்கச்சிப்பேட்டு நகரத்தார் பக்கல் விலைகொண்ட நிலம் ஒலோக

120 மாராயப் பெருஞ் செறுவில் கிழக்கில் மேற் மிகுதிக் குறைவு உட்பட விற்றுக் குடுத்தோம் மா

121 னகரத்தோம் இந்த ச$_\circ$ாஸநம் எழுத்து வெட்டின அறந்தாங்கி போர்மிக வீரனா

சதா சேவையும் பாபிலோனியாவும்

எப்போதும் இறைவனை வழிபடும் நிலையிலேயே இருக்க விரும்புவோர் தம் வடிவத்தை விளக்குத் தாங்கிகளாகவோ, தொழுத கையுடன் தரையில் விழுந்து வணங்கும் நிலையில் அல்லது நின்ற நிலையில் சிற்பங்களாகவோ செய்து கோயில்களில் நிறுவுவது உண்டு. பாவை விளக்குகளும், கருவறைகட்கு முன்னாலுள்ள தூண்களில் காணப்படும் கைகூப்பிய சிற்பங்களும், கோபுர வாயில்களிலுள்ள தரைச் சிற்பங்களும் இந்த வகையினதான். இவ்வழிபாட்டு முறையைச் சதா சேவை என்று கல்வெட்டிலும் குறித்துள்ளார்கள்.

இந்தப் பழக்கம் இன்று, நேற்று வந்ததல்ல. கி. மு. இரண்டாயிரத்திலேயே பாபிலோனிய மக்கள் இம்முறையைப் பின்பற்றியுள்ளனர். எப்போதும் இறைவனை வழிபட விரும்பிய பாபிலோனியர் தம் உருவத்தைக் களிமண்ணில் சிறு வடிவமாகச் செய்து கோயிலில் வைத்தனர். இத்தகைய உருவங்கள் தெய்வ வடிவங்களுக்கு அருகில் இருந்த அறைகளில் வரிசை வரிசையாகக் காணப்பட்டன.

— நன்றி: நாகரிக வரலாறு, சென்னைப் பல்கலைக் கழகம்.

4. ஆய்வுக் கட்டுரைகள்

1. அமலீசுவரம் திருக்கோயிலின் அமைப்புமுறை

ஸ்தபதி வே. இராமன்

அமைவிடம்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம் மண்ணச்ச நல்லூருக்குக் கிழக்கே உள்ளது கோபுரப்பட்டி. இச்சிற்றூரில் செந் நெல் வயல்களுக்கு இடையில் இயற்கையான சூழலில் கோயிலொன் றைக் காணமுடிகிறது. இக்கோயிலின் மூலவரைக் கல்வெட்டுகள் 'திரு அமலீசுவரம் உடைய மகாதேவர்' என்று அழைக்கின்றன. உத்தம சோழர் காலக் கட்டமைப்பில் உள்ள இக்கோயிலின் அமைப்பு முறை எந்தச் சிற்ப நூலைப் பின்பற்றி, எந்த அளவுகோலைப் பயன் படுத்தி அமைக்கப்பட்டுள்ளது என்பதைக் காண்போம்.

அமைப்பு முறை

மேற்குப் பார்த்த இக்கோயிலானது கருவறை மற்றும் முகமண்ட பத்தைக் கொண்டுள்ளது. உடைந்த நிலையில், அளவில் பெரியதான நந்தி ஒன்று கோயிலுக்கு முன்னால் சோழர் காலக் கலைமுறையுடன் காணப்படுகின்றது. பரிவாரக் கோயில்களோ, திருமதில் சுவரோ இருந்த தடயங்கள் ஏதுமில்லை. கோயிலின் துணைத்தளம், தாங்கு தளம், பாதம், மற்றும் கூரை வரையிலான பகுதிகள் கல்லாலும், அதன் மேல் வரும் பகுதி செங்கல் மற்றும் சுதையினாலும் அமைக்கப்பட் டுள்ளன. கோயிலின் மேற்பகுதி தற்போது சிதைந்து விட்டது.

கருவறையின் புறச்சுவர் நீளம் 7 முழம் 11 விரல் (6.25 மீ.) அளவினையுடையது. இப்பகுதி ஐந்து துண்டு பத்தி பிரிப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.[1] இப்புறச் சுவற்றின் மையப் பகுதி சற்று பிதுக்க மாக முன் வந்துள்ளது. இதனை முகபத்ரம் என்பர். முகபத்ரத்தில் மகர தோரணத்துடன் கூடிய தேவகோட்டமும், அகாரைப் பகுதிகளில் பஞ்சரங்களும் எழும்பி நின்று சுவருக்கு அழகூட்டுகின்றன.

துணைத்தளம்

12 விரல் (42 செ.மீ.) உயரமுடைய இத்தளம் உபானம், கம்பு, கண்டம், கம்பு, பட்டிகை மற்றும் வாசனம் என்ற ஆறு உறுப்புக்களைக் கொண்ட அமைப்பாகும். இவ்வுறுப்புக்களைக் கொண்ட அமைப்பை வேதிபத்ம துணைத்தளம் என்பர்.[2]

தாங்குதளம்

1 முழம் 6 விரல் (1.05 மீ.) உயரம் கொண்ட தாங்குதளம் ஜகதி, முப்பட்டைக் குமுதம், கம்பு, கண்டம், கம்பு, பட்டிகை, கம்பு என்னும் சிற்றுறுப்புக்களைக் கொண்டு அமைந்துள்ளது. இவ்வுறுப்புக்களைக் கொண்ட அமைப்பை பாதபந்தம் என்பர்.[3] இவ்வகைக் கட்டமைப்பு திருஎறும்பியூர், பெருங்குடி, பழுவூர் மற்றும் திருமங்கலம் கோயில்களின் கட்டுமானத்தில் இடம் பெற்றுள்ளதைக் காணலாம். தாங்குதளக் கண்டத்தில் சிற்றுருவச் சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. இத் தாங்குதளப் பட்டிகையின் மேல் மட்டத்தில்தான் கோமுகை இடம் பெற்றுள்ளது.

பாதச்சுவர்

2 முழம் 12 விரல் (2.10 மீ.) உயர அளவைக் கொண்ட பாதச் சுவரை வேதிகை, கால்கள், பஞ்சரங்கள் மற்றும் தோரணங்கள் அலங்கரிக்கின்றன. இச்சுவரில் இடம் பெறும் வேதிகையானது கண்டம், கம்பு, பத்மம், கம்பு என்னும் சிற்றுறுப்புக்களைக் கொண்டதாகும். வேதிகையின் கண்டப் பகுதிகளில் சிற்றுருவச் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. தாங்குதளக் கண்டத்திலும் வேதிகைக் கண்டத்திலும் (GALA PADA) சிற்றுருவச் சிற்பங்களை இடம் பெறச் செய்வது முற்காலச் சோழர்களுக்கே உரிய கலை முறையாகும். புள்ளமங்கை, திருக்கோடிக்காவல், திருச்சென்னம்பூண்டி, காமரசவல்லி, துடையூர் போன்ற கோயில்களில் இத்தகைய சிற்பத் தொகுதிகளைக் காண முடிகின்றது.

சுவரின் கர்ணகூடு பத்தியமைப்பில் இடம் பெற்றுள்ள கால் எண்பட்டை வடிவிலானது. இக்கால் அமைப்பு சதுரம், எண்பட்டைக் கால், தொங்கு மாலை, மாலைக் கட்டு, இடைக்கட்டு, கலசம், பலகை மற்றும் போதிகை என்ற அணிகளைக் கொண்டுள்ளது. இவ்வணிகளைப் பூண்ட கால் அமைப்பு முகபத்ரத்தில் பதினாறு பட்டை வடிவமைப்பாகவும் தேவ கோட்டத்தில் வட்ட வடிவமைப்பாகவும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. தொங்கு மாலை அமைப்பிலும், மாலைக் கட்டு அமைப்பிலும் சிற்றுருவச் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. குடம் மற்றும் பலகைகளின் தாமரை அமைப்பில் இதழ், கொடி வேலைப்பாடுகள் ஒப்பனைக் காட்சிகளாக ஒவ்வொரு கால் அமைப்பிலும் ஒன்றுக்கொன்று மாறுபட்டதாய் அமைக்கப்பட்டுள்ளன. தேவ கோட்டத்தில் மகர தோரணங்கள் சிற்பச் செறிவுடன் காணப்படுகின்றன. வடக்கே நான்முகனும், கிழக்கே அரிஅரனும், தெற்கே ஆலமர் அண்ணலும் அழகுற அமைந்துள்ளனர்.

நிஷ்கராந்த பஞ்சரம்

கர்ணகூடு பகுதி மற்றும் முகபத்ர பகுதி இவ்விரண்டிற்கும் இடைப் பட்ட அகாரைப் பகுதியில் இவ்வடிவமைப்பைக் காண்கிறோம். இவ் வமைப்பு தனி பத்தி பிரிப்பாகப் பிரிந்து, பாதச்சுவரை அழகு படுத்துவ தாக அமைந்துள்ளது. தாங்குதளத்திற்கு மேலாக இடம் பெறும் வேதி கையின் மேல், எண்பட்டை வடிவிலான இரு முழுக் கால்கள், தேவ கோட்டக் கால் உயரத்திற்கு ஈடாக அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மேல் கபோதம், மற்றும் யாளிவரி அமைய, இப்பஞ்சர அமைப்பு உத்திரம் வரையிலும் சென்று சிம்மத் தலையுடன் கூடிய பெரு நாசி யுடன் கூரையின் மேல் மட்டத்திற்கும் மேலாக உயர்ந்து நிற்கிறது. இப்பஞ்சர அமைப்பை எல்லாக் கோயில்களிலும் காண இயலாது. சற்று மாறுபட்ட வகையில் துடையூர், திருஎறும்பியூர், மற்றும் கருந் திட்டைக்குடி கோயில்களின் கட்டமைப்பில் இதைக் காண முடிகின்றது. இப்பஞ்சர அமைப்புகளில் சோழர் காலச் சிற்பிகளின் கலைத் திறன் மற்றும் கற்பனைத் திறன்களைச் சிறக்கக் காண முடிகின்றது. இப் பஞ்சர அமைப்பின் வளர்ச்சியே தஞ்சைப் பெரிய கோயில் கட்டமைப்பில் இடம் பெறும் கும்பப் பஞ்சரம் எனலாம்.

கூரை

உத்திரம், கம்பு, எழுதகம், கபோதம், யாளி என்னும் உறுப்புக் களைக் கொண்ட இவ்வமைப்பின் எழுதகப் பகுதியில் பூதகணங்கள் பல்வேறு நிலைகளில் இடம் பெற்றுள்ளன. யாளி வரியில் யாளிகள் வரிசையாகச் செல்வதுபோல் சித்தரிக்கப்பட்டுள்ளது.

முக மண்டபம்

கருவறை புறச் சுவரிலிருந்து சற்று உள்ளடங்கி நீண்டு நேரே செல்வதாய் அமைந்துள்ள இம்மண்டபத்தின் நீளம் 4.69 மீ. ஆகும். இம்மண்டபத்தின் உள்நீளம், அகலம் முறையே 3.69 மீ. ஆகும். மண்டபத்தை நான்கு தூண்கள் தாங்கி நிற்கின்றன. கரு வறையின் வாயில் உயரம் 1.74 மீ., அகலம் 67 செ.மீ.

புறச்சுவர் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு கால்கள் இடம் பெற்றுள்ளன. மையப் பகுதியில் கோட்டமானது மகர தோரணத்துடன் இடம் பெற்றுள்ளது. இச்சுவரில் இடம் பெறும் கால்கள் கருவறைச் சுவரில் இடம் பெறும் எண்பட்டை வடிவத்தினின்றும் மாறுபட்டு சதுர வடிவினதாக அமைக்கப்பட்டுள்ளன. இம்மண்டபத்தின் வடபுறக் கோட்டத்தில் கொற்றவை இடம் பெற்றுள்ளார். தென்புறக் கோட்டத் திலும், மண்டபத்தின் முகப்புக் கோட்டங்களிலும் சிற்பங்கள் இல்லை.

மேல்தளம்

செங்கற் கட்டினால் ஆன மேல் தளத்தில் பெரும் பகுதி சிதைந்து விட்ட போதிலும் சிறு பகுதி எஞ்சியுள்ளது. வலிய சிறிய அளவிலான செங்கற்களினாலேயே ஒட்டுக் கட்டாகச் சுண்ணக் கலவையிட்டுக் கட்டப் பட்டுள்ளதை உட்புறங்கள் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. தமிழ் நாடு அரசு தொல்லியல் துறையினரால் எடுக்கப்படுவதற்கு முன்னால் இருந்த இதன் அமைப்பை நிழற் படத்தில் பார்க்கும் போது மேல் பகுதி மூன்று தளங்களை உடையதாகவும், கண்டமும், சிகரமும் நாகர அமைப்பை உடையதாகவும் அமைந்துள்ளதை அறியமுடிகின்றது.

அளவுகோல்

பண்டைக் காலக் கோயில்கள் சிற்ப ஆகம முறைப்படியே அமைந் திருந்தன என்பதை உத்திரமேரூர் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. அதுபோல் சிற்ப நூல் துணை கொண்டு அமையப் பெற்றதே கோபுரப் பட்டியிலுள்ள அமலீசுவரர் திருக்கோயில். இக்கோயிலின் துணைத்தள, தாங்குதள உயரம், அவற்றில் இடம் பெறும் உறுப்புகள், தாங்குதள நீட்சியளவு, கால் உயரம், மற்றும் அகலம், கோமுகை மட்டம், உண் ணாழி அளவு, உண்ணாழி தள மட்டம், ஆவுடையார் அளவு மற்றும் முக மண்டப அளவு முறைகளை எடுத்துக் கணக்கீடு செய்து பார்த்ததில் 24 விரல்களைக் கொண்ட கிஷ்கு முழம் கொண்டு மயமதம் கூறும் விதிமுறைப்படி இக்கோயில் அமைக்கப் பெற்றுள்ளதை அறிய முடிந்தது. 24 விரல்களைக் கொண்ட கிஷ்கு முழம் 2′.9″ (84 செ. மீ.) அளவுடையது. இம்முழத்தைத் தஞ்சை முழம் என்றும், தச்சு முழம் என்றும், சிற்ப முழம் என்றும் கூறுவர். இம்முழம் இன்றளவும் சிற்பிகளிடையே பயன்பாட்டில் இருந்து வரும் சிறப்பான முழக்கோலாகும்.

மயமதம் கூறும் அமைப்புப்படியும், அளவின்படியும் கிஷ்கு முழக் கோல் எங்ஙனம் இக்கோயிலமைப்பில் இடம் பெற்றுள்ளது என்பதை மேலும் காண்போம்.

துணைத்தளம்

12 விரல் (42 செ. மீ.) உயரம் கொண்ட துணைத்தளம் மயமத நூல் கூறும் சிறப்புகளையே கொண்டுள்ளது.[4]

தாங்குதளம்

30 விரல் (1.05 மீ.) உயரம் கொண்ட தாங்குதளத்தின் சிற்றுறுப்பு களும், அவ்வுறுப்புகளின் உயரங்களும், மயமத மரபுப்படியே அமைந்

துள்ளது. கட்டட அமைப்பில் உள்ள தாங்குதள உயரத்தை இந்நூல் கூறும் அளவு முறையோடு ஒப்பீடு செய்த அட்டவணை

அங்கம்	சிற்பநூல் அளவு	கட்டட அங்க அளவு
1. ஜகதி	8 பாகம்	35.0 செ. மீ.
2. குமுதம்	7 பாகம்	30.6 செ. மீ.
3. கண்டம் வரி	5 பாகம்	21.9 செ. மீ.
4. பட்டிகை வரி	4 பாகம்	17.5 செ. மீ.
	24 பாகம்	105.0 செ. மீ.

சிற்ப நூலில் கூறப்படும் அளவிற்கிணங்க கட்டட அமைப்பில் உள்ள தாங்குதள உறுப்புகளின் உயர அளவுகள் அமைந்திருப்பதால் மயமத நூலைப் பின்பற்றியும், கிஷ்கு முழ அளவு முறையினைக் கொண்டும் இக்கோயில் கட்டப் பெற்றுள்ளதென உறுதி செய்ய முடிகின்றது.



அமலீசுவரத்தின் தாங்குதள வரைபடம்

தாங்குதளப் பட்டிகை மட்டத்தில் கோமுகை இடம் பெற்றிருப்பதும் இந்நூல் கூறும் மரபேயாகும்.[5]

கால் உயரம்

கால் உயரம் தாங்குதள உயரத்தைப் போல் இரு மடங்கு (2.16 மீ.).[6] அவ்வுயரத்தைப் பத்துப் பகுதிகளாக்கி, ஒரு பகுதி பாத அகலம் மற்றும் குமுத நீட்சியளவு எனக் கொண்டிருப்பதும் இந்நூல் மரபேயாம்.[7]

உண்ணாழி

கால்புறவாய் நீளத்தில் பாதியளவான 3.12 மீ., உண்ணாழியின் நீளம், அகலமாக இருப்பதும்[8], தளவரிசை மட்டம் தாங்குதளத்தின் பட்டிகை மட்டமாக[9] இருப்பதும் இந்நூல் மரபுக்கு உட்பட்டதாய் உள்ளன.

முக மண்டபம்

முக மண்டப நீளமானது கருவறையின் அளவில் முக்கால் பங்கு இருக்கலாம் என்பது மயன் விதியாகும்.[10] இவ்விதிமுறைக்கேற்ப இக்கோயில் முக மண்டப நீளம் 4.70 மீட்டராய் அமையப் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

அமலீசுவரர்

கருவறையில் எழுந்தருளியிருக்கும் லிங்கத்திருமேனி வட்ட வடிவிலுள்ளது. இதனை ஆபாசக லிங்கம் என்பர்.[11] ஆவுடையார் சதுர அமைப்புடையதாய் ஜகதி, குமுதம், கம்பு, கண்டம், கம்பு, பட்டிகை, கிருதவாரி எனும் உறுப்புகளைக் கொண்டு பாங்குற அமைந்துள்ளது. இத்தள அமைப்பையே பத்ர தளம் என்பர். ஆவுடையாரின் நீள, அகலம் 1.11 மீ. என்ற அளவில் உள்ளது. இந்த அளவுமுறை உண்ணாழியின் உள் அளவில் மூன்றில் ஒரு பகுதி இருப்பதும் மயமத நூல் விதிமுறையேயாகும்.[12]

முடிவு

சிற்பக் கலை மற்றும் கட்டடக் கலைச் சிறப்புடன் அமைந்துள்ள இத்திருக்கோயிலை மயமத சிற்ப நூலைப் பின்பற்றியும், கிஷ்கு முழம் எனும் அளவுகோலைக் கொண்டும் சிற்பக் கலைஞர்கள் திறம்பட எடுப்பித்துள்ளார்கள் என்பது உள்ளத்தை நிறைக்கும் உண்மையாகும்.

அடிக்குறிப்புகள்

1. 5 துண்டு பத்தி பிரிப்பு

   (1) கர்ணகூடு, (2) அகாரை, (3) முகபத்ரம், (4) அகாரை, (5) கர்ணகூடு.

2. மயமதம்-முதல் பாகம், தஞ்சை சரசுவதி மகால் நூலக வெளியீடு, பக். 162.

3. மேற்படி., பக். 172. நூலில் வப்ரம் என்றிருப்பதை ஜகதி என்றும், கந்தரம் என்று இருப்பதைக் கண்டம் என்றும், வாஜனம் என்றிருப்பதைப் பட்டிகையாகவும் கொள்க.

4. மேற்படி., பக் 162.
5. மேற்படி., பக். 184.
6. மேற்படி., பக். 186.
7. மேற்படி., பக். 186.
8. மேற்படி., பக். 315.
9. மேற்படி., பக். 318.
10. மேற்படி., பக். 313.
11. மேற்படி., இரண்டாம் பாகம், பக். 259.
12. மேற்படி., பக். 261.

நூலகத் திருட்டு

நூலகங்களில் நூல்கள் திருட்டுப் போவதும், தேவையான பக்கங்களைப் படிப்பவர்கள் கிழித்துக் கொள்வதும் பல நூலகங்களுக்கு ஏற்படும் அன்றாடத் துன்பம். இந்தத் தீய செயல்கள் இன்று நேற்று பழக்கமல்ல. உலகத்தின் மிகப் பழமையான நூலகமாக வரலாறு போற்றும் அசூர் பானிபாலின் நூலகத்திலேயே இச்செயல்கள் நடந்திருக்கின்றன.

கி. மு. ஏழாம் நூற்றாண்டிலேயே 22,000 களிமண் பலகைகள் (அந்நாளைய புத்தகங்கள்) பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த இந்நூலகத்தில் சுமேரியப் பாடல்கள், பாபிலோனிய இலக்கியங்கள், அசிரிய அரசாங்கக் குறிப்புகள் ஆகியன இருந்தனவாம். இக்களிமண் பலகைகளில் அரச முத்திரை பொறிக்கப்பட்டிருந்ததோடு, 'இவற்றைத் திருடுபவர்கள் அசூர், பெலிட் என்றும் தெய்வங்களின் கோபத்திற்குட்பட்டு அழிந்துவிடுவார்கள்' என்ற எச்சரிக்கையும் காணப்பட்டதாம்.

— நன்றி: நாகரிக வரலாறு, சென்னைப் பல்கலைக் கழகம்.

2. முதல் திருமுறையில் ஆடல் குறிப்புகள்

இரா. கலைக்கோவன்

பக்தி இலக்கியங்களெனப் போற்றப்படும் திருமுறைகளில் கோயிற் கலைகள் சார்ந்த பயனுள்ள தகவல்கள் பல கிடைக்கின்றன. சிவ பெருமானின் பல்வேறு திருத்தோற்ற அமைப்புகள், அவற்றிற்கான விளக்கங்கள், பக்தி இலக்கியங்கள் போல் ஆகமங்களில் கூடக் கிடைப்ப தில்லை. திருவுருவ இயலில் தேர்ந்திட விழைவோர்க்குத் திருமுறை களே பேருதவியாய் அமைய வல்லன. சிவபெருமானின் கலைத் திறமைகளையும், அவற்றை அவர் கையாளும் முறைகளையும் திருமுறை ஆசிரியர்கள் எடுத்தோதியிருக்கும் பாங்கு பெரு வியப்பூட்டு கிறது. காரைக்கால் அம்மையாரின் மூத்த திருப்பதிகம் முழுவதும் சிவபெருமானின் ஆடல் அரங்கைப் பற்றியே பேசிக் களிக்கிறது. திரு முறைகளில் தெளிக்கப்பட்டிருக்கும் இந்த ஆடற்கலைச் செய்திகளை யெல்லாம் திரட்டி ஒருமுகப்படுத்தும் பணியில் முதற் படியே இந்தக் கட்டுரை.

எண்பத்தெட்டு திருத்தலங்களைப் போற்றி சம்பந்தர் பாடியிருக்கும் நூற்று முப்பத்தாறு பதிகங்களின் தொகுப்பே முதல் திருமுறை. இத் தொகுப்பில் அதிக அளவில் பாடல்களைப் பெற்ற தலம் சீகாழி. இருபத்தைந்து பதிகங்களைப் பெற்றுள்ள இவ்வூருக்கு அடுத்த நிலை யில் எட்டுப் பதிகங்களைப் பெற்றுப் பெருமை கொள்கிறது வீழிமிழலை. இடைமருது ஐந்து பதிகங்களையும், முதுகுன்றம் நான்கு பதிகங் களையும் பெற, அய்யாறும், சிவபுரமும் தலத்துக்கு மூன்றாய்ப் பதிகங் கள் பெற்றுள்ளன. வலிவலம், திருமால்பேறு, நள்ளாறு, ஆலவாய், ஆரூர், செங்கட்டாங்குடி, அண்ணாமலை, நறையூர்ச் சித்தீச்சரம் என்னும் ஊர்கள் ஒவ்வொன்றும் இரண்டு பதிகங்கள் பெற்றுள்ளன. மூன்று பதிகங்கள் இரண்டிரண்டு ஊர்களை இணைத்துப் பாடப் பெற்றுள்ளன.

சம்பந்தரின் இந்த நூற்று முப்பத்தாறு பதிகங்களுள் ஐம்பத்து மூன்று பதிகங்களில் ஆடல் பற்றிய தகவல்கள் உள்ளன. இரண்டு பதிகங்களில் பெரும்பாலான பாடல்கள் இறைவனின் ஆடல் குறிப்போடு முடிகின்றன. அய்யாறு, பாம்புரம், அன்பிலாந்துறை, முதுகுன்றம், குடந்தைக் காரோணம், நள்ளாறு ஆலவாய் இணைந்த திருப்பதிகம் ஆகிய ஆறு பதிகங்களில் மங்கையர் ஆடல் பேசப்படுகிறது. பல பதிகங்களில் பத்திமையுடையோர் ஆடிப் பாடி இறைவனை ஏத்துவ தும், வழிபட்டு மகிழ்வதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இறையாடல்

சிலப்பதிகாரத்தின் பதினோராடல்களில், ஓராடலுக்கு மட்டுமே உரிமையுடையவராகக் காட்டப்படும் சிவபெருமான், ஆடல் நாயகராக உயர்த்தப்பட்ட காலம் பக்தி இலக்கியக் காலம். காரைக்கால் அம்மையாரும், திருமூலரும், சம்பந்தரும், அப்பரும் போட்டி போட்டுக் கொண்டு இறையாடல் நிகழ்வுகளை வண்ணனை செய்து, சிவபெரு மானை ஆடல் தலைமைக்கு அழைத்துச் சென்றனர். ஆடல் நாயகரின் ஒப்பனை, தோற்றம், அவரது ஆடல் அமைவுகள், ஆடலின்போது அவர் ஏந்தியிருக்கும் பொருட்கள், ஆடலுக்கான இசை, அதை எழுப்பிய கருவிகள், அந்தக் கருவிகளை இயக்கியவர்கள், ஆடலுக்கான பாடல், அதைப் பாடியவர்கள், உடன் இருந்தவர்கள், மகிழ்ந்து நோக்கியவர்கள், இணைந்து ஆடியவர்கள், ஆடிய போதுகள், அவர் ஆடலுக்கு அமைந்த களம் என்று எத்தனையெத்தனைத் தகவல்களை இப்பெருமக்கள் எடுத்து வைக்கிறார்கள். இவர்கள் காட்டும் காட்சிக் கோலங்கள் இரண்டு நூற்றாண்டுக் கால ஆடற்கலை வரலாற்றைத் தொட்டுக் காட்டுகின்றன.

சம்பந்தரின், முதல் திருமுறை சிவபெருமானின் ஆடலை மாநடம், பெருநடம், நாடகம், நட்டம் என்றெல்லாம் சிறப்பிக்கிறது. இறைவ னின் ஆடல் இயல்பை வெளிப்படுத்தக் கூத்தாடும் குணத்தோன் என்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆடுவதைத் தொழிலாகவும் கொண்டவனாய் ஆப்பனூர்ப் பதிகத்தில் அறிமுகமாகும் இறைவன், 'காளி தன் பெரிய கூத்தை அரியவனாய்' இராமனதீச்சரத்தில் காட்டப் படுகிறார்.

ஆடுவதாகவும், ஆடலைப் பயில்வதாகவும், பயின்று ஆடுவதாக வும் பலபல நிலைகளில் இறையாடலைக் காட்டும் புகலி வேந்தர் ஓரிடத்தில் பாடலையும் இறைவன் பயின்று பின் ஆடியதாகக் கூறுவ தோடு, ஆடல்வல்ல அடிகள் என்றும் இறைவனைப் போற்றுகிறார். அதிகை வீரட்டானத்து இறைவனைப் பாடுமிடத்தில் 'ஆடல் அழல் நாகம் அரைக்கு இட்டு அசைத்தாடப் பாடல் மறை வல்லான் படுதம் பலி பெயர்வான்' என்று குறிப்பிடுகிறார். இப்பாடலுக்குப் பொருள் தரும் இடத்தில் திரு. தண்டபாணி தேசிகர், 'இறைவன் படுதம் என்னும் கூத்தினை ஆடிக்கொண்டு பலிக்காகத் திரிபவர்' என்று கூறுகிறார். படுதம் என்னும் இக்கூத்து வகை பற்றிய தகவலைத் திரு. தேசிகர் எங்குப் பெற்றார் என்பதற்கு விளக்கம் இல்லாமையின், இவ்வரிய கூத்து பற்றி விரிவான செய்திகளைப் பெற முடியவில்லை, பேரகராதி படுதம் என்றாலே கூத்து என்று பொருள் தருகிறது.[1]

திருப்புகலூர்ப் பதிகத்திலும், சீகாழிப் பதிகத்திலும் குனித்தல் என்ற சொல் ஆடல் வகையொன்றைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. புகலூர்ப் பதிகத்தில் இறைவன் குனித்தார் என்றும், சீகாழிப் பதிகத்தில் பூதம் குனித்தாடியதாகவும் சம்பந்தர் சொல்கிறார். ‘குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்’ என்ற அப்பரின் பதிகத்தில் ‘குனித்த’ என்ற சொல்லுக்கு வளைந்த என்ற பொருள் தரப்படுகிறது.[2] பேரகராதி குனித்தலைக் கூத்தின் ஒரு விகற்பம் என்றும் குறிக்கிறது.[3] இதையெல்லாம் நோக்க வளைந்தாடும் ஆடல்வகை குனித்தல் எனப்பட்டதாகக் கொள்ளலாம்.

காட்டகத்தே குள்ள பூதங்கள் குழல்களைக் கொண்டு இசையெழுப்பக், கழலும் சிலம்பும் ஒலிக்க இறைவன் குனித்தார். இந்த அழகிய ஆடலைக் குள்ள பூதங்கள் கண்டு களித்தன; போற்றிப் பரவின; சில கற்றும் கொண்டன. அதனால்தான் முல்லை நிலக் கடவுளாகிய திருமால், இறைவன் ஏறும் காளையாகி வந்த நிலையில், பூதமொன்று அத்திருமால் எதிரில் கல்லவடம் என்னும் பறையொலிக்குக் குனித்தாட முடிந்தது. அந்த ஆடலையும் அதற்கான கல்லவட இசையொலியையும் இறைவன் உகப்பதாக சம்பந்தர் தெரிவிக்கிறார்.[4] கல்லவடம் ஒருமுகப் பறையாம். சங்க இலக்கியங்களிலோ, இரட்டைக் காப்பியங்களிலோ இடம் பெறாத இசைக்கருவி இது.

இறைவனின் எட்டு வீரச் செயல்களுள் சிலவற்றை ஆடலோடு இணைத்துப் பேசுவது மரபு. பொதுவாக இயமனை உதைத்த நிலையிலும், யானையை அழித்த கோலத்திலும், முப்புரம் எரித்த பிறகும் இறைவன் மகிழ்ந்தாடியதாகக் கூறுவதுண்டு. சம்பந்தருடைய முதல் திருமுறை இந்த வீரச் செயல்களுள் சிலவற்றைக் குறிப்பிட்டாலும், ஆடலோடு தொடர்புபடுத்திக் கூறுவது முப்புர எரிப்பை மட்டும்தான். திருஅதிகைப் பதிகம் முழுவதும், பத்துப் பாடல்களிலும் இறைவன் முப்புரம் எரித்து ஆடிய ஆடல்தான் பேசப்படுகிறது. முப்புரம் எரித்த வீரச்செயல் நடந்த இடம் திருஅதிகை என்பதால் போலும், அவ்வூர் பற்றிய பதிகம் ஆடல் குறிப்புகளாலேயே அலங்கரிக்கப்பட்டுள்ளது. ஆரூர்ப் பதிகம் முப்புரம் எரியும்போதே இறைவன் ஆடியதாகக் காட்டுகிறது.

> “ . . . . . மூவிலைய சூலம் வலனேந்திக்
> கூடலர் மூவெயிலும் எரியுண்ணக் கூரெரிகொண் டெல்லி
> ஆடலன் ஆதிரையன் ஆரூர் அமர்ந்தானே ”[5]

பல பதிகங்கள் இறைவன் எரியாடியதாகக் கூறுகின்றன. தேசிகரவர்கள் இதற்குப் பொருள் கூறும்போது தீப்பிழம்பில் இறைவன் நின்றாடியதாகக் கூறுகிறார். கோயில்களில் காணக் கிடைக்கும்

பெரும்பாலான ஆடவல்லான் படிமங்களைச் சுற்றிலும் காணப்படும் திருவாசிகளில் தீச்சுடர்கள் காட்டப்பட்டிருப்பதை நினைக்கும்போது சம்பந்தரின் பதிக வரிகள் வார்ப்பறிஞர்களை எப்படி ஈர்த்திருக்கின்றன என்பதைத் தெள்ளிதின் உணர முடிகின்றது. அழல் வண்ணனாக வண்ணனை செய்யப்படும் இறைவன் செந்தீயில் ஆடுவதும், அதே தீயைக் கைக்கொண்டு ஆடுவதும், நெருப்பின் முக்கியத்துவத்தை மட்டுமா குறிக்கிறது! அதன் பின்னணியில் உறைந்துபோயிருக்கும் எத்தனையோ வாழ்வியல் உண்மைகளையும் அல்லவா புடம் போட்ட தத்துவங்களாய் எடுத்து வைக்கிறது. முடிவில் முதலையும், அழிவில் தொடக்கத்தையும் காட்டும் குறியீடல்லவா அது.

அரங்கு

ஆடலுக்கு முதல் தேவை அரங்கு, சம்பந்தரின் பதிகங்கள் இறையாடல் அரங்காகக் காட்டுவது காட்டை. இந்தக் காடு பிற காடுகள் போல் மரங்கள் அடர்ந்து நிறைந்த காடல்ல. பிணங்கள் சுடப்படும் காடு. வலிமை மிகு பிணங்கள் ஒன்றோடு ஒன்று தொடர் புடையன போல் இடைவெளியில்லாது அமர்த்தப்பட்டிருக்கும் இடு காடு. நிலைத்த வலிய மரங்களின் உயர்ந்த கிளைகளில் தங்கியிருக்கும் வற்றிய கோட்டான்கள் அவ்வப்போது அலறல் எழுப்பும் அதிபயங்கர பிணக்காடு. இந்தக் காட்டரங்கைத்தான் எப்படியெல்லாம் வண்ணிக் கிறார் சம்பந்தர்! சுடுகாடு, படுகாடு, முதுகாடு, புறங்காடு, கரிகாடு, வெங்காடு, பெருங்காடு என்று எத்தனைச் சிறப்புகள்! இறைவன் ஆடும் இடமல்லவா! மயானம் என்றும் ஈமவனம் என்றும் குறிக்கப் படும் இந்தக் காட்டரங்கில் இறைவனது ஆடல் மேடை வெய்தாய சுடலையாம். அச்சுடலையில் கொழுந்து விட்டெரியும் தீயில்தான் இறைவனின் ஆடல் இனிதே நிகழ்கிறது. வாழ்க்கையின் முடிவையும், உடம்பின் நிலையில்லாத் தன்மையையும், அடையவேண்டியது எது என்ற உண்மையையும் சுட்டிக் காட்டும் இந்தச் சுந்தரநடம் நிகழும் காடு எப்படிப்பட்ட காடு? சம்பந்தரே விளக்குகிறார். எரிகின்றது சிதை. கொளுத்தும் கனலையும், கரியும் காலையும் பொருட்படுத்தாது வேகும் உடலில் இருந்து குடலைத் தேர்ந்து கொள்ளச் சில பேய்கள். இவை உணவு கிடைக்கும் மகிழ்வில் ஆடிக் களித்த காடு அது. அங்கு நரிகள் கால் பந்தாட்டம் நிகழ்த்துகின்றன. உண்டு மீந்த தலைகளே பந்துகள். அங்குமிங்குமாய் அந்த அரைகுறைத் தலைகள் வாழ்வா ரைப் பார்த்து நகைப்பது போல உருளும் காடு. சில பேய்கள் எரியும் சுடலையில் இருந்து உருவிடும் கொள்ளியே இறையாடலுக்குக் கை விளக்காகிறது. தீயாடும் தீவண்ணனைப் பார்க்கப் பேய் உருவிய கொள்ளி விளக்காகுமா? ஆகுமென்கிறார் சம்பந்தர்.

"பேயுயர் கொள்ளி கைவிளக்காகப் பெருமானார் தீயுகந்தாட"[6]

ஆடும் காலம்

சுடுகாட்டில் இறைவன் ஆடும் பெருநடம் மாலை மயங்கும் போதுதான் தொடங்குகிறது. அது ஆரிருள் மாலையாகவும், பொழுதுகள் சந்திக்கும் அந்தியாகவும் அமைவதை மூன்று இடங்களில் சுட்டுகிறார் சம்பந்தர். பிற இடங்களில் எல்லாம் இறைவன் இரவில் ஆடுவதாகவே பாடுகிறார். இருள், எல்லி, கங்குல் எனப் பல சொற்கள் பெய்து இரவுக் காலத்தை நிலைப்படுத்தும் காழிஞானர், அந்த இருளையும் நள்ளிருள், துஞ்சிருள் எனச் சிறப்பிக்கிறார். ஓரிடத்து, 'கழுது துஞ்சும் கங்குல் ஆடும்' என்று கூறுவதன் வாயிலாகப் பேய்களும் உறங்கும் இரவில் இறைவன் ஆடி மகிழ்வதாய்க் காட்டுகிறார். அச்சிறுபாக்கத்தைப் பாடும்போது ஒரே ஒரு இடத்தில் இரவும் பகலும் இறைவன் தொடர்ந்தாடும் செய்தி கிடைக்கிறது.

இறைவனின் அந்தி நடனத்தைத்தான் எழுவகைத் தாண்டவங் களுள் ஒன்றான சந்தியா தாண்டவமாய் ஸ்ரீதத்துவநிதி வகைப் படுத்துகிறது.[7] இந்தத் தாண்டவத்தில் இறைவன் திருவடியின் கீழ் முயலகன் இருப்பதில்லை. நான்கு திருக்கைகளும், மூன்று கண்களும் கொண்டவராய்ச் சடா மகுடமணிந்து, இடக்காலைக் குஞ்சிதமாகவும், வலக்காலைக் குஞ்சிதமாகவோ அல்லது மேல் நோக்கியோ இடப்புறம் வைத்தும், மயில் தோகையைக் கையொன்றில் ஏந்தியும், இறைவன் இவ்வாடலை நிகழ்த்துவதாய் ஸ்ரீதத்துவநிதி வரையறுக்கிறது. சில்ப ரத்தினம் குறிக்கும் ஒன்பதாம் வகை நிருத்த மூர்த்தியும் ஏறத்தாழ இவ்வகையினதே.[8] திருவடிகளின் கீழ் முயலகன் இருப்பதில்லை என்ற ஒரு கோட்பாட்டை மட்டும் எடுத்துக் கொண்டு தாமரைத் தளத்தில் இறைவன் ஆடும் சில கரணக் கோலங்களை அறிஞர்கள் சிலர் சந்தியா தாண்டவமாய்க் காட்டி மகிழ்ந்ததுண்டு,[9] சந்தியா தாண்டவத்தில் முயல கன் இல்லாமை எந்த அளவு முக்கியமோ அந்த அளவு முக்கியமானது கால்களின் அமைப்பு. இன்னும் சொல்லப் போனால் எந்த ஆடற் கோலத்துக்கும் கால்களின் அமைப்புதான் முதன்மையானது.

இறைவன் தன் ஒப்பற்ற ஆடலை நிகழ்த்துவதற்கு இரவைத் தேர்ந்தது ஏன்? இருள் மயமான வாழ்க்கையில் ஞான ஒளியைத் தேடுவதே குறிக்கோள் என்பதை உணர்த்துவதற்காகவா? அனைத்தும் உறங்கினாலும் அவன் இயங்குவதைப் புலப்படுத்துவதற்காகவா? அல்லது தீக்குள் ஆடத், தீயாய் ஆட, தீயேந்தி ஆட இரவே சரியான பொழுதென்பதாலா?

ஆடல் நாயகரின் தோற்றமும் ஒப்பனையும் கருவிகளும்

இன்றும் கூட ஆடல் நிகழ்ச்சிகளில் ஒப்பனைக்குப் பெரும் பங்குண்டு.[10] தோற்றம் ஆடலின் வெற்றியில் பெரும்பங்கு வகிப்பது

மறுக்க முடியாத உண்மை. அதனால்தான் சம்பந்தரும், ஆடும் இறைவனின் தோற்றப் பொலிவைக் காட்டுவதில் மிகுந்த அக்கறை எடுக்கிறார். முகத்திற்கு இணையில்லா அழகைத் தரும் இறைவனின் சடைகளைப் பலபடப் பாராட்டிப் பாடுகிறார். குளிர் புன் சடை, அவிர் சடை, நிமிர் புன் சடை, சுடர் பொன் சடை, எரி புன் சடை, கோலச் சடை என்றெல்லாம் சம்பந்தரால் புகழப்படும் சடை முடிகள் தாழ ஆடும் இறைவனின் சடா மண்டலத்தில் சேர்க்கப்படும் பொருட்கள் தான் எத்தனை! கொன்றை, வன்னி, ஊமத்தம், பாம்பு, கங்கை இவற்றோடு, குறை வெண் பிறை, பால் மதியம், முதிரா மதி என்றெல்லாம் சிறப்பிக்கப்படும் இளம் பிறையும், பல்லார் பகுவாய நகு வெண் தலையும் கூட உண்டு. நெற்றியில் பட்டம்; வெள்ளைத் தோடொரு காதில்; மற்றொரு திருச் செவியிலோ குழை. மார்பில் முப்புரி நூல், கொன்றை மாலைகள் மற்றும் மணம் மிக்க பிற மலர் மாலைகள். கைகளில் ருத்திராக்க வளைகள்; கங்கணங்கள். கழுத்தில் ருத்திராக்க மாலை. அரையில் புலித் தோலாடை. இந்தத் தோலாடையை இறுக்கிப் பிணைக்கும் அரையணியாகப் பாம்பு. இது சில போதுகளில் ஐந்தலைப் பாம்பாகவும் அமைவதுண்டு.[11] இறைவன் புலித்தோல் ஆடையர் எனினும் மானின் தோலும், யானையின் தோலும் கூட அவருக்கு உடைகளாகியுள்ளன.

''மானார்தோலார் புலியினுடையார் கரியின்உரி போர்வை''[12]

சில போதுகளில் கோவண ஆடையிலும் ஆடுகிறார். இது நால்விரல் அல்லது ஐவிரல் அகல அளவினதாய் அமைவதாக சம்பந்தர் சொல்கிறார். மான் தோல் இடையுடுத்திய ஆடலரைக் கருந்திட்டைக்குடி வசிட்டேசுவரர் திருக்கோயிலில் செம்பியன் மாதேவி காலத்துச் சிற்பமாகக் கண்டு களிக்கலாம்.[12A]

கால்களில் சிலம்பும், கழலும். இறைவன் ஆடும் போது இவை எழுப்பும் இன்னிசையில் சம்பந்தர் பெரிதும் மயங்குகிறார்.

''கழலினோசை சிலம்பின் ஒலியோசை கலிக்க''[13]

''பைங்கழல் ஆர்க்க ஆடும்''[14]

''கழலினோசை ஆர்க்க ஆடும்''[15]

''பாதம் சிலம்பார்க்க...... கரிகாட்டு எரியாடி''[16]

இறைவன் வலக்காலில் அணிந்துள்ள கழல் சிறப்புக்குரியதாய்ப் பேசப்படுகிறது. அத்தி யாளியின் உருவம் எழுதப் பெற்ற வீரக் கழலாம் அது.

''கரிவளர் தருகழல் கால்வலனேந்திக்
கனலெரியாடுவார் காடரங்காக''[17]

தலை முதல் கால் வரை அணிகளும் ஆடைகளும் காட்டியவர், மேனி யின் எழில் கூட்ட இறைவன் பூசும் பொடிகளையும் அடையாளம் காட்டுகிறார். மாண்டவர் சுடலைப் பொடி, சுடு நீறு, பிற பொடிகள் எனப் புலபடப் பூசி நின்றாடும் இறைவனின் ஆடல் முனைப்பில், எரித் தோர் சுடலையின் நுண் பொடியும் திருமேனியில் சேர்ந்து விடுகிறதாம்.

இத்தனையும் இணைய அவர் ஆடும்போது கைக்கொள்ளும் பொருட்கள் ஒன்றா இரண்டா! முத்தலை ஈட்டி, மழு, மணி, அனல், தலை, மான்மறி எனப் பல ஏந்தியாடுகிறார். இவற்றுள் பதிக வரி களில் பெருமைக்குரிய இடத்தைப் பெறுவது அனல்தான். செந்தீ, அனல், கனல், எரி, சுடர் என்றெல்லாம் பாராட்டப்படும் நெருப்பை இறைவன் உள்ளங்கையில் ஏந்தியபடி ஆடுகிறார். அவரது வலத் திருக்கையில் சில போதுகளில் தண்டும், சுடர் விடும் சூலமும், சில போதுகளில் ஒளி வெண் மழுவும் அமைந்துவிடுகின்றன. இம்மழு கூரானது! தசையின் நாற்றம் நிறைந்தது. தகாதாரை ஒறுத்த கருவி யல்லவா! ஒரு சில நேரங்களில் அசையும் அவர் கைகளில் மான் கன்றோ மணியோ இருப்பதுண்டு. வெடியார் தலையேந்தி, வெண் தலையேந்தியும் இறைவனின் ஆடல் நிகழ்ந்திருக்கிறது. இத்தகு ஆடலர் அழகராயும் குழகராயும்தானே இருக்க முடியும். இந்த ஆடல் அழகரைப் பார்த்து மயங்குவாரையும் உடனிருந்து கண்டு மகிழ்ந்து போற்றுவாரையும் பதிக வரிகளில் படம் பிடிக்கிறார் சம்பந்தர்.

உடன் கூட்டத்தாரும் நோக்கி மகிழ்வாரும்

ஆடும் இடத்திற்கேற்ப அமைந்த உடன் கூட்டத்தாராய்ப் பேய் களும், பூதப் படைகளுமே இறைவனைச் சுற்றி நின்று அவரது ஆட லுக்கு அக மகிழ்ந்து, தமை மறந்து போற்றுகின்றன. ஆடல் பரவசத் தில் இறைவனைக் கைதொழுது ஏத்துகின்றன.

'' . . . . பேய்க்கணம்பூ தஞ்சூழ
முழங்கு செந்தீ ஏந்தியாடி''[18]

'' கழுதொடு பாரிடம் கைதொழுதேத்த''[19]

இந்தப் பூத கணங்களைப் பற்றிய வண்ணனைகளும் சம்பந்தரால் தரப் படுகின்றன. இவை குள்ளச் சிறு பூதங்கள்; பருத்த வடிவின; வீட்டுக் குடம் போன்ற வயிறு உடையன; ஆந்தை விழி கொண்டன; பந்தம் உடையன. இந்தப் பந்தம் இறைவனோடு அவற்றுக்குள்ள நெருங்கிய

பிணைப்பைக் காட்டப் பெய்த சொல்லாகலாம். அல்லது மார்புக்கும் வயிற்றுக்கும் இடையில் அணியப்படும் உதரபந்தத்தைக் குறிப்பதாக லாம். குடந்தை சார்ங்கபாணி கோயிலில் தண்டுவின் கரணச் சிற்பங் களோடு இசையெழுப்பும் உடன் கூட்டத்தாராய்க் காட்டப்பட்டிருக்கும் பூதங்களுள் சில உதரபந்தம் அணிந்து காணப்படுகின்றன. மேற்கி லிருக்கும் தனித்த பூதமொன்று அழகின் சிகரமாய்ச் செதுக்கப்பட் டுள்ளது.[20] சம்பந்தரின் வண்ணனைகளை அப்படியே அடியொற்றிக் குள்ளமாய்ப், பருத்த நிலையில், புடைத்த வயிற்றுடன், உதர பந்தமும், இசைக் கருவிகளுமாய் இந்த அழகு பூதங்களைப் படைத்த சோழச் சிற்பிகள் குடந்தை சார்ங்கபாணி கோபுரத்தைச் சிற்பக் களஞ்சியமாக்கி யுள்ளனர்.

பூதங்களை வண்ணிக்கும் சம்பந்தர் பேய்களையும் விடவில்லை. 'பறை போல் விழிகட் பேய்' என்று சங்க இலக்கியங்களில் வரும் அதே உவமையைக் கையாள்பவர் தீயில் வேகும் பிணங்களை நுகர எரியில் நிற்பதால் அவற்றின் கால்கள் கரிந்து நிற்பதையும் காட்டுகிறார். இதனால் பேய்க்குக் கால்கள் கிடையாது என்னும் நம்பிக்கை சம்பந்தர் காலத்தில் வழக்கில் இல்லாமை உணரப்படுகிறது. இந்தப் பேய்கள் வேகும் உடலில் விரும்பிக் கொள்ளும் பகுதி குடலாம்!. நீட்டிய நாக்கை யும் பரந்த கூந்தலையும் உடைய நல்ல பேய்களான இவை குடலுண்டு களித்த நிலையில் இறையாடலுக்கு ஒரு முன்னுரை போல் பெருங்காட் டில் தாமாடி மகிழ்கின்றன. இதன் பிறகே இவைகளின் தலைவராம் இறைவனின் எரியாடல்.

''கரிகாலன குடர்கொள்வன கழுதாடிய காட்டில்
. . . .
எரியாடிய இறைவர்.''[21]

பல்வகைப் பேய்களும், பல்வகைப் படைகளாய் அமைந்த பூதங் களும் உடனிருக்க இறைவன் ஆடும் ஆடலை அவைகளும் நோக்கின; அம்மையும் நோக்கினார். அம்மையின் ஆனந்தப் பார்வையை, அத்த னின் ஆடலில் தோய்ந்த அவரது மகிழ்ச்சிப் பூரிப்பை சம்பந்தர் பல பதிகங்களில் படம் பிடிக்கிறார். மலைமகள், மானடைந்த நோக்கி, பாலொத்தனைய மொழியாள், கந்தம் மல்கு குழலி, அங்கோல் வளை மங்கை, செழுங்கல் சேந்தன் செல்வி என்றெல்லாம் ஆடல் நோக்கும் அம்மை பதிக வரிகளில் பாராட்டப் பெறுகிறார். கண்டும் களித்தும் இறைவி போற்றும் இந்தத் திரு ஆடலைக் காளி முன் நின்று கண்ட தாகப் பாம்புரம் பதிகம் பேசுகிறது.

''. . . . . காளிமுன்காணக்
கானிடைநடஞ்செய்த கருத்தர்''[22]

காளி இறைவன் ஆடலைக் காண்பதும், இறைவனோடு ஆடி அந்தப் போட்டியில் தோற்பதும் ஆடற்கலை வரலாற்றின் திருப்புமுனை நிகழ்வுகள். முதல் நிகழ்வைப் பதிவு செய்யும் சம்பந்தர், இரண்டாம் நிகழ்வை மிக அருமையான சொற்களைக் கொண்டு பதிகமாக்கியிருக்கிறார். திருக்கழுமலத்தைப் பாடும் இடத்தில்,

"......... போரார்தா ரகனுடல் அவனெதிரே
புக்கிட்டே வெட்டிட்டே புகைந்தெழுந்த சண்டத்தீப்
போலேபூநீர் தீகான்மீப் புணர்தரும் உயிர்கள்திறம்
சொக்கத்தே நிர்த்தத்தே தொடர்ந்தமங்கை செங்கதத்
தோடுஏயாமே மாலோகத் துயர்களை பவனதுஇடம்"[23].

என்று சொல்கிறார்.

தாரகனை அழித்து ஊழித் தீ போல் கொதித்திருந்த காளிதேவியின் சினம் இவ்வுலக உயிர்களை அணுகாதபடி துயர் களையும் இறைவன் வாழுமிடம் கழுமலமாம். இறைவன் எப்படி அந்த அரிய செயலைச் செய்தார்? இந்தப் பாடலின் ஐந்தாம் வரியில் ஆடல் உலகக் கலைச் சொற்களையே பயன்படுத்தி விடை தருகிறார் சம்பந்தர். தாரகனை அழித்த காளி என்னும் ஊழித் தீ குளிர்ந்ததெப்படி? 'சொக்கத்தே நிர்த்தத்தே தொடர்ந்த மங்கை'. ஆம்! இறைவனுடன் ஆடியாடி, அந்த ஆடற் போட்டியின் விளைவால் விரைவு குறைந்து, வெப்பம் தணிந்து தம்மை உணர்ந்த தேவி குளிர்ந்து போனார்; குணமானார். இதைத்தான், 'காளியைக் குணஞ்செய் கூத்துடையோன்' என்று மூன்றாம் திருமுறை வரிகள் குறிப்பிடுகின்றன.[23A]

சொக்கம், நிர்த்தம், என்னும் இரண்டு கலைச் சொற்களும் இன்றைக்கும் ஆடற்கலை உலகில் ஒரு சில பள்ளிகளில் பயன்பாட்டில் உள்ளன. சிலப்பதிகாரத்தின் கலைப் புதையலாய்க் கருதப்படும் அரங்கேற்றுக் காதையில் இருவகைக் கூத்து பற்றிப் பேசுகிறார் இளங்கோ.[24] அதற்கு உரையெழுத வரும் அடியார்க்கு நல்லார் இருவகைக் கூத்துகளாய்ச் சாந்தி, விநோதம் எனும் இரண்டைச் சுட்டுகிறார். இவற்றுள் சாந்திக் கூத்தின் ஒரு வகையாகச் சொக்கம் சொல்லப்படுகிறது. 'சொக்கமென்றது சுத்த நிருத்தம்; அது நூற்றெட்டுக் கரணமுடைத்து' என்பார் அடியார்க்கு நல்லார்.[25] இந்த சொக்கத்தைத்தான் தாண்டவ லட்சணத்தின் கீழ் நாட்டிய சாத்திரம் விளக்குகிறது.[26] இறைவனும் காளியும் ஆடிய ஆடலில் சொக்கம் சிறப்பிடம் பெற்றதைப் பதிக வரியில் பதிவு செய்து அதன் வழி, ஏழாம் நூற்றாண்டு ஆடற்கலை அமைப்பியலை சம்பந்தர் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

இந்தச் சொக்கத்தின் சில கூறுகளை மாமல்லை ஒலக்கணேசுவரர் கோயிலிலும், காஞ்சியிலுள்ள மாதங்கேசுவரர், முக்தீசுவரர், கயிலாச நாதர், பிறவாதான் ஈசுவரம், இறவாதான் ஈசுவரம், ஐராவதீசுவரர் போன்ற திருக்கோயில்களிலும் பல்லவச் சிற்பிகள் பார்வைக்கு விருந் தாக்கியுள்ளனர். விருச்சிகம், அர்த்த ஸ்வஸ்திகம் போன்ற கரணங் கள் பேரளவுச் சிற்பங்களால் பெருமைப்படுத்தப்பட்டுள்ளன. பாண்டி யர்கள் சதுரத்தையும் அர்த்த ஸ்வஸ்திகத்தையும் போற்றியுள்ளனர். பின்னால் வந்த சோழர்களோ என்றென்றும் அழியாத, சொக்க வைக்கும் சிற்பங்களாய்ச், சொக்கத்தின் ஒவ்வொரு கரணத்தையும் படம் பிடித்தனர். நித்த விநோதரான முதலாம் இராசராசரின் ராஜ ராஜீசுவரம் இந்தப் பணியின் முத்தாய்ப்பாய் அமைந்துள்ளது.

நாட்டிய சாத்திரத்தில் பரதர் காட்டும் மரபைத் தம் பதிகத்தில் சொக்கத்தைக் குறிப்பிட்டதன் வாயிலாய் உறுதிப்படுத்துகிறார் சம்பந்தர். இந்தச் சொக்கம் என்ற சொல்லுக்குச் சொர்க்கம் என்று தேசிகரவர்கள் பொருள் கண்டிருப்பது பொருத்தமாகத் தெரியவில்லை. ஏனென்றால் மூன்றாம் திருமுறையில் சொக்கம் மிகத் தெளிவாக ஆடல் பொருளைத் தந்து நிற்கிறது.

> ''சொக்கமது ஆடியும் பாடியும் பாரிடம்சூழ்தரும்
> நக்கர் ''[26A]

இந்தச் சொக்கத்தைப் பற்றிய குறிப்பு திருஒற்றியூர் சிவன் கோயில் கல்வெட்டிலும் இடம் பெற்றுள்ளது. 'பதியிலார் சொக்கமாடும் பொழுது இடபத் தளியார் பாடக் கடவார்களாகவும்' என்று பேசும் இராசநாராயண சம்புவரையரின் ஐந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, சொக்கமாடும் முறை பதின்மூன்றாம் நூற்றாண்டு வரையிலும் தொடர்ந்திருந்ததை நிறுவுகிறது.[26B]

சொக்கத்தை அடுத்து நிருத்தம் என்ற கலைச் சொல்லை சம்பந்தர் பயன்படுத்துகிறார். இச்சொல்லால் இறைவனையும் நிருத்தன் என்று குறிக்கிறார். இதையே நாவுக்கரசர் 'நிருத்தனார் நிருத்தஞ்செய்ய' என்பார். இந்த நிருத்தம் என்ற சொல் சொக்கத்திற்கான மாற்றுப் பெயராக இன்று சில ஆடற் கலைஞர்களால் பயன்படுத்தப்படுகிறது.[27] சம்பந்தர் இரண்டையும் வேறுபடுத்திக் காட்டியிருப்பது நினைக்கத் தகுந்தது. சொக்கத்தில் அழகிய உடல் அசைவுகளுக்கே முதலிடம். கரணங்கள் இப்படிப்பட்ட அசைவுகளால் அமைந்தவை.

சம்பந்தர் காலத்துச் சொக்கம், அடியார்க்கு நல்லார் காலத்தில் சுத்த நிருத்தமாகி இன்று சுத்தத்தை இழந்து நிருத்தமாகி நிற்கிறது.

சம்பந்தர் குறிப்பிடும் நிருத்தம், நிருத்தமென்ற பெயரிலேயே தொடர்ந்து வழங்கியது. சிலப்பதிகாரத்தில் அரும்பத உரைகாரரும் அடியார்க்கு நல்லாரும் இச்சொல்லை மூன்று இடங்களில் பயன்படுத்துகிறார்கள்.[28] சொக்கமான சுத்த நிருத்தத்திற்கும், நிருத்தத்திற்கும் உள்ள வேறு பாடு அவிநயம்தான். இந்த நிருத்தமே இன்றைய ஆடற் கலைஞர்கள் சிலரால் நிருத்தியம் என்றழைக்கப்படுகிறது.[29]

சிவபெருமானும், காளியும் கரணங்களாலான சொக்கமும் நிகழ்த்தி னர். அவிநயம் கூட்டிய நிருத்தமும் நிகழ்த்தினர். இந்த இரண்டு ஆடற் பிரிவுகளிலும் அம்மை அத்தனைத் தொடர்ந்ததாலேயே, சொக்கத்தே நிர்த்தத்தே தொடர்ந்த மங்கையென்றார் சம்பந்தர். அதுவும் அம்மை புகைந்தெழுந்த சண்டத் தீப்போல் அல்லவா ஆட்டத் தைத் தொடங்கியிருக்கிறார். அதனால்தானோ என்னவோ 'கத்தி வரும் கடுங்காளி' என்று இரண்டாம் திருமுறையில் பிரமபுரப் பதிகத் தில் மீண்டும் ஒருமுறை குறிக்கிறார்.[30]

சிவபெருமானும் காளியும் ஆடற்களத்தில் இருப்பதை அப்பரும் திருமூலரும் கூடக் குறிக்கிறார்கள். சைவம் எழுச்சியுறத் தொடங்கிய காலத்தில் ஆடல் தலைமை அம்மையிடமிருந்து அய்யனுக்கு மாற்றப் பட்டதற்கான சான்றுகளே இப்பெருமக்களின் இந்த வைர வரிகள்.

உடன் ஆடியவர்கள்

கானிடை ஆடிய கருத்தராம் சிவபெருமானைக் கண்டு மகிழ்ந்து சொக்கத்தே நிர்த்தத்தே தொடர்ந்த மங்கை போல, விண்ணோர் பரவத் தேவர் திசை வணங்கச் சுழன்றாடும் இறைவனின் சுந்தரத் திருநடம் கண்டும் களித்தும் தமை மறந்த நிலையில், உடனிருப்போரும் ஆடத் தொடங்குகின்றனர். பேய்களும், பூதங்களுமாய்க் கூட்டம் கூட்டமாய் ஆட்டம்.

'' காடும்சுடலையும் கைக்கொண்டுஎல்லிக் கணப்பேயோடு
ஆடும்பழையனூர் ''[31]

'' கானடைந்த பேய்களோடு பூதம்க லந்துடனே
மானடைந்த நோக்கிகாண மகிழ்ந்தெரி ஆடல்என்னே ! ''[32]

'' சுடலையின் ஆடுவர் . . . . பேயுடன் ஆடுவர் ''[33]

இந்தப் பூதங்களின் அழகுத் திருநட அவிநயக் கோலங்களைக் காணச் சிறந்த இடம் அத்யந்தகாமராம் இராசசிம்மப் பல்லவர் எடுத்த கயிலாச நாதர் கோயில்தான். கருவறையின் மேற்குத் தாங்கு தளத்தில்

வரிசையாய்ப் பூதங்கள். இவற்றுள் சில கரணக் கோலங்களில்; சில இடைப்பட்ட ஆடல் நிலைகளில்; சில போர்க் கருவிகளுடன். பெரும் பாலான சோழர் காலத்து மையக் கோயில் வலபிப் பகுதிகளிலும் இந்தப் பூத ஆடல்களைப் பார்க்கலாம்.

இறைவனோடு இறைவியும் ஆடியிருக்கிறார். இருவரும் தனித் தனியாக நின்றும் ஆடியுள்ளனர். ஒன்றிணைந்து, ஈருடல் கலந்த ஒரு வடிவாய் அம்மையப்பர் கோலத்திலும் ஆடியுள்ளனர். இறைவனோடு ஆடிய இறைவி பாடக மெல்லடிப் பாவையாம்.

'' மலையான் மகளோடும் . . . . . படுகாட்டு எரியாடும் '' [34]

'' வரியார்புலியின் உரிதோலுடையான் மலையான்மகளோடும்
பிரியாதுடனாய் ஆடல்பேணும் '' [35]

'' வார்உறு மென்முலைநல் நுதல் ஏழையொடு ஆடுவர் '' [36]
என்று தனித்தனியே ஆடுவதைப் பாடும் சம்பந்தர், அம்மையப்பராய் இருவரும் ஆடுவதைத்,

'' தேனொத்தனமென் மொழிமான்விழியாள் தேவிபாகமாகக்
கானத்திரவில் எரிகொண்டாடும் கடவுள் '' [37]

'' பந்தண்விரலாள் பாகமாகப் படுகாட்டெரியாடும் '' [38]

என்றெல்லாம் குறிப்பிட்டு, இறைவன் அரையில் கச்சாய்க் கட்டி யிருந்த பாம்பும் அவருடன் ஆடியதாகக் கூறுகிறார்.

'' ஆடரவுஆட ஆடும்எம்அடிகள் '' [39]

இசைக்கருவிகள், பாடல், பாடுநர்

ஆடலுக்கு மிகத் தேவை தாளம். அந்தத் தாளத்தையும், ஓசை நயத்தையும் கூட்டித் தரப் பயன்பட்ட கருவிகளைச் சம்பந்தர் பட்டிய லிடுகிறார். முழவம், மொந்தை, துடி, பறை, உடுக்கை, தக்கை, கொடுகொட்டி என்னும் தோல் கருவிகளும், சிறுகுழல், குழல் முதலிய துளைக் கருவிகளும், யாழ், வீணை முதலிய நரம்புக் கருவிகளும், தாளம் என்னும் கஞ்சக் கருவியும் இயங்கி இசை பொழிய இனிதே நிகழ்ந்தது இறையாடல். ஒவ்வொரு கருவியின் இயக்கமும் உரிய சொற்களால் உணர்த்தப்பட்டுள்ளமை தமிழின் வளத்தையும் சம்பந்த ரின் இசை ஞானத்தையும் வெளிப்படுத்துவதாய் உள்ளது. முழவின் இயக்கத்தைக் குறிப்பிடும்போது,

'' துடிக ளோடு முழவம் விம்மவே ''[40]

'' மண்ணார் முழவதிர '' [41]

'' விண்கொள் முழவதிர '' [42]

என்று சொற்களைப் பெய்யும் சம்பந்தர், அதே முழவம் சற்றுக் குறைந்து (மந்த ஸ்தாயியில்) ஒலித்தபோது 'இயம்ப' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்.

'' மந்தமுழவம் இயம்ப ''[43]

அண்ணாமலைப் பதிகத்தில் முழவையே மழலை முழவம்[44] என்று குறிப்பிடுபவர் திருச்சிராப்பள்ளியைப் பாடும்போது, மந்தம், மழலை இரண்டையும் சேர்த்து,

'' மந்தம் முழவம் மழலை ததும்ப '' [45]

என்று பேசுகிறார். மந்த ஸ்தாயியில் அடிக்கப்படும் முழவின் பொருள் விளங்கா ஒலி, சொல் தூய்மையில்லா முழவொலி என்றெல்லாம் இதற்குத் தேசிகர் பொருள் தருகிறார். இசையறிஞர்கள் இந்த இசைக் குறிப்புகளையெல்லாம் ஆய்வு செய்து விளக்கினால் பெரும்பயன் விளையும்.

மொந்தை, தக்கை, பறை இயக்கப்படும் இடங்களில் 'கொட்ட' என்ற சொல்லைப் பயன்படுத்தும் சம்பந்தர், தக்கையை இறைவன் பொக்கணப் பையில் வைத்துக் கொண்டு சென்றதாகவும் ஓரிடத்தில் குறிப்பிடுகிறார்.[46] இந்தத் தக்கையையும் மொந்தையையும் இறைவனே கொட்டி இயக்கியதாகவும் பிரமபுரம் பதிகத்தில் சொல்கிறார். பறை வாரால் கட்டப்பட்டிருந்ததைக் காட்டுபவர், கொட்டும் பறையின் தாளத்திற்கேற்ப இறைவன் அனலேந்தி ஆடியதை,

''கொட்டும் பறைசீரால் குழும அனலேந்தி
நட்டம் பயின்றாடும் '' [47]

என்னும் வரிகளால் நல்லூர்ப் பதிகத்தில் பதிவு செய்துள்ளார்.

குழல்கள் பல அளவின போலும்! அதனால்தான் சிறுகுழல், குழல் என்று இருவகையின காட்டுகிறார் சம்பந்தர். பல்லவ, சோழர் காலச் சிற்பங்களிலும் பல அளவுகளில் அமைந்த குழல்களைப் பூதங்கள் வாசிக்கக் காணலாம். தம் உருவை மீறிய மிக நீண்ட குழலைக்கூட சார்ங்கபாணி கோபுரப் பூதமொன்று வாசித்திடும் அழகைக் குடந்தை செல்வோர் பார்க்க முடியும். இந்தக் குழலிசையைக் குழலின் ஓசை

யென்று குறிக்கும் சம்பந்தர் ஓரிடத்தில் 'துளை பயிலும் குழல்' என்று அதை இயக்கும் முறையைச் சொல்லி, வடுகூரைப் பாடும் இடத்தில் 'பறையும் அதிர் குழலும்' என்று குழலில் எழுப்பக்கூடிய ஒலி அதிர்வு களையும் அடையாளம் காட்டுகிறார்.

சம்பந்தரின் பதிகங்களில் யாழ் பல இடங்களில் இடம் பெற்றாலும், இரண்டு இடங்களில் மட்டும் அதன் இயக்கத்தையும், ஒலியையும் சுட்ட, 'முரல' என்ற சொல் கையாளப்படுகிறது.

> ''இன்குரல் இசைகெழும் யாழ்முரலத்
> தன்கரம் மருவிய சதுரன்நகர்'' 48
>
> ''துளைபயி லும்குழல் யாழ்முரல'' 49

முல்லை யாழையும், பாலை யாழையும் குறிப்பிடும் சம்பந்தர், யாழை இறைவனே இசைத்ததாகவும் சிவபுரம் பதிகத்தில் பேசுகிறார். யாழிசைக்கும் சிவபெருமானைச் சிற்ப வடிவில் இதுநாள் வரையும் காணமுடியவில்லை. வீணையேந்திய வடிவினராய்ப் பல அற்புதக் கோலங்களில், கோயிலின் பல பகுதிகளில் நின்றும், அமர்ந்தும் காட்சி தரும் சிவபெருமானை யாழோடு காண முடியாதிருப்பது, கோயில்கள் பெருகிய சோழர்கள் காலத்தில் யாழ் வழக்கிழந்ததைக் காட்டுவதாகக் கொள்ளலாம்.

'பாடலோடு ஆடல் பாணி பயின்ற பொய்யர்', 'படிகொள் பாணி பாடல் பயின்றாடும்' என்னும் வரிகள் இறைவன் தாளத்தில் தேர்ந்தவர் என்பதைக் காட்டும். 'பல்லியல் பாணி பாரிடம் ஏத்த' என்பதால் இறைவனைச் சூழவரும் பூதகணங்களும் தாளத்தில் தேர்ந்தவை என்பது வெளிப்படை. திருமுறையில் குறிக்கப்படும் இசைக்கருவிகளையெல்லாம் இயக்கி இன்னொலி எழுப்பும் கலைஞர்கள் கணங்கள்தான் என்பதால் அவை தாளத் தேர்ச்சி கொண்டிருத்தல் இயல்பானதே. பூதங்கள் குழல் இசைத்ததாகப் புகலூர்ப் பதிகத்திலும், கல்லவடம் என்னும் பறையை முழக்கி ஆடியதாக சீகாழிப் பதிகத்திலும், பறையும் சிறுகுழலும் யாழும் பயிற்றியதாய் ஆலங்காட்டுப் பதிகத்திலும், கொடுகொட்டியும் குடமுழாவும் வாசித்ததாகத் திருவெங்குரு பதிகத்திலும் குறிக்கும் சம்பந்தர், காடமர் பேய்கள் குழலிசைத்தும், முழவிசைத்தும் பாடியதாகவும், அதை இறைவன் விரும்பி மகிழ்ந்ததாகவும் சொல்கிறார்.

இறைவனின் ஆடல் தாளத்துக்குச் சொக்கமாகவும் நிகழ்ந்தது. பாடலுக்குப் பொருள் காட்டி அவிநயித்த நிலையில் நிருத்தமாகவும் தொடர்ந்தது. பாடலைப் பாடியவர்கள் வரிசையில் பூதகணங்களே முன்னணியில் நிற்கின்றன,

'' பூதம் பாடப் புறங்காட் டிடையாடி ''[50]

'' உரமன்னுயர்கோட்டு உலறுகூகை அலறுமயானத்தில்
இரவில்பூதம் பாடஆடி ''[51]

'' பந்தமுடைய பூதம்பாட ''[52]

'' அந்திச் சுடுகானில் புடைநவில்பூதம் பாடநின்றாடும் ''[53]

'' பாரிடம்பாட ''[54]

'' பூதஇ னப்படைநின்று இசைபாடவும் ஆடுவர் ''[55]

இந்தப் பூதங்கள் இறைவன் ஆடும்போது பாடியதோடு, அவர் உலாப் போந்த நிலையிலும் உடன் சூழ்ந்து பாடிச் சென்றனவாம்.

'' பக்கம்பல்பூதம் பாடிடவருவார் ''[56]

'' பொங்கார்சடையர் புனலர்அனலர் பூதம்பாடவே
தம்காதலியும் தாமும்உடனாய்த் தனியோர்விடையேறி ''[57]

இப்பூதங்கள் பாடிய பாடலின் வகையும் பாச்சிலாச்சிராமத்துப் பதிகத்தில் கிடைக்கிறது.

'' மோந்தைமுழாக்குழல் தாளமொர்வீணை
முதிரவோர் வாய்மூரிபாடி
ஆந்தைவிழிச்சிறு பூதத்தர் ''[58]

இப்படிப் பூதங்கள் பாடும் காட்சியைத் திருமுறைகள் வழி கண்டுணர்ந்த சோழச் சிற்பிகள் தங்கள் சிற்பங்களிலும் ஓவியங்களிலும் அதைப் பயன் படுத்திக்கொள்ளத் தவறவில்லை. ஒரு கையை உயர்த்திப் போற்றும் மெய்ப்பாட்டில் கொண்டிருக்கும் பூதகணங்களை உற்றுக் கவனித்தால் அவற்றின் இதழ்கள் இலேசாய்த் திறந்திருப்பதைக் காணமுடியும். தஞ்சை ராஜராஜீசுவரத்திலும், குடந்தை சார்ங்கபாணியிலும் பாட் டெடுத்துத் தரும் இத்தகு பூதங்களைச் சந்திக்கலாம். மகர தோரணங் களில் ஆடும் இறைவனின் கீழ் நிற்கும் பூத கணங்களையும் பாடுவன வாய்ப் பார்க்க முடியும். சில ஆடவல்லான் செப்புத் திருமேனிகளிலும் இசைபாடும் இனிய சூழலில் இப்பூத கணங்களைக் காணலாம்.

பூதங்கள் பாடும் போது பேய்களால் வாளா இருக்க முடியுமா? இறைவன் ஆடலுக்கு அவையும் பாட்டெடுத்துத் தந்தன.

'' பேயாயின பாடப்பெரு நடமாடிய இறைவன் ''[59]

வண்டினங்கள் வந்து பாடிய நந்திசைக்கும் பெருமான் விருப்போடு ஆடியிருக்கிறார்.

'' மைந்தனி சோலையின்வாய் மதுப்பாய்வரி வண்டினங்கள் வந்து
நந்திசை பாடநடம் பயில்கின்ற நம்பன் '' 60

கண்டும், மகிழ்ந்தும், உடன் ஆடியும், ஒன்றாகி ஆடியும், இந்த ஆடற் காட்சிகளில் இணையற்ற பங்கேற்கும் உமாதேவி பாடவும் செய்கிறார்.

'' பூதம் புடைசூழப் புலித்தோல் உடையாகக்
கீதம் உமைபாடக் கெடில வடபக்கம்
வேத முதல்வன்நின் றாடும்வீரட் டானத்தே '' 61

இறைவி பாட இறைவன் ஆடும் பேற்றினைப் பெற்றது எண்பத்தெட்டு திருத்தலங்களில் திருஅதிகை மட்டுமே.

எல்லோரும் பாட ஆடிய இறைவன், தானே பாடிக்கொண்டும் ஆடியிருக்கிறார்.

'' பாடல் ஆடல் பயிலும் பரமரே '' 62

'' படிகொள் பாணி பாடல் பயின்றாடும் '' 63

'' நுணங்கு மறைபாடி ஆடி '' 64

ஆடல் இல்லாத நேரத்தும் இறைவன் பாடியிருக்கிறார். அந்தப் பாடற் கலையில் மிக வல்லவராயும் இருந்திருக்கிறார். அதனால்தான்,

'' பல்லிசை பாடலினான் உறைகோயில் '' 65

'' பண்டிசை பாடலினான் உறைகோயில் '' 66

என்றெல்லாம் சம்பந்தர் பாடுகிறார். இறைவன் மறைகளைப் பாடி மகிழ்ந்ததையும், அந்தப் பாடலுக்குப் பூதகணங்கள் பறை, சிறுகுழல், யாழ், கொடுகொட்டி, குடமுழா போன்ற இசைக்கருவிகளை இயக்கி மகிழ்ந்ததையும் ஆலங்காட்டுப் பதிகத்திலும், வெங்குரு பதிகத்திலும் விளக்கி உரைக்கிறார்.

'' பறையும்சிறுகுழலும் யாழும்பூதம் பயிற்றவே
மறையும்பலபாடி மயானத்துறையும் மைந்தனார் '' 67

'' . . . . விடையினர் பூதம்
கொடுகொட்டிகுடமுழாக் கூடியுமுழவப்
பண்திகழ்வாகப் பாடியொர்வேதம்
பயில்வர் '' 68

இறைவனின் பாடலுக்கும் ஆடலுக்கும் குடமுழா எனும் தோல் கருவி வாசிக்கப்படுவதைப் பிற திருமுறையாளர்களும் கூறியுள்ளனர். இறைவனின் ஆடற் சிற்பங்களிலும், வார்ப்புத் திருமேனிகளிலும் இக் குடமுழவைக் காணமுடிகிறது. ஒரு முக முழவாகவும், ஐமுக முழவாக வும் இவ்விசைக் கருவி சோழர் மற்றும் நாயக்கர் சிற்பங்களில் பல அளவுகளில் காட்டப்பட்டுள்ளது. ஆனால் கொடுகொட்டி என்னும் இசைக்கருவியை சம்பந்தர் வாயிலாக முதன் முறையாகக் கேள்விப்படும் போது வியப்பேற்படுகிறது. சிலப்பதிகாரம் ஓர் ஆடல் வகையாக அறி முகப்படுத்தும் கொடுகொட்டியின் பெயரால் ஓர் இசைக்கருவி சம்பந்தர் காலத்தில் இருந்தது போலும். அதனால்தான் இரண்டாம், மூன்றாம் திருமுறைகளிலும் இவ்விசைக் கருவி பற்றியும், இதை இயக்கிய முறை பற்றியும் சம்பந்தர் தெளிவுபடச் சொல்கிறார்.

'' கொடுகொட்டிவீணைமுரல '' 69

'' கொடுகொட்டி கொண்டொருகைத்
தேய்த்தன்று '' 69A

சங்க இலக்கியங்களோ, இரட்டைக் காப்பியங்களோ இவ்விசைக் கருவி பற்றிப் பேசவில்லை. எனவே கல்லவடம் போல் கொடுகொட்டி யும் பக்தி காலத்தில் வழக்கிற்கு வந்த இசைக்கருவி போலும். அரங் கேற்றுக் காதை உரையில் தோல் இசைக் கருவிகளாக முப்பத் தொன்றைப் பட்டியலிடுகிறார் அடியார்க்கு நல்லார்.70 அந்த வரிசையிலும் இவ்விரு கருவிகளும் இடம் பெறவில்லை. கல்லவட மாவது பேரகராதியில் குறிக்கப்பட்டுள்ளது. கொடுகொட்டிக்கு அந்த வாய்ப்புமில்லை. சம்பந்தர் காலத்தில் வழக்கிற்கு வந்த இசைக்கருவி தொடர்ந்து பயிலப்படாமையின் வழக்கிழந்தது போலும்! இலக்கியங் களில் தொடர்ந்து தேடினால் இதுபற்றி மேலும் குறிப்புகள் கிடைக்கலாம்.

கொடுகொட்டி, குடமுழா, யாழ் இசைக்க மறைகளைப் பாடிய இறைவன் ஏழிசையும் பாடியிருக்கிறார்.

''வேதமொடு ஏழிசை பாடுவார்''71

''எச்சன் ஏழிசையோன்''72

ஏழிசையறிஞர் நானாவிதமாகவும் பாடியதை,

''நகுவெண் தலையேந்தி நானாவிதம் பாடி''73

என்று போற்றும் சம்பந்தர், இறைவன் பிச்சையேற்கச் சென்ற போது கூடப் பாடிச் சென்றதையும், இசைக் கருவிகளோடு சென்றதையும் காட்டத் தவறவில்லை.

''முலையாழ்கெழுவ மொந்தைகொட்ட முன்கடைமாட்டயலே
நிலையாப் பலிதேர்ந்து அய்யம்வவ்வாய்''[74]

இறைவன் ஆடலுக்குப் பாடலாய் மறைகள் அமைந்ததையும் அவற்றைப் பாடியவர்கள் பண்ணோடு பாடியதையும்,

''நுணங்கு மறைபாடி ஆடி''[75]

''மண்ணார் முழவதிர முதிரா மதிசூடிப்
பண்ணார் மறைபாடல் பரமன் அதிகையுள்
விண்ணோர் பரவநின்று ஆடும்''[76]

என்று ஆலங்காடு மற்றும் அதிகைப் பதிகங்களில் தெரிவிக்கிறார் சம்பந்தர்.

இறைவனின் ஆடல் அமைப்பு

நடம், ஆடல், கூத்து என்னும் பொதுப் பெயர்களால் சுட்டப்படும் இறைவனின் ஆடல் ஒரே ஒரு இடத்தில் மட்டும் 'புயங்கராக மாநடம்' என்றழைக்கப்படுகிறது.[77] இதை புஜங்க நடனம் அதாவது பாம்பு நடனம் என்று தேசிகர் கொள்கிறார். இந்தப் பொருள் சரியானதாகவே தோன்றுகிறது. பாம்போடு தொடர்புடைய மூன்று கரணங்களை பரதரின் நாட்டிய சாத்திரத்தில் பார்க்கிறோம். புஜங்காஞ்சிதம், புஜங்கத்ராசிதம், புஜங்கத்ரஸ்த ரேசிதம் என்னும் அம்மூன்றனுள் புஜங்கத்ராசிதக் கரணத்தை சகளாதிகாரம் என்னும் ஆகமம் தாருகாவனக் கதையோடு இணைத்து இறைவன் ஆலமர நிழலில் புஜங்கத்ராசிதத்தையே ஆடியதாகப் பேசுகிறது.[78] புஜங்க வகைக் கரணங்கள் மூன்றிற்குமான கால்நிலை ஒன்றேதான். அந்தக் கால்நிலையே ஆனந்தத் தாண்டவத்திலும் அமைந்துள்ளது. புஜங்கக் கரணங்களின் காலமைப்பைத் தேர்ந்து கொண்டு திருமுறையாளர்களும், பத்திமை பூண்டோரும், சிற்பிகளும் தந்த பங்களிப்பால் பரிணமித்ததே இன்று நாம் காணும் ஆனந்தத் தாண்டவத் திருக்கோலம். இந்தப் பரிணாம வளர்ச்சியைச் சிற்ப வடிவங்களில் மிகச் சிறப்பாகப் பார்க்க முடிகிறது. சம்பந்தர் பாடும் புயங்கராக மாநடத்தாரை, சகளாதிகாரம் காட்டும் புஜங்கத்ராசிதரைச் சீயமங்கலம் குடைவரையில் பல்லவர் படைப்பாய்க் காணலாம். இவர் படிப்படியாக மாறி ஆனந்தத் தாண்டவராவதைத் திருஎறும்பியூர், திருப்புத்தூர், திருச்சென்னம்பூண்டி, திருப்புறம்பியம், திருப்பழனம், திருநல்லம் ஆகிய கோயில்களில் கண்டு களிக்கலாம்.[79]

கழல் ஆர்க்கப், பாதச் சிலம்பார்க்கக் கோலச் சடை தாழ, துணியின் உடை தாழ, மண் பொடி கொண்டு, எரித்தோர் சுடலை நுண்

பொடிச் சேர ஆடும் இறைவனின் அசைவுகள் சிலவற்றை சம்பந்தர் பதிகங்களால் அறிய முடிகிறது. எண்டோள் இறைவனாய் சம்பந்தர் போற்றும் சிவபெருமான் இரவில் ஆடுகையில் தோள் பெயர்த்து ஆடினாராம்; கனலேந்திக் கைவீசி ஆடினாராம். அதனாலேயே அவரைப் பழனப் பதிகத்தில் சம்பந்தர் கை ஆடலினார் என்றழைக்கிறார். மயானத்தில் அவர் ஆடிய ஆடலை,

''மாண்டார் சுடலைப் பொடிபூ சிமயானத்
தீண்டா நடமா டியவேந்தன்.''[80]

என்று புகழ்கிறார். சிவபெருமானின் அண்டப் பேரண்ட ஆடலை யாராலும் முழுவதுமாய்ப் படம் பிடித்துவிட முடியாது என்ற பேருண்மையை முதல் திருமுறைப் பதிகங்களால் உணரவைக்கும் சம்பந்தர், தம் காலத்தில் தமிழகத்தே வாழ்ந்த மங்கையர் பயின்றாடிய ஆடலைப் பற்றியும் ஆறு பதிகங்களில் சொல்கிறார்.

மங்கையர் ஆடல்

சங்க இலக்கியங்களும், காப்பியங்களும் காட்டும் மக்கள் ஆடலை பக்தி இலக்கியங்களும் விடாது போற்றுவதை, சம்பந்தர் ஆறு பதிகங்களில் அதற்கு இடமளித்திருப்பதிலிருந்து உணரலாம். சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரையின் கடை வீதிகளில் பூவண்ண மேனியெழில் கொண்ட இள நங்கையர் பொன்னும், மணியும் கொழித்தெடுத்து ஆடினராம். முழவம் அதிர மடப்பம் நிறைந்த மங்கையர் ஆடும் இடமாய் அன்பிலாந்துறை காட்டப்படுகிறது. குடந்தைக் காரோணத்தில் தேனார் மொழியார் திளைத்தாடித் திகழ்கின்றனராம். முதுகுன்றத்தில் எங்கும் விழா ஒலி. அத்துடன் ஆங்காங்கே ஆடல் நிலையங்களில் மகளிர் முழவோடு இசை பாடி ஆடல் செய்யும் ஒலிகளும் நிறைந்துள்ளன.

''விழவோடொலி மிகுமங்கையர் தகும்ஆடகசாலை
முழவோடிசை நடமுன்செயும் முதுகுன்றடைவோமே''[81]

பாம்புரத்திலோ வேறோர் படப்பிடிப்பு. அங்கே ஆசிரியர்களாய் மயில்கள்; பயில்கிறார்கள் பெண்கள்.

''மஞ்சுதோய் சோலை மாமயிலாட
மாடமாளிகைதன்மேல் ஏறிப்
பஞ்சுசேர் மெல்லடிப் பாவையர் பயிலும்''[82]

அய்யாற்றைப் பாடும்போது சம்பந்தருக்கு மகிழ்ச்சிப் பெருக்கு. ஆடற் கலை வளர்த்த நிலமல்லவா! அதனால்தான் நான்கு பாடல்களில் மக்கள் ஆடலுக்கு மகுடம் சூட்டுகிறார்.

இறைக்கோயிலை வலம் வரும் பெண்கள் ஆடி மகிழ்கிறார்கள். அப்போது முழவம் அதிர்கிறது. அருகிருந்த மந்திகளோ முழவொலியை மழைக்கான இடியென்று அஞ்சி மரத்திலேறி முகிலைத் தேடுகின்றன. அய்யாற்றின் பிறிதோர் இடத்தில் தேரோடும் வீதிகளைக் காட்டுகிறார். அந்த அகலமான தெருக்களில் ஆங்காங்கே ஆடல் அரங்குகள். அந்த அரங்குகளில் சேயிழையார் ஆடல் பழகுகின்றனர். அவர்தம் ஆடலுக்குக் காந்தாரப் பண்ணில் இசையமைத்துக் காரிகையர் பாடுகின்றனர். ஆடும் பெண்களோ தாளம் தப்பாது 'தேந்தாம்' என்று பாதம் பதித்து அடவு காத்து அழகாய் ஆடுகின்றனர்.

வேறோர் இடத்தில் கூத்து. இங்கே ஆடலாசிரியர் நட்டுவக் கோலால் தட்ட வளையணிந்த நங்கையர்கள் கூத்திடுகின்றனர்.

''கோலோடக் கோல்வளையார் கூத்தாடக்
குவிமுலையார் முகத்தினின்று
சேலோடச் சிலையாடச் சேயிழையார்
நடமாடும் திருவையாறே''[83]

இப்பாடலில், ஆடல் மகளிர் விழிகளை நாற்புறமும் சுழற்றிச் செய்யும் விழியசைவுகள் (திருஷ்டி பேதம்) குறிப்பாய்ச் சுட்டப்படுகின்றன.

ஒரே பதிகத்தில் பண், பாடல், ஆடல், பயிலுமிடம், ஆடுமிடம், அரங்குகள், அவிநயக் கோல் என்று எத்தனைச் செய்திகளை எடுத்து வைத்துள்ளார் இந்த இளம் ஞானர். வேறெங்கும் பேசாத செய்திகளையெல்லாம் அய்யாற்றைப் பாடும்போது மட்டும் அவர் வரிசைப் படுத்தித் தருவதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. அய்யாறு அப்படிப் பட்ட தலம். அதனால்தான் 'ஆடல் அமர்ந்து உறைகின்ற அய்யாறு' என்றார் நாவுக்கரசர். பின்னாளைய சோழர் காலத்துக் கல்வெட்டுகளும் இங்கிருந்து ஆடல் வளர்த்த அரிவைகளைப் பற்றிப் பெருமிதத்தோடு பேசுகின்றன. கிடைத்தற்கரிய தலைக்கோலிப் பட்டம் பெற்ற பல ஆடலரசியர்கள் வாழ்ந்து கலை வளர்த்த மண்ணல்லவா. அப்பர், சம்பந்தருக்கு முன்பிருந்தே இந்தக் காவிரிக்கரை கலை கமழ்ந்த நிலமானது. இது பதிக உண்மை; கல்வெட்டு சத்தியம்.

அடிக்குறிப்புகள்

1 மதுரைத் தமிழ்ப் பேரகராதி, இரண்டாம் பாகம், இ. மா. கோபால கிருஷ்ணக்கோன் வெளியீடு, பக். 91.

2 நான்காம் திருமுறை, தருமபுர ஆதீன வெளியீடு, 1957, பக். 557.

3 மதுரைத் தமிழ்ப் பேரகராதி, பக். 571.

4 முதல் திருமுறை, தருமபுர ஆதீன வெளியீடு, 1953, பக். 126.
5 மேற்படி., பக். 451.
6 மேற்படி., பக். 425.
7 ஸ்ரீ தத்துவநிதி, முதலாவது பாகம், சரசுவதி மகால் நூலக வெளியீடு, 1964, பக். 246.
8 சில்பரத்தினம், சரசுவதி மகால் நூலக வெளியீடு, 1989, பக். 359 - 360.
9 மயிலை சீனி. வேங்கடசாமி, எழுவகைத் தாண்டவம், சாந்தி நூலகம், சென்னை, 1967, பக். 124-128; தண்டபாணி தேசிகர், ஆடவல்லான், திருவாவடுதுறை ஆதீன வெளியீடு, 1967, பக். 135.
10 ஒப்பனை ஆகார்ய அபிநயத்துள் அடக்கம். பத்மா சுப்ரமணியம், பரதக் கலை கோட்பாடு, வானதி பதிப்பகம், சென்னை, 1985, பக். 123.
11 முதல் திருமுறை, பக். 183. 12. முதல் திருமுறை, பக்.326.
12A இரா. கலைக்கோவன், கரந்தைக் கூத்தனார், கட்டுரை, தினமணி கதிர், 10-10-92.
13 முதல் திருமுறை, பக். 14. 14. முதல் திருமுறை, பக். 37.
15 மேற்படி., பக். 301. 16. மேற்படி., பக். 333.
17 மேற்படி., பக். 355. 18. மேற்படி., பக். 249.
19 மேற்படி., பக். 352.
20 இரா. கலைக்கோவன், புதிய பார்வையில் சார்ங்கபாணி கோயிற் கரணங்கள், கட்டுரை, மகாமக மலர், 1992.
21 முதல் திருமுறை, பக். 60. 22. முதல் திருமுறை, பக். 195.
23 மேற்படி., பக். 356.
23A மூன்றாம் திருமுறை, தருமபுர ஆதீன வெளியீடு, 1955, பக். 574.
24 சிலப்பதிகாரம், தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு, 1985, காதை 3, வரி-12, பக். 57.
25 முதல் திருமுறை, பக். 80.
26 Natya Sastra, Translated by Adya Rangacharya, IBH Prakashana, Bangalore, 1986, PP. 17-22.
26A மூன்றாம் திருமுறை, பக். 49.
26B இந்தக் கல்வெட்டின் பாடம் வெளியாகவில்லை. அதனால் 27-5-93 அன்று திருஒற்றியூர்த் திருக்கோயிலுக்குச் சென்று இக் கல்வெட்டையும் இதனுடன் தொடர்புடைய ஏனைய கல்வெட்டு களையும் படித்துப் படியெடுத்தோம்.
27 Padma Subramaniam, Bharathas Art Then and Now, Bhulabhai Memorial Institute, Bombay-36, 1979, pp. 27-44.

28 சிலப்பதிகாரம், பக். 76, 88, 120.
29 பத்மா சுப்ரமணியம், பரதக் கலை கோட்பாடு, பக். 4.
30 இரண்டாம் திருமுறை, தருமபுர ஆதீன வெளியீடு, 1954, பக். 298.
31 முதல் திருமுறை, பக். 215. 32 முதல் திருமுறை, பக். 228.
33 மேற்படி., பக். 357. 34 மேற்படி., பக். 319.
35 மேற்படி., பக். 320. 36 மேற்படி., பக். 591.
37 மேற்படி., பக். 318. 38 மேற்படி., பக். 319.
39 மேற்படி., பக். 352. 40 மேற்படி., பக். 142.
41 மேற்படி., பக். 220. 42 மேற்படி., பக். 234.
43 மேற்படி., பக். 182. 44 மேற்படி., பக். 58.
45 மேற்படி., பக். 424.
46 இரா. கலைக்கோவன், பொக்கணம், கட்டுரை, கலைமகள் திங்கள் இதழ், டிசம்பர் 1992.
47 முதல் திருமுறை, பக். 387. 48 முதல் திருமுறை, பக். 479.
49 மேற்படி., பக். 32. 50 மேற்படி., பக். 264.
51 மேற்படி., பக். 308. 52 மேற்படி., பக். 333.
53 மேற்படி., பக். 432. 54 மேற்படி., பக். 432.
55 மேற்படி., பக். 589. 56 மேற்படி., பக். 194.
57 மேற்படி., பக். 321. 58 மேற்படி., பக். 211.
59 மேற்படி., பக். 82. 60 மேற்படி., பக். 448.
61 மேற்படி., பக். 221. 62 மேற்படி., பக். 138.
63 மேற்படி , பக். 142. 64 மேற்படி., பக். 217.
65 மேற்படி., பக். 466. 66 மேற்படி., பக். 466.
67 மேற்படி., பக். 216. 68 மேற்படி., பக். 338.
69 இரண்டாம் திருமுறை, பக்.399. 69A மூன்றாம் திருமுறை, பக்.485.
70 சிலப்பதிகாரம், பக். 105. 71 முதல் திருமுறை, பக். 590.
72 மேற்படி., பக். 556. 73 மேற்படி., பக். 399.
74 மேற்படி., பக். 292. 75 மேற்படி., பக். 217.
76 மேற்படி., பக். 220. 77 மேற்படி., பக். 250.
78 சகளாதிகாரம், சரசுவதி மகால் நூலக வெளியீடு, 1973, பக்.119-120.
79 இரா. கலைக்கோவன், ஆடவல்லான், வானொலிப் பொழிவு, 22-1-1993.
80 முதல் திருமுறை, பக். 149. 81 முதல் திருமுறை, பக். 71.
82 மேற்படி., பக். 194. 83 மேற்படி., பக். 568.
84 நான்காம் திருமுறை, பக். 31.

3. வல்லம் குடைவரைகளும் புதிய கல்வெட்டுகளும்

அர. அகிலா

பல்லவர் கலைமுறை ஆய்வுக்காக 1992 திசம்பரிலும், 1993 சனவரியிலும் மைய ஆய்வர்கள் மேற்கொண்ட களப் பயணங்கள் பரவலான பயன்களைத் தந்துள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை வல்லம் குடைவரைகளில் கண்டுபிடிக்கப்பட்ட பல்லவர் காலத்துத் தமிழ்க் கல்வெட்டுகள்.

செங்கற்பட்டு மாமல்லபுரம் நெடுஞ்சாலையில், செங்கற்பட்டிலிருந்து ஏறத்தாழ மூன்று கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது வல்லம். ஊரை அடைய நெடுஞ்சாலையின் இடப்புறம் பிரியும் மண் பாதை வழியே உள் செல்ல வேண்டும். மிகப் பின்தங்கிய நிலையில் காட்சியளிக்கும் இச்சிற்றூரின் மேற்கில் அமைந்துள்ள மலைக் குன்றில் மூன்று குடைவரைகள் உள்ளன. குன்றின் மேற் பகுதியில் ஒரு குடைவரையும், இடைப் பகுதியில் சிறிய அளவிலான குடைவரையொன்றும் வெட்டப்பட்டுள்ளன. இரண்டாம் குடைவரைக்குச் சற்று தள்ளி வட புறத்தே மற்றுமொரு சிறிய குடைவரை உள்ளது. இம்மூன்று குடைவரைகளும் மரபுவழி அறங்காவலர் திரு. செல்லப்ப குருக்களால் செம்மையாகப் பாதுகாக்கப்படுகின்றன. ஆசிரியர் பணியிலிருக்கும் செல்லப்ப குருக்கள் குடவரைகளைக் கதவுகள் அமைத்துப் பூட்டி வைத்திருக்கிறார். தேவையானவர்கள் செங்கல்பட்டிலிருக்கும் அவரது இல்லத்தை அணுகினால் உடன் வந்து குடைவரைகளைப் பார்ப்பதற்கு உதவுகிறார். பெரும்பாலும் நாள்தோறும் அவர் அல்லது அவர் மகன் இக்கோயில்களைக் காலை நேரத்தில் திறந்து வழிபாடு செய்வதை ஓர் ஒழுங்கு முறையாகக் கொண்டுள்ளனர். மிகக் குறைந்த வருவாய் உள்ள கோயிலென்றாலும் நல்ல முறையில் நடைமுறைகள் இருக்கின்றன.

முதற் குடைவரை

இங்குள்ள மூன்று குடைவரைகளுள் மேல் குடைவரைதான் அளவில் பெரியது. கருவறை, உள் மண்டபம், அதன் முகப்பு என அமைந்திருக்கும் இம்முதற் குடைவரை, குன்றின் கிழக்குப் பார்வையில் அமைந்துள்ளது. குடைவரைக்கு முன்னால் பலித்தளமும் நந்தியும் காணப்படுகின்றன. குடைவரை முகப்பின் இருபுறமும் உள்ள பாறைப் பிதுக்கங்களில் தேவகோட்டங்கள் வெட்டப்பட்டுள்ளன. வலப்புறக் கோட்டத்தில் பிள்ளையார் முற்றிலும் மாறுபட்டதொரு அமர்வில் காட்சிதர, இடப்புறக் கோட்டத்தில் சேட்டைத் தேவியின் வடிவம்

உள்ளது. வலப்புறக் கோட்டம் நன்கு திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டிருக்க, இடப்புறக் கோட்டம் சிறிய அளவினதாய், மேலோட்டமாகக் குடையப்பட்டுள்ளது. பிள்ளையார் வடிவத்தோடு ஒப்பிடும்போது சேட்டைத் தேவியின் வடிவம் பாராட்டும்படியாக இல்லை.



வல்லம் குடைவரைகளின் வெளித் தோற்றம்

இந்தப் பாறைப் பிதுக்கங்களை ஒட்டி, நன்கு உள்தள்ளிய நிலையில் குடைவரையின் முகப்பு அமைந்துள்ளதால், பாறையின் கீழ்ப்பகுதியே முகப்பின் முன்னுள்ள தரைத்தளமாய், ஒரு தாழ்வாரம் போல் சமன் செய்யப்பட்டுள்ளது. முகப்பின் மேற்புறம் நீட்டியிருக்கும் பாறைப்பகுதி சமன் செய்யப்பட்டிருந்தாலும் அது கபோதமாக வடிவம் பெறவில்லை. இந்த மேற்புற நீட்டல் குடைவரையின் முகப்பை மழைச் சாரல், வெயில் போன்றவற்றிலிருந்து பாதுகாக்கும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் முகப்பில் ஏராளமான துளைகள் இடப்பட்டுள்ளன. இதற்குச் சற்று மேலே பாறையின் பரப்பில் நெடுக 2 செ. மீ. உயரம், 2 செ. மீ. அகலத்திற்குக் குழிவு செய்துள்ளனர். குடைவரைக்கு முன்னால் மண்டபம் எழுப்பக் கருதியவர்கள் அம்மண்டபத்தை நிறுவ இத்துளைகளையும் குழிவையும் ஏற்படுத்தியிருக்கலாம்.[1]

குடைவரை முகப்பின் மையப் பகுதியில் இரண்டு முழுத் தூண்களும் பக்கச் சுவர்களையொட்டி இரண்டு அரைத் தூண்களும் உள்ளன. இவை தொடக்கக் காலப் பல்லவர் கலைமுறையை ஒட்டி சதுரம், கட்டு, சதுரம் என்ற அமைப்பில் உள்ளன. கீழ்ச்சதுரம் மேற் சதுரத்தைவிட சற்று உயரமானதாக உள்ளது. முழுத் தூண்களின் மேற் சதுரங்களின் முன்புறம் கிழக்கு முகமாகக் கல்வெட்டுகள் உள்ளன. தென்புறத் தூண்

சதுரத்தில் உள்ள கல்வெட்டு முதலாம் மகேந்திரவர்மரின் விருதுப் பெயர்களையும், வடபுறத் தூண் கல்வெட்டு விருதுப் பெயர்களுடன், குடைவரையை எடுத்தவர் பற்றிய தகவல்களையும் தருகின்றன. இந்த இரண்டாம் கல்வெட்டுக்குக் கீழே கோப்பெருஞ்சிங்கனின் கல் வெட்டு கட்டுப் பகுதியிலும் கீழ்ச் சதுரத்திலுமாய்க் காணப்படுகிறது. தூண்களின் போதிகைகள் தரங்க அமைப்பின்றி இலேசான வளை வுடன் மேல்நோக்கிய நிலையில் உத்திரத்தைத் தாங்குவதாய்க் காட்டப் பட்டுள்ளன.



முதற் குடைவரையிலுள்ள
மகேந்திரவர்மர் காலக் கல்வெட்டு

குடைவரையின் முன்புறம் திறப்பாக இருந்ததை மாற்றிப் பிற் காலத்தில் இந்தத் தூண்களுக்கிடையில் சுவரெழுப்பி மூன்று வாயில் களை அமைத்திருக்கிறார்கள். முழுத் தூண்களுக்கு இடைப்பட்ட சுவரில் அமையப் பெற்றுள்ள மைய வாயில் முதன்மை வாயிலாய்ச் சற்று வெளிவாங்கிய பிற்காலத்து நிலைகளுடன், தலைப்பில் சாலை அமைப்பு கொண்டு, உள்ளடங்கிய கதவுகளுடன், காணப்படுகிறது. நிலைகளின் முகப்பில் பக்கத்திற்கு எட்டுச் சிறு மாடங்கள் உள்ளன. பக்க வாயில்கள் இரண்டும் முழுத் தூணுக்கும் அரைத் தூணுக்கும் இடைப்பட்ட சுவரமைப்பில் எளிய நிலைகளுடன் அலங்காரமின்றிக் கதவுகளுடன் அமைக்கப்பட்டுள்ளன. குடைவரையின் முன்னால் நின்று பார்க்கையில், பல்லவர் காலக் கலையமைப்பாய்த் தேவகோட்ட அமைப்புகள் மட்டுமே காட்சியளிக்கின்றன. கதவுகளைத் திறந்து கொண்டு உள் நுழைந்த பிறகுதான் ஓர் அற்புதமான குடைவரை பிற்காலத் திருப்பணியாளர்களால் எப்படி அலங்கோலமாக்கப்பட் டுள்ளது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

செவ்வகமாக அமைந்துள்ள உள் மண்டபத்தின் பின் சுவர் மையப் பகுதியில் கருவறை குடையப்பட்டுள்ளது. கருவறையின் உட்புறச் சுவர்களும், மேற் கூரையும், உள் மண்டபத்தின் பக்கச் சுவர்களும் வெறுமையாக உள்ளன. கருவறையின் தரையமைப்பு உள் மண்டபத் தின் தரையமைப்பைவிட நன்றாக உயர்த்திக் காட்டப்பட்டுள்ளது. கருவறை வாயிலுக்கு முன்னால் இரு சிறு படியமைப்புகள் உள்ளன. கீழ்ப்படி அரைநிலா வடிவில் உள்ளது. கருவறையில் பிற்காலத்து லிங்கத் திருமேனியொன்று நிறுவப்பட்டுள்ளது.

உள் மண்டபப் பின் சுவரில் கருவறை நுழைவாயிலின் இருபுறமும் பக்கத்திற்கொன்றாக இரு கோட்டங்கள் காட்டப்பட்டுள்ளன. இவற் றில் வாயிற்காப்போர் வடிவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. உள் மண்டபத்தின் தென்புறத்தே சிறிய அளவிலான நாகர் வடிவமும், பிள்ளையாரும் தனித் தனித் தளங்களின் மீது காணப்படுகின்றன. வட புறத்தே கிழக்குப் பார்வையாய் தேவி. அவர் அருகே சிறிய அளவி லான சண்டேசுவரர்.

சிற்பங்கள்

குடவரையின் உள்ளே ஆறு சிற்பங்களும் வெளியே இரண்டு சிற்பங்களும் உள்ளன. உள்ளிருப்பனவற்றுள் வாயிற்காவலர் இருவர் தவிர ஏனையன பிற்காலத்துச் சிற்பங்கள். இவற்றுள் தேவியின் சிற்பமே எழிலுற அமைந்துள்ளது. பின் கைகளில் அங்குசமும், பாசமும் கொண்டு முன் கைகளில் காப்பு, அருள் முத்திரைகள் காட்டிச் சடா மகுடத்துடன் நின்ற நிலையில் தேவி காட்சி தருகிறார்.

வாயிற்காப்போர் சிற்பங்களுள் தென்புற வடிவம் கருவறை வாயிலை நோக்கிய வண்ணம் இலேசாய்த் திரும்பியிருக்க, வடபுற வடிவம் நேர்நோக்கிய பார்வையில் நிமிர்ந்து நிற்கிறது.[2] அணிகலன் களும், ஆடைகளும் இரண்டிற்கும் ஏறத்தாழ ஒன்று போலவே இருந் தாலும், உருவ அமைப்பில் சிறு வேறுபாடுகள் உள்ளன. பேரளவிலான உருள் தடிகளோடு காட்சியளிக்கும் இவ்விரண்டனுள், தென்புற வடிவம், இடக்கையைத் தடி மீது தாங்கி வலக்கையை இடுப்பில் வைத் துள்ளது. வடபுற வடிவம் வலக் கையைத் தடி மீதும், இடக்கையை இடுப்பிலும் கொண்டுள்ளது. கால்களைக் குறுக்கீடு செய்து நிற்கும் இவ்வடிவங்களுள் தென்புற வடிவம் துணியாலான முப்புரி நூலை மார்புக்குக் குறுக்காகக் கொண்டிருக்க, வடபுற வடிவம் பாம்பையே முப்புரி நூலாக்கி, வல மேற்கையை வளைத்துச் செல்லுமாறு அணிந் துள்ளது. செவிகளில் பனையோலைப் பெருங் குண்டலங்கள் திகழத் தலையைச் சடா மகுடம் அழகு செய்கிறது. மகுடத்தின் இருபுறமும்

அடர்த்தியான சடைப் புரிகள். இரண்டிற்குமே கோரைப் பற்கள் இருந்தபோதும் தென்புற வடிவத்திற்கு மட்டும் தலையில் கொம்புகள் காட்டப்பட்டுள்ளன. இது நந்தியை உருவகப்படுத்துவதாக அறிஞர் கள் கருதுகிறார்கள்.[3]

கோட்டப் பிள்ளையார்



கொம்புடன் கூடிய வாயிற்காவலர்

குடைவரையின் வெளிக் கோட்டங்களில் காட்சி தரும் தென் புறப் பிள்ளையாரும், வடபுறச் சேட்டையும் பல்லவர் காலப் பிற்பகுதியைச் சார்ந்தவையாகலாம் என்று அறிஞர் திரு. கூ. ரா. சீனிவாசன் கருது கிறார்.[4] இராசசிம்மர் காலத்துக் கற்றளிகளிலேயே பிள்ளையார் வடிவம் முக்கியத்துவம் பெறத் தொடங்கி விடுகிறது. கயிலாசநாதர் கோயிலில், தனித் தெய்வமாகக் கருவறைப் புறச்சுவரில் பிள்ளையார் காட்சியளிக்கிறார். காஞ்சிபுரத்திலுள்ள இறவாதான் ஈசுவரத்தின் புறச்சுவரிலும் பிள்ளையார் வடிவம் சிறப்பிடம் பெற்றுள்ளது.[5] ஆனால் இந்த வடிவங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்ட அமைப்பில், வேறெந்தத் திருக்கோயிலிலும், பிற்காலத்திலும் அமைக்கப் பெறாத கோலத்தில், தனித்துவம் வாய்ந்த திருத்தோற்றமாய் வல்லத்துப் பிள்ளையார் விளங்குகிறார். சிற்ப அமைதிகொண்டு நோக்கும்போது இதை இராசசிம்மர் காலத்துப் படைப்பாய்க் கொள்ளலாமெனத் தோன்றுகிறது.

அமர்ந்தவாறிருக்கும் பிள்ளையாரின் திருவுருவம் குடைவரையை நோக்கிய வண்ணம் சற்றே இடப்புறப் பார்வையாய் அமைந்துள்ளது. இடக்கைகளில் மேற் கையில் தாமரை மொட்டிருக்க, கீழ்க்கை இடப் புறமுள்ள திண்டின் மீது இருத்தப்பட்டுள்ளது. வலக்கைகளில் மேற் கையிலுள்ள பொருள் சிதைந்துள்ளது. கீழ்க்கை குத்துக்காலாக அமைந்திருக்கும் வலக்கால் தொடை மீதுள்ளது. முப்புரி நூல் வல மேற் கையின் மீது செல்கிறது. முழங்காலளவில் மடித்து இருக்கையின் வலப்புறம் நீட்டப்பட்டுள்ள இடக்கால் சிதைந்துள்ளது. துதிக்கை வலப்புறமாய்ச் சுருண்டிருக்க, வலத்தந்தம் முனையில் உடைந் துள்ளது. இடத்தந்தம் அறவே இல்லை. இது போன்ற ஒருபுறம் தந்த மில்லாப் பிள்ளையார் சிற்பங்கள் மிக அரிதாகவே காணப்படுகின்றன. பல்லவர் காலப் பிள்ளையார் வடிவங்களுள் இதுவே இணையற்ற எழிலும், கம்பீரமும் கொண்டதாகும்.

பல்லவர்கள் வட தமிழகத்தில் கலை வளர்த்த அதே நேரத்தில் தென் தமிழகத்தில் பாண்டியர்கள் பலவாய்க் குடைவரைகளை எடுப்பித் திருக்கிறார்கள். இதே காலகட்டத்தைச் சேர்ந்த முத்தரையர் குடை வரைகளும் இருக்கின்றன. இவற்றுள் சிலவற்றில் காணப்படும் பிள்ளையார் வடிவங்களும், கம்பீரத்திலோ, அமைப்பு முறையிலோ, அழகிலோ வல்லம் குடைவரைப் பிள்ளையாருக்கு எவ்விதத்திலும் இணையாகா என்றே சொல்லலாம்.

தென்புறக் கோட்டத்தைவிட அளவில் சிறியதாகவும், ஆழமற்ற தாகவுமுள்ள வடபுறக் கோட்டத்தில் சேட்டைத் தேவியின் சிறிய அளவி லான சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. நேர்ப் பார்வையாக அமர்ந்துள்ள அம்மையின் சடாமுடிகளை மகுடமொன்று அழகு செய்கிறது. சிற்பம் மிகவும் சிதைந்திருப்பதால் அதன் சிறப்புகள் பற்றி அறியமுடிய வில்லை. அமைப்பு முறையில் இது பிள்ளையாருக்குப் பிற்பட்டதாகத் தோன்றுகிறது.

கல்வெட்டுகள்

இக்குடைவரையில் இருந்து மூன்று தமிழ்க் கல்வெட்டுகள் படி யெடுக்கப்பட்டுள்ளன.[6] இவற்றுள் இரண்டு முதலாம் மகேந்திரவர்மர் காலத்தவை. தென்புறத் தூணிலிருக்கும் தமிழ்க் கல்வெட்டு பகாப்பிடுகு, லளிதாங்குரன் என்னும் முதலாம் மகேந்திரவர்மரின் இரு விருதுப் பெயர்களைத் தருகிறது.

வடபுறத் தூணிலிருக்கும் கல்வெட்டின் முதல் வரி மகேந்திரவர்ம ரின் சத்துருமல்லன், குணபரன் என்னும் விருதுப் பெயர்களைத் தரு கிறது. ஏனைய மூன்று வரிகள் மகேந்திரவர்மரின் அடியார் வயந்தப்

பிரியரசர் மகனார் கந்தசேனர் இக்குடைவரையைச் செய்வித்ததாகக் கூறுகிறது. அரசர் என்ற சொல் இக்கல்வெட்டில் 'அரைசர்' என்று இடைப்போலியாகக் கையாளப்பட்டுள்ளது. குடைவரை இக்கல் வெட்டில் தேவகுலம் என்ற சொல்லால் சுட்டப்படுவது குறிப்பிடத் தக்கது. கி. பி. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் பூலாங்குறிச்சிக் கல்வெட்டுகளில் கோயிலைக் குறிக்கத் தேவகுலம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.[7] அதையடுத்து வல்லத்தில் மகேந்திரரின் கல்வெட்டில்தான் தேவகுலம் என்ற சொல் இடம் பெறு கிறது. வல்லத்திலுள்ள ஏனைய இரண்டு குடைவரைகளில் வரலாற் றாய்வு மையம் புதிதாகக் கண்டுபிடித்த இரண்டு கல்வெட்டுகளிலும் அக்கோயில்கள் தேவகுலங்களாகக் குறிக்கப்பட்டிருப்பது சிந்தனைக் குரியதாகும்.

இக்கல்வெட்டில் மகேந்திரரின் அடியாராக சுட்டப்படுபவர் வயந் தப்பிரியரசரா அல்லது கந்தசேனரா என்று உறுதியாகக் கூறமுடியாது. இருவரில் யார் தம்மை அடியாராக நினைத்திருந்தாலும், அது அவரது பணிவையும், பேரரசரிடம் அவருக்கிருந்த ஈடுபாட்டையும் எல்லாவற் றையும்விட அவரது பெரும் பண்பையும் காட்டுகிறது. ஆனால் இந்த அடியான் என்ற சொல்லைக் கொண்டு, வயந்தப் பிரியரசர் மகனார் கந்தசேனரை மகேந்திரரின் பணியாள் என்று கட்டுரையொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.[8] வயந்தப் பிரியரசரின் பெயரிலேயே அரசர் என்ற சொல் இருந்தும், அதே சொல்லால் பேரரசர் மகேந்திரர் அதே கல்வெட்டிலேயே அழைக்கப்பட்டிருந்தும்கூட இப்படியொரு முடிவு கொள்ளப்பட்டிருப்பது வியப்பைத் தருகிறது.

மேலும், இக்கருத்தின் அடிப்படையில், 'முதலாம் மகேந்திரவர்மன் காலம்வரை குடிமக்கள் ஒருவகை எழுத்திலும், நாடாண்ட மன்னர்கள் ஒருவகை எழுத்திலும் கல்வெட்டுகளை எழுதிவந்தனர்' என்றும் இக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.[9] இக்கூற்று பொருந்துமாறு இல்லை. ஏனென்றால் வல்லத்தில் மூன்றாவது குடைவரையில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் கல்வெட்டொன்றும் அரச மரபின ருடையதுதான். முதல் குடைவரைக் கல்வெட்டில் குறிக்கப்படும் வயந்தப்பிரி அரசர் மகனார் கந்தசேனரும் அரச மரபினர்தான். இவ்விரு கல்வெட்டுகளுமே ஏறத்தாழ ஒரே காலகட்டத்தைச் சேர்ந்தவை என்பதோடு தமிழில்தான் உள்ளன. முதலாம் நரசிம்மவர்மரின் திருக் கழுக்குன்றம் குடைவரைக் கல்வெட்டும் தமிழில்தான் உள்ளது. இது காறும் தமிழ்நாட்டில் கிடைத்திருக்கும் பல்லவர்க்கு முற்பட்ட பழங் கல்வெட்டுகளான தமிழி கல்வெட்டுகளில், கொடையாளர்களாக மன்னர்கள், வணிகர்கள், பொதுமக்கள் எனப் பல தரப்பினர் வெளிப்படு கின்றனர். இப்பல்வகையினரால் பொறிக்கப்பட்டுக் கி. மு. மூன்றாம்

நூற்றாண்டிலிருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரையினவாகக் கால வரையறை செய்யப்பட்டிருக்கும் இக்கல்வெட்டுகள் எதிலும் மன்னர்கள் ஒருவகை எழுத்தையும் மக்கள் ஒருவகை எழுத்தையும் கையாளவில்லை. இந்நிலையில் திடீரென மகேந்திரவர்மர் காலத்தில் மட்டும் மாறுபாடு ஏற்பட்டிருக்க இயலாது. அதற்கு வல்லம் கல்வெட்டுகளே சான்றாகி நிற்கின்றன.

கோப்பெருஞ்சிங்கரின் பதினான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இக்கோயில் இருக்கும் பகுதியைக் களத்தூர்க் கோட்டத்து வல்ல நாடு என்று அறிவிக்கிறது. இறைவன் பெயர் திருவயந்தீசுவரமுடைய நாயனார். இக்கோயிலில் சந்திவிளக்கு ஒன்று எரிப்பதற்காக சுந்தர நந்திபம்மன் என்பார் மூன்று பசுக்களைக் கொடையாக அளித்தார். இவற்றைப் பெற்றுக்கொண்டு கதிரும் நிலவும் உள்ளவரை விளக் கெரிக்க உறுதியளித்தவர் இக்கோயில் காணியுடைய சிவபிராமணர் சூரியபட்டன்.[10]

கோப்பெருஞ்சிங்கரின் காலத்தில் வயந்தீசுவரமென்று அழைக்கப் பட்ட இத்திருக்கோயில் தற்போது வேதாந்த ஈசுவரர் ஆலயமென்ற பெயரில் விளங்குகிறது.

இரண்டாம் குடைவரை

முதல் குடைவரைக்குக் கீழே, குன்றின் இடைப்பகுதியில் கிழக்குப் பார்வையில் அமைந்துள்ள இரண்டாம் குடைவரை அளவில் சிறிய தாகும். கருவறை, உள்மண்டபம், முகப்பு என்றமைந்துள்ள இக் குடைவரையின் வாயிலும் சுவரெழுப்பப்பெற்றுக் கதவும் பூட்டுமாய்க் காட்சியளிக்கிறது. முழுத் தூண்களற்ற முகப்பின் வட, தென் மூலை களில் பக்கத்திற்கொன்றாய் அரைத் தூண்கள் உள்ளன. மண்டபம் சற்று உள்வாங்கிய நிலையில் குடையப்பட்டிருப்பதால் கூரையின் முன் அமைப்பு வடிவமைக்கப்படாத கபோதமாய்ச் செயற்படுகிறது. வெளிப் பகுதியில் இக்கபோத அமைப்பிற்குச் சற்று மேலாகப் பாறை பிளவு பட்டுச் செதிலாகப் பிளந்துள்ளது.

உள் மண்டபப் பின் சுவரில் சிறிய அளவினதாய்க் கருவறை குடையப்பட்டுள்ளது. இப்போது முருகன் தன் மனைவியருடன் இக் கருவறையில் குடியிருக்கிறார். கருவறையின் வெளிப்புறம், நுழை வாயிலுக்கு இருபுறமும் பக்கத்திற்கொருவராய் வாயிற்காப்போர். முதற் குடைவரை போல் அத்தனை அழகுடைய சிற்பங்களென்று சொல்ல முடியாது. கருவறை, உள்மண்டபம் ஆகியவற்றின் அனைத் துச் சுவர்களும் வெறுமையாக உள்ளன.

குடைவரையின் வெளிப்பகுதியில் பாறையின் தென்புறத்தே வட பார்வையாக வலம்புரிப் பிள்ளையாரின் சிற்பமொன்று தாமரை இருக்கையில் அமர்ந்துள்ளாற்போல் செதுக்கப்பட்டுள்ளது.

சிற்பங்கள்

கால்களைக் குறுக்கீடு செய்து கருவறையை நோக்கி நின்றபடி காவல் செய்யும் வாயிற்காப்போர் சிற்பங்கள் இரண்டும் பெரும்பாலும் ஒன்றையொன்று ஒத்துள்ளன. தோள் குழிக்குள் முட்டுக்கொடுத்து நிறுத்தியிருக்கும் மிகப்பெரிய உருள்தடிகளின் மேல் வலக்கைகள் தவழ்ந்திருக்க, இடக்கைகளை இடுப்பில் பொருத்தியிருக்கும் இவ் வடிவங்களின் செவிகளில் பெருங் குண்டலங்கள். தெற்குக் காவலரின் சடைப்புரிகள் அவரது சடாபாரத்தை மீறி முகத்தின் இரு பக்கங் களிலும் குழல்களாய்த் தொங்கித் தோள்களில் சரிகின்றன. வட புறத்தார் இந்தத் தொல்லையை வெறுத்து, மேல் முடிச்சால் முடிக் கற்றைகளைத் தூக்கி விட்டிருக்கிறார்; இருந்தும் பக்கவாட்டுகளில் சில புரிகள் தொங்கியவாறுதான் உள்ளன.

பிள்ளையாரின் சிற்பம் குறிப்பிடும்படியாக இல்லை.

கல்வெட்டு

இக்குடைவரை இதுநாள் வரையிலும் பல்வேறு அறிஞர் பெரு மக்களின் பார்வைகளுக்கும் ஆய்வுகளுக்கும் இலக்காகியிருக்கிறது. அதிலும் பேராசிரியர் கூ. ரா. சீனிவாசன் அவர்கள் தம் நூலிற்காக இக்குடைவரையைப் பார்வையிட்டபோது இதற்கு வெளிச்சுவர்கூட எடுக்கப்படவில்லை.[11] இருப்பினும் எப்படியோ இக்குடைவரையின் உத்திரத்திலுள்ள தமிழ்க் கல்வெட்டு இப்பெருமக்களின் பார்வைக்குத் தப்பியிருக்கிறது. பல்லவர் காலத் தமிழ் எழுத்துக்களில், முதற் குடை வரையிலுள்ள கந்தசேனரின் மகேந்திரர் காலத்துக் கல்வெட்டோடு ஒத்துப்போகும் எழுத்தமைதியில் இக்கல்வெட்டு அமைந்துள்ளது. லக்கச் சோமாசியார் என்பவரின் மகள் இத்தேவகுலத்தை எடுப்பித்ததாகக் கூறும் இக்கல்வெட்டின் கண்டுபிடிப்பால் இக்குடைவரையின் காலத்தை யும் நிர்ணயிக்க முடிகிறது. பேராசிரியர் கூ. ரா. சீனிவாசன் அவர்கள் இக்குடைவரை மகேந்திரர் கலைமுறையில் அமைந்துள்ளதென்று கூறியபோதும், பல்லவ மல்லர் இரண்டாம் நந்திவர்மரின் காலத்தில் இது குடையப்பட்டிருக்கலாம் என்று கருதினார்.[12] இப்போது வரலாற் றாய்வு மையத்தால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் புதிய கல்வெட்டு இக் குடைவரையின் காலத்தை முன்னோக்கி நகர்த்தியுள்ளது. முதற் குடைவரை உருவான முதலாம் மகேந்திரவர்மர் காலத்திலேயே இக் குடைவரையும் உருவாகியிருக்கலாம்.

இறைக்கோயிலைக் குறிக்கத் தேவகுலம் என்ற சொல் மீண்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது. எல்லாவற்றையும்விடச் சிறப்பு இக் கோயிலை எடுத்தது ஒரு பெண். அதுவும் மன்னர் குலப் பெண்ணல்ல. பொதுமக்களில் ஒருவர். லக்கச்சோமாசியார் என்ற பெயரும் ஆழக் கருதத்தக்கது. வயந்தப்பிரியரசர் மகனார் கந்தசேனரின் சிற்றரசோடு தொடர்புடையவராக இப்பெருமகனார் இருந்திருக்கலாம். இப் பெயரைச் சமகாலத்துக் கல்வெட்டுகளில் காணப்படும் பிற பெயர்க ளோடு ஒப்பிட்டு ஆராயும் பணி நடந்துவருகிறது.

மூன்றாம் குடைவரை

குன்றின் வடபுறத்தே வடகிழக்குப் பார்வையாக மூன்றாம் குடைவரை அமைந்துள்ளது. இரண்டாம் குடைவரையைவிடச் சற்றுக் கீழான மலைப்பகுதியில் குடையப்பட்டுள்ள இதுவும் முகப்பு, உள் மண்டபம், கருவறை என்னும் அமைப்பு முறையில் உருவாகியுள்ளது. பாறையின் முன்புறத்தே குடைவரை மேல்மட்டத்திற்குச் சற்று மேலாக நான்கு சதுரத் துளைகள் செதுக்கப்பட்டுள்ளன. குடைவரை யின் மேல் மட்டத்திலிருந்து முகப்பு சற்று உள்வாங்கிக் குடையப்பட் டிருப்பதால், துளைகளுக்குக் கீழுள்ள பாறைப்பகுதி, கபோதமாக உருப் பெறா நிலையிலும், கபோதப் பயன்பாட்டைத் தந்துவிடுகிறது. குடைவரை முன்புறத்தே மற்ற இரண்டு குடைவரைகளைப் போலவே சுவரெழுப்பி மையத்தில் நிலையெடுத்துக் கதவு அமைத்திருக்கிறார் கள். முகப்பில் வட, தென் மூலை அரைத்தூண்கள் மட்டுமே செதுக்கப் பட்டுள்ளன. மையத்தில் போதிகைகள் காட்டப்பட்டிருந்த போதும் தூண்கள் இல்லை. பேராசிரியர் கூ. ரா. சீனிவாசன், தூண்கள் இருந்து பின்னாளில் சிதைவுற்றதால் அகற்றப்பட்டிருக்கலாம் என்று கருதுகிறார்.[13] ஆனால் போதிகைகளில் தூண்கள் இருந்து அகற்றப் பட்ட அடையாளங்களே இல்லை.[14]

உள்மண்டபப் பின்சுவரில் சிறியதொரு கருவறை காணப்படுகிறது. இக்கருவறையில் பிற்காலத்துச் சிற்பங்களாய்ப் பெருமாளும் தேவியரும் உள்ளனர். கருவறையின் கூரையும் சுவர்களும் வெறுமையாய் உள்ளன. உள் மண்டபப் பின்சுவரில் கருவறை வாயிலின் இருபுறங் களிலும் பக்கத்திற்கொருவராய் வாயிற்காப்போர் உள்ளனர். வடபுறச் சுவரில் கொற்றவையின் வடிவம் செதுக்கப்பட்டுள்ளது.

சிற்பங்கள்

இக்குடைவரையின் வாயிற்காப்போர் சிற்பங்கள் இரண்டாம் குடைவரையில் இருப்பனவற்றைவிட கவனத்துடன் செதுக்கப்பட் டுள்ளன. ஆடையணிகலன்கள் இருவர்க்கும் பொதுவாகவே உள்ளன.

கால்கள் கருவறையை நோக்கித் திரும்பியிருந்தாலும், உடலும் முகமும் நேர்ப்பார்வையாய் உள்ளன. மற்ற இரண்டு குடைவரைகளில் இருப்பது போல் கால்களைக் குறுக்கீடு செய்யாமல், பாதங்களை ஒன்றன் பக்கத்தில் ஒன்றாய் அமைத்து நேர்பட நிற்கின்றனர். தென் புறத்தாரின் வலக்கையும், வடபுறத்தாரின் இடக்கையும் இடுப்பிலிருக்க, முப்புரி நூல் மேற்கை மீதேறி இறங்கிப் பின் செல்கிறது. வடபுறத்தார் வலக்கையில் கொடி முத்திரை காட்டிப் போற்றிட, தென்புறத்தார் அதே திருப்பணியை இடக்கையால் செய்கிறார். குறுகிய கோட்டங்க ளென்றாலும் குடியிருப்போரின் அழகு குன்றாமல் செதுக்கப்பட்டிருக் கும் சிறப்பு பாராட்டற்குரியது

கொற்றவையின் வடிவம் மாமல்லபுரத்து மும்மூர்த்தி மண்டபம் போலவோ பனைமலைக் குடைவரையிலுள்ள கொற்றவை போலவோ இல்லையென்றாலும் அழகற்றது என்று ஒதுக்கிவிட முடியாது. முன் னிரு கைகளில் வலக்கை காக்கும் குறிப்பிலும், இடக்கை இடுப்பிலும் இருக்கப் பின்னிரு கைகளில் சங்கும் சக்கரமும் உள்ளன. நின்ற நிலையில் கம்பீரமாகக் காட்சியளிக்கும் கொற்றவையின் இரு செவி களிலும் பனையோலைக் குண்டலங்கள். மார்பகங்களைக் கச்சு மறைத் துள்ளது. சிம்ம ஊர்தியோ, மான் ஊர்தியோ இல்லாமல், மகிடன் எந்த வடிவத்திலும் அருகில் இல்லாத நிலையில், தலை கொய்து, தசை தந்து தங்களை அர்ப்பணித்துக்கொள்ளும் அடியவர்களும் இல்லாமல் தனித்து நிற்கும் இவ்வம்மை அறிஞர்களால் அதிகம் பேசப்படாதவர்.

கல்வெட்டு

இரண்டாம் குடைவரையில் புதிய கல்வெட்டொன்று கண்டுபிடிக் கப்பட்டதால், இந்தக் குடைவரையிலும் கல்வெட்டு தேடும் முயற்சி தொடர்ந்தது. இரண்டாம் குடைவரையைப் போலவே உத்திரத்தின் வடபுற முகப்பில் கல்வெட்டெழுத்துக்கள் இருந்தன. அவற்றைத் தொடர்ந்து படிக்க முடியாதபடி பிற்காலத்தில் எடுத்திருந்த முகப்புச் சுவர் மறைத்தது. அறங்காவலரிடம் நிலைமையை விளக்கிச் சுவரின் மேற்பகுதியை உடைத்தால்தான் கல்வெட்டைப் படிக்கமுடியுமென்று கூறி அவரது அநுமதியுடன் ஊர் இளைஞர்கள் உதவ, படிக்கக்கூடிய அளவுக்குச் சுவர் அகற்றப்பட்டது.[15] பல்லவப் பேரரசரின் மகள் கொம்மை கட்டிய கோயில் என்ற தகவலைக் கல்வெட்டு தந்தது. பெரும்பாலும் இரண்டாம் குடைவரையைப் போலவே இக்கல்வெட்டின் எழுத்துக்கள் அமைந்துள்ளன. மெய்யெழுத்துக்கள் மிகத் தெளிவாகப் புள்ளி பெற்றுள்ளன. சில எழுத்துக்களுக்குத் தலையிலும் சிலவற்றிற் குப் பக்கவாட்டிலும் புள்ளிகள் உள்ளன. இதே நிலைதான் இரண்டாம் குடைவரைக் கல்வெட்டிலும் காணப்படுகிறது. இந்த இரண்டு புதிய

கல்வெட்டுகளின் கண்டுபிடிப்பு பல பயனுள்ள வரலாற்று உண்மைகளை வெளிக்கொணர்ந்துள்ளது.

பெண்களும் குடைவரைகளும்

தமிழகத்தில் குடைவரைக் கலை பல்லவர்களாலும் பாண்டியர்களாலும் பயிலப்பட்ட போதும் பல்லவர்களே காலத்தால் முற்பட்ட குடைவரைகளுக்கு உரிமையுடையவர்களாய் நிற்கிறார்கள். மண்டகப்பட்டு கல்வெட்டின் மூலம்[16] மகேந்திரரே முதன் முதலாகக் கல்லில் கோயில் எழுப்பியிருக்க வேண்டுமென்ற உண்மை அறிஞர்கள் அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. தொடக்கக் காலப் பல்லவப் பாண்டிய குடைவரைகளையொட்டிச் சற்று பிற்பட்ட காலத்தில் முத்தரையர்களும் குடைவரைகளைச் செய்வித்தனர். தமிழகமெங்கும் அடையாளம் காணப்பட்டிருக்கும் இப்பலமரபுக் குடைவரைகளுள் பெண்களோடு தொடர்புடையவை மூன்றே மூன்றுதான்.

திருப்பரங்குன்றம் குடைவரையைச் சாத்தன் கணபதி திருத்துவித்தபோது நக்கன் கொற்றி கொற்றவைக்கும் சேட்டை தேவிக்கும் கோயில் செய்வித்ததாக ஜடில பராந்தகராகக் கருதப்படும் கோமாறன் சடையனாரின் ஆறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு கூறுகிறது.[1] இவ்வம்மை மகாசாமந்தரான சாத்தன் கணபதியாரின் துணைவியாகலாம் என்று ஒரு கருத்தும், ஜடில பராந்தகரின் தேவியாகலாம் என்று ஒரு கருத்தும் நிலவுகின்றன.

திருமெய்யம் திருமால் குடைவரையை விடேல்விடுகு விழுப்பேர் அதி அரைசன் சாத்தன் மாறனின் அன்னை பெரும்பிடுகு பெருந்தேவி புதுக்கியதாக ஒரு கல்வெட்டு பேசுகிறது.[18] நார்த்தாமலையில் சாத்தன் பழியிலி எடுத்த பழியிலி ஈசுவரத்திற்கு அவரது மகள் பழியிலி சிறிய நங்கை முகமண்டபம், இடபம், இடபக்கொட்டில், பலித்தளம் ஆகியவற்றை எடுத்ததாக நிருபதுங்கவர்மரின் ஏழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு பேசுகிறது.[19]

இம்மூன்றனுள் திருமெய்யம் புதுக்கப்பட்டது. கொற்றவை, சேட்டைக் கோயில்கள் பரங்குன்றம் புதுக்கப்பட்டபோது அதன் உடனமைப்பாகச் செய்யப்பட்டன. பழியிலி ஈசுவரத்திலோ சிறிய நங்கைக்கும் குடைவரைக்கும் தொடர்பில்லை. இந்நிலையில் இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் இரண்டு புதிய கல்வெட்டுகளும் தமிழக வரலாற்றில் புதிய பக்கங்களைத் திறந்துள்ளன.

பல்லவ மரபில் பிற்காலத்தில் எடுக்கப்பட்ட கற்றளிகளோடு தொடர்புடையவர்களாக ரங்கபதாகை, தர்ம மகாதேவி போன்றோர்

சுட்டப்பட்டாலும், குடைவரை எடுத்தவர்களாகப் பல்லவர் காலப் பெண்கள் யாரும் இதுநாள் வரையிலும் வெளிப்படவில்லை. இந் நிலையில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள வல்லம் குடைவரைக் கல் வெட்டுகள் இரண்டுமே, அத்தேவகுலங்கள் மகளிரால் செய்யப் பட்டவை என்று அறிவிப்பது பெருமைக்குரியதாகும். இரண்டாம் குடைவரை அரச மரபு சாராத பெண்ணாலும், மூன்றாம் குடைவரை அரச மரபு சார்ந்த பெண்ணாலும் எடுக்கப்பட்டுள்ளன. எந்த வேறுபாடு மின்றி ஒரே மலையில் சமுதாயத்தின் இரு வேறு நிலைகளைச் சேர்ந்த பெண்கள் கோயிலெடுக்க முடிந்திருப்பது, அக்காலத்து மக்கள் மன நிலையையும், சமுதாயச் சூழலையும் தெளிவுபட உணர்த்துகிறது. கல் வெட்டில் லக்கச் சோமாசியார் மகள் பெயர் குறிக்கப்படவில்லையாயி னும், பல்லவப் பேரரசரின் மகள் பெயர் கிடைத்திருக்கிறது. கொம்மை என்றழைக்கப்படும் இவ்வம்மையின் தந்தையான பல்லவப் பேரரசரை அடையாளம் காண வேண்டியுள்ளது. வயந்தப் பிரியரசர், விழுப்பேர் அதி அரசர் என்பது போல் பல்வ பேர் அரசர் என்பதும் ஒரு சிற்ற ரசரைக் குறிப்பதாகலாம். பல்லவர்களின் கிளையில் வந்த அரச மரபினராக இவர்கள்ளைக் கொள்ளலாம்.

கொம்மை மிக அழகிய பழந்தமிழ்ச் சொல்லாகும். சங்க இலக்கி யங்களில் பல இடங்களில்[20] எடுத்தாளப்படும் இச்சொல் அழகு, திரட்சி, பெருமை, இளமை என்னும் பொருள்களைத் தரப் பயன்படுத்தப்பட் டுள்ளது. அகநானூற்றுப் பாடல்கள் இரண்டிலும், குறுந்தொகைப் பாடல் ஒன்றிலும் தவிர[21] பிற இடங்களில் எல்லாம் கொம்மை என்ற சொல் நகிலுக்குரிய அடையாகவே எடுத்தாளப்பட்டுள்ளது. பரிபாட லில் வாரணி கொம்மை என்ற வரிக்குக் கச்சணிந்த இளமுலை என்று பொருள் தரப்பட்டுள்ளது.[22] நகிலைக் குறிக்கும் சொல்லாகவும் நகிலின் இளமையை, அழகைத், திரட்சியைக் குறிக்கும் சொல்லாகவுமே கொம்மை சங்க இலக்கியங்களில் பயின்று வந்துள்ளது. பேரகராதி கொம்மைக்குத் தரும் பல பொருள் விளக்கங்களில் இவையும் அடக்கம்.[23]

இளமையும் அழகும் நிரம்பியவர் என்ற பொருளில் கொம்மை என்ற பெயரைப் பல்லவப் பேரரசர் மகள் பெற்றிருக்கலாம். இதில் மற்றுமொரு சிறப்பு இதுவரை கிடைத்துள்ள பல்லவ மரபுப் பெயர் களில் இதுவே முதல் தமிழ்ப் பெயராகும். சங்க இலக்கியங்களில் பயின்று வந்துள்ள ஒரு சொல் பல்லவர் காலத்துப் பெண் ஒருவரின் பெயராகியிருக்கும் சிறப்பு வல்லம் குடைவரைக் கல்வெட்டுகளின் கண்டு பிடிப்பால் வரலாறாகியிருக்கிறது.

மொழியும் எழுத்தமைப்பும்

இதுவரை கிடைத்துள்ள தொடக்கக் காலப் பல்லவர் கல்வெட்டு களில் தமிழில் அமைந்துள்ளவை, இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள

வில்லம் கல்வெட்டுகளையும் சேர்த்து எண்ணிக்கையில் ஐந்துதான். இவற்றுள் நான்கு வல்லத்திலும், ஐந்தாவது திருக்கழுக்குன்றம் ஒரு கல் மண்டபத்திலும் கிடைத்திருக்கின்றன.[24] இவ்வைந்து கல்வெட்டு களுமே முதலாம் மகேந்திரர், முதலாம் நரசிம்மர் காலத்தவை. வட தமிழகம் முழுவதும் பல குடைவரைகளிலும், கற்றளிகளிலுமாய், இரண்டாம் நந்திவர்மருக்கு முற்பட்ட பல்லவர் காலக் கல்வெட்டுகள் பலவாய்க் கிடைத்த போதும், அவற்றுள் தமிழ்க் கல்வெட்டுகள் ஐந்து தான் என்பதும், அவ்வைந்தும் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்ளேயே கிடைத்திருக்கின்றன என்பதும் ஆழ்ந்து எண்ணத்தக்க செய்தியாகும். பரந்துபட்ட பல்லவப் பேரரசின் அனைத்துப் பகுதிகளிலும் வடமொழி ஆட்சி செய்த அந்நாளில், அருகருகே இருக்கும் வல்லம், திருக்கழுக் குன்றம் என்னும் இரண்டு இடங்களில் மட்டும் தமிழுக்குப் பெருமை தரப்பட்டிருக்கும் குறிப்பை வியந்து நோக்க வேண்டியுள்ளது.

வல்லத்தின் மூன்று குடைவரைகளிலுமாய்க் கிடைத்திருக்கும் நான்கு கல்வெட்டுகளிலும் தமிழ் எழுத்துக்களின் வளர்ச்சி நிலைகளை நன்கு ஒப்பிட்டுப் பார்க்க முடிகிறது. அ, ம, வ, என்னும் மூன்று எழுத் துக்கள் தவிர ஏனைய எழுத்துக்கள் அனைத்தும் இக்கல்வெட்டுகளில் வேறுபாடின்றி அமைந்துள்ளன. எனவே இவை சம காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகள் என்று கொள்வதில் தவறிருக்க முடியாது. முதற் குடைவரைக் கல்வெட்டிலுள்ள அகரத்திற்கும் மூன்றாம் குடை வரைக் கல்வெட்டிலுள்ள அகரத்திற்கும் வேறுபாடு உள்ளது. நரசிம்ம வர்மரின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டைக் குறிக்கும் தொரைப்பாடி நடுகல் கல்வெட்டிலுள்ள அகரமும், மூன்றாம் குடைவரை அகரமும் ஒன்றையொன்று அப்படியே ஒத்துள்ளன.

முதற் குடைவரைக் கல்வெட்டிலுள்ள மகரங்களும் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளிலுள்ள மகரங்களும் வேறுபடு கின்றன. முதலாம் குடைவரையிலுள்ள இரண்டாம் கல்வெட்டில் ஐந்து மகரங்கள் உள்ளன. இவற்றுக்குள்ளேயே ஒன்றிரண்டில் சிறு சிறு வேறுபாடுகள் உள்ளன. கல்லெழுத்துக் கலை நூலில் திரு. நடன காசிநாதன் ஒன்பதாம் நூற்றாண்டுக்குரியதாகக் காட்டியிருக்கும் வட் டெழுத்து மகரத்தையொட்டியும்,[25] ஐந்தல்லது ஆறாம் நூற்றாண்டின தாகக் கருதப்படும் திருநாதர் குன்று கல்வெட்டிலுள்ள மகரத்தைப் போலவும் புதிய கல்வெட்டுகளின் மகரங்கள் அமைந்துள்ளன. இக் கல்வெட்டுகளின் யகரம் திரு. நடனகாசிநாதன் தம் நூலில் ஏழாம் நூற்றாண்டுக்குரியதாய்க் காட்டியிருக்கும் வட்டெழுத்து யகரத்தைப்[26] போல அமைந்துள்ளது. முதற்குடைவரைக் கல்வெட்டின் யகரமும் இதைப் போலவே உள்ளது. கல்லெழுத்துக் கலை நூலில் ஏழாம் நூற்றாண்டுக்குரியதாய்க் காட்டப்பட்டிருக்கும் தமிழ் யகரத்திற்கும்[27]

வல்லம் கல்வெட்டுகளிலுள்ள யகரங்களுக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. திரு. நடனகாசிநாதன் காட்டியிருக்கும் ஏழாம் நூற்றாண்டு யகரம் எந்தக் கல்வெட்டிலிருந்து எடுக்கப்பட்டது என்பதற்குக் குறிப்பில்லை. திருக்கழுக்குன்றத்துக் குடைவரையிலுள்ள முதலாம் நரசிம்மர் கல்வெட்டில் ஒரே ஒரு யகரம்தான் கையாளப்பட்டுள்ளது. கல்வெட்டுத் துறையினர் வெளியிட்டுள்ள மசிப்படியில் அந்த யகரத்தின் வரிவடிவம் தெளிவாக இல்லை. அதை நேரிடையாகப் பார்க்கச் சென்றபோது, தக்க பராமரிப்பின்மையால் கல்வெட்டு முழுவதுமே கண்களுக்குப் புலப்படாத வண்ணம் முற்றிலுமாய்ப் பொரிந்து, தேய்ந்து போயுள்ளதைப் பார்க்க முடிந்தது. ஒரு சில எழுத்துக்களே அங்குக் கல்வெட்டு இருந்த உண்மைக்குச் சான்று கூறத் தப்பிப் பிழைத்திருக்கின்றன,

வயந்தப்பிரியரசர் கல்வெட்டிலுள்ள வகரத்திற்கும் புதிய கல்வெட்டுகளிலுள்ள வகரத்திற்கும் இலேசான வேறுபாடு உள்ளது. திரு. நடனகாசிநாதன் தம்முடைய நூலில் ஏழாம் நூற்றாண்டுக்குரியதாய்க் காட்டியிருக்கும் தமிழ் வகரத்தைப் புதிய கல்வெட்டுகளின் வகரங்கள் ஓரளவு ஒத்துள்ளன [28] ஒரே இடத்தில் ஏறத்தாழ ஒரே காலகட்டத்தில் பொறிக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கல்வெட்டுகளில் காணப்படும் இந்த வரிவடிவ மாறுபாடுகள் எழுத்தியல் அறிஞர்களின் கவனத்திற்குரியதாகும்.

வல்லம் குடைவரைகள் பல்லவர் காலக் கலைமுறைக்குச் சான்றாய் நிற்பது போலவே, புதிய கல்வெட்டுகளின் கண்டுபிடிப்பால், பல்லவர் காலத் தமிழ் எழுத்தமைப்பின் வளர்ச்சி நிலைகளை விளங்கிக் கொள்வதற்கும் சான்றாகி நிற்கின்றன. மிகப் பெரிய குடைவரைகளும், இடைப்பட்ட நிலைக் குடைவரைகளும் அமைக்கப்பட்ட பல்லவர்களின் தொடக்கக் காலத்திலேயே சிறிய அளவிலான குடைவரைகளும் எடுக்கப்பட்டமைக்கு இப்புதிய கல்வெட்டுகளின் கண்டுபிடிப்பு பெருந்துணையாகிறது. இதனால் யார் காலப் படைப்பென்று அடையாளம் காணப்படாதிருக்கும் சில எளிய குடைவரைகளை அடையாளம் காண்பதற்கும் வழி பிறந்துள்ளது.

அடிக்குறிப்புகள்

1 K. R. Srinivasan, Cave Temples of Pallavas, Published by the Director General of Archaeology in India, New Delhi, 1964, P. 64.

2 பேராசிரியர் கூ. ரா. சீனிவாசன் இரண்டு வடிவங்களுமே கருவறை வாயிலை நோக்கியிருப்பதாகக் கூறியுள்ளார்.

3 K. R. Srinivasan, Cave Temples of Pallavas, P. 63.

4 Ibid., P. 64.

5 இவ்விரண்டு கோயில்களும் நேரிடையாகப் பார்வையிடப்பட்டன. நாள் - 7.1.93.

6 SII vol. II, INS No. 72; SII vol. IV, INS. No. 634.

7 எ. சுப்பராயலு, எம். ஆர். ராகவ வாரியார், 'பூலாங்குறிச்சிக் கல்வெட்டுகள், கட்டுரை, ஆவணம், அக்டோபர் 1991, பக். 69.

8 தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு, தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர் - பாண்டியர் காலம், முதற் பகுதி, தமிழ் வளர்ச்சி இயக்ககம், குறளகம், சென்னை . 600 108, 1990, பக். 87.

9 மேற்படி., பக். 88.

10 SII Vol. IV, INS. No. 634.

11 K. R. Srinivasan, Cave Temples of Pallavas, Plate XXXVII, B.

12 Ibid., P. 134.

13 Ibid., P. 134.

14 7-1-93 அன்றும் 4-5-93 அன்றும் இக்குடைவரைகளை நேரிடையாகப் பார்வையிட்ட டாக்டர் இரா. கலைக்கோவனும் இக்கருத்தை ஏற்றுக்கொள்கிறார்.

15 கல்வெட்டைப் படிக்கும் அளவுக்குச் சுவர் அகற்றப்பட்ட நாள் 7-1-93. படியெடுக்கும் அளவுக்கு அகற்றப்பட்ட நாள் 4-5-93. இரண்டாம் திருப்பணிக்கு மிக உதவியவர்கள் திரு. செல்லப்ப குருக்கள், திரு. செங்குட்டுவன், திரு. கணேசன், பெயர் சொல்லாத மற்றோர் இளைஞர்.

16 Epigraphia Indica, Vol. XVII, P. 17.

17 SII Vol. XII, INS. No. 63.

18 Pudukkottai Inscriptions, INS. No. 13.

19 SII Vol. XII, INS. No. 63.

20 பத்துப்பாட்டு மூலமும் உரையும், இரண்டாம் பகுதி, கழக வெளியீடு, 1968, வரி. 69.

நற்றிணை, பின்னத்தூர் அ. நாராயணசாமி அய்யர் உரை விளக்கம், கழக வெளியீடு, 1976, பாடல் எண். 314, வரி. 5.

பரிபாடல், மூலமும் பரிமேலழகர் உரையும், தியாகராச விலாச் வெளியீடு, 1956, பாடல் எண். 22, வரி. 30.

குறுந்தொகை. உ. வே. சா. உரை, 1937, பாடல் எண்கள் 159, 281.

அகநானூறு, ந. மு. வேங்கடசாமி நாட்டார், ரா. வேங்கடாசலம் பிள்ளை விளக்கவுரை, கழக வெளியீடு, 1943, பாடல் எண்கள் 15, 29, 65.

சிலப்பதிகாரம், உ. வே. சா. உரை, தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு, காதை 28, வரி. 16; காதை 29, பாடல் எண் 19, வரிகள் 4-5.

21 அகநானூறு, பாடல் எண்கள் 15, 29; குறுந்தொகை, பாடல் எண் 281.

22 பரிபாடல், பாடல் எண் 22.

23 மதுரைத் தமிழ்ப் பேரகராதி, இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன் வெளியீடு, பக். 610.

24 SII Vol. XII, INS. No. 16; ARE 1932 - 33, P. 55, Plate I.

25 நடன காசிநாதன், கல்லெழுத்துக் கலை, மணிவாசகர் நூலகம், சென்னை - 600 001, 1989, பக். 23.

26 மேற்படி., பக். 23.

27 மேற்படி., பக். 23.

28 மேற்படி., பக். 23.

வல்லம் கல்வெட்டுகள்

முதற் குடைவரைக் கல்வெட்டுகள்[1]

முதற் கல்வெட்டு

1 பகாப்பிடுகு லளிதாங்குரன்[2]

இரண்டாம் கல்வெட்டு

1 சத்துரும்மல்லன் குணபரன்

2 மயேந்திரப் போத்தரெசரு அடியான்

3 வயந்தப்பிரி அரெசரு மகன் கந்தசேன

4 ன் செயிவித்த தேவகுலம்[3]

மூன்றாம் கல்வெட்டு

1 சகலபு[வ]னச் ச[க்*]கர

2 வத்திகள் ஸ்ரீ கே[ர*]

3 ப்பெருஞ்சிங்க

4 தேவர்க்கு யா[ண்டு]

5 14[வது] க[ள]த்தூர்

6 க் கோட்டத்து வல்ல நாட்டு வ[ல்]ல

7 [த்]து உடைய[ர*]ர் திருவயந்தீசுர மு[டை]ட

8 ய நாயனாற்கு பிள்ளை[யா]ர் நீலகங்கரை

---

1. முதற் குடைவரைக் கல்வெட்டுகள் மூன்றும் முன்பே படியெடுக்கப் பட்டவை.

2. SII Vol. II, INS. No. 72.

3. Ibid., INS. No. 72.

4. SII Vol. IV, INS. No. 634.

9 யர் முதலிகளில் சு௦ந்தர நந்திபம்ம

10 ர் இன்நாயனாற்கு சந்தி விளக்கு ஒ[ன்*]று[க்கு*] விட்ட

11 பசு மூ[ந்]றும் கைக்கொண்டு சந்திர[ா]

12 தித்த[வ]ரயும் இச்சந்தி விளக்கு

13 எரிக்க கடவே[ன் இக்]கோயில் காணி [உ]

14 [டை]டய சிவப்பிராம[ண*]ன் சூரிய பட்ட(ந்)தே[ந]

15 [ன்][4]

புதிய கண்டுபிடிப்புகள்

இரண்டாம் குடைவரைக் கல்வெட்டு

1 லக்கச் சோமாசியார் மகள்

2 தேவகுலம்

மூன்றாம் குடைவரைக் கல்வெட்டு

1 பல்வ பேர் அரைசர் மகள் கொம்மை தேவகுலம்

தேவமொழி

பதிகப் பாடல்களில் அகச்சுவைப் பாடல்களும் உண்டு. சம்பந்தரின் திருக்கானூர்ப் பதிகம் அத்தகையதொன்று. தன் அழகை இறைவன் கவர்ந்து கொண்டு, தனக்குக் குமிழம் பூ நிறத்தைத் தந்துவிட்டதாகக் குற்றம் சாட்டும் காரிகை ஒருத்தி, அழகு கவர வந்த இறைவனின் வருகையை வண்ணிக்கிறாள்.

தமிழில் இனிமையாகப் பேசிக்கொண்டும், தாளம், வீணை, முழவம், மொந்தை எனப் பல இசைக்கருவிகள் ஒலிக்கப் பாடிக் கொண்டும் வந்த சிவபெருமான் பவழம் போல் சிவந்திருந்தாராம்.

தன்னையே தலைவியாய்க் கொண்டு இறைவனைக் காதலனாய்க் கருதி சம்பந்தர் பாடியுள்ள இப்பதிகம், 'சிவபெருமான் தமிழில் இனிமை யாகப் பேசிக் கொண்டு வந்தார்' என்று கூறுவதன் வழி, தமிழே தேவ மொழி என்று தெளிவு செய்கிறது.

இந்த அரிய தகவல் கோயில் வாசல்களைச் சேர்வது எப்போது?

— முதல் திருமுறை, பக். 331.

4, SII Vol. IV, INS. No. 634.

5. பொதுப்பகுதி

1. பெருமைச் சுவடுகள்

மா. இரா. எனும் புகழ்க் கோ

சிவஅரசி முத்துக்காளத்தி

இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றித் தமிழ் வளர்த்த அறிஞர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவர் இராசமாணிக்கனார். தமிழோடு அதிகத் தொடர்போ தமிழில் தனித்த ஈடுபாடோ இல்லாத ஒரு குடும்பத்தில் பிறந்து இளம் வயதில் தெலுங்கு மொழியே பயின்று வளர்ந்தவரான அவர் பின்னாளில் தமிழ்க் கலை வளர்த்த செம்மலாக மலர்ந்தது வியப்பும் சுவையும் நிரம்பிய நெடிய வரலாறு ஆகும்.

நிலம் அளந்து தரம் விதிக்கும் அலுவலகத்தின் ஒரு பிரிவின் மேலாளராக இருந்து, தாசில்தாராக உயர்ந்தவரான மாணிக்கம் என்பவரின் கடைசி மகனாகத் தோன்றியவர் இராசமாணிக்கனார். மாணிக்கம் கர்நூலில் வாழ்ந்த காலத்தில் 1907 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 12 ஆம் நாள் இராசமாணிக்கனார் பிறந்தார். அவரது அன்னை பெயர் தாயாரம்மாள். ஏழுபேர் பிறந்த குடும்பத்தில் எஞ்சியவர்கள் இராசமாணிக்கனாரும் அவர் தமையனார் இராமகிருட்டிணருமே ஆவார்.

தெலுங்கு மொழி பேசும் நிலப்பகுதியில் பிறந்து அதை ஒட்டியே வளரும் வாய்ப்பைப் பெற்ற ஒருவர் எப்படித் தமிழறிஞராக, நாடு போற்றும் வல்லுனராக, வரலாற்றுப் புகழ் பெற்றவராக ஆக முடிந்தது என்ற எண்ணம் எழுவது இயல்பே. இராசமாணிக்கனார் ஒரே நாளில் திடீரென்று அறிஞராகிவிடவில்லை. அந்த நிலைக்கு உயர அவர் உழைத்த உழைப்பு அதிகம். வாழ்க்கைப் போராட்டத்தில் தாம் சந்திக்க நேர்ந்த மிகப் பலவாய இடர்களையெல்லாம் இன்முகத்தோடு ஏற்று முயன்று முயன்று, அவற்றை வென்று உயர்ந்தவர் இராசமாணிக்கனார்.

அரசு பணியாளரான தந்தையார் அலுவல் காரணமாகப் பல ஊர்களுக்கு மாற்றப்பட்டார்; அதனால் இவருடைய கல்வியும் பல ஊர்களில் வளர்ந்தது. பல ஆண்டுகள் வரையில் தெலுங்கு நாட்டில் கர்நூல், சித்தூர் முதலிய ஊர்களில் இருக்க நேரிட்டதால் இராசமாணிக்கனார் தெலுங்கு மொழியே பயின்று வந்தார். 1916-இல் தந்தையார் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த நிலக்கோட்டைக்கு மாற்றப்பட்ட பிறகு இவர் தமிழ் பயிலத் தொடங்கினார். தமிழே

அறியாத இராசமாணிக்கனார், அதை விரைவில் கற்க வேண்டும் என்னும் ஆர்வத்தால் ஆறு திங்களுக்குள் ஐந்தாம் வகுப்பு நூலைப் படித்து முடித்தார்.

பணியின் பொருட்டுத் திண்டுக்கல் ஏகிய தமையனார் இராமகிருட்டிணனாருக்குத் துணையாகச் சென்ற தாயாருடன் இராசமாணிக்கனாரும் செல்ல நேர்ந்தது. திண்டுக்கல் வாசம் அவருடைய வாழ்வில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. நிலக்கோட்டையில் தொடங்கிய அவருடைய தமிழ்க்கல்வி திண்டுக்கல்லில் வளர்ந்தது. அங்கு நகரசபை உயர்நிலைப் பள்ளியில் அந்நாளில் உடற்பயிற்சி ஆசிரியராகப் பணியாற்றி வந்த ஒருவர் இராசமாணிக்கனாருக்கு அறிமுகமானார். அவர் வழி இவர் அறிந்தவை பல.

திண்டுக்கல்லில் இராசமாணிக்கனாரின் குடும்பம் வாழ்ந்த இடத்திற்குச் சற்றே தள்ளி, 'மௌனசாமி மடம்' என்னும் மடம் இருந்தது. அவருக்கு முன்பே அறிமுகமாயிருந்த உடற்பயிற்சி ஆசிரியர் அம்மடத்திற்கு அவரை அழைத்துச் சென்றார். அதன்பின் அடிக்கடி அங்குச் செல்வதை வழக்கமாக்கிக் கொண்ட இராசமாணிக்கனார், அம்மடத்திலிருந்த இளந்துறவியின் அன்பிற்குப் பாத்திரமானார். சித்தர் பாடல்களையும் அருட்பாவையும் இராசமாணிக்கனார் அறியச் செய்தவர் அந்த இளந்துறவியே.

பாடல்களை இனிமைக்காக மட்டுமல்லாது அவைகூறும் வாழ்வியல் உண்மைகளுக்காகவும் நேசிக்க வேண்டும் என்பதை இராசமாணிக்கனாருக்கு உணர்த்தியவர் அவரே. சாதிகள் யாவும் மனிதர்கள் படைத்துக் கொண்டவை. கடவுள் படைத்தவை ஆண், பெண் என்ற இரண்டு சாதிகளே என்னும் எண்ணத்தை அவரே இராசமாணிக்கனாரின் இளம் நெஞ்சத்தில் பதிய வைத்தவர்.

தம்முடைய எழுத்திலும் பேச்சிலும் ஏன் செயலிலும்கூட சாதிகளைக் கடிந்தவர்; வன்மையாக எதிர்த்தவர்; சாதிகளற்ற சமுதாயம் காணப் பாடுபட்டவர்; சாதி ஒழிப்பு மாநாடுகளில் கலந்துகொண்டு சாதி ஒழிப்பில் முனைப்பு காட்டியவர் இராசமாணிக்கனார்.

இராசமாணிக்கனாரின் பத்தாவது (1917) வயதில் அவருடைய தந்தையார் திடீரென காலமானார். குடும்பப் பொறுப்பு தமையனார்க்கு உரியதாயிற்று. அவர் பார்த்த அலுவலும் மாற்றத்திற்கு உரியதாக இருந்ததால் குடும்பம் பல ஊர்களில் வாழ நேர்ந்தது. ஒரு முழு ஆண்டு தொடர்ந்து எந்த ஊரிலும் இருக்கும்படியாகப் பணிப் பொறுப்பு அமையாததால் இராசமாணிக்கனாரின் கல்வி தடைப்பட்டது;

மூன்றாண்டுகள் வீணில் கழிந்தன. மாற்றத்திலிருந்து விடுபட்டு ஓரிடத்தில் தஞ்சையில் தங்கும் வாய்ப்பு தமையனார் இராமகிருட்டிண னாருக்கு அமைந்தது. தம்பி இராசமாணிக்கத்துக்கு அப்போது வயது பதின்மூன்று.

தஞ்சையில் நிலையாகத் தங்கிவிட்டதால் விடுபட்டுப் போன தம் படிப்பைத் தொடர விரும்பினார் இராசமாணிக்கனார். ஆனால், 'இவனது படிப்பு மூன்றாண்டுகளாக வீணாகிவிட்டது. பதின்மூன்று வயது நிரம்பப் பெற்ற இவன் இனி எங்கே படிக்கப் போகிறான்? இவனைத் தையற் கடையில் விடுவது நல்லது', என்று கருதிய தமையனார் இவரை ஒரு தையற் கடையில் வேலை கற்க விட்டார். 'நான் பதினைந்து நாளில் வேலை கற்றுக்கொண்டேன்; முதலில் காஜா எடுக்கத் தொடங்கிப் பின் சிறிய பைகளைத் தைக்கக் கற்றுத் தந்தார்கள். நாள்தோறும் இரவில் வீடு திரும்பும்போது கடை உரிமை யாளர் எனக்குக் காலணா கொடுப்பார்' என்று தம் தையற் கடை அநுபவத்தை விவரிக்கின்றார் இராசமாணிக்கனார்.

எப்படியாவது படிக்கவேண்டும் என்பதில் முனைப்பாக இருந்த சிறுவன் இராசமாணிக்கத்தின் மனம், காஜா எடுக்கும் தொழிலில் ஈடுபடவில்லை. தஞ்சை தூய பேதுரு பள்ளியின் தலைமையாசிரியரின் பேருதவியால், தடைப்பட்டு நின்ற படிப்பு தொடர்ந்தது.

ஆறாம் வகுப்பில் சேர்ந்து படிக்கத் தொடங்கினார் இராசமாணிக்க னார். தலைமையாசிரியரின் கருணையால் புத்துயிர் பெற்ற படிப்பு நாளும் வளர்ந்தது. எல்லாப் பாடநூல்களையும் வாங்கும் வாய்ப்பு அற்றவரான இராசமாணிக்கனார் தலைமை ஆசிரியரின் அறிவுரையின் படி ஆங்கில, கணித நூல்களை மட்டும் வாங்கிக் கொண்டார். ஏனைய பாடநூல்களைப் பிற மாணவரிடமிருந்து இரவல் வாங்கிப் படித்தார். 'தலைமையாசிரியர் சொன்னபடி இரண்டு நூல்களை மட்டும் வாங்கிக் கொண்டேன். சிலரை நண்பராகக் கொண்டு ஒவ்வொரு வெள்ளிக் கிழமை மாலையும் என்னிடம் இல்லாத நூல்களை அவர்களிடம் பெற்று சனி, ஞாயிறுகளில் படித்து வந்தேன்' என்பார் இராசமாணிக்கனார்.

பேதுரு பள்ளிக்கு நான்கு கிளைகள் உண்டு. இந்த நான்கு கிளைப் பள்ளிகளிலும் இருந்த முதற் படிவ மாணவர்களுக்குள் முதல் மாணவ ராகத் தேறியதன் வாயிலாகப் பள்ளியிலும், வீட்டில் அன்னை, தமைய னார் முதலானவர்களிடத்தும் பெரும் பாராட்டைப் பெற்றார் இராசமாணிக்கனார்.

பள்ளி நாட்களில் இராசமாணிக்கனாரின் தமிழார்வம் வளரக் காரணமானவருள் அவருடைய அண்ணியாரும் ஒருவர். தேவாரம்,

திருப்புகழ் ஆகியவற்றில் தமக்கு மிகுந்த ஈடுபாடு எழக் காரணமாக இருந்தவர் அவர் என்பதை, 'என் அண்ணியார் முருக வழிபாடு செய்பவர்; திருப்புகழ் படிப்பவர். அவர் எங்கள் வீடு வந்த பிறகு, நான் திருப்புகழும் தேவாரமும் மிகுதியாகப் படிக்கும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றேன்' என்ற இராசமாணிக்கனாரின் சொற்களால் அறிய முடிகிறது.

இராசமாணிக்கனார் உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த நாட்களிலேயே அவர் தமையனார் ஆந்திர நாட்டிற்கு மாற்றலானார். இவர் தாயாருடன் தஞ்சையிலேயே இருந்து தம் படிப்பைத் தொடர்ந்தார். தமையனார் வெளியூர் சென்றுவிட்டமையால் பணம் கேள்விக் குறியானது. அன்றாட வாழ்க்கைத் தேவைகளுக்கும், கல்வி சார்ந்த செலவுகளுக்கும் பணம் வேண்டியிருந்தது. 'அக்காலத்தில் மூன்றாம் படிவ மாணவரும், இரண்டாம் படிவ மாணவரும் ஆக நால்வர் என்னிடம் தனியே பாடம் படிக்க வந்தனர். ஆளுக்கு ஐந்து ரூபாய் வீதம் பேசிக்கொண்டு நான் பாடம் கற்பித்து வந்தேன். கோதாவரிக்குச் சென்ற தமையனார் திங்கள் தோறும் பதினைந்து ரூபாய் அனுப்பி வந்தார். இந்தத் தொகையைக் கொண்டுதான் என்னுடைய பள்ளி நாட்களைக் கழிக்க வேண்டியிருந்தது'.

தஞ்சைக்கு வருவதற்கு முன் நன்னிலத்தில் சில காலம் இராசமாணிக்கனாரின் குடும்பம் வாழ நேர்ந்தது. அக்காலத்தில் விடுமுறை நாட்களில் சில மாணவ நண்பர்களை அழைத்துக் கொண்டு நன்னிலத்தைச் சுற்றியிருந்த திருவாஞ்சியம், திருப்புகலூர், திருக்கண்ணபுரம், திருச்செங்கட்டாங்குடி முதலிய திருத்தலங்களுக்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார் இராசமாணிக்கனார். அப்போது இவருக்கு வயது பன்னிரண்டு. பன்னிரண்டு வயதில் எழுந்த இந்த ஆர்வம்தான் பின்னாட்களில் தென்னாட்டுக் கோயில்கள் பற்றி அறியும் விழைவையும் அறிவையும் அவரிடம் மிகுவித்தது.

தஞ்சை தூய பேதுரு உயர்நிலைப் பள்ளியில் ஆறு ஆண்டுகள் முறையாகக் கல்வி பயின்றவர், ஒவ்வோர் ஆண்டு இறுதித் தேர்விலும் முதல்வராகத் தேறி, அதற்குரிய பரிசையும் பெற்று வந்தார். பள்ளி இறுதித் தேர்வில் சிறந்த முறையில் வெற்றி பெற்றுப் பள்ளியில் வைத்திருந்த பியர்ஸ் (Pearce) பரிசைப் பெற்றார்.

4, 5, 6 ஆம் படிவங்களில் தமிழ் மன்றச் செயலாளராக இருந்து பல போட்டிகளிலும் கலந்து கொண்டு பரிசுகள் பல பெற்றிருக்கின்றார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் நடத்திய பள்ளி இறுதித் தமிழ்த் தேர்வில் முதல்வராகத் தேறினார்.

தஞ்சையில் பயின்றபோது இவருக்குத் தமிழாசிரியராக அமைந்தவா கரந்தைக் கவியரசு ரா. வேங்கடாசலம் பிள்ளை ஆவர். வகுப்பில் முதல் மாணவராகத் திகழ்ந்த இவரைக் கரந்தைக் கவியரசு தனியே அழைத்துத் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்பிக்கலானார். அப் பெரியாரிடம் இவர் மூன்றாண்டுகள் முறையாகப் படித்தார். இராச மாணிக்கனாரின் வாழ்க்கையும், கல்வியும், தமிழார்வமும் நெறிப்பட்ட இடம் தஞ்சையாகும்.

இராசமாணிக்கனாரின் தமிழ் உணர்வையும், அறிவையும், ஆர்வத்தையும் புரிந்துகொண்டு அவரை வளர்த்தவர் கரந்தை ரா. வேங்கடாசலம் பிள்ளை. இளைஞர் இராசமாணிக்கத்தின் ஆற்றல் களை இனங்கண்டு ஊக்கிய முதல்வர் என்ற பெருமைக்கு உரியவர் அவரே. அவர் இராசமாணிக்கனாரிடம் கொண்டிருந்த அன்பும், பற்றும், ஈடுபாடும் எல்லை கடந்தவை; தூயவை.

திருவையாற்றை மையமாகக் கொண்டு ஆண்டுதோறும் நடை பெறும் ஏழூர் விழாவில் இராசமாணிக்கனார் கலந்து கொள்வது இயல்பு. தஞ்சையைச் சேர்ந்த தேவாரக் குழுவினருடனும், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தாருடனும் சேர்ந்து திருவையாறு, திருச்சோற்றுத்துறை, திருக் கண்டியூர், திருநெய்த்தானம், திருப்பூந்துருத்தி முதலிய ஏழு ஊர் களுக்கும் தேவாரம் பாடிக்கொண்டு கால்நடையாகச் செல்வது வழக்கம். இவ்வழக்கம் சமய உணர்வும், ஈடுபாடும் இளமையிலேயே அவர் நெஞ்சில் இடம் பெற வழிவகுத்தது.

பள்ளி இறுதி வகுப்பில் தேறிய பிறகு தஞ்சையை அடுத்த ஒரத்தநாடு போர்டு உயர்நிலைப் பள்ளியில் எழுத்தராகச் சிறிது காலம் பணியாற்றினார்.

தந்தையாரின் நண்பரும், சென்னை பின்னி கம்பெனியில் உதவி துவிபாஷியாக இருந்தவருமான கே. திருவேங்கடம் நாயுடுவின் அழைப்பின் பேரில் 1928 ஆம் ஆண்டு சென்னை வந்து சேர்ந்தார் இராசமாணிக்கனார். நாயுடுவின் உதவியால் இவருக்கு வண்ணாரப் பேட்டையிலுள்ள சர். தியாகராயர் நடுநிலைப் பள்ளியில் தமிழாசிரியர் பணி கிடைத்தது.

தஞ்சை மண் வளர்த்திருந்த மொழி உணர்வோடும், சமய உணர் வோடும், சீர்திருத்த உணர்வோடும் சென்னையில் தம் வாழ்க்கையைத் தொடங்கினார் இராசமாணிக்கனார். மாணவர் உள்ளங்கவரும் முறை யில் தெளிவாகவும், இனிமையாகவும் பாடம் நடத்துவதில் திறமை பெற்றவராக விளங்கியமையால் தமிழாசிரியர் பணி இவருக்கு இன்ப

மாகவும் விருப்பமுண்டயதாகவும் இருந்தது. மாணவர் மையத்தில் இவருக்கு மிகுந்த செல்வாக்கு இருந்தது.

1928ஆம் ஆண்டு சூலை முதல் 1936ஆம் ஆண்டு சூன் வரையில் சென்னை தியாகராயர் நடுநிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணி யாற்றிய காலத்தில் மாணவர்க்கான பாடநூல்கள், துணைப் பாட நூல்கள் எழுதும் பணியில் ஈடுபட்டார். இவர் எழுதிய முதல் நூல் 1930இல் வெளிவந்தது (இதுவரையில் கிடைத்துள்ள சான்றுகளின் அடிப்படையில்). அப்போது இராசமாணிக்கனாருக்கு வயது இருபத்து மூன்று. கல்வித் தகுதி வெறும் எஸ். எஸ். எல். சி. மட்டுமே. 1927 இல் பள்ளி இறுதித் தேர்வை முடித்து 1928இல் தமிழாசிரியர் பணியில் சேர்ந்த இவர், 1930இல் தம்முடைய முதல் நூலை வெளியிட்டார். 102 பக்க அளவிலான 'நாற்பெரும் வள்ளல்கள்' என்னும் அந்நூல் அதிக அநுபவமோ, ஆழ்ந்த பயிற்சியோ, பெரிய கல்வித் தகுதியோ இல்லாத ஒருவரால் எழுதப்பட்டது போல் இல்லாமல் புலமை சான்ற ஒருவரால் எழுதப்பட்டது என்று கருதும் அளவிலேயே அமைந்துள்ளது. அந்த இளம் வயதில் இராசமாணிக்கனார் பெற்றிருந்த புலமையை இந்நூல் உணர்த்துகிறது.

1935 இல்தான் இராசமாணிக்கனார் வித்துவான் பட்டம் பெற்றார். ஆனால் அதற்குள் (1930க்கும் 1935க்கும் இடைப்பட்ட காலத்தில்) பல நூல்களை அவர் எழுதியுள்ளார். தமிழிலக்கிய வரலாற்றில் இது ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும். தம்முடைய இருபத்து மூன்றாம் வயதில் முதல் பாடநூலையும் எழுதித் தம் தமிழ்த் தொண்டைத் தொடங்கிய இராசமாணிக்கனார் இறுதி வரையில் (1967) அப்பணியில் தளராது தொடர்ந்தார். சிறுவர் நூல் எழுதுவதில் தொடங்கி, பல்துறை சார்ந்த நூல்களையும் எழுதியுள்ளார். அவர் எழுதிய வரலாற்று நூல்களும் ஆராய்ச்சி நூல்களும் அவரைப் புகழின் உச்சிக்குக் கொண்டு சென்றன. அழியாமையை அவருக்கு வாழ் வாக்கித் தந்தன.

ஏறக்குறைய எட்டு ஆண்டுகள் சர். தியாகராயர் நடுநிலைப் பள்ளி யில் பணியாற்றிய பிறகு 1936ஆம் ஆண்டு சூலையில் சென்னை, முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பொறுப்பேற்றார். அங்கு இருந்த காலத்தில் (1936 சூலை முதல் 1947 சூன் முடிய) பள்ளிக்குரிய பாடங்களை எழுதி வெளியிட்டதோடு, பி. ஒ. எல். (1939) எல். டி. (1944), எம். ஒ. எல். (1945) என்னும் பட்டங்களும் பெற்றார். 'பெரிய புராண ஆராய்ச்சி' என்பதைப் பொருளாக எடுத்துக்கொண்டு ஆய்வு செய்து சிறந்த முறையில் அதை முடித்து எம். ஒ. எல். பட்டம் பெற்றார்.

முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றிய காலத்தில்தான் இராசமாணிக்கனாரின் மகத்தான சாதனைகளாகக் கருதப்படும் பல நூல்கள் வெளிவந்தன. மொஹெஞ்சொதரோ அல்லது சிந்துவெளி நாகரிகம் (1944), பல்லவர் வரலாறு (1944), சேக்கிழார் (1945), சோழர் வரலாறு (1947) என்பன அவற்றுள் தலையாயன.

சிந்துவெளி நாகரிகம் பற்றி முதன் முதலில் தமிழில் நூல் எழுதி வெளியிட்டவரும், பல்லவர் வரலாறு பற்றியதொரு முழுமையான நூலைத் தமிழில் தந்தவரும் இவரேயாவார். சேக்கிழாரை வரலாற்று அறிஞராக அறிமுகஞ் செய்த முதல் ஆய்வாளர் என்ற பெருமையும் இராசமாணிக்கனாருக்கே உரியது. முதன் முதலில், தமிழில் சங்க காலம் தொடங்கிப் பிற்காலம் வரையில் ஆண்ட சோழர் வரலாற்றை முழுமையாக, ஆய்வுப் போக்கில் அமைத்துச் 'சோழர் வரலாறு' என்ற தலைப்பில் தந்தவரும் இராசமாணிக்கனாரே.

1947 சூலை முதல் 1953 சூலை வரையில் சென்னை விவேகானந்தர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக பணியாற்றியபோது சைவ சமய வளர்ச்சி என்னும் தலைப்பில் முனைவர் பட்டத்துக்குரிய ஆய்வைச் செய்து 1951இல் அப்பட்டத்தையும் பெற்றார்.

''இராசமாணிக்கனார் எம். ஓ. எல். பட்டம் பெற்ற போதும், முனைவர் பட்டம் பெற்ற போதும் தமிழ்நாட்டில் பல மாவட்டங்களுக்கும் நேரில் சென்று கள ஆய்வு செய்தும், தேவையான நூல்களைப் படித்தும் தெளிந்த பிறகே எழுதினார். தாம் படித்த அல்லது கேட்ட செய்திகளைப் பற்றிய உண்மைகளை ஆராய்ந்து அறிந்த பிறகே அவற்றைத் தம் நூல்களில் எழுதினார். பேரறிஞர் பலரிடத்தும் அயராது சென்று கலந்துரையாடி உண்மை காணுவதில் இவர் வல்லவராய் இருந்தார்'', என்பார் சொ. முருகேசனார்.

'தமிழர் நல்வாழ்க்கைக் கழகம்' என்ற அமைப்பின் வேண்டுதலுக்கு இணங்க 1931-இல் தமிழர் திருமண நூல் என்ற நூலை இயற்றினார் இராசமாணிக்கனார். பலரின் போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரியதாயிற்று அந்நூல்.

சமுதாயச் சீர்திருத்தப் பணிகளில் ஒன்றிச் செயல்பட்ட நாட்களிலும்கூட, தமிழ்த்தொண்டை அவர் மறக்கவில்லை. ''வண்ணையம் பதியில் தனலட்சுமி தொடக்கப் பள்ளியில், பேராசிரியரின் தமிழ்த் தொண்டு தொடங்கியது. வகுப்புகள் நடத்துவார். அங்குச் சில அன்பர்கள் இவர்தம் பணிகளுக்குத் தொண்டர்களாய் விளங்கினார்கள்,

கைப்பொருளைச் செலவழித்து இல்லாத மாணவர்க்கு உதவினார். அதே காலத்தில் இந்தி எதிர்ப்பு அறப்போராட்ட வீரர் சுவாமி அருணகிரிநாதர் அவர்கள், பேராசிரியரின் தமிழ்ப் பணிகளைப் பயன் படுத்திக் கொண்டார்கள். தமிழ் மாமுனிவர் குன்றக்குடி அடிகளார் போல் அக்காலத்தில் சுவாமி அருணகிரிநாதர் பணி தமிழகத்திற்கு அரண் செய்தது. அருணகிரிநாதரின் ஆசிரியர் சாது நாராயண தேசிகர் மடத்தில், பேராசிரியர் பலமுறை சமயச் சீர்திருத்தப் பொழிவு களை நிகழ்த்தியுள்ளார்.

இருபத்தைந்து ஆண்டுக்கால (1928 - 1952) சென்னை வாழ்க்கை யில் இராசமாணிக்கனார் ஆற்றிய பணிகளும் அடைந்த வெற்றிகளும் பெருமைக்குரியவை. பள்ளி இறுதித் தேர்வில் தேறியவராக வந்தவர், உயர்ந்த பல பட்டங்களைப் பெற்ற இடம் சென்னை. சீர்திருத்தம் பற்றிய கனவுகளோடு வந்தவர், அவற்றை நனவாக்கி வெற்றி கண்ட இடம் சென்னை. ‘சமயம் போற்றுதலுக்குரியது; சமய ஊழல்கள் களைதலுக்கு உரியன’, என்ற எண்ணத்தோடு வந்தவர், தம்முடைய இக்கொள்கையைப் பரப்பத் தொடங்கிய இடம் சென்னை. எழுத்தில் ஆர்வத்தோடு வந்தார், எழுத்தாளராக மலர்ந்த இடம் சென்னை.

நீண்ட காலம் சென்னையில் வாழ்ந்த இராசமாணிக்கனாரை 1953இல் மதுரை வரவேற்றது. 1953ஆம் ஆண்டு ஆகஸ்டு முதல் 1959ஆம் ஆண்டு ஆகஸ்டு வரையில் தியாகராயர் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றினார். மதுரையில் வாழ்ந்தபோது அங்கு எழுத்தாளர் மன்றம் உருவாவதற்குப் பெருந்துணையாயிருந் தார். அதன் தலைவராகவும் விளங்கினார். மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பாடத் திட்டங்களை மாற்றியமைத்து அதன் சார்பில் சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் தேர்வுக்கு மாணவர்களை அனுப்பச் செய்யும் முயற்சியில் இவர் ஈடுபட்டார். எழுத்துப் பணி மதுரையிலும் தொடர்ந்தது. இக்காலகட்டத்தில் ஏறத்தாழ நாற்பது நூல்கள் இராச மாணிக்கனாரால் எழுதப்பட்டன. அவர் தலைமையேற்று நடத்தி வைத்த திருமணங்களும், கலந்துகொண்டு சொற்பொழிவு ஆற்றிய நிகழ்ச்சிகளும் கணக்கற்றவை.

1959 செப்டம்பர் முதல் 1967 மே முடிய சென்னைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றினார். முதல் ஐந்தாண்டுகளில், பத்துப்பாட்டை ஆராய்ச்சி செய்து, பத்துப்பாட்டு ஆராய்ச்சி என்ற பெயரில் நூலாக்கிப் பல்கலைக் கழகத்திடம் தந்துவிட்டார். அவ்வரிய ஆராய்ச்சி நூல் பின்னால் (1970) பல்கலைக்கழகத்தாரால் வெளியிடப்பட்டது.

தொடர்ந்து தாம் செய்த ஆய்வுகளைக் கட்டுரைகளாக்கிப் பல இதழ்களில் வெளியிட்டார். பல மன்றங்களிலும், பிற இடங்களிலும்

தாம் ஆற்றிய சொற்பொழிவுகளுக்கு எழுத்து வடிவம் தந்து நூல்களாக்கினார்.

சமயத் துறையில் இவர் ஆற்றிய பணிகளில் மனம் நிறைந்த திருவாவடுதுறை ஆதீனம், சைவ வரலாற்று ஆராய்ச்சிப் பேரறிஞர் (1951) என்னும் பட்டத்தையும், மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனம், ஆராய்ச்சிக் கலைஞர் (1956) என்னும் பட்டத்தையும், தருமபுர ஆதீனம், சைவ இலக்கியப் பேரறிஞர் (1963) என்னும் பட்டத்தையும் அளித்து உடன் பொற்பதக்கமும் பொன்னாடையும் வழங்கி மகிழ்ந்தன. தருமபுர மடத்தினர் டாக்டர் பட்டத்துக்குரிய ஆராய்ச்சி நூலான சைவ சமய வளர்ச்சியை ஆங்கிலத்தில் வெளியிட்டனர். இராச மாணிக்கனாரின் ஆய்வுகளைப் பிற மொழியாளரும் அறிய இது வாய்ப்பாக அமைந்தது. சைவ சித்தாந்த சமாசம், சைவ நெறிக் காவலர் (1959) என்னும் பட்டத்தை வழங்கி மகிழ்ந்தது.

இராசமாணிக்கனாரின் குடும்பம் தமிழ் மணம் கமழும் குடும்பமாகும். தாம் உயர்ந்ததோடு நிறைவடையாத இராசமாணிக்கனார் தம் துணைவியாருக்கும் தமிழ் கற்றுத் தந்து அவரையும் புலவராக, ஆசிரியராக வளர்த்தார். அந்த அம்மையார் மதுரையில், பாத்திமா கல்லூரியில் சில காலம் விரிவுரையாளராகத் திறமையோடு பணிபுரிந்தார். அத்துடன் நில்லாது, தம் எட்டுக் குழந்தைகளையும், ஆண், பெண் என்ற வேற்றுமை பாராது, உயர் கல்வியில் தேர்ச்சி பெறச் செய்தார்.

இலக்கிய உணர்வோ, இரசனையோ அதிகம் இல்லாத ஒரு குடும்பத்தில் பிறந்தவராயினும், தாம் சந்தித்த பெரியவர்கள் தந்த ஊக்கத்தாலும் தமக்கே இயல்பாக இருந்த ஆர்வத்தாலும் தமிழ் படித்துத் தலை சிறந்த ஆராய்ச்சியாளராகவும், வரலாற்று அறிஞராகவும், குழந்தை எழுத்தாளராகவும், கட்டுரையாளராகவும், நாவலாசிரியராகவும், நூலாசிரியராகவும் விளங்கி, ஆயிரக்கணக்கான மாணவர்களுக்குத் தமிழறிவை ஊட்டித் தம்மால் இயன்ற வழிகளிலெல்லாம் சமுதாயத் தொண்டு புரிந்து, சொன்னதைச் செய்தவராக, செய்ததைச் சொன்னவராக வாழ்ந்து காட்டிய பெருமகனார் இராசமாணிக்கனார். அவருடைய பெருவாழ்வு, வாழ்வில் வளர விரும்புவோர்க்கு வழி காட்டும் தகைமையது.

2. நூல் மதிப்புரை

நூல்: மாசி மகமும், மங்கல நீர் விழாவும்.

ஆசிரியர்கள்: எஸ். இராமச்சந்திரன், சி. எம். கணபதி.

வெளியீடு: சேகர் பதிப்பகம், எம்.ஜி.ஆர். நகர், சென்னை-600078.

பக்கங்கள்: 92; விலை: ரூ. 12.00.

எந்த ஆய்விலும் ஆர்வத்துடன் ஈடுபடும் தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை ஆய்வாளர்கள் எஸ். இராமச்சந்திரன், சி. எம். கணபதி ஆகியோர் இந்நூலை எழுதியுள்ளனர். முதல் கட்டுரை 'மாசி மகம் வருணன் வழிபாடு' என்பது. இதனை அரிதின் முயன்று மிகவும் சிறப்பாகச் சிந்தித்து இராமச்சந்திரன் அவர்கள் எழுதியுள்ளார்கள்.

'வருணன் மேய பெருமணல் உலகம்' என்று தொல்காப்பியம் கூறும். நெய்தல் நிலக் கடல் தெய்வமான வருணன் பற்றிய இலக்கியச் சான்றுகள் அதிகமாக இல்லை. இருக்கும் சான்றுகளும் இதுவரை சரியாக ஆராயப்படவில்லை. மிகச் சிரமமான இப்பணியில் ஈடுபட்டுத் துணிந்து பற்பல புதிய கருத்துகளை எடுத்துக்கூறி நம்மைச் சிந்திக்க வைக்கின்றார் இராமச்சந்திரன். எல்லோரும் போன வழியில் போகாமல் ஆய்வுக்குப் புதுப்பாதை போடும் அவரை மிகமிகப் பாராட்டலாம். உழைக்கும் இளைஞர்களுக்கு அவர் எடுத்துக்காட்டாக உள்ளார்.

ஆனால் பல இடங்களில் ஆழமான ஆதாரங்கள் ஏதும் இல்லாமல் சொற்களின் ஒலி ஒற்றுமையை மட்டுமே கொண்டு காலத்தாலும், இடத்தாலும், பண்பட்டாலும் மிகமிக விலகி நிற்கும் பல செய்திகளை ஒற்றுமைப் படுத்திக் காட்டுகிறாரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

ஆசிரியர் கூறும் பல கொள்கைகளை அப்படியே ஏற்க வேண்டுமானால் ஓர் ஆயிரம் பக்கங்களாவது அடிப்படையான ஆதாரங்களை அலசிப் பார்க்கவேண்டும். இப்போது பல செய்திகள் வெறும் ஊகங்களின்மேல் எழுந்த கருத்தாகவே நமக்குத் தோன்றுகிறது.

மதி - மாதம் ஆகவில்லை. தாசன் - தாதன் ஆவதுபோல் மாசம் என்ற சொல்லே மாதமாக மாறியுள்ளது. சாந்திரமானத்தில் (ஆசிரியர் நிலவுக்கணிதம் என்கிறார் - சரியான தொடர்) எல்லாம் வடமொழியை ஒட்டிய பெயர்களே. தமிழர்கள் ஆண்டு, மாதத்தில் தம் பெயரை இழந்தனர். என்ன செய்வது? மதி - மாதம் என வரும் தத்திதாந்த நாம அமைப்பு தமிழ்ச் சொற்களுக்கு வராது.

நூறு வயது வரை வாழ்வது அரிதென்று கருதியே எண்பதாவது வயதில் 'சதாபிஷேகம்' நடைபெறுகிறது. சதம் நூறல்லவா? சதயத்திற்கும் சதாபிஷேகத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.

'உபநயனம்' என்பது கல்விக் கண்ணைத் திறப்பதும், சமயச் சடங்குகட்குத் தகுதி பெறுவதுமான தீட்சை. அதை மரணத்தைக் கடக்கும் சடங்கு என்பது பொருத்தமாக இல்லை.

'விசுவாமித்திரர் பாரசீக சமயத்தவர்'

'சூரியன் அண்டத்தைச் சுற்றிவரும் பாதையை உருவகமாகக் குறிப்பதே புரிநூல் சடங்கு'

'வருணன் என்ற சொல் விரி என்ற சொல்லிலிருந்து தோன்றியது,

'நா வல்லமை காட்டும் இடத்தில் நாவல் மரம் நடுவர்'

'கண்பட்டராயன் - கம்பட்டராயன்'

'வருணனே தட்சிணாமூர்த்தி'

'பெருங்கற்படைச் சின்னங்கள் வருணனின் ஆலயம்'

என்னும் கருத்துகளை நிறுவ இன்னும் வலிமையான சான்றுகள் தேவை.

'மங்களநீர் விழாக்கள்' என்னும் கட்டுரையை மிகச் சிறந்த தொகுப்பாகக் கணபதி அவர்கள் எழுதியுள்ளார்கள். தொன்றுதொட்டு தமிழகத்தில் நடைபெற்று வந்த பல்வேறு மங்கல நீராட்டு விழாக்கள் ஆற்றொழுக்காக அழகிய முறையில் ஏற்ற எடுத்துக்காட்டுகளுடன் கூறப்பட்டுள்ளன. தை நீராடல், மாசி மக நீராடல் பற்றிய விரிவான நுட்பமான செய்திகள் அரிதின் முயன்று தொகுக்கப்பட்டுள்ளன.

ஆறு, கடல்களில் நடைபெறும் நீராட்டு விழாக்கள் அனைத்தும் கூறப்பட்டுள்ளன. இலக்கியச் சான்றுகளுடன் கல்வெட்டு, தொல்லியல் முதலிய வரலாற்றுச் சான்றுகளும் ஆங்காங்கு காட்டப்பட்டுள்ளன. இறுதியில் கும்பகோணம் மகாமகம் பற்றிய பல வரலாற்றுச் செய்திகள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

படிப்போருக்குப் பல அய்யங்களும், கருத்து மாறுபாடுகளும் ஏற்பட்டாலும், பலமுறை படித்துப் பத்திரப்படுத்த வேண்டிய நூல்களில் இதுவும் ஒன்று என்பதில் அய்யமில்லை. —செ. இராசு

3. யாவரும் கேளிர்

1. க. நெடுஞ்செழியன் : 15-6-1944. திரு. மு. கந்தசாமி, திருமதி. வை. மீனாட்சி மகனார். தமிழில் முதுகலை, எம்.ஃபில்., முனைவர். கோடை காலக் கல்வெட்டுப் பயிற்சி, தமிழ்ப் பேராசிரியர், பெரியார் ஈ. வெ. ரா. கல்லூரி, திருச்சிராப்பள்ளி-600 023. இல்லம் : 8, இராசாராம் சாலை, கலைஞர் கருணாநிதி நகர், திருச்சிராப்பள்ளி-620 021. ஊர் : அன்பில் படுகை, இலால்குடி வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம். சாதனைகள் : 1966 - அனைத்துக் கல்லூரி பேச்சுப் போட்டியில் உ. வே. சா. தங்கப் பதக்கம், இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டுக் கவிதைப் போட்டியில் தங்கப் பதக்கம், அறிஞர் அண்ணா கவிஞர் பட்டம் வழங்கினார். வெளியீடுகள் : இந்தியப் பண்பாட்டில் தமிழும் தமிழகமும், தமிழ் இலக்கியத்தில் உலகாய்தம், மெய்க்கீர்த்திகள் அமைப்பும் நோக்கும் முதலிய நூல்கள்; தமிழர் திருமணம், தந்திர உத்தி, தமிழ் நாட்டில் ஆசீவகம் போன்ற பல கட்டுரைகள். கண்டு பிடிப்புகள் : i) ஆசீவக நிறுவனர்களுள் ஒருவரான கணியாரா, புறநானூற்றுப் பாடலாசிரியரான பக்குடுக்கை நன்கணியாரே. ii) தொல்காப்பியர் உலகாய்தர். iii) கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையார், பொத்தியார் ஆகியோர் ஆசீவகர். iv) கரிகாலன் பற்றிய புதிய செய்திகள்; மற்றும் பல. ஆர்வம் : பண்டைத் தமிழரின் வாழ்வியலை, அறிவியலை, அறவியலை வெளிப்படுத்துதல். அடையாளமற்ற தமிழினத்திற்கு அதன் அடையாளத்தைக் காட்டல்.

2. சு. பழனியாண்டி : 27-5-1932. திரு. வெ. ப. சுப்ரமணியம், திருமதி. காமாட்சி மகனார். எம். பி. பி. எஸ்., பொது மருத்துவர், சுப்ரமணியம் மருத்துவமனை, 2, பட்டாபிராம பிள்ளை தெரு, தென்னூர், திருச்சிராப்பள்ளி-620 017. உறுப்பினர் : இந்திய மருத்துவ மன்றம். வெளியீடுகள் : மருத்துவ, இலக்கிய, பயணக் கட்டுரைகள், மற்றும் கவிதைகள். ஆர்வம் : கவிதை, நாடகம், வரலாறு, பயண இலக்கியம், பேட்மிண்டன், வாலிபால் விளையாட்டுகள்.

3. கு. திருமாறன் : 26 - 12 - 1941. திரு. மா. இரா. குகநாதன், திருமதி. பாப்பு அம்மாள் மகனார். தமிழில் முதுகலை, முனைவர். கல்வியியலில் இளங்கலை; இதழியலில் பட்டயம்; திருச்சிராப்பள்ளி டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்தில் கல்வெட்டியல், கோயிற்கலைகளில் இரண்டாண்டுப் பயிற்சி. தேர்வு நிலைத் தமிழ் விரிவுரையாளர், பெரியார் ஈ. வே. ரா. கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620 023. இல்லம் . 672, பெரியார் சாலை, கலைஞர் கருணாநிதி நகர், திருச்சிராப்பள்ளி-620 021. வெளியீடுகள் : பல கட்டுரை

கள், சில மொழியாக்கங்கள், தனித்தமிழியக்கம் - முனைவர் பட்ட ஆய்வு நூல். பங்கேற்பு: இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் கருத்தரங்கு, இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையக் கருத்தரங்கு கள், கண்டுபிடிப்புகள்: அபினிமங்கலம் கல்வெட்டுகள். ஆர்வம்: இதழியல், கோயிற் கலைகள், கல்வெட்டியல்.

4. சே. பா. செண்பகராமன் : 18-12-1925. திரு. என். பால்வண்ண சுந்தரனார், திருமதி. பா. செண்பக வடிவம்மாள் மகனார். எம்.பி. பி. எஸ்., பொது மருத்துவர், 102, கன்னிமார் அம்மன் கோயில் தெரு, தென்காசி-627 811, நெல்லை கட்டபொம்மன் மாவட்டம். ஊர்: சேரன்மாதேவி, திருநெல்வேலி மாவட்டம். ஆர்வம்: தொல்லியல், மற்றும் கோயிற் கலைகள் பற்றிய ஆய்வு நூல்களைப் படிப்பது.

5. சீ. மூக்க ரெட்டி : 12-5-1936. திரு. பா. சுந்தரம், திருமதி. காமாட்சி மகனார், முதுகலை வரலாறு, 'திருமழபாடி கோயில் அன்று முதல் இன்று வரை' ஆய்வில் முனைவர் பட்டம், இளங்கலை நூலக அறிவியல். நூலகர், ஸ்ரீ வாசவி கல்லூரி, ஈரோடு-638 316. இல்லம்: 54 F, நாராயணா நகர், குமாரபாளையம் அஞ்சல், சேலம் - 638 183. வெளியீடுகள்: The Thirumalavadi Temple–History and Culture Through the Ages உட்பட மூன்று நூல்கள் மற்றும் பல ஆய்வுக் கட்டுரைகள். ஆர்வம்: தொல்லியல், நீலகிரிப் பழங்குடியினரின் பாடல்களும் ஆடல்களும்.

6. வை. சுப்பிரமணியன் : 11-8-1949. மருத்துவர் வை. ஏகாம் பரம், திருமதி. சரோஜினி மகனார். எம்.பி.பி.எஸ்., எம். டி.. தோலி யல் சிறப்பு மருத்துவர், அஸ்வினி மருத்துவமனை, 40, நேருஜி வீதி, விழுப்புரம்-605 602. இல்லம்: 5, இந்திரா காந்தி வீதி, கிழக்கு சண்முகபுரம், விழுப்புரம். ஊர்: சூணாம்பட்டு, செங்கற்பட்டு அண்ணா மாவட்டம். ஆர்வம்: தொல்லியல், கல்வெட்டுகள், வரலாறு.

7. வீ. ப. கா. சுந்தரம் : 1915. திரு. வீ. பரமசிவம், திருமதி. காமாட்சி மகனார். தமிழில் முதுகலை, பழந்தமிழ் இலக்கியத்தில் இசை இயல்–முனைவர் பட்டம்; ஆய்வறிஞர், தமிழிசைக் கலைக் களஞ்சியம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி-620 024. இல்லம்: 33 C, இறையனார் தெரு, தென்றல் நகர், கருணாநிதி நகர், திருச்சிராப்பள்ளி-620 021. சிறப்புகள்: 1988 ஆம் ஆண்டின் ராஜா சர். முத்தையா அவர்களின் நினைவுப் பரிசு, இராமலிங்கர் பணி மன்றத்தின் இசைக்கலைச் செல்வர் விருது, பாவாணரின் சொல்லழகர் விருது. கண்டுபிடிப்புகள்: பழந்தமிழ் இலக்கியங்களில் இசையியல் சார்ந்த பல அரிய கண்டுபிடிப்புகள். குறிப்பாகச் சிலப்பதிகாரத்தில்

சொல்லப்பட்டுள்ள தாளங்கள், கொட்டு முழக்குகள் பற்றிய ஆய்வு. **வெளியீடுகள்:** தமிழிசைக் கலைக்களஞ்சியம், பழந்தமிழ் இலக்கியத்தில் இசையியல் போன்ற பல அரிய நூல்கள், பதிப்பாசிரியர்-பஞ்சமரபு, நூற்றுக்கும் மேற்பட்ட இசைக்கலை குறித்த ஆய்வுக் கட்டுரைகள்.

8. **இரா. குணசேகரன்:** 17–3–1955 திரு. து. இராசு, திருமதி. இரா. சின்னப்பொண்ணு மகனார். இளம் அறிவியல், எம்.பி.பி.எஸ்., எம்.டி.. மருத்துவ வல்லுநர், தீபன் மருத்துவமனை, 56, பிஷப்ரோடு, புத்தூர், திருச்சிராப்பள்ளி-620 017. **இல்லம்:** 4 A/15, அருணாநகர், புத்தூர், திருச்சிராப்பள்ளி-620 017. **உறுப்பினர்:** இந்திய மருத்துவ மன்றம், இந்திய மருத்துவ வல்லுநர் மன்றம், திருச்சிராப்பள்ளி சுழற் சங்கம். **பொறுப்பு:** செயலாளர், இந்திய மருத்துவ மன்றத் திருச்சிராப்பள்ளி கிளை. **ஆர்வம்:** கூடைப்பந்து, பூப்பந்து, ஆய்வுக் கட்டுரைகள், சிறு கதைகள், கவிதைகள், அரசியல் வார இதழ்கள் வாசித்தல். **வெளியீடுகள்:** மருத்துவக் கட்டுரைகள்.

9. **பா. சுப்பிரமணியன்:** 7–4–1939. திரு. முத்து பாட்டப்பன், திருமதி. மாரியம்மை மகனார். வரலாற்றில் முதுகலை, பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழர் சமுதாய நிலையில் முனைவர் ஆய்வு. வரலாற்றுப் பேராசிரியர், தலைவர், அரிய கையெழுத்துச் சுவடித் துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்-613 005. **இல்லம்:** பல்கலைக் கழகக் குடியிருப்பு வளாகம், தஞ்சாவூர் 613 005. **ஊர்:** கருப்பூர், சேலம் மாவட்டம். **உறுப்பினர்:** இந்திய மற்றும் தென்னிந்திய வரலாற்றுக் கழகங்கள், அகில இந்திய அரசியல் அறிவியல் அமைப்பு மற்றும் பல்வேறு பல்கலைக் கழகங்கள், தமிழக அரசின் தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு. **பொறுப்புகள்:** தலைவர், தென்னிந்தியப் பண்பாட்டு மையம், தமிழ்ப் பல்கலைக் கழகம். ஆசிரியர், தமிழ் நாகரிகம், காலாண்டிதழ், தமிழ்ப் பல்கலைக் கழகம். **வெளியீடுகள்:** தமிழர்களின் சமுதாய வரலாறு, மோடி ஆவணங்கள் மூன்று தொகுதிகள் (தமிழில்), இந்திய வரலாறும் நாகரிகமும், ஐரோப்பிய வரலாறு 1815–1870, குழந்தைகளுக்கு நேரு, மற்றும் பல்வேறு தலைப்புகளில் அமைந்த முப்பதிற்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள்.

10. **மீ. சா. அஷ்ரப்:** 5–9–1949. திரு. எஸ். மீரா சாகிபு, திருமதி. வி. எம். எம். அய்ஷா மகனார். எம்.பி.பி.எஸ்., எம்.டி., மருத்துவ வல்லுநர். **இல்லம்:** A-4, வடகிழக்கு விரிவாக்கம், சாலை வீதி, தில்லைநகர், திருச்சிராப்பள்ளி-620 018. **உறுப்பினர்:** இந்திய மருத்துவ மன்றம், இந்திய மருத்துவ வல்லுநர் மன்றம். **பொறுப்புகள்:** இணைச் செயலாளர், பொருளாளர், இந்திய மருத்துவ மன்றத் திருச்சிராப்பள்ளி கிளை. பொது மருத்துவர் கல்லூரிப் புல மாநிலச்

செயலர், இந்திய மருத்துவ மன்றத் தமிழ்நாடு கிளை. செயற்குழு மற்றும் மையக்குழு உறுப்பினர், இந்திய மருத்துவ மன்றத் தலைமையகம். சாதனைகள்: திருச்சிராப்பள்ளி மருத்துவ மன்றத்தின் அறுபத்து நான்காண்டுக் கால வரலாற்றில் முதன் முறையாக அகில இந்திய மாநாட்டைத் திருச்சிராப்பள்ளியில் சிறப்பாக நடத்தியது. தொடர்ந்து மூன்றாண்டுகள் தமிழகத்தின் மிகச் சிறந்த கிளை, மற்றும் சிறந்த செயலாளருக்குரிய பரிசுகளைப் பெற்றது. ஆர்வம்: வரலாறு, இதழியல். வெளியீடுகள்: பல் மருத்துவக் கட்டுரைகள்.

11. ப. கிருஷ்ணமூர்த்தி: 14–12–1921. திரு. பரிமணம், திருமதி. முத்தம்மாள் புதல்வர். இளங்கலை இயற்பியல். D-41, எட்டாம் குறுக்கு, தில்லைநகர், திருச்சிராப்பள்ளி-620 018. நூலகர், பன்னிரு திருமுறை நூலகம். உறுப்பினர்: காஞ்சி சிவனடியார் திருக்கூட்டம். ஆர்வம்: சங்க மற்றும் சைவ இலக்கியங்கள். ஆய்வு: கர்நாடக இசை, பெரிய புராணம்.

12. ஜ. இலக்குமி நாராயணன்: 25–8–1939. திரு. ஜனார்த்தனன் போத்தி, திருமதி. ராஜம் போத்தி மகனார். எம்.பி.பி.எஸ்., குழந்தை நலத்தில் பட்டயம், எம்.டி. குழந்தை நலம். குழந்தை நல மருத்துவர், 17, எட்டாவது குறுக்கு, தில்லைநகர், திருச்சிராப்பள்ளி-620 018. இல்லம்: 2, பத்து B–குறுக்கு, தில்லைநகர், திருச்சிராப்பள்ளி-620 018. உறுப்பினர்: இந்திய மருத்துவ மன்றம், இந்தியக் குழந்தை நல மருத்துவர் மன்றம். ஆர்வம்: விளையாட்டுகள், திரைப்படம்.

13. பி. இராசேந்திரன்: 15–7–1951. திரு. ந. பிச்சை, திருமதி. மா. விசாலாட்சி மகனார். எம். எஸ்ஸி., எம். ஃபில்., எம். எட். முதுநிலை ஆசிரியர், விலங்கியல், அரசினர் மேனிலைப் பள்ளி, தொட்டியம், திருச்சிராப்பள்ளி மாவட்டம். இல்லம்: 44 A, கொண்டையம்பேட்டை அக்கிரகாரம், திருவானைக்கோயில், திருச்சிராப்பள்ளி 620 005. ஆர்வம்: தமிழ் இலக்கியம்.

14. போ. இராமகிருட்டிணன்: 15-7-1945. திரு.பெ போத்திராஜ், திருமதி. அச்சம்மாள் மகனார். எம் .பி. பி. எஸ்., எம். எஸ்., பொது அறுவை. ஸ்ரீ வெங்கடேசுவரா மருத்துவமனை, 22-A, சென்னை நெடுஞ்சாலை, திருவானைக்கோயில், திருச்சிராப்பள்ளி-620 005. இல்லம்: 32, அலுவலர்கள் குடியிருப்பு, ரெங்கநாதபுரம், புத்தூர், திருச்சிராப்பள்ளி-620 017. உறுப்பினர்: இந்திய மருத்துவ மன்றம். ஆர்வம்: தோட்டக் கலை, வரலாற்றுச் செய்திகள்.

15. செல்வி சந்திரசேகரன்: 31-1-1942. திரு. க. இ. சுக்குணி, திருமதி. இ. சு. சுப்புலட்சுமி அம்மாள் மகளார். திரு. பு. வா. சந்திரசேகரன் துணைவியார். புகுமுக வகுப்பு. இல்லம்: திருமகள், 18A/1,

வார்னர்ஸ் ரோடு, திருச்சிராப்பள்ளி-620 001. உறுப்பினர்: திருப்புகழ் சங்கம், சக்தி சங்கம், கன்டோன்மென்ட் மகளிர் சங்கம். ஆர்வம்: கலைத்துறை. வெளியீடுகள் : பல கட்டுரைகள் பாவை இதழில்.

16. கை. அழகப்பன் : 16-4-1928. திரு. கே. எஸ். கைலாசம், திருமதி. தாயாரம்மாள் மகனார். எம்.பி.பி.எஸ்., குழந்தை நலத்தில் பட்டயம். குழந்தை நல மருத்துவர், 27, வார்னர்ஸ் சாலை, திருச்சிராப்பள்ளி-620 001. பயிற்சி : வடமொழி, சோதிடம். உறுப்பினர் : இந்திய மருத்துவ மன்றம், இந்தியக் குழந்தை நல மருத்துவ மன்றம், ஆர்வம் : இலக்கியம், வேளாண்மை, சமுதாயத் தொண்டு. வெளியீடு: பல கட்டுரைகள் சப்தகிரி இதழில்.

17. ப. முக்கப்பிள்ளை : 11-7-1928. திரு. பழனியாண்டி, திருமதி. மாரியாயி அம்மாள் மகனார். எஸ்.எஸ்.எல்.சி. பல்பொருள் வாணிகம், 285, பெரிய கடைவீதி, திருச்சிராப்பள்ளி-620 008. இல்லம்: 61, நடுத்தெரு, வரகநேரி, திருச்சிராப்பள்ளி-620 008. பொறுப்புகள்: திரிசிரபுரம் சைவ சித்தாந்த சபை, மாவட்ட அருள்நெறித் திருக்கூட்டம், திருச்சிராப்பள்ளி திருமுறை மன்றம், திருநெறிய தமிழிசை மன்றம் - தலைவர். உறையூர் வாகீச பக்த ஜன சபை - துணைத் தலைவர். உறுப்பினர் : கி. ஆ. பெ. விசுவநாதம் மேல்நிலைப் பள்ளி. சிறப்புகள் : திருமுறைக் காவலர் விருது - திருப்பனந்தாள் ஆதீனம். சைவநெறிக் காவலர் பட்டம் - திருவண்ணாமலை ஆதீனம், சிவநெறிப் புரவலர் பட்டம் - தத்புருஷ தேசிகர். வெளியீடுகள் : சந்தான குரவர் வரலாறு போன்ற கட்டுரைகள். சிவ தோத்திரத் திரட்டு, சிவஞான போதம், கந்தர் கலிவெண்பா, சகலகலாவல்லி மாலை போன்ற நூல்கள்.

18. எஸ். சிடி. சபாரத்தினம் : 12-6-1937. திரு. சிதம்பரம், திருமதி. சோலச்சி ஆச்சி மகனார். இண்டர்மீடியட். மேலாளர், இந்தியன் வங்கி, இல்லம்: 7, ராயல் ரோடு, கன்டோன்மென்ட், திருச்சிராப்பள்ளி - 600 001. ஊர் : கானாடு காத்தான், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம். சிறப்புகள் : கல்லூரியில் ரோவர் சாரணர் இயக்கத்தில் ரேம்ப்ளர்ஸ் பட்டை, அரிமா சங்க ஆளுநரிடமிருந்து வைர விழா ஃபெல்லோ விருது. உறுப்பினர் : அரிமா சங்கம் (வெள்ளி விழா உறுப்பினர்), ஒய். எம். சி.ஏ., மாவட்டப் பிராணிகள் வதைத் தடுப்பு சங்கம், யூனியன் கிளப். நிறுவனர் : இரண்டு மகளிர் அரிமா சங்கங்கள், ஆடவர் அரிமா சங்கம் ஒன்று, பாரதிதாசன் பல்கலையுடன் இணைக்கப்பட்ட லேன் கம்ப்யூட்டர் மையம். ஆர்வம் : சமூக சேவை, ஒளிப்படக் கலை, கோயிற்கலைகள். அறச்செயல்கள்: தில்லை நடராசர் கோயிலுக்கு நிலக்கொடை, திருப்பணி. திருவாரூனைக்

கோயிலில் திருப்பணி, மற்றும் குடமுழுக்கு, நகைகள் கொடை. திருவரங்கத்தில் மக்களுக்காகக் குடிநீர்த் தொட்டி. சிட்டி கிளப் கட்டட விரிவாக்கத் திருப்பணி, தேசிய கல்லூரிக்குக் கொடை. இவ்வறச் செயல்கள் அனைத்தும் குடும்ப முன்னோர்களால் தொடராகச் செய்யப்பட்டவை.

காதல் ஏமாற்றும் கள்ளூர்த் தண்டனையும்

கள்ளூர், பூக்கள் நிறைந்த வயல்களையும், கரும்பு செழித்த தோட்டங்களையும் கொண்ட தொல் புகழ் மிக்க எழிலார்ந்த சங்கச் சிற்றூர். இங்கே தலைவன் ஒருவன் தலைவி ஒருத்தியைச் சந்தித்தான். கண்கள் பேசின; காதல் பிறந்தது; களவு வளர்ந்தது. அழகிய நெற்றியினையுடைய அந்த இளையாளின் அணி நலம் கவர்ந்துண்டான் தலைவன். ஆசை தீர்ந்தது. மோகம் முடிந்தது. திருமணம் கேட்ட பெண்ணிடமும் சுற்றத்திடமும் தனக்கு அவளைத் தெரியவே தெரியாது என்று சாதித்து சத்தியம் செய்தான், அறநெறியில்லா அந்தக் கொடுமையாளன். வழக்கு, மன்றத்திற்கு வர, அவையத்துச் சான்றோர் விசாரிக்கத் தொடங்கினர். தலைவனும் தலைவியும் சந்தித்துப் பழகியதையும், நெருங்கிய நிலையில் உறவு கொண்டதையும் கண்டவர் அனைவரும் சான்றாளராயினர். பொய்கள் கரைந்தன. உண்மை ஞாயிறு உதயமானது. தலைவனின் காதல் ஏமாற்று அம்பலமானது. அவையச் சான்றோர் தண்டனை பணித்தனர். தளிர்கள் பொருந்திய பெரிய மரத்தின் கிளையொன்றில் மோசடிக் காதலனை இறுகப் பிணித்தனர். சுண்ணாம்பு நீற்றினை அவன் தலையில் ஊற்றினர். பொய்க்கும் ஏமாற்றுக்கும் கிடைத்த தண்டனை பொருத்தமானதே என்று ஊரவை நின்ற மக்கள் அனைவரும் ஆரவாரித்து மகிழ்ந்தனர்.

மதுரைத் தமிழ்க் கூத்தனார் கடுவன் மள்ளனார், மருதப் பாடலொன்றின் வழி சங்க காலத்துக் காதல் மோசடியை நம் கவனத்திற்குக் கொணர்கிறார்.

'' தொல்புகழ் நிறைந்த பல்பூங் கழனிக்
கரும்பமல் படப்பைப் பெரும்பெயர்க் கள்ளூர்த்
திருநுதல் குறுமகள் அணிநலம் வவ்விய
அறனி லாளன் அறியேன் என்ற
திறனில் வெஞ்சூள் அறிகரி கடாஅய்
முறியார் பெருங்கிளை செறியப் பற்றி
நீறுதலைப் பெய்த ஞான்றை
வீறுசால் அவையத்(து) ஆர்ப்பினும் பெரிதே'' (அகம். 256)

கட்டுரையாளர்கள்

1. அர. அகிலா
முனைவர் ஆய்வர்
டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்,
48, புத்தூர் நெடுஞ்சாலை, திருச்சிராப்பள்ளி - 620 017.

2. செ. இராசு
இணைப் பேராசிரியர் - கல்வெட்டியல் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613 005.

3. எஸ். இராமச்சந்திரன்
காப்பாட்சியர்,
மராட்டியர் அரண்மனை அகழ் வைப்பகம்,
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை,
தஞ்சாவூர் - 613 009.

4 வே. இராமன்
ஸ்தபதி, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை,
38/5, புதிய சுற்றுலா மாளிகைக் குடியிருப்பு,
மன்னார்புரம், திருச்சிராப்பள்ளி - 620 020.

5. இரா. கலைக்கோவன்
இயக்குநர்,
டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்,
48, புத்தூர் நெடுஞ்சாலை, திருச்சிராப்பள்ளி - 620 017.

6. ம. காந்தி
காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம்,
19, சித்தூரர் சாலை, கடலூர் - 607 001.

7. மு. ம. கோபாலன்
துணைத் தலைவர், வார வழிபாட்டு மன்றம்,
24, பஞ்சவர்ணசுவாமி கோயில் தெரு,
உறையூர், திருச்சிராப்பள்ளி - 620 003.

8. பெ. கௌதமபுத்திரன்
தொல்லியல் அலுவலர்,
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை,
மராட்டியர் அரண்மனை வளாகம், தஞ்சாவூர் - 613 009.

9. கா. சண்முகம்
தமிழாசிரியர் (ஓய்வு),
26, பூக்காரப் புது வஸ்தாத் தெரு, தஞ்சாவூர் - 613 001.

10 சிவஅரசி முத்துக்காளத்தி
தமிழ்த்துறை, காயிதேமில்லத் மகளிர் கல்லூரி,
796, 29வது தெரு, பெரியார் நகர்,
கொரட்டூர், சென்னை - 600 080.

11. மு. நளினி
மதிப்புறு கல்வெட்டாய்வாளர்,
டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்,
48, புத்தூர் நெடுஞ்சாலை, திருச்சிராப்பள்ளி - 620 017.

12. இரா. லலிதாம்பாள்
இசை ஆசிரியை,
கோயிலூர் பெரியநாயகி மகளிர் மேனிலைப் பள்ளி,
முத்துபேட்டை-614 704.
நாகபட்டணம் காயிதேமில்லத் மாவட்டம்.

13. மு. வீராசாமி
கண் மருத்துவ உதவியாளர், அரசு தொடக்க நல மையம்,
புதூர் உத்தமனூர், திருச்சிராப்பள்ளி - 621 712.

14. கோ. வேணிதேவி
தலைவர், வரலாற்றுத் துறை,
சீதாலட்சுமி ராமசாமி மகளிர் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி-620 002.

கிளிப் பழக்கம் முன்கை மட்டும்

கொற்றவை, மீனாட்சி, ஆண்டாள் படிமங்களில் கிளி இடம் பெறுவதுண்டு. குறிப்பாகக் காலத்தால் பழமையான கொற்றவைச் சிற்பங்களில், தேவியின் வல முன்கையில் கிளியைக் காட்டுவது மரபு. இட முன்கையின் மணிக்கட்டுப் பகுதியில் கிளியுடன் காட்சி தரும் பல்லவக் கொற்றவைகளை மாமல்லை மகா வராகக் குடைவரையிலும், சிங்கவரம் ரங்கநாதர் குடைவரையிலும் காணமுடியும்.

கிளியை மகளிர் தம் மணிக்கட்டில் ஏந்திடும் இந்தப் பழக்கம் சங்கப் பழமையது. அகநானூற்றுத் தலைவி ஒருத்தி, தான் வளர்த்த கிளியைத் தன் முன்கையில் ஏந்தி அதைப் பேசப் பழக்கினாளாம். வீட்டிலுள்ளோர்க்குக் கேட்டுவிடக் கூடாதென்று அஞ்சி மெல்லப் பேசினாளாம். ஏன் இந்த அச்சம்? எதற்கித்தனை இரகசியம்?

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவர் 'இன்று வருவார்', 'இன்று வருவார்' என்று மட்டுமே அந்தக் கிளி சொல்ல வேண்டுமாம்.

— அகம். 34.

With best compliments from :



Grams : 'SHIVAUTO' Phone : 41900

SHIVA
AUTOMOBILES (P) LTD.,

POST BOX NO. : 97,
2-C/3, PROMENADE ROAD,
CANTONMENT, TIRUCHIRAPALLI-620 001.

AUTHORISED DEALERS FOR
"MAHINDRA & MAHINDRA LIMITED"
FOR THEIR RANGE OF VEHICLES : CJ, FJ, MM,
NC & COMMANDER SERIES, SPARE PARTS AND
ACCESSORIES FOR THE DISTRICTS OF
TIRUCHIRAPALLI, PUDUKKOTTAI, SOUTH ARCOT
AND THANJAVUR.

With best compliments from :

M/s. HOTEL AJANTA

TIRUCHIRAPALLI - 620 001.

PHONE : 40501 (15 Lines)

M/s. SARADA LODGE

TIRUCHIRAPALLI - 620 001.

PHONE : 40216

M/s. SRI KANNAN BUS SERVICE

TIRUCHIRAPALLI - 620 001.

PHONE : 40266

ஜோதி பிரிண்டர்ஸ், திருச்சிராப்பள்ளி–2. போன் ; 25416.